# அப்பாண்டைநாதர் உலா

பதிப்பாசிரியர்:

மு. சண்முகம் பிள்ளை

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

1974

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு - 32.

பொதுப் பதிப்பாசிரியர்:
பேராசிரியர், டாக்டர் ந. சஞ்சீவி,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
டிப். மானிடவியல், அரசியல் & ஆட்சியியல்.
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

# அப்பாண்டைநாதர் உலா

# APPANDAINATHAR ULA

*Edited by:*

M. SHANMUKHAM PILLAI,

Lecturer in Tamil,

Tirukkural Endowment Research Centre,

University of Madras.

UNIVERSITY OF MADRAS

1974

# அப்பாண்டைநாதர் உலா

பதிப்பாசிரியர்:

**மு. சண்முகம் பிள்ளை,**

தமிழ் விரிவுரையாளர்,

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,

சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

1974

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு - 32.

முதற் பதிப்பு: நவம்பர், 1974.

[தமிழ்த்துறை வெளியிடும் 'தமிழாய்வு' முதல் தொகுதியிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது.]

© சென்னைப் பல்கலைக் கழகம்.

அச்சிட்டோர்:
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை - 13.

# அணிந்துரை

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, கடந்த நான்காண்டு களில் செய்துவரும் சிறந்த செந்தமிழ்ப் பணிகள்பற்றி அனைவரும் அறிவர். அவற்றுள் ஒன்று தமிழ்த்துறையின் தனிச் சிறப்பு வெளி யீடாகிய தமிழாய்வு. ஆண்டுக்கு ஒருமுறை வெளிவரும் இவ் வாராய்ச்சி வெளியீட்டில் அடங்கியுள்ள சிறப்புக் கூறுகளுள் எல்லாம் மிகச் சிறந்தது 'அச்சில் வாரா அருந்தமிழ்' என்னும், தலைப்பில் புதுவ தாக அச்சுருக்கொள்ளும் பழந்தமிழ் ஏடுகள். இவ்வகையில் தமிழாய்வு முதல் தொகுப்பில் வெளிவந்த நூலே **அனந்தவிசயர்** அருளிச்செய்த **திருநறுங்கொண்டை அப்பாண்டைநாதர் உலா.**

'சமயந்தொறு நின்ற தையல்' ஆம் தமிழ்த்தாய் பதினாறும் நூற்றாண்டில் (?) பெற்ற இலக்கியப் பேறுகளுள் ஒன்று இந்த அப்பாண்டைநாதர் உலா. இதுவரை அச்சில் வெளிவாரா இந்த அருந் தமிழ் நூல் முற்குறிப்பிட்டவாறு சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் தமிழாய்வு வெளியீட்டில் முதன்முதலாக வெளிவந்ததும் சமணத் தமிழுலகம் அடைந்த மகிழ்ச்சி பெரிது. அது கண்டு ஈன்ற பொழுதினும் பெரிதுவந்த உள்ளத்தோடு சென்னைப் பல்கலைக் கழகம் இந் நூலைத் தனிநூல் வெளியீடாகவே வெளியிட விரும்பியது. இவ் விருப்பம் மகாவீரரின் **நூற்றாண்டு வெள்ளி விழாவின்போது** நிறைவுறுவது தனி மகிழ்ச்சிக்குரியதாகும். இவ் வெளியீட்டைச் சென்னைப் பல்கலைக் கழகம் அவர்தம் நூற்றாண்டு வெள்ளி விழா விற்குத் தரும் எளிய காணிக்கையாய் எண்ணி இன்புறுகிறது.

அப்பாண்டைநாதர் உலாவைப் பெருமைப்படத்தக்க வகையில் ஏடு பார்த்துப் பீடுறப் பதிப்பித்துக் கொடுக்கும் பேராண்மை, சைவத் தமிழ்ச் சான்றோராகிய புலவர் மணி திரு. மு. சண்முகம் பிள்ளை அவர் களின் தனியுரிமையாகும். இப் பதிப்பிற்கு அவர் எழுதியுள்ள ஆராய்ச்சி முகவுரை அவர்தம் ஆழ்ந்தகன்ற தமிழ்ப் புலமைக்குத் தக்க சான்றாகும். பேராசிரியர்கள் டாக்டர் சாமிநாதையரையும் வையாபுரிப் பிள்ளையையும் நினைவுபடுத்தும் வகையில் அது அமைந்துள்ளது. உலா உலகில் அப்பாண்டைநாதர் உலாவின் தனிச்சிறப்பு யாது என்பதை ஆசிரியர், 'அனந்தவிசயர் செய்த புதுமை' என்று உள்தலைப்பில் விளக்கி இருப்பது ஊன்றிப் பார்க்கத் தக்கது.

38 பக்கங்கள் — 620 கண்ணிகள் உள்ள அப்பாண்டைநாதர் உலாவுக்கு 32 பக்க ஆராய்ச்சி முகவுரை; முதல் குறள் உவமைக் காகவே ஒரு தனிநூல் அமையவில்லையா? ஆசிரியரின் இம் முகவுரை உலா உலகில் உவகை தரும் ஓர் ஆராய்ச்சி உலாவாகும்.

ஆசிரியர் நூலுக்கு இணைப்புகளாகத் தந்துள்ள பகுதிகள், திருநறுங்கொண்டைத் திருத்தலம்பற்றி அறிய விரும்புவார்க்குத் தொடர்புடைய செய்திகள் பலவற்றையும் ஒருங்கு திரட்டித் தந்து உதவுகின்றன. இந் நூலுக்குச் சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. விளக்கக் குறிப்புகள் வேறு வழங்கப்பட்டுள்ளன. நூறு பாட்டுகளுடைய **திரு மேற்றிசை அந்தாதியும்** இப்போதுதான் முதன்முதலாக இந்த உலாவுடன் உலா வரத் தொடங்கியுள்ளது. இதுவும் கண்ணுக்கும் கருத்துக்கும் களிப் பருளும் களிப்பாகும். இவையெல்லாம் ஆசிரியரின் செய்வன திருந்தச் செய்யும் செப்பத்தைச் செப்பும்.

புலவர் மணி **திரு. மு. சண்முகம் பிள்ளை** அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியில் பணிபுரிபவர்கள். அவர்களுக்கே உரிய திருக்குறள் ஆராய்ச்சி வேலை களோடு தமிழ்த்துறையில் தனிப் புகழுக்குரிய எல்லா வேலைகளையும் எப்பொழுதும் முகம் சுளிக்காமல் செய்யும் அவர்களுக்கு இந்தப் பல்கலைக் கழகமும் நானும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். திரு. சண்முகனாரைப் போன்ற படிப்பும் பண்பும் படைத்தவர்களை இந்த நாளில் பார்ப்பதும் அரிதாக உள்ளது. எனவே, அவர்களை 'வணங்குதல் அன்றி வாழ்த்தல் என் நாவிற்கு அடங்காது.'

தமிழ்த்துறையின் பன்முயற்சிகளாகிய நன்முயற்சிகளுக்கும் உறுதுணையாய் விளங்கும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் **தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு** அவர்களுக்கும், அவர் களுக்கு உறுதுணையாய் விளங்கும் ஆட்சிக் குழுவிற்கும் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சார்பில் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை - 5,<br>13—11—74.

**ந. சஞ்சீவி**

(மகாவீரர் நூற்றாண்டு வெள்ளி விழா நாள்)

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | i - xxxii |
| அப்பாண்டைநாதர் உலா | 1 - 38 |
| உலா இலக்கியம் | 39 - 40 |
| சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி | 41 - 65 |
| திருநறுங்கொண்டைக் கல்வெட்டுகள் | 66 - 69 |
| சாசனப் பாடல்கள் | 70 |
| அப்பாண்டைநாதர் உலாவின் ஏட்டுப் பிரதி | 71 |
| நூல் வரலாறு பற்றிய ஒரு குறிப்பு | 72 |
| விளக்கக் குறிப்புகள் | 73 - 88 |

இணைப்பு :

| | |
|---|---|
| 1. திருநறுங்கொண்டைத் திருத்தல வரலாறு | 89 - 120 |
| 2. திருமேற்றிசை அந்தாதி | 121 - 135 |
| 3. திருநறுங்கொண்டைத் தோத்திர மாலை | 136 - 160 |
| 4. பகவான் பார்சுவநாதர் வரலாறு | 161 - 184 |
| 5. அப்பாண்டைநாதர் பற்றிய ஒரு குறிப்பு : — டாக்டர் உ. வே. சாமிநாதையர் | 185 |
| பொருளகராதி | 186 - 196 |
| பார்சுவநாதர் வரலாற்றுப் பாடல்கள் | 197 - 198 |

# முகவுரை

பெருகுந் தவங்களில் என்செய் தவோபின்பு பேணித்தொண்டர்
உருகுங் குடதிசை வீரன் உலாவர உற்றமிர்து
முருகுந் தசும்புசெந் தாமரைமேல் மொய்த்து முன்னும் பின்னும்
மருகும் பிரிவரி யரவுடன் சேவிக்கு மாடல்வண்டே.

—திருமேற்றிசை அந்தாதி

### திருவிழா ஊர்வலம்

திருவிழாக் காலங்களில் ஊர்களில் நடைபெறும் விழா ஊர்வலங்களை இன்றும் நாம் காண்கிறோம். திரள் திரளாய் மக்கள் பெருவிழாக்களில் கலந்துகொண்டு, விழாக் காட்சி காண்கின்றனர். இந்நாள்களில் தெய்வங்கள் உலாவருதலும், இசைவாணர் தேவாரம் முதலிய பத்திப் பாக்களை இசைத்து வருதலும், மற்றும் வாண வேடிக்கைகளும் ஆடல் பாடல்களுமாய் இவ்விழாக்கள் பொலிவு பெறுகின்றன. விழா நாள்களில் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாய்க் குறிப்பிடத்தக்கது.

### திருமண ஊர்வலம்

திருமண நிகழ்ச்சிகளில் மாப்பிள்ளை அழைப்பு பெண் அழைப்பு ஊர்வலங்கள் திருமணத்திற்கு முன்னர் நடைபெறுகின்றன. திருமணம் நிகழ்ந்தபின், கணவனும் மனைவியுமாய் ஊர்வலம் வருதலும் உண்டு. ஒரு காலத்தில் இவ்வூர்வலங்கள் பல்லக்கு ஊர்வலமாய் அமைந்து, இப்பொழுது மகிழுந்து ஊர்வலமாய்க் காலத்திற்கேற்ற கோலம் பூண்டுள்ளன. திருமணங்களில் மணமக்களை ஊர்வலம் செய்விக்கும் நிகழ்ச்சிகள் முன்பு பெருவழக்கமாயிருந்தது. இப்பொழுது அது மிகவும் அருகிக் காணப்படுகிறது.

### சிறப்பு ஊர்வலங்கள்

சிறப்பு மாநாடுகள் நடைபெறும் காலங்களில், அதை ஒட்டி ஊர்வலம் நிகழ்வதுண்டு. சில ஆண்டுகளுக்கு முன் 1968-ல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டிச் சென்னையில் நடைபெற்ற ஊர்வலம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாய்த் திகழ்ந்தது.

சமயப் பெரியார்கள் வரும்போது மக்கள் திரளாய்ச் சென்று எதிர்கொண்டு ஊர்வலமாய் அவர்களை அழைத்துச் சென்று எல்லா மக்களுக்கும் அவருடைய அருட்காட்சி கிட்டுமாறு செய்வது இன்றும் நடைபெற்று வருகின்றது. திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய ஆதீனங்களில் குருபூசை நாள்களிலே மகாசந்நிதானத்தைப் பட்டணப் பிரவேசமாய் அழைத்துச்சென்று சிறப்புச் செய்வதும் நடைமுறையில் உள்ளது. இப்படி எத்தனை எத்தனையோ வகைகளில் ஊர்வலம் நிகழ்

வது இயல்பாய் இருத்தலினுல் இது சிறப்பிடம் பெறுவது இயல்பு தானே.

### மன்னர் பவனி

பண்டும் முடிமன்னர் ஆட்சியில் மன்னனின் பிறந்தநாள் விழா, முடிசூட்டு விழா, நிகழ்ச்சிகளை ஒட்டி நகர வீதிகளில் மன்னன் உலா வருதல் இயல்பாய் இருந்தது. மன்னனின் சிறப்புச் சின்னமான படை, கொடி, மற்றச் சின்னங்கள் முன்செல்ல, இசை முழக்கம், ஆடல் பாடல் இன்ன பல நிகழ்ச்சிகள் நடைபெற, மன்னனின் பவனியை மக்கள் கண்டு களித்தனர்.

மன்னனின் பவனி காண்பதற்காக ஆடவர் பெண்டிர், இளைஞர் முதியோர் என்று பல் திறத்தாரும் வந்து கூடுவது இயல்பே. ஆயினும், மன்னன் உலாவைக் காணவந்த பல்வேறு பருவமகளிரும் அத்தலைவனின் அழகில் ஈடுபட்டுப் புகழ்வதாயும், அவன்பால் காதல் கொண்டு தம் உளம் நெகிழ்வதாயும், காதலுணர்ச்சியால் அவர்கள் நிலைதடுமாறுவதாயும் புலவர் பெருமக்கள் கவிதை புனையலாயினர். இத்தகைய உலா பற்றிய காதற்கவிதைகள் சிலவற்றை முத்தொள்ளாயிரத்தில் காணலாம். சேர சோழ பாண்டியர் புகழ்பாடும் இந்நூலில் அம் மன்னர்களின் உலாக் காட்சிகளை மகளிர் கண்டு காதல் வயப்படுவதாயும் சில பாடல்களில் சித்திரித்துள்ளனர். இவையெல்லாம் தனி உலா இலக்கியங்கள் பின்னுளில் எழுவதற்கு முதற்படியாய் அமைந்தன என்று கொள்ளலாம்.

### முத்தொள்ளாயிரத்தில் உலாக் காட்சிகள்

மன்னன் யானையின் மேலும் குதிரையின் மேலும் மற்றும் பல்லக்கு, தேர் முதலிய வாகனங்களிலும் ஏறித் தெருவில் உலா வருகின்றுன். அம்மன்னனின் உலாக் காட்சியை மக்கள்—குறிப்பாக மகளிர் பார்த்து, அவனுடைய அழகில் ஈடுபட்டுப் பேசுகின்றனர். இந்த உலாக்காணும் மகளிர் உலாவரும் தலைவன்மேற் காதல் வயப்பட்டு, தங்கள் தோள் மெலியவும் மேனி பசலை பாயவும் வேறுபடுகின்றனர். காதல் மயக்கம் அவர்களைக் கிறுகிறுக்க வைக்கிறது. இவ்வகைக் கற்பனை சான்ற காட்சிகள் சில முத்தொள்ளாயிரத்தில் இடையிடையே மிளிரக் காணலாம்.

> ' எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
> புலாஅ னெடுநல்வேல் மாறன் — உலாஅங்காற்
> பைய நடக்கவுந் தேற்ருயால் நின்பெண்மை
> ஐயப் படுவ துடைத்து. ' (புறத். 1511)

கூடற்கோமானுன பாண்டியன் பெண் யானையின்மேல் ஏறி வீதியில் உலா வருவது வழக்கம். அந்தப்பெண் யானை, மன்னனின் அழகினை மகளிர் ஆரவமரப் பார்த்து அனுபவிக்கக்கூடாமல் வேகமாய் நடந்து விடுகிறதாம். பெண்கள்பொருட்டுப் பெண் தன்மையுடைய நீ மெது

வாய் நடக்காமல் வேகமாய்ச் செல்வது தக்கதன்று; அதனால் நீ பெண்மைதன்மையுடையையா என்று நாங்கள் ஐயுற நேர்கிறது. பெண்கள் நிலமதிர நடக்கலாமோ? மன்னன் பவனி வரும் பிடியை நோக்கி மகளிர் பேசும் பாவனையில், அம்மன்னனைக் காண்பதில் அம் மகளிர்க்குள்ள ஈடுபாட்டைக் கவிஞர் புலப்படுத்துகிறார். உலாஅங் கால்—உலா வரும்போது என்பது பொருள். இதனால் கூடற் கோமான் அவ்வப்போது யானைமேல் பவனி வருவது வழக்கம் என்பதும் தெரியவரும்.

இனிச் சோழ மன்னனின் உலாக் காட்சியைப் பார்ப்போம். மகளிர் தத்தம் மாடங்களிலிருந்து சாளரம் வழியாய்ச் சோழன் தன்னுடைய 'பாடலம்' என்னும் குதிரைமேல் பவனிவரும் காட்சியை நோக்குகின்றனர்.

'சுடரிலைவேற் சோழன்றன் பாடல மேறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்—தொடர்புடைய
நீலவலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயிறொறுங் கண்.' (புறத். 1573)

சோழ மன்னன் வீதியில் குதிரைமேல் உலா வரும் காட்சியை நகர மக்கள் எல்லாரும் கண்டுகளித்தாலும், சிறப்பாய் மகளிர் காணப் பவனி வந்தான் என்று பாடுவது கவனிக்கத் தகும். அச்சன்னல்களில் நீலநிறமான வலைபோன்ற அமைப்புகள் உள்ளமையினாலே அதன் வழியாய் நோக்கும் மகளிர் கண்கள் நீலவலையில் கயல்மீன் போலத் தாவுகின்றன என்கிறார் கவிஞர். இதனால் மாடமாளிகைகள்தோறும் மகளிர் சாளரங்களின் வழியே மன்னன் உலாவரும் காட்சியைக்கண்டு களிப்பது வழக்கம் என்பது தெரியவரும்.

கண்கள் கண்டதால் ஏற்பட்ட விளைவு என்ன? மன்னனின் அழகிய தோற்றம் அம் மகளிர் கண்களுக்கு இலக்காகிறது. அவர்தம் கண் வழிப் புகுவதோர் கள்வனாய் அவர்களின் நெஞ்சில் அம்மன்னன் புகுந்து விடுகிறான். அவர்கள் காதலுணர்வின் வயப்பட்டு நெஞ்சம் நெகிழ்கின்றனர். அவ்வளவுதான். அவர்களுடைய தோள்கள் மன்னன் பிரிவால் மெலிவுற்றுவிடுகின்றன.

'கண்டன உண்கண் ; கலந்தன நன்னெஞ்சம் ;
தண்டப் படுவ தடமென்றோள் !—கண்ட
உலாஅ மறுகில் உறையூர் வளவற்கு,
எலாஅ ! முறைகிடந்த வாறு !' (புறத். 1520)

உறையூரிலே சோழ மன்னனின் உலாக் காட்சியைக் கண்ட பெண்ணொருத்தி தன் தோழியை நோக்கி வினவுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. உலாக் காட்சியைக் கண்டவை கண்களே; அக்காட்சிகள் நெஞ்சில் கலந்துவிட்டன. பின்னர், தோள்கள் மெலிந்துவிட்டன. கண்டகண் தண்டனையுறாமல் தோள்கள் தண்டனை பெறுவது முறையா? இந்தச் சோழ மன்னன் செங்கோல் முறை இவ்வாறாக இருக்கிறதே!

என்று பேசுவாளாய்த் தான் காதல் வயப்பட்டுத் தோள் மெலிந்தமையை வெளிப்படுத்துகிருள்.

முத்தொள்ளாயிரக் காட்சிகளால் மன்னர் பவனி வருவதும், அதனைக் கண்ட மகளிர் காதல் வயத்தவராவதும் தெரியவரும். பின்னுளில் 'உலா' என்னும் இலக்கிய வகை தோன்றுவதற்கான கருக்களை இப் பாடல்கள் கொண்டுள்ளமை தெளிவு.

*மங்கல ஊர்வலம்*

மங்கல நிகழ்ச்சிகளை ஊரார் எல்லாருக்கும் அறிவிக்கும் வகையிலும் உலா நிகழ்ச்சி நடைபெறுவதுண்டு. சிலப்பதிகாரத்தின் முதற் காதையாகிய 'மங்கல வாழ்த்துப் பாடல்' திருமண உலாவியலைக் குறிப்பிடுகிறது. கோவலன் கண்ணகி திருமணத்தை முன்னிட்டு யானையின்மேல் மகளிர் ஏறியிருந்து, நகர வீதியிலே உலா வந்து, மணச் செய்தியினைப் புகார் நகரத்தார்க்கு அறிவித்தனர். யானைமேல் மகளிர் வந்த இந்த மங்கல உலாக் காட்சியின்போது முரச வாத்தியங்கள் முழங்கின; மத்தளங்கள் ஒலித்தன; சங்குகள் ஊதப்பட்டன; வெண்குடைச் சின்னம் அரசன் உலாவ வருதலிற்போல இதிலும் இடம் பெற்றது.

'யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்."

அவ்வழி,

'முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன
பணிலம் வெண்குடை
அரசெ ழுந்ததொர் படியெழுந்தன
அகலுள் மங்கல அணியெழுந்தது!"

(சிலப். மங்கல, 43-47)

இவ்வகையில் திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிகள் நிகழவிருப்பதனை நகர மக்களுக்கு அறிவிக்கும் வழக்கம் முன்பு இருந்தமை இதனுல் புலப்படும். எனவே, முக்கிய நிகழ்ச்சிகளை உலகுக்கு அறிவிக்கும் பொருட்டுப் பண்டு வீதியுலாச் செல்லும் வழக்கம் உண்டு என்பது தெளிவு.

*மதுரைத் திருவிழா*

பாண்டிநாட்டுத் தலைநகராம் மதுரை, முற்காலத்தில் சிறந்து விளங்கிய பெருநகரங்களுள் ஒன்று. இது பாண்டியர்களின் வழிவழித் தலைநகரம். இங்கே பல சமயத்தார் வழிபடும் கோயில்களும், பல திருவிழாக்களும் நடைபெற்று வந்தன. அந் நாள்களில் இறைவன் தெரு வீதியில் உலா வருதலும், அக் காட்சியினை மக்கள் திரளாய் வந்து காண்பதும் வழக்கமாயிருந்தது. இறைவனுடைய ஊர்வலத்தில் கொடி முதலிய திருச்சின்னங்கள் எடுத்துச் செல்லப்படுதலும், இசைக்

கருவிகள் முழங்குதலும் உண்டு. மகளிர் மாடமாளிகைகளிலிருந்து சாளர வழி அக்காட்சியைக் கண்டு களிக்கின்றனர். அம் மகளிரின் முகங்கள் முழுமதிபோலக் காட்சியளிக்கின்றன. உலாவின்போது கொண்டு செல்லப்பட்ட கொடிகள் பறக்கும்போது சிற்சில சமயம் அம் மகளிரின் முகங்கள் மறைப்புண்டு காணப்பட்டன. இது மேகத்தால் மறைக்கப்பட்டுத் தோன்றும் முழுமதிக் காட்சிபோலக் காணப்பட்டதாம். இந் நிகழ்ச்சிகளைப் பின்வரும் மதுரைக் காஞ்சியடிகளில் காணலாம் :

'நாள்மகி ழிருக்கை காண்மார், பூவொடு
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப, ஒள்ளழல்
தாவற விளங்கிய ஆய்பொன் அவிரிழை
அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றம் தெருவுடன் கமழ
ஒண்குழை திகழும் ஒளிகெழு திருமுகம்
திண்காழ் ஏற்ற வியலிரு விலோதம்
தெண்கடற் றிரையின் அசைவளி புடைப்ப
நிரைநிலை மாடத்து அரமியந் தோறும்
மழைமாய் மதியின் தோன்றுபு மறைய."

(மதுரைக், 443-452)

கோயில்களில் முன்பு விழாக் கண்டலும், விழாவினை முன்னிட்டுக் கொடியேற்றுதலும் வழக்கமாயிருந்தமையையும் இம் மதுரைக்காஞ்சி தெரிவிக்கிறது.

'ஓவுக் கண்டன்ன இருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த உருவப் பல்கொடி' (மதுரைக், 365-66)

என்பது மதுரைக்காஞ்சி.

'விழவரு வியலா வணத்து
மையறு சிறப்பின் தெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயில் மலர்தொழு கொடியும்' (பட்டினப். 158-160)

எனவரும் பட்டினப்பாலையடிகளாலும் இவ் வழக்கு தெளிவாய்த் தெரியவரும்.

ஏழுநாள் விழா

திருக்கோயில்களில் ஏழு நாள்கள் விழாக் கொண்டாடும் வழக்கமும் முன்பு இருந்தது.

'கழுநீர் கொண்ட எழுநா ளந்தி
ஆடு துவன்று விழவின் நாடார்த் தன்றே'

(மதுரைக். 427-428)

என ஏழுநாள் நடக்கும் திருவிழாவில் ஏழாவது நாள் மாலையில் தீர்த்த மாடுதல் வழக்கமாய் உள்ளமையையும் இப் பாடற் பகுதி தெரிவிக்கின்றது. இப் பகுதிக்கு நச்சினார்க்கினியர், 'தீவினையைக் கழுவுவதற்குக் காரணமான தீர்த்த நீரைத் தன்னிடத்தேயுடைய ஏழா நாளந்தியில் - வேறோரிடத்திலில்லாத வெற்றி நெருங்குந் திருநாளினைத் தன்னிடத்தேயுடைய ஏழாநாளந்தியில். கால்கொள்ளத் தொடங்கிய ஏழாநாள் அந்தியிலே தீர்த்தமாடுதல் மரபு' என்றும், 'நாடு ஆர்த்தன்றே' என்றது, 'அவ்விழாவிற்குத் திரண்ட அந் நாட்டிலுள்ளார் ஆர்த்த ஆரவாரம்' என்றும் விளக்கம் தருதலும் கூர்ந்து கவனிக்கத்தகும். திருவிழா பற்றிய இந் நிகழ்ச்சிகளால், இறைவனுக்கு விழாவெடுத்தலும் அப்பொழுது மக்கள் திரண்டு இறைவனைக் கண்டு தொழுதலும் உண்டு என்பதனைத் தெளிவாய் உணரலாம். இத்தகு விழா நாள்களில் இறைவன் உலாவருதலும், மாந்தர் கண்டு தொழுதலும், மகளிர் தத்தம் மாளிகைச் சாளரங்கள் வழி உற்று நோக்கிக் காட்சிகளைக் கண்டு களிப்பதும் நீண்டநாள் பழக்கம் என்பது தெளிவு.

### வீதியுலா வரும் வழக்கம்

விழா நாள்களில் வீதியுலா வரும் வழக்கம் தொன்றுதொட்டு வருவது என்பது அடியார்க்கு நல்லார் உரைக் குறிப்பினாலும் விளங்கக் காணலாம். சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரையில்,

> 'ஆடித் திங்க ளகவையின் ஆங்கோர்
> பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப'

எனவரும் பகுதிக்கு உரை காணுமிடத்து பின்வருமாறு எழுதுகின்றார்:

> 'ஆடித் திங்களிடத்தே ஆட்டை விழாவாகத்
> தன்னகர வீதிதோறும் உலாச் செய்விக்க........
> நாடாயிற்று அவன் நாடு.'

இவருடைய உரைக் குறிப்பிலிருந்து 'விழாவெடுத்தல்' என்றாலே வீதியில் தெய்வத் திருவுருவை உலாச் செய்வித்தலாகும் என்பது தெரியவரும்.

> 'திருநாள் பெருநாள் படைநாள் என்றுஇப்
> பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
> செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்'

(பெருங். இலா. 2 : 32-34)

என்பதனால் தெய்வத் திருநாளும், மன்னன் பிறந்த பெருநாளும், படையெழுச்சி காணும் போர் எழுச்சி நாளும் பறையொலிக்க உலக மறிய நகர வீதிகளில் மக்கள் திரண்டு செல்லும் நாள்கள் என்பதும் தெரிய வருகின்றன.

## திருமுறைப் பாடல்களில் திருவீதி உலா

சிவபெருமான் ஆதிரைத் திருநாளில் திருவாரூர் வீதிகள் தோறும் பத்தர் கணம் புடைசூழ எழுந்தருளிக் காட்சி தந்தமை யைத் திருநாவுக்கரசர் திருவாரூர்ப்பதிகம் ஒன்றில் (4-21) அழகுறச் சித்திரித்துள்ளார். விழா நாளில் இறைவன் இடப வாகனத்தில் எழுந் தருளி வருதலையும், இவர் தமது திருத்தாண்டகப் பாடலொன்றில்,

'மால்விடைமேல் நெடுவீதி போதக் கொண்டார்' (6, 96 : 7)

என்று குறிப்பிட்டுள்ளார். மற்றும் தேரில் இறைவன் வீதியுலா வருதலும் உண்டு.

'பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்' (1, 27 : 7)

'தேராரும் நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீராருஞ் சடையாருக் கென்நிலைமை நிகழ்த்தீரே!' (1, 60 : 5)

எனவரும் திருஞான சம்பந்தர் வாக்குகளில் தேர்த்திருவிழாக் காட்சி கள் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

மதுரைக் காஞ்சியில் காணுமாறே, ஏழு நாள்கள் தொடர்ந்து திருவிழா அந்நாளில் நடைபெற்றமை நாவுக்கரசரின் தேவாரப் பாடல் ஒன்றினும் தெரிய வருகிறது :

'ஆத்தமாம் அயனும் மாலும் அன்றிமற் றொழிந்த தேவர்
சோத்தமெம் பெருமா னென்று தொழுதுதோத் திரங்கள்சொல்ல
தீர்த்த மாம்அட்ட மிமுன் சீருடை ஏழு நாளும்
கூத்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.' (4, 50 : 2)

இவ்வாறு இறைவன் வீதியில் உலாவரும்போது மைந்தரும் மகளி ரும் வணங்கி வழிபடுதல் இயல்பே. மங்கையர் பத்திக் காதல் மேலிட மயக்கங் கொள்கின்றனர் என்னும் குறிப்பையும் நாவுக்கரசர்,

'செந்துவர் வாயார் செல்வன சேவடி சிந்திப்பார்
மைந்தர்க ளோடு மங்கையர் கூடி மயங்குவார்' (4, 21 : 7)

என்று பாடுகின்றார். இங்ஙனம் மங்கையர் கூடி இறைவன் உலாக் கண்டு காதல் கொள்ளுதலைச் சித்திரிக்கும் முறையில் 'உலா' என்னும் தனி இலக்கியம் பின்பு பிறந்தது.

கருவூர்த் தேவர் தாம் பாடிய திருவிசைப் பாவில், இறைவன் உலாக் கண்டு தொழுது அழுது இரங்குமவளுக்கு அருள் செய்யலா காதா என்று கேட்கிறார் :

'நையாத மனத்தினனை நைவிப்பா னித்தெருவே
ஐயாநீ யுலாப்போந்த வன்றுமுத லின்றுவரை

கையாரத் தொழுதருவி கண்ணீரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!'

(5 திரைலோக்கிய சுந்தரம், 2)

இறைவன் தெரு வீதியிலே உலாவந்த நாள் முதலாய் அவன்பால் பத்திக் காதல் கொண்டு இரங்கும் ஒரு நாயகியின் நிலையில் நின்று பேசுகிறார் கருவூர்த் தேவர். இவ்வாறாகத் திருமுறைப் பாடல்களில் இறைவன் திருவீதி உலாவருதல், பத்தர் கணம் சூழ்ந்து பரவுதல், பத்திக் காதலால் மயக்க முற்றுப் புலம்புதல் என்று இன்னோரன்ன செய்திகள் வருதல் உலா இலக்கிய வளர்ச்சியில் மற்றுமொருபடி என்று கருதலாம். இவ்வளர்ச்சி குறித்து டாக்டர் மு. வரதராசனார் தாம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்றில் பின்வருமாறு கூறுகிறார்:

> 'தெய்வம் புறப்படுவதுமுதல் சுற்றித் திரும்பி வருவது வரையில் எல்லா நிலைகளிலும் தெய்வத்தைப் போற்றிப் புகழ்ந்து பாடப்படுவது வழக்கமாக இருந்தது. புறப்படுவதற்கு முன் அந்தத் தெய்வத்தின் பெருமையும் அற்புத வீரச்செயல்களும் போற்றிக் கூறப்படுவதும், புறப்படும்போது பரிவாரமாகச் சூழ்ந்து வருவோரின் விளக்கங்கள் கூறப்படுவதும், உலா வரும்போது தேவதாசியர் பலர் தெய்வத்தைக் கண்டு காதல் கொள்வதுபற்றி எடுத்துரைப்பதும் முற்காலத்தில் நாட்டுப் பாடல்களாக வழக்கத்தில் இருந்தன. அந்த நாட்டுப் பாடல்கள் எல்லாம் அந்தந்த ஊர்களில் சிறுசிறு வேறுபாடுகளோடு வழங்கியிருக்க வேண்டும்.'

(தமிழ் இலக்கிய வரலாறு, பக். 135-136)

### முதல் உலா இலக்கியம்

உலாச் செய்திகள் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களிலும் தேவாரம் முதலியவற்றிலும் காணப்பட்ட போதிலும் தனி இலக்கியமாக நமக்கு இப்பொழுது கிடைத்துள்ள முதல் உலா இலக்கியம் பதினொரந்திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய 'திருக்கயிலாய ஞான உலாவே.' இதனை ஆக்கியவர் சேர மன்னரும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவருமாகிய சேரமான்பெருமாள் நாயனார். இவர் வாழ்ந்த காலம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்ந்த கி. பி. எட்டாம் நூற்றாண்டே.

சேரமான் பெருமாள் நாயனார் அருளிச்செய்த உலா இலக்கியம் திருக் கயிலாயத்தில் இறைவன் திருமுன்பு அரங்கேற்றப்பெற்றது என்பது வரலாறு. அப்பொழுது அங்கிருந்து கேட்டவர்களுள் ஒருவராகிய மாசாத்தனார் தம் மனத்தில் தரித்துவந்து சோழநாட்டுப் பிடவூரில் உலகோர் அறிய வெளிப்படுத்தினர் என்று தெய்வச் சேக்கிழார் கூறுகின்றார்.

*திருக்கயிலாய ஞான உலா*

இவ்வுலா நூல் உலா இலக்கியங்களுக்கு முன்னோடியாய் முதல் உலா இலக்கியமாய் விளங்குவதனால் இதனை 'ஆதியுலா' என்றும் முன்னோர் வழங்கி வரலாயினர். கி. பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வராய்க் கருதப்படும் அருணகிரிநாதர்,

'ஆதியந்த உலாவாசு பாடிய சேரர்' (திருப்புகழ் 104)

என்றும், அதே காலத்தில் வாழ்ந்த இரட்டையர்,

'பொன்வண்ணத் தந்தாதி ஆதியுலாவோ டமைத்தோனும்'

(ஏகாம்பரநாதருலா-90)

என்றும் குறிப்பிடுதலால் 'ஆதியுலா' என்னும் வழக்கு மிகப் பழமை யானது என்பது பெறப்படும்.

மேலும், 'திருவுலாப் புறம்' என்னும் பெயர் வழக்கும் இதற்குப் பழமையாக உண்டு. சேரமான் பெருமாள் நாயனார் திருக்கயிலை யில் இறைவனிடம்,

'உனை அன்பால் திருவுலாப்புறம் பாடினேன்
திருச்செவி சாத்திடப் பெற வேண்டும்'

(பெரிய. வெள்ளானை-47)

என்று விண்ணப்பஞ் செய்ததாகவும், அதனைச் 'சொல்லுக' எனப் பணித்துத் திருச்செவியேற்ற இறைவன்,

'சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த திருவுலாப்புறங் கொண்டு
நாரி பாகரும் நலமிகு திருவருள் நயப்புடன் அருள்செய்வார்'

(பெரிய. வெள்ளானை. 48)

என்றும் சேக்கிழார் பெருமான் அறிமுகப்படுத்துதலினாலே 'திரு உலாப்புறம்' என்னும் வழக்கும் முன்பு உள்ளமை தெரியவரும். நச்சினார்க்கினியர் இவ்வுலா நூலை மேற்கோள் காட்டுமிடத்து, 'திருவுலாப்புறம்' (தொல். செய்யு. 160 உரை) என்றே சுட்டியுள்ளமை யும் அந்நாள் வழக்கினை உறுதிப்படுத்தும்.

ஈசனின் திருவுலா எழுச்சியும், அதனை,

'பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
மாதரவர் சேர மகிழ்ந்தீண்டி' (ஆதியுலா-67)

வந்து காணுதலும், அந்த எழுபருவ மகளிரின் உள்ளத் துணர்ச்சிகளும் அவருற்ற வேட்கை நிலைகளும் இந்த ஆதியுலாவில் அழகுறப் பாடப் பட்டுள்ளமை காணலாம். இந்த அமைப்பையே பின் வந்த உலா நூல்களும் பெரும்பாலும் அடியொற்றிச் செல்கின்றன.

### திருவுலாமாலை

பதினொராந் திருமுறையிலேயே இடம் பெற்ற மற்றொரு உலா இலக்கியம் 'ஆளுடை பிள்ளையார் திருவுலாமலை' என்பது. இதனைப் பாடியவர் கி. பி. 10ஆம் நூற்றாண்டினரான நம்பியாண்டார் நம்பி யாவர்.[1] ஆளுடைய பிள்ளையார் என்பது திருஞானசம்பந்தரின் மற்றொரு பெயர். இவர் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவர். இறைவனைக் குறித்த ஆதியுலாவோடு இறைவனடியாரைப் பற்றிய இவ்வுலாவும் பதினொராந் திருமுறையின் பின்பகுதியில் இடம் பெற்றுள்ளது பொருத்தமே. இதில் திருஞானசம்பந்தரின் சிறப்புகள் பலவும் பேசப்பட்டுள்ளன. இதில் ஏழு பருவ மகளிரின் செயல்களை யும் தனித்தனியே எடுத்துரைக்காமல் ஒருசேரத் தொகுத்து அம் மகளிரின் வேட்கை நிலை வெளிப்பாடுகளைப் பாடியுள்ளார். இந்த அமைப்பு வேறு எந்த நூலிலும் இடம்பெறாத ஒரு தனி அமைப் பாகும்.

### பின் வந்த உலா நூல்கள்

பதினொராந் திருமுறையில், 'ஆதியுலா' இறைவன் வீதியுலா வந்ததையும், 'ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை' இறைவன் அடியார் வீதியில் எழுந்தருளி வந்ததையும் பொருளாகக் கொண்டு அமைந்தவை என்பது கண்டோம். இதன்பின் சோழமன்னர் விக்கிரமன், இராசராசன், குலோத்துங்கன் என்பார் மூவர் காலத்தும் வாழ்ந்திருந்த பெரும்புலவர் ஒட்டக்கூத்தர் இம் மூவர் மேலும் தனித் தனி உலா இலக்கியம் பாடியுள்ளார். இவற்றை ஒருசேர 'மூவருலா' என வழங்குதலும் உண்டு. இதன் பின்னர் காளமேகப் புலவர், இரட்டையர் உள்ளிட்ட புலவர் பல்லோர் நூற்றாண்டுதோறும் உலா மாலை பாடி வந்துள்ளனர்.[2]

### காவியங்களில் உலாவியல்

பெருங் காவியங்களில் காவியத் தலைவனும் பிறரும் வீதியில் உலா வரும் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. உலாவியல் இல்லாத காவி யங்களே இல்லை என்னும் வகையில் இவ்வுலாவியல் நிகழ்ச்சி காவியங் களில் ஓரங்கமாகவே அமைந்துவிட்டது எனலாம்.

### சிலப்பதிகாரம்

சேரன் செங்குட்டுவன் வடநாட்டரசரைவென்று வாகைசூடித் தன் தலைநகர் மீண்டபோது, நகர மக்கள் திரண்டு வந்து மகிழ்வுடன் வரவேற்றனர்; நகரம் விழாக்கோலம் பூண்டு திகழ்ந்தது.

---

1. சைவ இலக்கிய வரலாறு, பக். 442.
2. உலா இலக்கியப் பட்டியல் காண்க (பக். 39-40).

'மாலை வெண்குடை வாகைச் சென்னியன்
வேக யானையின் மீமிசைப் பொலிந்து
குஞ்சர வொழுகையிற் கோநகர் எதிர்கொள
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட் டுவனென்'

(வஞ்சிக். நீர்ப்படைக். 253-256)

என்று பாடுகின்றார் இளங்கோவடிகள். நகர மாந்தர் யானைமீது ஏறிவந்த தங்கள் மன்னன் செங்குட்டுவனை எதிர்கொண்டனர். அவன் யானைமீது பவனி வந்து மக்கள் மகிழ்ச்சியுறத் தன் அரண்மனை சேர்ந்தான் என்பது இங்குப் புலனாகும்.

### மணிமேகலை

மணிமேகலையில் மன்னன் மகனாகிய இளவரசன் உதயகுமரன் தேரேறி வீதிகளில் சென்ற நிகழ்ச்சிகள் உள்ளன. ஒருமுறை மதவெறி கொண்டு தெருத்தோறும் மக்களை வருத்தித் திரிந்த 'காலவேகம்' என்னும் யானையை அடக்குகிறான் உதயகுமரன். பின், அவன் தேரேறிப் படைவீரர் சூழ வீதி வழியே திரும்புகின்றான். இங்கே உதயகுமரனின் உலாவியல் விரிவாகச் சுட்டப்படாவிடினும் வீதியில் மக்கள் போற்ற அவன் உலா வந்திருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

'கடுங்கண் யானையின் கடாத்திற மடக்கி
அணித்தேர்த் தானையொ டரசிளங் குமரன்
மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றிக்
காரலர் கடம்பன் அல்லன் என்பது
ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்'

(மணி. 4 பளிக்கறை. 46-50)

எனச் சாத்தனார் தேர்மிசை ஏறி வந்த உதயகுமரன் கடப்பமாலை அணிந்த முருகனே என மக்கள் வியந்து போற்றும் வகையில் வந்தான் என்று குறிப்பிடுகின்றார்.

### பெருங்கதை

பெருங்கதைத் தலைவன் உதயணன் சயந்தி நகரில் வாசவதத்தை யைத் திருமணச் சடங்கு நிகழ்த்தி அடைகிறான். அதன்பின் ஆறும் மாதத்தில் மயிர்களைதலாகிய மங்கல காரியத்தையும் செய்கிறான். அப்பொழுது உதயணனையும் வாசவதத்தையையும் பல்வகைச் சிறப் புடன் நீராட்டி அலங்கரிக்கின்றனர். மணநாள் கடமையாகத் தேவாலயம் சென்று வணங்கித் திருநகரையும் வலஞ்செய்து வர வேண்டும் என்னும் முறைப்படி அவன் அருகன் கோட்டஞ்சென்று வணங்குகிறான்.

'தேவ குலத்தொடு திருநகர் வலஞ்செயக்
காவல குமரர் கடிநாட் கடனென
வென்றி முழக்கங் குன்றாது வழங்குநர்
முன்னர் நின்று முன்னியது முடிக்கென
மங்கல மரபினர் மரபிற் கூறக்
காவல குமரனுங் கடிநகர் வலஞ்செய
மேவினன்....................'

(பெருங். 2, இலாவாண 6, தெய்வப். 5-11)

என்று அவன் அப்பொழுது செய்த செயல்கள் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. உதயணனும் வாசவதத்தையும் அருகன் கோட்டம் சென்று விதிமுறைப்படி வணங்கி வழிபட்ட பின்னர் நகரிலுள்ள பல்வேறு திறத்தினரும் பாராட்டி இன்புறும்படி நகரை வலமாய் வந்தனர். இந்நிகழ்ச்சியை இக்காவியம் 'நகர்வலங் கண்டது' என்னும் ஒரு பகுதியாய் அமைத்து அழகுறச் சித்திரிக்கின்றது.

உதயணனும் வாசவதத்தையும் நகர்வலம் வந்தபோது மங்கல மரபினர் வாழ்த்தெடுத்தனர். மகளிரும் மைந்தரும் வீதி இருமருங்கும் உலாக் காண வந்து திரண்டனர்; அவர்கள் மாடங்களின் மேலும் திரண்டு நிறைந்து நின்றனர். பேதை, பெதும்பை முதலிய வெவ்வேறு பருவநிலை கொண்டாரும் அம் மகளிரிடையே இருந்தனர்.

'பெதும்பை மகளிர் விதும்பி நோக்கினர்' (பெருங். 2 : 7 : 7)

'பேதை மகளிர் வீதிமுன்னினர்' (பெருங். 2 : 7 : 10)

'தெரிவை மகளிர் தேமொழிக் கிளவிக்
குழித்தலைப் புதல்வ ரெழிற்புறம் வரித்த
அஞ்சாந் தழிய வாகத் தடக்கி
நுண்சா லேகத் தெம்பரும் நோக்கினர்'

(பெருங். 2 : 7 : 113 : 116).

'மணிநிற மஞ்ஞையுஞ் சிங்கமும் மயங்கி
அணிமலை யிருந்த தோற்றம் போல
மகளிரும் மைந்தருந் தொகைகொண் டீண்டி
மாடந் தோறு மலர்மழை பொழிய' (பெருங். 2 : 7 126 : 129)

எனவரும் பகுதிகள் மேலே கூறியதற்குச் சான்றுகளாய் அதில் உள்ளன. உதயணனும் நகரம் முற்றும் வலம் வந்து தம் மாளிகைக்கு மீண்டான் என்றும் பின்வரும் அடிகள் தெரிவிக்கின்றன :

'அரும்பதி யுறைநர் விரும்புபு புகழ
அருந்தவங் கொடுக்குஞ் சுருங்காச் செல்வத்
துத்தர குருவ மொத்த சும்மை
முத்துமணல் வீதி முற்றுவலம் போகித்
தெய்வ மாடமுந் தேர்நிலைக் கொட்டிலும்

ஐயர் தானமு மன்னவை பிறவும்
புண்ணியப் பெயரிடங் கண்ணி னேக்கி
நாட்டகம் புகழ்ந்த நன்னகர் புகல
மீட்டகம் புக்கு மேவரு செல்வமொடு.'

(பெருங். 2: 7 : 139-147)

இங்ஙனமாக இப் பெருங்கதைக் காப்பியம் தந்த கொங்குவேளிர் உலாவியற் செய்திகளை 'நகர்வலங் கண்டது' என்னும் பகுதியில் விவரித்துள்ளார். இவையெல்லாம் அந்நாளில் வாழ்ந்த அரசர் முதலியோரின் வாழ்க்கைப் போக்கையும் பழக்க வழக்கங்களையும் அறிவுறுத்துகின்றன.

*சீவக சிந்தாமணி*

வேடர் கவர்ந்து சென்ற ஆநிரையை மீட்டு வென்றிப் பெருமிதத்துடன் சீவகன் வீதிஉலா வருவதைச் சிந்தாமணிக் காப்பியம் சித்திரித்துக் காட்டுகிறது (கோவிந். 50-64). சீவகன் வீதியில் உலாவரு காட்சியைக் காண மகளிர் ஓடிவந்து வீதிகளில் நெருங்கி நிற்கின்றனர் :

'இன்னமிர் தனைய செவ்வா யிளங்கிளி மழலையஞ்சொற்
பொன்னவிர் சுணங்கு பூத்த பொங்கிள முலையினார்தம்
மின்னிவர் நுசுப்பு நோவ விடலையைக் காண ஓடி
அன்னமும் மயிலும் போல அணிநகர் வீதி கொண்டார்'

(சீவக. கோவிந். 51)

என்கிறார் திருத்தக்கதேவர். இம்மகளிர் கண்கள் எல்லாம் கதிரவன் ஒளி நோக்கித் திரும்பும் நெருஞ்சிப் பூப்போல் சீவககுமாரன் செல்லும் செலவினையே நோக்கினவாம்.

'வாளரந் துடைத்த வைவே லிரண்டுடன் மலைந்த வேபோல்
ஆள்வழக் கொழிய நீண்ட அணிமலர்த் தடங்கண் எல்லாம்
நீள்சுடர் நெறியை நோக்கும் நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போற்
காளைதன் தேர்செல் வீதி கலந்துடன் றொக்க அன்றே'

(கோவிந். 55)

எனத் தேரில் சீவகன் உலாவருங் காட்சியை நம் உளங்கொளக் காட்டுகின்றார் கவிஞர்.

ஏனைய சூளாமணி, நாககுமார காவியம் போன்ற பிற காவியங்களிலும் உலா பற்றிய கூறுகள் இல்லாமலில்லை.

*கம்பராமாயணம்*

கவிச் சக்கரவர்த்தி கம்பர் தம்முடைய பெருங் காவியத்திலே உலாச் செய்திகளை நன்கு சித்திரித்து உரைப்பதற்கேற்ற வகையில்

பாலகாண்டத்தில் 'உலாவியற்படலம்' என ஒரு படலத்தையே சமைத்துள்ளார். இராமன் சீதை திருமணத்திற்காக மிதிலைவந்த தசரத மன்னரையும், அவர் திருக்குமாரர் இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கனையும், ஏனைய அரச பரிவாரங்களையும் நகரத்தின் எல்லையி லேயே சனகன் எதிர்கொண்டு அழைத்து வருகிறான். இந்த நிகழ்ச்சி யைக் கூறும் 'எதிர்கோள் படல'த்தின் இறுவாயாகக் கம்பர்,

'பேதைமார் முதல்கடைப் பேரிளம் பெண்கள்தாம்
ஏதியார் மாரவேள் ஏவவந் தெய்தினார்
ஆதிவா னவர்பிரான் அணுகலால் அணிகொள்கார்
ஓதியார் வீதிவாய் உற்றவா றுரைசெய்வாம்'

(எதிர்கோள். 32)

என்று உலாவியற் படலத்திற்குத் தோற்றுவாய் செய்கிறார். இப் படலத்தில் இராமனைக் கண்டு மகளிர் கொண்ட மெய்ப்பாடுகளும், அவர்தம் காதல்மொழிகளும் கற்பார்க்குக் களிபேருவகையூட்டுவன.

**உலா இலக்கணம்**

இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரபாதலின் தனி நூலாகவும் காவியம் முதலிய பிற பெருநூல்களிலும் சொல்லப்பட்டு வரும் உலாப்பாட்டு மரபுகளைப் பாட்டியல் நூல்கள் வரையறுத்து உரைக்கலாயின. சங்கப்பாட்டியல் எனப்படும் பன்னிரு பாட்டியலிலும் வெண்பாப் பாட்டியல் முதலிய பிற பாட்டியல்களிலும் உலாவின் இலக்கணம் வகைபெற விளக்கியுரைத்துள்ளமை காணலாம். தலைவன் உலா வருதன்மையும் எழு பருவ மகளிர் காதலுரைகளும் அழகுற விரவிவரக் கலிவெண்பாவினால் ஆக்கப்பெறுவது உலா நூல்.

'பாட்டுடைத் தலைவன் உலாப்புற இயற்கையும்
ஒத்த காமத் திணையாள் வேட்கையும்
கலியொலி தழுவிய வெள்ளடி இயலால்
திரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே'

எனப் பன்னிரு பாட்டியலும்,

'திறந்தெரிந்த பேதைமுத லெழுவர் செய்கை
மறந்தயர வந்தான் மறுகென்—றறைந்தகலி
வெண்பா வுலாவாங் குழமகன்மேல் மேவிலவ்
வெண்பாக் குழமகனா முற்று'

என வெண்பாப் பாட்டியலிலும் தரப்படும் இலக்கணம் முற்பட எழுந் தது. இதனையே சற்று விளக்கமாக மகளிரின் பருவ வயதினையும் வரையறுத்து உரைக்கின்றது சிதம்பரப் பாட்டியல்:

குழமகனை அடையாளம் கலிவெண் பாவால்
 கூறியவன் மறுகணையக் காதல் கூரேழ்
எழிற்பேதை பதினொன்று பெதும்பை பன்மூன்று
 இயன்மங்கை பத்தொன்பான் மடந்தை யையைந்

*தழகரிவை முப்ப:தோர் தெரிவை நாற்பா*
*ணும்வயது பேரிளம் பெண் முதலாயுள்ளோர்*
*தொழவுலாப் போந்த துலாத் தலைவன்பேர்க்குத்*
*தொடையெதுகை யொன்றி லின்ப மடலாய்ச் சொல்லே.'*

(சிதம்பரப். மரபி. 37)

இவ்வகையிலேயே இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்தத் திரட்டு, பிரபந்ததீபிகை முதலிய பாட்டியல் நூல்களும் பகர்கின்றன.

**உலா இலக்கியத்திற்குரிய பாட்டு**

உலா இலக்கியத்தினைத் தூது, மடல் என்னும் பிரபந்தங்களைப் போலக் கலிவெண்பாவினால் பாடுவது மரபு. உலா நூலுள் முற்பட மடந்தையருடைய கையில் உள்ள குழமகனைப் பாடுவதும் உண்டு. இந்தக் குழமகனைப் பற்றிய பகுதியைக் கலிவெண்பாவில் அமைப்ப தோடு ஆசிரிய விருத்தத்தால் பாடுவதும் வழக்கம்.

நான்கு வருணத்தாரும் உலாப்புறம் பாடற்கு உரியர் என்றும், கடவுளர் மறையவர் என்றிவர் கலிவெண்பாவிற்கு உரியர் என்றும் பன்னிரு பாட்டியல் விளக்கும்.

**உலாக்கூறு அமைந்த வேறு பிரபந்தங்கள்**

பவனிவந்த ஒரு தலைமகனைக் கண்டு காதல் கொண்ட ஒரு தலைவி தன்தோழியிடம் வருந்திக் கூறுவதாகப் பாடப்படும் பிரபந்தத்திற்குப் 'பவனிக்காதல்' என்று பெயர்சூட்டியுள்ளனர். 'குறவஞ்சி' இலக்கியம் தலைவன் பவனியை முன்வைத்தே வளர்ந்துள்ளது. உலாப்பெறும் தலைவர்களின் நாடு, ஊர் முதலிய பத்து உறுப்புகளைக் குறித்துக்கூறும் பகுதிகள் 'தசாங்கப்பத்து' எனத் தனியாகவரும் இலக்கியப் பாங்கே ஆகும்.

உலாவைப் போன்றே கலிவெண்பாவில் வரும் பிரபந்தங்கள் மடல், தூது, காதல் என்பனவாம். இவைஅகப்பொருள் மரபுகளினின்று வளர்ந்து வளம்பெற்றனவே.

**உலா ஒரு புறத்திணை இலக்கியம்**

புறத்திணைப் பாகுபாட்டுள் ஒன்றாகிய பாடாண்திணைப் பகுதியை உலா இலக்கியம் சாரும். பாடற்குரிய தலைமகனின் உலாப்புற ஒழு கலாற்றுடன் மங்கையர் காதல் நிலையாகிய அகப்பொருளும் உடன் கலந்துவரும் இயல்பினது. உலாவரும் தலைமகன்மீது ஏழு பருவ மங்கையர் காதல் கொண்டதாகப் பாடுவதுதான் இவ்விலக்கிய முறை. எனவே, மங்கையரின் ஒருதலைக் காமம்தான் இதில் இடம் பெறுகிறது. அம்மங்கையர்மேல் உலாத்தலைவன் காதல் கொண்டான் என்று பாடப் படுதல் மரபு அன்று. பெண்பாலாரின் ஒருதலைக் காமமாகவரும் பகுதிகள் பெண்பாற்கைக்கிளை என்று சொல்லப்படும்.

கடவுளர் திருவீதியிற் பவனிவர அவர்மேல் எழுபருவ மங்கையரும் காதல் கொண்டைதுபற்றிக் கூறப்படுவதனை 'கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்னும் துறையாகக் கொள்வர். மானிடப் பக்கம், தெய்வப்பக்கம் எதுவாயினும் மகளிர் காதல் நிலை பேசப்படுவது கைக்கிளை என்பதும் உலா இலக்கியங்கள் புறத்திணைப் பாடாண் பகுதியவாம் என்பதும் தெளிவு.

## விருந்து இலக்கியம்

உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற புதிய இலக்கியத் தோற்றங்கள் எல்லாவற்றையும் 'விருந்து' எனப்படும் புதுமை இலக்கியங்களாகவே தொல்காப்பியர் கருதுகின்றார்.

'விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'

(தொல் பொருள். செய்யு. 231)

என்பது அவர் தரும் விளக்கம். இந்நூற்பாவிற்கு உரை வகுத்துள்ள வர்களுள் பேராசிரியர்தரும் விளக்கம் பின்வருமாறு :

> "புதுவது கிளந்த யாப்பின்மேற்று என்னையெனின், புதிதாகத் தாம் வரவேண்டியவாற்றால் பல செய்யுளும் தொடர்ந்துவரச் செய்வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க; கலம்பகம் முதலாயினவும் சொல்லுப."

இவ் விளக்கத்தால் சிற்றிலக்கியங்கள் பலவும் விருந்து வகை இலக்கியங்களே என்பது தெளிவு.

## உலா நூல்களின் பெயர் வழக்கு

உலா என்பது உலாப்புறம், உலாமாலை எனவும் சுட்டப்பெறுதல் உலா நூல்களின் மரபு. ஆயினும், இதன் வேறு பெயராகிய பவனி, பவனியுலா என்னும் பெயர்களாலும் சில நூல்கள் குறிக்கப் பட்டுள்ளன. திருக்கழுக்குன்ற உலாவில், 'பவனித் திருத்தேரைப் பாரீர்' (129) என்றும், 'பொற்கழுக் குன்றீசர் பவனித் திருவுலாப் பாட' (காப்பு) என்றும் பாடுகின்றார். 'உலாப்புறம்' என்னும் பெயரில் புறவுலா என்பதே அவ்வாறு இலக்கணப் போலியாய் வந்துள்ளது என்கிறார் சங்கர நமச்சிவாயர்.

'ஆதி உலா' எனப் போற்றப்படும் சேரமான் பெருமாள் நாயனார் அருளிய 'ஞான உலா' பாட்டுடைத்தலைவன் வீற்றிருக்கும் இடப் பெயரால் குறிக்கப்படுகின்றது. இவ்வாறே ஊர்ப்பெயரால் வழங்கும் நூல்கள் திருவாரூருலா, பேரூருலா, தேவையுலா, அவிநாசி யுலா, திருப்பனந்தாள் உலா, குலசையுலா முதலியனவாம்.

இனி, பாட்டுடைத்தலைவன் இயற்பெயரோடு இயைந்தும் சில உலா நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கச்சிநகர் எம்பெருமான் ஏகாம்பரநாதர்மேல் பாடப்பட்ட உலா 'ஏகாம்பர நாதருலா' என வழங்கப்படுகிறது. காளத்தி நாதருலா, வாட்போக்கி நாதருலா முதலியனவும் இவ்வகையின. தெய்விக உலாக்களைப் போன்றே மக்களின் தலைவராகிய அரசர்மேல் பாடப்பெற்ற உலாக்கள் அவ்வந் நூலுக்குரிய பாட்டுடைத்தலைவர்களின் பெயர்களைப் பெற்றுள்ளன. சோழப் பேரரசர் விக்கிரமசோழன், இராசராசன், குலோத்துங்கன் ஆகியோர் பெயரில் அமைந்த உலாக்கள் அவர்தம் பெயரோடு சார்த்தி வழங்கப்படுகின்றன. இம் மூன்றையும் ஒருசேர எண்ணுத் தொகைப் பெயரால் 'மூவருலா' என வழங்குதலும் உண்டு. சிவந் தெழுந்த பல்லவன் உலா, குறுநிலத் தலைவனைப் பற்றியதாகும்.

பாட்டுடைத்தலைவர் இயற்பெயரோடு அவர்தம் ஊர்ப்பெயரை முதலிற்கொண்டு ஊர்ப்பெயரும் இயற்பெயருமாய் இணைந்தும் சில உலா நூல்கள் பெயர்பெற்றுள்ளன. இவ்வகையில் வந்துள்ள நூல்களாவன : குன்றக்குடி சண்முக நாதருலா. மதுரைச் சொக்கநாதருலா, திருவிலஞ்சி முருகன் உலா, தஞ்சைப்பெருவுடையார் உலா, கயத்தாற்றரசன் உலா முதலியனவாம்.

பாட்டுடைத்தலைவரின் தகுதிபற்றிக் கடவுளர்மீது பாடப்பெற்றவை, ஆசிரியர்மீது பாடப்பெற்றவை, ஆதரித்த வள்ளல்கள்மேல் பாடப் பெற்றவை எனவும் முப்பிரிவாய்க் காணலாம். இவற்றிற்கு முறையே ஆதியுலாவையும் தத்துவராயரின் ஞானவிநோதன் உலாவையும் மூவருலாவையும் எடுத்துக்காட்டுகளாய்க் கொள்ளலாம். பாடும் பொருளால் தனிப் பாகுபாடு பெறுவது 'சிலேடையுலா' என்பதாம்.

## உலாவின் சிறப்புக் கூறுகள்

### உலாத் தலைமகன்

உலாப் பாடப்படும் தலைமகன் இறைவனாகவும் இருக்கலாம்; மண்ணாளும் மன்னனாகவும் இருக்கலாம்; குணக்குன்றாய்த் திகழும் பெருமகனாகவும் இருக்கலாம். முதலில் உலா அரசர் மேலதாய். பின் உலகிற்குத் தலைவனாம் இறைவன்மேலும், பின்னர் இறைவன் அருளுக்கு ஆளான தவமுனிவர்மேலும், பெருமக்கள் மேலும் உலா இலக்கியங்கள் தோன்றியுள்ளன.[1]

### முன்னிலைப் பகுதி

உலாத் தலைவனின் பல்வேறு சிறப்புகளையும் கவிஞர் முதலில் அறிமுகப்படுத்துவது இப் பாட்டின் முற்பகுதி. இதனைத் 'தசாங்கப் பகுதி' என்றும் சொல்லலாம். தசாங்கமாவது பாட்டுடைத்தலைவனின்

1. இவ் வகுப்பு விவரம் பின்னிணைப்புப் பட்டியலிற் காண்க. (39-40)

மலை, ஆறு, நாடு, ஊர், மலர்த்தார், குதிரை, களிறு, கொடி, முரசு, ஆணை என்னும் பத்துமாம்.

மணிவாசகர் அருளிய திருவாசகத்தில், 'திருத்தசாங்கம்' பற்றிய பத்தில் நாமம், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்னும் பத்தினையும் சிறப்பித்து ஓதுகின்றார். திவாகரம், பிங்கலம் என்னும் இரு பழைய நிகண்டுகளும், 'நாமம்' என்பதனை விடுத்துத் தேர் என்னும் உறுப்பைக் கொண்டுள்ளன.

'மலையாறு நாடூர் மலர்த்தார் வயப்பரி மாமதத்த
கொலையார் களிறு கொடிமுர சாணை குலவு பத்தும்
தலையான நூலோர் தசாங்கம தென்பர் தமதயலே
கொலையான சொற்பொருள் தோன்றிடில் ஆனந்தங் கூறுவரே'

(நவநீத. முதல்மொழி, 10)

எனவரும் நவநீதப் பாட்டியல் செய்யுளின் விளக்கம் ஈண்டு அறியற்பாலது.

இவ் விளக்கம் இதற்கு முற்பட்ட வெண்பாப் பாட்டியலை அடியொற்றியுள்ளது. சூடாமணி நிகண்டு செங்கோலாணைக்குப் பதிலாகப் படை என்பதனைத் தருகிறது. இவ்வாறாக வரும் இவை பத்துள் ஒரு சில வேறுபாடுகள் காணப்படினும் இவையெல்லாம் அரசியலுறுப்புகள் என்பது தெரியவரும்.

'பேதைமுத லேழ்பருவப் பெண்கள் மயக்கமுற
ஓதுமறு குற்றனென் வேலானென்—றேதம்
அறக்கலி வெண்பாவி னுக்க லுலாவாம்
புறத்தசாங் கந்தாங்கிப் போற்று'

எனப் பிரபந்தத் திரட்டுநூல் உலாவில் தசாங்கம் தழுவப்படுதலை எடுத்துக் காட்டுகிறது. என்றாலும் எல்லா உலா நூல்களிலும் இந்தப் பத்து உறுப்பும் குறைவற வருணிக்கப்படுவதில்லை; ஒரு சில அங்கங்கள் குறைந்து காணப்படுதலும் உண்டு.

பாட்டுடைத்தலைவன் புகழ்பாடும் இம் முதற்பகுதியை அடுத்து, அவன் தூயநீராடிக் கோலம்பூண்டும் உயர்வாகனம் ஏறி வீதியில் உலா வருவதனையும் விளக்கும். இப் பகுதியை, 'உலாவின் முன்னிலைப் பகுதி' என்பர். 'முதனிலை பின்னெழுநிலை உலா வெண்கலி' என்னும் பன்னிரு பாட்டியல் நூற்பாவில் (213) உலாவின் முதற்கண் முன்னிலையும் — அதாவது உலாவெழுந்தருளுதலும், எழு பருவ மகளிர் உலாக் கண்டு அடையும் மெய்ப்பாடுகளை விவரிக்கும் 'பின்னெழு நிலையும்' சுட்டப்பட்டிருத்தல் காணலாம்.

*பின்னெழுநிலை*

பின்னெழுநிலை என்பது உலாக்காணும் எழு பருவ மங்கையரின் காதலுணர்வு வெளிப்பாட்டுப் பகுதியே. இதில் அவ்வப் பருவ

மங்கையர் ஆடும் விளையாடல்களைப் பொருத்தமாய் இயைத்து மொழிவர். சிற்றில், பாவை, கழங்காடல், அம்மனையாடல், ஊசல், கிளிக்குச் சொற்பயிற்றல், யாழ் மீட்டல், புனலாடல், பொழில் விளையாடல் முதலிய மகளிராடற் செயல்களைப் பருவநிலைக்கேற்றாற் போலப் பொருத்தமுறப் பாடுவது இயல்பு நவிற்சியாய் அமைந்து விளங்குதல் காணலாம்.[1] இந்த ஏழு பருவ மங்கையரின் வயது வரம்பையுங்கூட உலா ஆசிரியர்கள் சுட்டிச்சொல்வதுண்டு; அப்பாண்டைநாதர் உலாப் பாடிய அனந்தவிசயர் ஒவ்வொரு பருவ மங்கையரையும் அவருடைய வயதைக் கூறி முதற்கண் அறிமுகப் படுத்திய பின்னரே அவருடைய சிறப்பு நிகழ்ச்சிகளைப் பேசுகின்றார்.[2]

இவர் பாடியபடி பேதை முதலிய எழுவரும் முறையே 7, 11, 13, 19, 25, 31, 36 வயதுடையவராக மதிக்கப்படுகின்றனர். இந்த ஏழு பருவ மங்கையரின் வயது வரையறையிற் சிறுசிறு ஆண்டு வேறுபாடுகளும் அறிஞர்களின் உரைகளில் காணப்படுகின்றன.

'பேதை முதலெழு வோர்க்குப் பிராயங்கள் பேசுமள
வாதியைந் தேழுபன் னொன்றுபன் மூன்றுபத் தானொன்பது
மீதிரு பத்தைந்து முப்பத்தொன் றுமிகு நாற்பதென்றே
ஓதினர் தொன்னூற் பருணிதர் எல்லா முணர்ந்துகொண்டே'

என நவநீதப் பாட்டியல் வரையறை கூறுகின்றது. இதன்படி, பேதை 5-7; பெதும்பை 8-11; மங்கை 12-13; மடந்தை 14-19; அரிவை 20-25; தெரிவை 26-31; பேரிளம் பெண் 32-40 என்பது விளங்கும். சூடாமணி நிகண்டு இங்ஙனமே, மகளிர் பருவங்களுக்கு ஆண்டு வரையறை செய்கிறது. இவ்விரு நூலாரும் காட்டும் வயதில் பேரிளம் பெண்ணின் வயது ஒன்றே மேற்குறித்த உலா வரையறை

---

1. சிற்றில் பாவை களங்கம் மனையே
பொற்புறு மூசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழில்விளை யாட்டே
நன்மது நுகர்த லின்ன பிறவும்
அவரவர்க் குரிய ஆகு மென்ப. (பன்னிரு பாட். 234)

2. 'பேதை யெனும்பருவப் பெண்ணேழ் வயதுடையாள் (272)
'பெதும்பையாள் பன்னொன்றே பேராம் வயதாள்' (300)
'மங்கை யெனும்பருவம் மன்னியே சீர்பன்மூன்
றென்கை வயதி னியலுடையாள்' (339)
'மடந்தைப் பருவத்தின் வாழும் வயதின்
தொடர்ந்தபதி னொன்பான் துலங்கும்' (368)
'அரிவைப் பருவத் தையைந்து வயதாள்' (424)
'தெரிவையெனு மாறைந்தின் சீர்தினமே லொன்றும்
பருவ வயதுதனிற பாவை' (482)
'பேரிளம்பெண் ணென்பாள் பெருக்கிய வாறுறின்
சீரியலு மேவயதாள் செப்பவே' (524)

யில் பிறழுகிறது. தெரிவை 26 முதல் 30 ஆண்டு வரையில் என்று சிதம்பரப் பாட்டியலிலும் 26 முதல் 32 ஆண்டு வரையில் என்று இலக்கண விளக்கப் பாட்டியலிலும் காணப்படுகிறது.

பன்னிரு பாட்டியல் முற்றும் மாறுபட எல்லை வகுக்கின்றது. பேதை 5-8; பெதும்பை 9-10; மங்கை 11-14; மடந்தை 15-18; அரிவை 19-24; தெரிவை 2 -29; பேரிளம் பெண் 30-36 எனக் கொள்ளுகின்றது. மேலும், இந்தப் பன்னிரு பாட்டியல் ஆடவர்க்கும் பாலன், மீளி, மறவோன், திறலோன், காளை, விடலை, முதுமகன் எனப் பருவம் வகுத்து ஆண்டு வரையறையும் தருகிறது. பாலன் 7 வரை; மீளி 8-10; மறவோன் 11-14; திறலோன் 15; காளை 16; விடலை 17-30; முதுமகன் 30-க்கு மேற்பட்டவன். ஆண்பிள்ளைப் பருவம்பற்றிய விளக்கம் ஏனைய நூல்களுள் காணப்படாத புதுச் செய்தியாகும்.

### மங்கையர் எழு பருவநிலை

எழு பருவ மங்கையரின் பருவநிலைப் போக்கை டாக்டர் உ. வே. சாமிநாதையர் தாம் பதிப்பித்த திருக்குற்றால நாதர் உலாவின் முகவுரையில் சுவைபட விளக்கியுள்ளார். அது வருமாறு :

> "பொதுவாக மகளிர் உலகியலை அறியும்நிலை எய்தாத இளம் பருவம் பேதைப் பருவம் என்றும், காம உணர்ச்சி ஒருவாறு அரும்பி அதனை உணர்ந்தும் உணராததுமான நிலையிலுள்ள பருவம் பெதும்பைப் பருவம் என்றும், அவ்வுணர்ச்சியை நன்கு எய்திய பருவம் மங்கைப் பருவம் என்றும், அவ்வுணர்ச்சியில் பயின்று பருவம் மடந்தைப் பருவம் என்றும், அவ்வுணர்ச்சியில் முதிர்ந்து இன்பத்திற்றிளைக்கும் பருவம் அரிவைப் பருவம் என்றும், மகப்பேற்றையடையும் பருவம் தெரிவைப் பருவம் என்றும், காம வுணர்ச்சி தளர்வுறத் தோன்றும் பருவம் பேரிளம்பெண் பருவம் என்றும் ஒருவாறு பாகுபாடு செய்துகொள்வது பொருத்தமுடைத் தெனலாம்."

இவர் தரும் விளக்கம் அவ்வப் பருவத்தில் மகளிர் எய்தும் உணர்ச்சி நிலையை நன்கு விளக்குகின்றது.

எழு பருவ மங்கையரைப் பாடும் திறத்தில் பெதும்பைப் பருவமே அருமையாகக் குறிக்கப்படுகிறது. காம உணர்ச்சி ஒருவாறு அரும்பியும், அரும்பா நிலையிலும் உள்ள இப் பருவத்தினரின் உள்ளுணர்ச்சிகளைச் சித்திரிப்பது அத்தனை எளிதன்று. இதன் அருமை கருதியே ஔவையார் 'பேசும் உலாவில் பெதும்பைப் புலி' என்று பாடுதல் நோக்கத்தகும் பெதும்பைப் பருவநிலையை நன்கு வேறுபாடு தோன்றச் சித்திரித்துக்காட்டுவது பெருங்கல்வியாளர்களுக்கே இயல்வதாகும் என்பது அவர் கருத்தாதல் புலப்படும்.

### உலாத் தலைவனுக்கு வயது வரம்பு

உலாக் காணும் மகளிரின் வயது வரையறைபோல உலாப் பிரபந்தம் கொள்ளும் தலைவனுக்கும் வயது வரம்புகட்டிப் பன்னிரு

பாட்டியல் கூறுகிறது. 16 வயது முதல் 48 வயதுவரையுள்ள ஆடவர்களுக்கு மட்டுமே உலாப் பாடுதல் மரபு என்பதனை,

'நீடிய நாற்பத் தெட்டி னளவும்
ஆடவர்க் குலாப்புற முரித்தென மொழிப'

(பன்னிரு பாட்டியல். 213)

என்னும் அப் பாட்டியல் சூத்திரம் விளக்கும். இவ் வயது வரையறை மானிடர்க்கேயன்றி தெய்வங்களுக்கு இல்லை.

**உலாக் காணும் எழுபருவ மங்கையர் யாவர் ?**

உலாக் காணும் மகளிர் குலமகளிராயின் அவர்தம் கற்புடைமை என்னுவது? கற்புடைப் பெண்டிர் மறந்தும் பிற ஆடவரைக் கண்ணெடுத்துப் பார்ப்பரோ? இவ்வாறான ஒரு சமுதாயச் சிக்கல் கவிஞர்களிடையே எழுகிறது மேலும், அன்றைய சமுதாயத்தில் விலைமகளிர், பொது மகளிர் எனப்படும் பெண்டிர் தனிப்பட எடுத்துக் கூறப்படுகின்றனர். வரையறை எதுவுமின்றிப் பொருளுக்காக ஆடவர் பலரைச் சேர்ந்து வாழும் மாதர்களைப் பொருட் பெணடிர், வரைவின் மகளிர் என வள்ளுவர் கூறுகின்றார் நகரங்களில் இவர்கள் வாழும் வீதியையும் தனிப்படக் கவிஞர்கள் காவியங்களில் எடுத்துரைத்துள்ளனர். இம் மரபினர் பின்னர்த் திருக்கோயிற் பணிகளிலும் ஈடுபடலாயினர். எனவே, இவரை உருத்திரகணிகையர், தளிப் பெண்டுகள் எனவும் வழங்கலாயினர். இம்மகளிரே உலாவில் சித்திரிக்கப்பெறும் பெண்டிர் எனப் புலவர் சிலர் கொள்ளலாயினர்.

இலக்கண நூல்மரபும் இதனை ஆதரிப்பதாக நச்சினார்க்கினியர் கொண்டுள்ளார்.

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'

(தொல். புறத். 30)

என்னும் தொல்காப்பியச் சூத்திர வுரையில் இச்செய்தியை அவர் விளக்கியுள்ளார். இங்கே அவர் தரும் விளக்கமாவது :

"பக்குநின்ற காமம் ஊரிற் பொதுமகளிரோடு கூடிவந்த விளக்கமும் பாடாண்டிணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர். அது பின்னுள்ளார் ஏழு பருவமாகப் பகுத்துக் கலி வெண்பாட்டாகச் செய்யும் உலாச் செய்யுளாம்'

என்பதாம். டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் மற்றொரு குறிப்பையும் சுட்டிக் காட்டியுள்ளார் :

"(உலா)போன்ற சைவப் பிரபந்தங்களிற் கூறப்பட்டுள்ள இம் மாதர்கள் உருத்திர கணிகைய ராவர். இவர்கள் தளிப்

பெண்டுகள் எனவும் வழங்கப் பெறுவர். சில பழைய சிவ தலங்களில் உருத்திர கணிகையர் அவற்றிற்குரிய திருவுலாப் பகுதியைப் பாடிவருதல், இந் நூல் அவ்வகையாரோடு பொருத்தமுடையது என்பதைப் புலப்படுத்தும்.'

(மதுரைச் சொக்கநாதருலா, முகவுரை, பக் v-vi)

இவ்வாருக நச்சிஞர்க்கினியர் தொடக்கமாக டாக்டர் உ. வே. சாமிநாதையர் ஈருக அறிஞர் பெருமக்கள் உலாக் காணும் மகளிரைக் குறித்துச் சொல்லியுள்ள கருத்துகளுக்குஆதாரம் இல்லாமலும் இல்லை. தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

பெருங் கதையில் வரும் ஓர் உலா நிகழ்ச்சிப் பகுதி ஈண்டுக் காணத்தகும். ஒருகால் உதயணன் நகர் வலமாக உலா வந்தான்; அப்பொழுது கற்புடை மகளிர் அல்லாதவரே அவன் மேனியழகில் ஈடுபட்டனர் எனக் கொங்குவேளிர் பாடுகின்ருர்.

'ஞாலந் திரியா நன்னிறைத் திண்கோள்
உத்தம மகளி ரொழிய மற்றைக்
கன்னிய ரெல்லாங் காமன் துரந்த
கணையுளங் கழியக் கவினழி வெய்தி
இறைவனை நில்லார் நிறைவரை நெகிழ'

(பெருங். இலா. நகர்வலங். 53-57)

என்பது கவிஞர் வாக்கு. இங்கே கவிஞர் உத்தம மகளிரொழியப் பிறமகளிரே காமன் அம்புக்கு இலக்காயினர் என்று எடுத்துக் காட்டுகிருர்.

சீவகசிந்தாமணியிலே கோவிந்தையார் இலம்பகத்தில் நிரைமீட்டு வெற்றியுடன் திரும்பிவந்த சீவகனை நகரத்தார் மகிழ்ந்து வரவேற்கின்ற காட்சி ஒன்று உளது. சீவகன் உலாவந்த தெருவில் இருமருங்குமுள்ள மாடங்களிலே இருந்த கற்புடை மகளிர் பூமாலை முதலியன தூக்கி நறுமணப்புகை கமழ, முத்துமாலையை மங்கலமாக அணிந்து அவனை வாழ்த்துகின்றனர்.

'இரவிதோய் கொடிகொள் மாடத்
திடுபுகை தவழச் சுண்ணம்
விரவிப்பூந் தாம நாற்றி
விரைதெளித் தாரந் தாங்கி
அரவுயர் கொடியி னுன்றன்
அகன்படை அனுங்க வென்ற
புரவித்தேர்க் காளை யன்ன
காளையைப் பொலிக என்ருர்.' (சீவக. 456)

இங்கே மாடங்களை அணிசெய்து ஆரந்தாங்கி என்பதனுல் மகளி ரென்றும், காமக்குறிப்பின்றி வாழ்த்தினமையினுல் கற்புடை மகளிர் என்றும் உரையாசிரியர் கொள்வர்.

இதனை அடுத்துவரும் பாடல்களில் குறிப்பிடும் மகளிரை இவர்களின் வேறுபட்டவர் எனக் கருதுவர்.

'இன்னமு தனைய செவ்வா
யிளங்கிளி மழலை யஞ்சொற்
பொன்னவிர் சுணங்கு பூத்த
பொங்கிள முலையி னார்தம்
மின்னிவர் நுசுப்பு நோவ
விடலையைக் காண வோடி
அன்னமும் மயிலும் போல
அணிநகர் வீதி கொண்டார்.

'சில்லரிச் சிலம்பின் வள்வார்ச்
சிறுபறை கறங்கச் செம்பொன்
அல்குற்றே ரணிந்து கொம்மை
முலையெனும் புரவி பூட்டி
நல்லெழில் நெடுங்கண் ணம்பாப்
புருவவில் லுருவக் கோலிச்
செல்வப்போர்க் காமன் சேனை
செம்மன்மே லெழுந்த தன்றே.'

(சீவக. 457. 458)

இப்பாடல்களால் கற்புடை மகளிரல்லாத பிறமகளிரின் வேட்கைக் குறிப்புப் புலப்படுவதாக உரைகாரர் கொள்ளுகின்றனர். இக்கருத்து பெருங்கதையில் காணும் செய்தியை ஒட்டிச் சொல்லப் படுவதாகும் என்றே தோன்றுகிறது. மேலே காணும் பாடல்களில் அவ்வாறு கொள்வதற்கான குறிப்பு எதுவும் வெளிப்படையாகக் கூறப்படவே இல்லை என்பதும் கவனிக்கத்தகும்.

இவ்வகையாக வழிவழி வரும் மரபினைப் போற்றிப் பிற்காலத்துத் தோன்றிய இலக்கணமாகிய இலக்கண விளக்கப் பட்டியலில் உள்ள 'இழைபுனை நல்லார் இவர்மணி மறுகின்' என்னும் நூற்பாப் பகுதியில், 'மறுகு' என்பதற்குப் 'பரத்தையர் வீதியை' என உரைகாரர் விளக்கம் தருகிறார். இவையெல்லாம் ஒருவகையில் அந்நாளைய சமுதாயத்தில் நிலவிய மக்களின் மனக்கோட்பாட்டை எதிரொலிப்பனவே.

அரசன் பவனிவரும் உலாவியல் ஒருபாலாகத் தெய்வங்கள் வீதியில் எழுந்தருள, அப்பொழுது தரிசிக்கவரும் பெண்பாலார் இறைவன் திருமேனி யழகில் சொக்கி நின்றனர் என்றால், அது அவர்களின் பேரீடுபாட்டைக் காட்டும். இறைவனிடம் பத்தி பூணுதல் எல்லார்க்கும் பொதுவான நிலை. எனவே, உலாக் காணும் மகளிர், குலமகளிர் பொது மகளிர் என்னும் எவ்வகையினராகவும் இருக்கலாம். அடியார்கள் தம்மை நாயகி நிலையில் வைத்துப் பாடுவதும் உண்டு. காரைக்கால் அம்மையார், ஆண்டாள் முதலியோர் இறைவனுடைய பேரழகில்

ஈடுபட்டுக் கூறுவனவெல்லாம் அவர்களுடைய அன்பின் முதிர்ச்சியைக் காட்டுமேயன்றி வேறில்லை. எனவே, பத்திப் பனுவல்களாகிய உலா நூல்களில் வரும் மகளிர் எல்லாரும் உத்தம மகளிர் என்றே கொள்ளத் தகும்.

## அப்பாண்டைநாதர் உலா

அப்பாண்டை நாதர் உலா என்பது திருநறுங்கொண்டைத் திருத் தலத்தில் கோயில்கொண்டருளும் 23ஆம் தீர்த்தங்கரராகிய பார்சுவ நாதரைப் பாட்டுடைத்தலைவராய்க்கொண்டு பாடப்பெற்ற உலாப் பிரபந்தம் ஆகும். இவருக்குரிய பெயர்களுள் ஒன்று அப்பாண்டை நாதர் என்பது. இவர் முக்குடையின்கீழ் விளங்கும் தேவாதி தேவன் ஆவார்; மன்மதனை வென்றவர்; காமாதியாம் பகைகளைக் கடிந்தவர். இப்பெருமானுடைய பெரும்புகழினைப் பேசுகின்றது இந்நூல்.

### ஆசிரியர் வரலாறு

இவ்வுலா நூலின் ஆசிரியர் அனந்தவிசயர் என்பது சுவடி வாயி லாய்த் தெரியவருகிறது. இவரைப்பற்றிய வரலாறுகள் தெளிவாய் அறியக்கூடவில்லை. இவர் திருநறுங்கொண்டை அப்பாண்டை நாதரிடம் பேரீடுபாடு கொண்டவர் என்பது தெளிவு. நூலுள் சூடாமணி நிகண்டு இயற்றிய மண்டல புருடரை இவர் குறிப்பிட்டுள்ளார்:

'—வேதநூல்
ஆமாரி யார்கள் அமைந்த சதபத்திர
மாமாலை சொற்கொண்ட மாதவன்—பாமாலை
மண்டல மகாபுருடன் மன்னியவீ ரேந்திரனால்
கண்ட நிகண்டின் கவிசிறந்தோன்—கொண்டை
குணபத்திர மாமுனிவன் கொண்டுலகம் ஏத்தக்
கணதரராய்க் காசினியில் வந்தோன்' (அ. உலா, 81-83)

என்பதனால் சூடாமணி நிகண்டு செய்த வீரை மண்டல புருடர் கொண்டைமலையைப் போற்றிப் பாமாலை பாடிய செய்தி தெரியவரும். மண்டல புருடரின் காலம் கி. பி. 16ஆம் நூற்றாண்டென்பது வர லாற்றாசிரியர்களின் துணிபு. எனவே, இந்நூலாசிரியர் மண்டல புருடரின் காலத்திலோ, சற்றுப் பிந்திய காலத்திலோ வாழ்ந்தவ ராதல் வேண்டும்.

இந்நூலுக்குரிய ஏட்டுச்சுவடியில் அது பிரதி செய்யப் பெற்ற காலம் குறிக்கப்பட்டுள்ளது:

"பராபவ வருடம் கார்த்திகை மாதம் 19ஆம் தேதி ஆதிவாரம் ஏகாதசி நாழிகை 6½, ரேவதி 19½, வியாக்தம் 25, பத்திரி 20½. இந்த சுபதினத்தில் திருக்கோவலூரதுக்குடி வீழசோழபுரம் ராசப்ப நயினார் குமாரன் நல்லதம்பி எழுதி நிறைவேறினது. அனந்தவிசயர் அருளிச்செய்த திருநறுங்கொண்டை உலா. சுபமஸ்து. ஸ்ரீரஸ்து. வாக்தேவி சகாயம்,"

என்பது ஏட்டின் இறுதியில் காணப்படுகிற குறிப்பாகும் இதில் சுவடி எழுதி நிறைவேறிய காலம் தரப்பட்டுள்ளது. இக்குறிப்பினுல் இவ் வேடு கி. பி. 1876ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தேதி எழுதப் பட்டது என்பது தெரியவரும். முதல் மூலச்சுவடியன்று இது. வழி வழியாக எழுதப்பட்டுவந்த சுவடிகளுள் இதுவும் ஒன்று. எனினும், நூல் இக்காலத்திற்கு முன்னர்த் தோன்றியது என்பதனைக் குறிப்பிக் கும். இவற்ருல் இவ்வாசிரியர் 16ஆம் நூற்ருண்டின் இறுதிப் பகுதியிலோ பதினேழாம் நூற்ருண்டின் முதற் பகுதியிலோ வாழ்ந்தவ ராவர் எனத் துணியலாம்.

இவர்தம் நூலுள் நட்சத்திரப் பெயர், இராசிப் பெயர், மாதப் பெயர் என்பனவற்றை முறையே சிலேடையாய் அமைத்துள்ளமை கொண்டு இவர் வான நூலில் விருப்புடையராய் அதில் வல்லுநராயும் இருத்தல்கூடும் என்று ஊகிக்கலாம். இசைபற்றிய குறிப்புகளும் இவர் நூலுள் காணப்படுகின்றன. 'ஆடரங்கம்' பற்றி வருணனைப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

> 'முத்தமிழே பாரில் முயற்சிபெற வேவீற
> மற்று மிகப்புலவர் வாழ்கவே' (அ. உலா. 613)

என்று முத்தமிழையும் வாழ்த்துகின்ற அனந்தவிசயர் முத்தமிழிலும் சிறந்து விளங்கினுர் போலும்.

### அனந்தவிசயர் செய்த புதுமை

காமனைக் கடிந்த பெருமான் திருவுலாவைக் கண்டு பேதை முதலாம் எழு பருவ மங்கையரும் காதல் வயப்பட்டு மொழியும் காதற் பேச்சாய் ஏனைய உலா நூல்களைப்போல அமைப்பது பொருந்தா தல்லவா? ஆகவே, இவர் காதற் பேச்சு மரபினை மாற்றி மங்கையரின் பத்திக் காதலாய் இவ்விலக்கியத்தைப் படைத்துள்ளார். இந்நூலின் பெருமாற்றம் இது.

### நூலின் பொருட் சுருக்கம்

அருகப்பெருமான் காப்புடன் நூல் தொடங்குகிறது. முதற்கண் வாழ்த்து, அவையடக்கம் என்னும் பகுதிகள் காவியத்திற்போல இச் சிற்றிலக்கியத்திலும் அமைந்துள்ளன. அருகதேவனின் புகழ்மாலை (1-12), தீர்த்தங்கரரின் திருவடிப்போற்று (13-28), அப்பாண்டை நாதர் புகழ்ச்சி (29-35) என்பனவற்றை அடுத்து அவையடக்கப் பகுதி அமைந் துள்ளது (36-40). பின்னர், கலைமகள் வாழ்த்து (41-48), அய்யனுர் வாழ்த்து (49-64), இசக்கியம்மை வாழ்த்து (65-79), மாமுனிவர் போற்று (80-85) என்பவை அமைந்துள்ளன. இதன் பின்னரே திருநறுங்கொண்டைத் தலச்சிறப்புரைக்கத் தொடங்குகிருர். இங்கே திருநறுங்கொண்டையைச் சூழத் தொண்டைவள நாட்டில் சிறந்து விளங்கும் சினுலயங்கள் அமைந்த ஊர்களைத் தொகுத்துரைத் துள்ளார் (86-94).

திருநறுங்கொண்டை நகர், மலை, ஆங்குள்ள சுனை, மற்றும் பூங்கா ஆகியவற்றைச் சிறப்பித்து நீர், நிலவளங்களை எடுத்துரைத்துள்ளார் (95-118). பூங்கா பற்றிய பகுதியில் பல்வேறு மரம், செடி, கொடிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன (98-111). சோலைகளில் குயிலும், கிளியும், பூவையும் பாடுதலும் வண்டுகளின் ஆரவாரமும் குரங்கின் கூத்தாட்டமும் காண்கிறோம் (112-114). அடுத்து அம்மலையினின்று விழும் அருவியையும், அந்நீர் சென்று பெருகும் வாவிகளையும், வயல்களையும் குறிப்பிட்டு (115-118) இத்தகு வளமிக்க திருநறுங்கொண்டையில் வீற்றிருக்கும் பெருமான் புகழ்பேச முற்படுகிறார் (119-178).

பின்னர், பெருமான் பல்லியம் முழங்க, வருகைக் கட்டியம் கூற இந்திர விமானத்தில் எழுந்தருளிவந்து பல்லக்கில் ஏறித் திருத் தேர்மேல் அமர்ந்து வீதியுலாக் கொண்டருளுகிறார் (179-206). எல்லாரும் அப்பாண்டை நாதரை ஏத்திப் புகழ்கின்றனர் (207-246). மடவார் திரண்டு வந்து வணங்குகின்றனர் (247-271). இந்த நிலையில் பேதை முதலிய எழு பருவ மங்கையரின் தோற்றமும், ஆடலும் கூறி அவர் எல்லாரும் பெருமானை வணங்கிப் போற்றிய திறங்களை முறையே கூறிச் செல்கின்றார் (272-607). மங்கல வாழ்த்துடன் நூல் முடிகிறது (608-620).

## முன்னிலைப் பகுதி

ஏனைய உலா நூல்களிற்போல பாட்டுடைத்தலைவனின் புகழும் அவன் தேரேறி வீதியுலா வருவதனையும், அக்காட்சியைக் கண்டு தேவர், விஞ்சையர், சிராவகர் முதலிய பல்லோரும் ஏத்தி இறைஞ்சுதலையும் 246 கண்ணிகளில் முதற்கண் பாடுகின்றார். ஆயினும், பாட்டுடைத்தலைவனைக் குறித்துப் பாடப்பெறும் 'தசாங்கம்' என்னும் அமைப்பு இவ்வுலாவில் இல்லை. ஆனால், அப்பாண்டை நாதர் வீற்றிருக்கும் திருநறுங்கொண்டை மலை வளம், நீர்வளம், நிலவளம் முதலியவை சிறப்பிக்கப்பட்டுள்ளன. உலாவின் முன்னிலையாய்த் தசாங்கம் பாடாமல் அப்பாண்டைநாதரின் அளப்பரும் இறைமைத் தன்மையைப் பத்திச்சுவை ததும்பப் பாடுகிறார் கவிஞர். எனவே, இவ்வுலாவின் முன்னிலை அப்பாண்டைநாதரின் புகழ்மாலை — போற்றி மாலைகளேயாம்.

## எழு பருவ மங்கையரின் அறிமுகம்

பெருமானுடைய திருவுலாவைக் காண வந்த மடவாரின் இயல்புகளை 247 முதல் 271ஆம் கண்ணி வரையில் பொதுவகையாய் எடுத்துரைத்துப் பின்னர்ப் பேதை முதலிய எழு பருவ மங்கையரின் வயதினைச் சுட்டி அவரை அறிமுகப்படுத்தும் கவிஞர் அவ்வப் பருவத்திற்கேற்ற அம்மங்கையரின் உருவினையும், செயலினையும் வருணிக்கின்றார். இம்மங்கையர் வருணனை இலக்கிய மரபினை ஒட்டி அமைந்துள்ளது. எனினும், பருவத்திற்குப் பருவம் வெவ்வேறு முறைகளில்

உவமைகளை எடுத்தாண்டு இவ்வுலாவில் பல புதுமைகளையும் கவிஞர் புகுத்தியுள்ளார்.

பேதைப் பருவத்தில் சிறுசுளகினால் முத்துகளை அள்ளிக் கொழித்தல், சிற்றிலிழைத்தல், சிறுசோறடுதல், கழற்சிக்காய் ஆடுதல், பொம்மை விளையாட்டு, புழுதி விளையாட்டு என்பவை சுட்டப் பட்டுள்ளன. கழற்பாட்டினைப் பாடிக்கொண்டு கழங்காடியமை பெதும்மையின் செயலாய்க் குறிக்கப்பட்டுள்ளது. மங்கைப் பருவப் பெண் பந்தடித்தல் கூறப்பட்டுள்ளது. மடந்தைப் பருவப் பெண் கிளியையும், பூவையையும் வளர்த்து அவைகளுக்குத் தேவர் துதி பாடலைக் கற்பிக்கின்றாள். அரிவைப் பெண் தன் ஆயத்தாரோடு அமர்ந்து வீணைமீட்டிப் பாடுதலைக் குறிப்பிட்டுள்ளார். தெரிவைப் பருவத்தில் நீராடல் குறிப்பிடப்பட்டுள்ளது. பேரிளம் பெண் வீணையிசையுடன் பாடுதலில் வல்ல பாடகியாவள் என்று சொல்கிறார். இவ்வாறாக ஒவ்வொரு பருவத்திலும் அவ்வப் பருவ மங்கையர்க்கேற்ற விளையாடல்களைக் கவிஞர் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## நூலுள் எழு பருவப் பிரிவு

ஏட்டுப் பிரதியில் ஏழு பருவங்களையும் குறிக்கும் குறிப்புமட்டுமே காணப்பட்டது. 299ஆம் கண்ணி முடிவில் 'பேதை முற்றும்' என்றும், 338ஆம் கண்ணி முடிவில் 'பெதும்பை முற்றும்' என்றும், 367ஆம் கண்ணி முடிவில் 'மங்கை முற்றும்' என்றும், 423 ஆம் கண்ணி முடிவில் 'மடந்தை முற்றும்' என்றும், 481ஆம் கண்ணி முடிவில் 'அரிவை முற்றும்' என்றும், 524ஆம் கண்ணி முடிவில் 'தெரிவை முற்றும்' என்றும் ஏட்டில் குறிப்புகள் உள்ளன. 525ஆம் கண்ணி 'பேரிளம் பெண் ணென்பாள்' என்று தொடங்கி ஏழாம் பருவ மகளிர் நிலை பேசுகின்றார். ஏனைய ஆறு பருவங்களைக் குறிப்பிட்டதுபோல இது குறித்து ஈற்றில் முற்றும் எனக் குறிப்பு எதுவும் தரப்படவில்லை. 524ஆம் கண்ணிக்குப் பின்னருள்ள எஞ்சிய பகுதி 'பேரிளம் பெண்' பருவத்தைச்சாரும் என்பது எச்ச வகையால் புலப்படுதல் கருதி ஏட்டில் குறிப்பிடாது விடுத்தார்போலும்.

## நூலின் அமைப்பு

உலா இலக்கியங்களுக்குரிய கலிவெண்பாவினால் 620 கண்ணிகளில் இந்நூல் அமைந்துள்ளது. நூல் முதலில் இரு காப்பு வெண்பாக்களும் ஈற்றில் நூற்பயன் உரைக்கும் மூன்று வெண்பாக்களும் உள்ளன. இப்பொழுது அச்சாகியுள்ள உலா நூல்களுள் மதுரைச் சொக்கநாதர் உலா (516), திருவாரூருலா (528), திருக்குற்றாலநாதர் உலா (557), திருக்காளத்திநாதர் உலா (578) என்பவை ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட கண்ணிகளைக் கொண்டவை. ஆனால், அப்பாண்டைநாதர் உலாவோ 600-க்கு மேற்பட்ட கண்ணிகளைக் கொண்டுள்ளது. எனவே, உலா நூல்களுள் மிகுதியான கண்ணிகள் கொண்டது (620) இந்நூல் என்பது இதற்குரிய ஒரு தனிச் சிறப்பாகும்.

### தலைப்புகள்

ஏழு பருவங்களைப் பற்றிய குறிப்பு உலா இலக்கியத்தின் பெரும் பகுதிகளைப் பிரித்துக் காட்டும் குறிப்பாகும். இவை இவ்விலக்கியத்தின் பொருட் போக்கினை முற்றமுடிய விளக்குவன ஆகா. ஆகவே, நூற் பொருளின் போக்கிற்கு இயைய ஏற்ற தலைப்புகள் அங்கங்கே இப் பதிப்பில் தரப்பட்டுள்ளன. இவை வாசிப்பார்க்கு இவ்விலக்கியத்தின் பொருட் போக்கினையும் சிறப்பினையும் எடுத்துக்காட்டும்.

### பத்தி நோக்கு

அப்பாண்டை நாதர் வீதிவழியே திருத்தேரில் உலாவந்து கொண்டிருக்கிறார். எழு பருவ மங்கையரும் பெருமானின் பவனியைக் காணுகின்றனர். அவனைக் கண்டு அவர்கள் காதல் வயப்பட்டு மோக முற்றுத் தங்கள் நிலையினை வெளியிட்டார்கள் என்பது போன்ற காதற் பேச்சுகள் இவ்வுலாவில் இல்லவே இல்லை. பெருமானின் தெய்விகத் தோற்றத்தில் ஈடுபட்டு, அவனை வணங்கி, அவன் புகழ் பாடித் தொழுவதாகவே இவ்வுலா ஆசிரியர் அமைத்துள்ளார். உலா இலக்கி யங்களில் எழுபருவ மங்கையர் உலாத் தலைவன்மேல் காதல் மொழி புகலும் மரபினை மாற்றி எல்லாரையும் பத்திநெறியில் ஈடுபடுத்திக் காட்டியது இவர்தம் சமண சமய நோக்கிற்கு ஏற்ற போக்காகும்.

பேதைப் பருவப் பெண் பெருமானின் உலாப் பவனியைக் கண்டு, 'இச்சையின் ஓடி இறைஞ்சினள்' (299). பெதும்பைப் பாவை, 'தேரெதிரே சென்று இருகரமும் கூப்பி இறைஞ்சிப் பரவினள் (337). மங்கை நல்லாள் 'மணிமலர்கள் தூவி மலரடியில் வீழ்ந்து தணிவிலா இன்பத்து அமர்ந்தாள்' (367). மடந்தைப் பருவ மாது, 'கொந்தார் மலர்ப்பிண்டிக்கோமான் றன் ஈனந்தீர் பாதத்து இறைஞ்சி அடிவணங்கி, ஆனந்த வெள்ளத்தழுந்தினள் (422-423). அரிவைப் பருவ அணங்கு, 'பரன்தாள் பசுந்தாள் படிந்தாள் பணிந்தாள்' (480-481). தெரிவைப் பருவப் பெண், 'மேற்றிசையின் நின்றுன் நடந்தான் நெடுந்தேர் எதிரோடிச் சென்றாள், வணங்கிச் சேர்ந்து, பாதத்தில் விழுந்து பாடிப் பரவினள்' (510-523). பேரிளம்பெண் அங்கங்களுக்கு அழகு அவன் பணிக்காட்படுதலே என்று உரைக்கின்றாள் (529-538). இவள் வாயிலாய் அருகப் பெருமானின் திருப்புகழ்களை வினவுரையாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார் இறுதியில் மடவார் எல்லாரும் திரண்டு அருகன் தேரெதிரே வணங்கி வாழ்த்தும் வாழ்த்துடன் முடிக்கின்றார் (589-615). இவ்வாறாக இவ்வுலா நூல் முழுமையும் அருகப் பெருமான் திருப்புகழும் அவனை அடிபணிந்து போற்றும் துதிகளுமாய்ப் பெரும் பகுதியும் அமைந்துள்ளமை காணலாம்.

### தீர்த்தங்கரர்

தீர்த்தங்கரர் எல்லாரும் பெயரளவில் வேறுபாடுடையவரே யன்றிப் பண்பு நலம், சிறப்பு முதலியவற்றால் ஒரு தன்மையரே. எனவே, ஒருவரைப் போற்றின் அஃது எல்லாரையும் போற்றிய

தாகவே அமையும். அப்பாண்டை நாதரைப் போற்றும் அனந்தவிசயர் தீர்த்தங்கரர் பிறரையும் துதித்துள்ளார் (13-26). ஆதிபகவனுகிய இடபதேவர் (14), நேமிநாதர் (15, 22, 26), பதுமப்பிரமதேவர் (18), சந்திரநாதர் (17), குந்துநாதர் (21) முதலியோர் குறிக்கப்பட்டுள்ளனர். மேலும், கச்சிநாதர் (13), வரங்கோயிலான் (19), தேவராச வல்லபர் (23), தீபமணிக்கங்கைகுல நாதர் (24), மலைநாதர் (27) என்னும் பெயர்களும் தீர்த்தங்கரர்களைப்பற்றிய குறிப்பேயாகும். என்றாலும், இவை யார் யாரைக் குறிப்பன என்பது தெளிவாய்த் தெரியவில்லை.

பெருமானின் திருவுருவ வண்ணம், வனப்பு முதலிய குணங்களைப் போற்றும் முறையில் செம்பொற் குன்று (14), நீலமணி (15), பச்சை ரத்தினம் (16), சந்திரகாந்தப் படிகம் (17), பத்மராகம் (18) என்று பொன்மை, நீலம், பச்சை, வெண்மை, செம்மை என்னும் ஐவண்ணங்கள் சுட்டப்பட்டுள்ளன. இருபத்துநால்வர் வண்ணமும் இவற்றுள் ஒன்றுகவே அமைகின்றன என்பதும் கருதற்பாற்று.

## பஞ்ச கல்யாணம்

பாரீசநாதர் கொண்ட ஐந்து கல்யாணங்களையும் இவ்வுலா நூலுள் காணலாம். பகவானுக்குரிய ஆயிரத்தெட்டுத் திருநாமங்களே யன்றி ஒவ்வொரு கல்யாணத்தின் சின்னமாய்த் தனிததனி நாமங் களும் உண்டு. பேதைப் பருவப் பெண்ணின் காட்சியாகக் கர்ப்பாவ தரணமும் 'சத்தியோசாதன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றமையும் கூறப்பட்டுள்ளன (294-299). பெதும்பைப் பெண் தொழும் காட்சி யாகச் சென்மாபிடேக கலியாணமும் 'வாமனன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றமையும் கூறப்பட்டுள்ளது (326-330). மங்கை நல்லாள் மகிழும் காட்சியாகத் தீட்சா கல்யாணமும், 'அகோரன்' என்னும் சிறப்புப் பெயரும் சுட்டப்பட்டுள்ளன. மேலும், இங்கே கேட்ட புரத்தரசன் தனிய மன்னன் அரண்மனையில் உணவு கொண்டமையும், தவம் நோற்றமையும கூறப்பட்டுள்ளன (360-365). மடந்தைப் பருவத்தாள் இறைஞ்சும் காட்சியாய்க் கேவல ஞான மணமும், 'ஈசானன்' என்னும் சிறப்புப் பெயரும் சுட்டப்பட்டுள்ளன. அற மழை பொழிந்தமையும் கூறப்படுகிறது (411-423). அரிவை தெரியுங் கோலமாய் வீடுபேற்றுக் கல்யாணமும். 'தற்புருடன்' என்னும் சிறப்புப் பெயரும் தரப்பட்டுள்ளன (462-466). தெரிவைப் பருவத்தாள் உலக அறிவும், கல்வி அறிவும் நிரம்பியவளாதலின் அவள் வணங்கும் வகையாய் ஈரைந்து அவதாரமும் ஏற்றிக் கூறப்பட்டுள்ளன (511-521). பேரிளம் பெண் தத்துவம் கேட்கும் வயதினளாதலின் அவள் முப்பொருளில், முதற் பொருளை உசாவித் தெரிதல் பொருத்த மாகும் (542-554).

## நூலின் நடை நலம்

நூலின் செய்யுள் நடை செம்பாகமாயும் பொருட் சிறப்புடைய தாயும் காணப்படுகிறது. சொன்னயம், பொருள் நயம், தொடைநயம் முதலிய சிறப்புகளை இவ்வுலா நூல் முற்றிலும் காணலாம். ஒருசில

இடங்களில் சமணசமயச்சார்பான சொற்களும் வழக்கங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அச்சமய நூல்களின் துணைகொண்டு விளக்கம் பெறத்தக்கனவாம். வருணனைப் பகுதிகளும் வாழ்த்துப் பகுதிகளும் நூல் முற்றும் நிரம்பியுள்ளன.

வருணனைப் பகுதிகளுள் முடிமுதல் அடிவரையில் சிறப்பித்து ரைக்கும் 'கேசாதி பாதம்' என்னும் முறை ஈரிடங்களில் காணப்படு கின்றது. ஒன்று அருக தேவனின் திருமேனி வருணனை (168-175); மற்றொன்று அரிவைப் பருவ அணங்கின் வருணனை (424-446).

இருபத்தேழு நட்சத்திரப் பெயர் (120-143), பன்னிரு இராசிப் பெயர் (144-155), சித்திரை முதலிய பன்னிரு திங்களின் பெயர் (156-167) என்பவற்றை முறையாக அமைத்து இரட்டுறமொழிதலாய் அருகப் பெருமானின் புகழைப் போற்றியது இந்நூலுள் காணும் ஒரு சிறப்பாகும்.

இந்திரன் முதலாம் எட்டுத் திக்கு பாலகரும் அப்பாண்டை நாத ருக்கு ஆற்றும் வழிபாடுகளை முறையே குறிப்பிட்டுள்ளார் (207-214).

அங்கங்களுக்கு அழகு அவன் தொண்டுகளுக்கு ஆட்படுதலே என உரைக்கு பகுதி 'அங்கமாலை' என்னும் பிரபந்த வகையினை நினைப் பூட்டும் (529-538).

பெதும்பைப் பருவப் பெண் பாடும் கழற்பாட்டில் ஒன்று முதல் ஏழுவரையிலான எண்கள் முறைப்படி எண்ணலங்காரம் இணைய அமைத்துப் பாடப்பட்டுள்ளன (312-319).

## சிறப்புப் பெயரும் விளக்கக் குறிப்புகளும்

இந் நூலுள் தெய்வப் பெயர், மக்கட் பெயர், நாடு, ஊர், பருவப் பெயர், மற்றும் தாவரம் விலங்கு பிறபொருள்கள் பற்றிய பெயர்கள் முதலியன மிகுந்து காணப்படுகின்றன. இவற்றைச் 'சிறப்புப் பெயர் முதலியவற்றின அகராதி'யில் காணலாம். நூலுள் சிற்சில பகுதி களுக்குரிய பொருள் விளக்கங்கள் 'விளக்கக் குறிப்புகள்' என்னும் பகுதியில் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

## இணைப்புகள்

நூலின் பிற்பகுதியாயுள்ள நான்கு இணைப்புகளும் திருநறுங் கொண்டைத் தலத்தோடு தொடர்புடையனவாம். முதல் இணைப்பு **திருநறுங்கொண்டைத் திருத்தல வரலாறு.** இத்தலம்பற்றிய இலக்கியங்கள், வரலாற்று நூல்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றைத் துணையாய்க் கொண்டு இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது இத்தலத்தின் பழமையும் இங்கு வாழ்ந்த அறவோர்களின் சிறப்பும் இத்தலத்தில் சிறப்புடன் விளங்கிய வீரசங்கம் பற்றிய செய்திகளும் பிறவும் இவ் வரலாற்றினால் நன்கு விளங்கும்.

இரண்டாவது இணைப்பு திருமேற்றிசை அந்தாதி என்னும் சிற்றிலக்கியம். திருமேற்றிசை என்பது திருநறுங் கொண்டைக்குரிய மற்றொரு பெயராம். இது திரு மேற்றிசை நாதனும் அப்பாண்டை நாதர் திருப்புகழைக் கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் போற்று கிறது. இவ்வந்தாதிப் பாடல்கள் எல்லாம் சொல் நயம் பொருள் நயம் வாய்ந்தவை; பத்திவயலில் விளைந்தவை. சுருங்கக் கூறின் இவ்வந் தாதிப் பாடல்களை உருக்கமாய் அமைந்த தோத்திரங்கள் என்னலாம். இதுவரையிலும் அச்சாகாமலிருந்த இந்த அந்தாதி இலக்கியம் இப் பொழுது முதன்முறையாய் அச்சில் வெளிவருகிறது.

மூன்றாவது இணைப்பாய் உள்ளது திருநறுங் கொண்டைத் **தோத்திரமாலை** ஆகும். இவை அருகனடியார் பலர் பாடிய தோத் திரங்களின் தொகுப்பு. சென்னையிலுள்ள 'ஜைனகிரந்த நிலையம்' வெளியிட்டுள்ள தோத்திரத் திரட்டிலிருந்து தெரிந்து எடுத்துத் தரப் பட்டுள்ளது. பாடல்கள் அடிமுறைப்படி அமைக்கப்பட்டும் யாப்பு நிலைக்கு ஏற்பத் திருத்தங்கள் பெற்றும் அவை புத்துருவமும் புதுப் பொலிவும் பெற்று விளங்குகின்றன. இவற்றோடு 'அருகர் சிந்து,' 'சினேந்திர ஞானத் திருப்புகழ்,' 'முன்னிலைப் பரவல்' என்பனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

நான்காவது இணைப்பு அப்பாண்டைநாதர் உலாவின் தலைவராகிய **பார்சுவ நாதர் வரலாறு** பற்றியது. இருபத்து மூன்றும் தீர்த்தங் கரராகிய இவருடைய வரலாறு தமிழில் ஸ்ரீ புராணத்திலே மணிப் பிரவாள நடையில் உள்ளது. இதனைத் தழுவியும் மவுரிஸ் புளூம்பீல்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய வரலாற்று நூலோடு ஒப்பு நோக்கி யும் செவ்விய முறையில் உரைநடையில் இங்கு எழுதப்பட்டுள்ளது. இதனால் நூலின் பகுதிகள் சில நன்கு விளக்கம் பெறுகின்றன.

## பொருளகராதி

இந் நூலின் ஈற்றில் பொருளகராதி சேர்க்கப்பட்டிக்கிறது இந் நூலின் முகவுரை தொடக்கமாய் நூலில் அமைந்துள்ள அனைத்துப் பகுதிகளிலும் வரும் பொருள்கள் எல்லாவற்றையும இவ்வகராதியில் காணலாகும். இந்நூலைப் பயன்படுத்துவாருக்குக் கைவிளக்குப் போல நல்ல வழிகாட்டியாய் இது பயன்படும்.

## மூலப்படியும் பிறவும்

இந் நூலின் ஏட்டுப் பிரதிபற்றிய வரலாறு நூலுள் தனியாகத் தரப்பட்டிருக்கிறது (பக். 71). உலா நூலைத் தேடிப் பெற்றுத் தந்த ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்களே 'திருமேற்றிசை அந்தாதி'யின் காகிதப் பிரதியையும் அளித்தார்கள். உலா நூல் இப்பதிப்பில் செம்மை யுறஅமைவதற்கு அறிஞர் பலர் உதவியுள்ளனர். இதில் சேர்க்கப் பட்டுள்ள விளக்கக் குறிப்புகளை எழுதத் துணை செய்தவர் அண்மையில் மறைந்த தசசாம்பாடி சின்னசாமி நயினார் ஆவர். பார்சுவநாதர் வரலாற்றை எழுதுவதற்குத் தூண்டுகோலாயும் துணையாயும் இருந்து

உதவியவர் திரு. ச. தேவகுமார் ஆவார். இவ்வாறு பலருடைய ஒத்துழைப்பும் இந்நூல் சிறப்புற அமையப் பக்கத் துணையாய்ப் பயன் பட்டுள்ள இவர்கள் எல்லாருக்கும் நான் மிகவும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

## பதிப்பு வளர்ச்சி

அப்பாண்டை நாதர் உலா அச்சில் வெளிவருவதற்கு முதற் காரணமாய் அமைந்தது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியிடும் 'தமிழாய்வு' என்னும் ஆண்டு இதழேயாம். இதில் அச்சில் வாரா அருந்தமிழ் நூல்களை வெளியிடும் வாய்ப்பினை எனக்குத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் தந்தார்கள். அவர்களுக்கு முதற்கண் நன்றி செலுத்துகிறேன். தமிழாய்வு முதல் தொகுதியில் இந்நூலின் மூலம் மட்டும் முதன்முதல் 1972-ல் வெளிவந்தது. இப்பொழுது மீண்டும் இத்தொகுதி மறு பதிப்புப் பெற்றமையால் உலா நூல் திருத்தமுற அமைய வாய்ப்பா கியது. இதனை ஒட்டித் தனி நூலாய் வெளியிடவும் பல்கலைக் கழகம் வழிசெய்தது. தல வரலாறும், விளக்கக் குறிப்புகளும், இணைப்புகளும், இம் முகவுரையும் இத்தனி நூலுக்கென்றே அமைக்கப்பட்டன. அப் பாண்டை நாதர் உலா இலக்கியத்தைத் தனி நூலாய் வெளியிட அனுமதி வழங்கிய பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினருக்கும் துணை வேந்தர் பெருந்தகை தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர் களுக்கும் என் நன்றியும் வணக்கமும் உரியனவாகுக.

இந்நூலைத் தக்க வண்ணம் அச்சிடத் துணைபுரிந்த அவ்வை அச்சுக்கூடத்தாருக்கும் என் நன்றி உரித்தாகும்.

அப்பாண்டை நாதர் அருட்புகழ் ஓங்குக.

சென்னை - 5<br>15—8—74

**மு. சண்முகம் பிள்ளை**

அனந்தவிசயர் அருளிச்செய்த

திருநறுங்கொண்டை

# அப்பாண்டைநாதர் உலா

## நறுங்கொண்டை அருகன் பாதம் பணிதல்

உறுங்கண்டீர் உம்பர் உலகுதனில் நிற்க
இறுங்கண்டீர் வல்வினைக ளன்றே—நறுங்கொண்டை
ஆதனந்த வேதசந்த மாதியந்த மாயுணர்ந்த
பாதவிந்த மேபணிந்தக் கால்.

## அருகன் காப்பு

நறுங்கொண்டை யப்பாண்டை நாயகர்தம் பாதத்
திறங்கொண் டுலாவடியேன் செப்ப—அறங்கொண்டு
காப்பரவின் காப்பணத்தின் காப்புமணி காப்புநிழல்
காப்பனிதன் காப்பருகன் காப்பு.

## நூல்

## தேவாதிதேவன் திருப்புகழ்

திருவுறையு முக்குடைக்கீழ்த் தேவாதி தேவன்
பொருமதனை வென்ற புனிதன்—மருவுபுகழ்

அத்தன் அசோகன் அணியா தழகியான்
சித்தனுல கப்பிர சித்தனே—நித்தனும்

நித்த கலியாணன் நின்மல நின்னுமன்
கத்தன் கதிகடந்த காவலன்—நித்தம்

பகைபிணி பாவம் பழியுமி லாதோன்
செகமூன் றுடையதிகழ் தேசன்—அகமகிழும்

அம்புயத்தின் மேல்நடந்தோன் ஆதிக் கடவுளெங்கள்
சம்பு சினதர்ம சக்கரத்தன்—இன்பமாம் 5

அனந்ததிரு ஞானத் தனுதிப் பொருளாம்
அனந்த தெரிசனத்த னுளன்—அனந்தமாம்

வீரியத்த னுமனந்த வீறு சுகமுடையன்
சீரியத்தின் செல்வச் சிறப்புடையன்—பாரின்

அனக னமலன் அலோகமொடு லோகங்
கனக மணிக்கரத்திற் கண்டோன்—சினவரன்
அவ்வினைய மாறும் அகன்றநற் காட்சியான்
எவ்வினையு மேகெடுத்திட் டீசனே—இவ்வுலகிற்
காறு முகவன் அருட்கடலு மாயினேன்
பேறுடைய மூன்றுலகம் பெற்றளித்தோன்—வீறுபுகழ்
விக்கினவி நாயகன் வீதரா கன்விமலன்
தக்கபொரு ளாறுரைத்த தன்மையான்—மிக்கவட
பாழியான் பாறவினை பாழியா நன்மையரு
ளாழியான் வாழியற வாழியான்—வாழும்

## திருவடிப் போற்று

சினகஞ்சி சேர்கச்சிச் சீர்நாதர் பொற்றாள்
தினந்தினமு மேத்தித் திறலாய்—நினைந்து
திருப்பருத்திக் குன்றின்மேற் செம்பொற்குன் றாழ்வார்
மருப்பொதிந்த பாதம் வணங்கித்—திருத்தமுடன்
நீல மணியொளியு நேரல்லா நேமீசர்
ஞாலந் தனில்விளங்கும் நாயகர்—சாலமிகு
பச்சைரத் னம்நிரைந்த பாரீ சுவநாதர்
நச்சரவின் நீழலுறை நாயகர்—அச்சுதன்
சந்திரகாந் தப்படிகச் சந்திரநன் னாதனே
சந்திரனேர் முக்குடைநற் சாந்தனியல்—நந்திய
பத்மராகம் போன்ற பதுமப் பிரபதேவர்
பத்மமலர்ப் பாதம் பணிந்து—சதிராய்
வரங்கோயி லானை வணங்கிமலர் கொண்டு
கரங்கூப்பி நின்றே கருதிச்—சுருங்காத
மும்முனிவர் சேரும் முதலாங் குராநீழல்
அம்முனி வர்தா ளடிவணங்கிச்—செம்மை
வரந்தழைத்த சீர்க்கரந்தை வாழ்குந்து நாதர்
பரந்தபுகழ்ப் பாதம் பரவித்—திருந்து
சிகாமணி நாதன்றன் சீரத்தாள் தொழுதால்
சகாயமா மாபற் சகாயன்—மகாமலையாம்
பாவராசி போக்கும் பணிந்தவுட னேமிக்க
தேவராச வல்லபரைச் சேர்ந்திறைஞ்சித்—தீபமணிக்
கங்கை குலநாதர் காட்சியருள் சன்னிதியை
பொங்க முடன்றொழுது போற்றவே—தங்குபுகழ்ச்
சித்திநகர் தன்னிலுயர் சிங்கபுரி நாதர்தாள்
பத்தி யுடன்பணிந்து பாங்காக—நித்தநித்தம்

நேமிசின நாதர்பதம் நீங்காம லேயென்றும்
பூமிதனிற் சென்னியுறப் போற்றுவேன்—பூமிகவே

கொண்டுமலை நாதர் குளிர்மா மலர்ப்பதத்தைப்
பண்டைவினை யாறப் பணிந்தேத்தி—மண்டலமெண்

சாந்திமுனி தன்னால் தவங்கொண் டெழுபதின்மர்
ஆய்ந்துதலங் காத்தோ ரடிவணங்கிச்—சேந்தே

## அப்பாண்டை நாதர் அடிபோற்றுதல்

கருமக் கடலைக் கணத்திற் கடந்தோன்
தருமக் கடலான் தயாளன்—திருமேவும்

அப்பாண்டை நாதன் அடைந்தோர் தமைக்காக்கும்
பொற்பாந்தள் நீழலுறை போதனும்—இப்பாரெண்

கொண்டை மலையாய்க் கொழும்பசும்பொன் மாமலையாய்
வண்டமிழோர் போற்றும் வனமலையாய்க்—கண்டோர்

சினமலையாய் வேணு மலையாய்த் திறவோர்
மனமகிழ்ந்து போற்றும் மலையாய்—வனமுடைய

நாகம் மிகுமலையாய் நன்மருந்து மாமலையாய்
ஆகும் புகழுஞ் சனமலையாய்—சீகரமே

ஆனபுக ழானமலை ஆணிவிழி காணுமலை
ஆன சுரனசுர னானமலை—கோனுறையும்

தென்மலைக்கே யானுரைத்த தேவர் புகழ்நிதிதன்
நன்மறைப் பாதம் நவின்றேத்தப்—பன்னுதமிழ்ப்

## அவையடக்கம்

பாவலர்கள் முன்யான் மொழிந்த பருப்பொருளும்
தாவில் விழுப்பொருளாம் தாந்தானே—மேவியசீர்

ஒப்பிலிமை யப்பொருப்பை யோர்ந்த கருங்காகம்
அப்பவது பொன்னிறமே யாமென்றும்—மெய்ப்பாய்

விளக்கிற் புகைக்கொடியுண் டென்றே விளக்கைத்
துளக்க முறவிகழார் தூயோர்—வளர்த்தபுகழ்

ஒள்ளியர்க ளோர்ந்துகொள்வார் ஓத நெடும்புவியில்
தெள்ளி யறமுரைக்குந் தீர்த்தகரன்—வள்ளியனற்

சீர்ப்பதமே தான்போற்றச் சித்தரசஞ் சேர்ந்திரும்பு
மார்ப்பதக்கப் பொன்னாளியு மாகுமே—சீர்ப்பதத்தில்

## கலைமகள் வாழ்த்து

பாரதியே பார்மொழியே பன்னு கலைமகளே
வாரிதியே கல்வி வளர்கொடியே—ஆரதியே

அல்லும் பகலும் அகலாது சிந்தித்தால்
கல்லுஞ்சொற் சொல்லும் கவியாக—மெல்லவே
நன்றுமறை யோதுகின்ற நாயகியே நல்லோர்கள்
பன்னு மொழியுரைத்த பாவையே—என்றும்
அழியாத கல்வி அறிவன் திருநா
ஒழியாமல் வீறும் ஒளியே—அழகாக
வெள்ளைக் கமலத்தின் மீதி லுறைமாதே
வெள்ளைக் கொடியுயர்த்த வித்தகியே—வெள்ளியமாம்
வெள்ளைக் குடையுடைய வேதா கமப்பொருளே
வெள்ளைப் பளிங்குருவு மேனியே—வெள்ளிதாம்
அன்னவாக னத்தாய் அறுபத்து நாற்கலையும்
சொன்னமெய்ம் மாதே சுடரொளியே—நன்றுந்
தரளமுத்து மாலை தரித்திடும்நம் மாதே
தரளமொத்த வாணியருள் தாயே—திரளாஞ்

## அய்யனார் வாழ்த்து

சதுர்க்கதி யாம்புதியன் சான்றுழல்வோர் கட்கும்
மதித்தே யறம்பொழியு மாரி—விதித்தே
விருஷபசே னாதியர்தங் கௌதம நிதியம்
மறுவில் கணதரர் மன்னர்—விரதசீல
மூல குணத்தர் முதல்வன் பதம்போற்றும்
சால வரமளிக்கும் தத்துவத்தான்—நாலாம்
மதியாஞ் சுருதியவதி மன்னு மனமே
பதியாத்ம த்யானம் பயில்வோர்—விதியாக
இண்டைநிரை தீவுள் நவகோடித் தீவுள்ரிஷி
பண்டைவினைப் பாரம் பரிந்திடுவோர்—அண்டர்தொழும்
அங்கபூர் வம்முதனா லார்க்குமருள் மாதவர்கள்
பொங்க முடன்பரவிப் பூசித்தே—இங்குலகின்
அப்பர்சம் பந்தர்க்கும் அன்பாய் விழிகொடுத்த
அப்பன் சினகிரிவா ழய்யனருள்—மெய்ப்பாம்
வரப்ரம தேவரென்னும் வாழ்செம் முகத்தோன்
கரந்தனிற்செண் டாலுலகங் காத்தோன்—பரந்தமத
வாரணத்தின் மீதே வளர்ந்த புகழாகும்
பூரணை புட்கலையாம் பூவையர்க்கும்—காரணனும்
பூதப் பசாசு பொறிகலங்கி யேநூற்றுக்
காத மகன்றிடவே காசினியில்—நீதியாம்
வட்டப் பரியோன் வரம்புற்கு மாசாத்தன்
சிட்டர் தொழுந்தர்ம தேசிகன்—அட்டகுணக்

கன்றினான் தீவினையைக் கன்றினான் செம்பவழக்
குன்றினான் தென்பருத்திக் குன்றினான்—நன்றியசீர்

ஆதன் அடிமுடிவைத் தம்புவிமுற் றாட்கொண்டே
ஆதியறங் காத்தருளு மையனே—நீதிசேர்

ஆலைப் பதிநகரில் அம்புவியி னோர்கடொழுஞ்
சாலச் சிறப்பாஞ், சதுர்முகத்தான்—சீலதரன்

எத்திசையு மேதுதிக்க ஏகி யறம்வளர்த்து
வெற்றி படைத்தரு ளும்வீரன்—கத்தன்

அரிகர புத்திரனும் அய்யனறங் காத்தோன்
மருமலர்ச் சேவடியை வாழ்த்தித்—திருமேவும்

## இசக்கியம்மை பதம் போற்றுதல்

கொண்டை மலையாள் கொழும்பதக்க மேதரித்தாள்
அண்டர்தொழுஞ் சிங்கா சனத்திருந்தாள்—மண்டலமெண்

அம்மைதர்ம தேவி அதிசயப் பூங்கமுகுஞ்
செம்மைபெறு மாபரணத் தின்னியல்பும்—நன்மையால்

எண்ணா யிரமுனிவர்க் கேற்ற வமுதளித்த
பண்ணார் மொழியே பகவதியே—நன்றாகும்

ஆரணத்தா ளாகமத்தாள் அண்டர்தொழும் நற்சமய
சாரணத்தாள் காரணத்தாள் சற்குணத்தாள்—சீரணிநற்

கன்னல் மொழிச்சி கலைச்சி அருமறைச்சி
பன்னுதமிழ் வாய்ச்சி பசுங்கொடிச்சி—மன்னியசீர்

தத்தைக் கரத்தி தருமத்தி வேதத்தி
பத்தியவி ரோதிப் ப்ரபந்தத்தி—வெற்றிப்

பறம்பா புரியின் பவுத்தர்தமை வென்று
திறமா யறம்வளர்க்குந் தேசாள்—அறமேவும்

பட்டரக ளங்கற் பரிவாக முன்னின்று
துட்டர் பவுத்தர் தமைத்துரத்தி—அட்டதிக்கும்

பொய்கையும் பூஞ்சுனையும் பூங்கா வனமிகுந்த
வய்யந் தனில்வந்த வாழ்நிதியம்—மெய்யெலாம்

பச்சை மரகதமேப் பாளைப் பரிமளத்தாள்
உச்சயந்த வாழ்மலைமேல் ஓங்குவாள்—மெச்சும்

பரமாம் இயக்கி பரமா கமத்தி
வரமளிக்குஞ் சோதி மணியே—திரமாகும்

சித்தை பகவதியே சிங்கார மாமுடிமேல்
அத்தன் பதமணிந்த அம்பிகையே—நித்தநித்தம்

வீரைப் பதியுறையும் வித்தகியே வேரிமலர்த்
தாரை யணிந்திடும்பொற் றையலே—பாரின்மிகும்

வீடைப் பதியும் விளங்கவந்த நாயகியே
தோடவிழும் பொற்கொடியே தோகையே—நீடுபுகழ்

பொன்னிசக்கி யம்மையே போற்றுவேன் உன்பதத்தை
என்றுமிடர் தீர்த்தெனையீ டேற்றுவாய்—நன்றாக

## மாமுனிவர் பாதம் இறைஞ்சுதல்

பூத மடிவருடப் பொங்குமலை மீதிருந்து
நாதன் பதம்போற்றும் நற்றவனை—ஆதியாஞ்

சோதிடத்தி னன்றுமதி சோதியில் லாதிதியை
ஆதி பருவ மலங்கரிக்க—வேதநூல்

ஆமாரி யார்கள் அமைந்தசத பத்திர
மாமாலை சொற்கொண்ட மாதவன்—பாமாலை

மண்டலம காபுருடன் மன்னியவீ ரேந்திரனால்
கண்ட நிகண்டின் கவிசிறந்தோன்—கொண்டை

குணபத்ர மாமுனிவன் கொண்டுலகம் ஏத்தக்
கணதரராய்க் காசினியில் வந்தோன்—குணதரனும்

இம்முனிவன் பாதம் இறைஞ்சி யியல்பாகச்
செம்மையுடன் நான்றெழுது செப்பவே—நன்மைமிகும்

## திருநறுங்கொண்டையைச் சூழ்ந்த சினாலயங்கள்

தொண்டைவள நாட்டில் துலங்கும் புகழ்வீறும்
கொண்டை சினாலயமே கூறுவாம்—வண்டமிழ்சேர்

மஞ்சைக் குளத்தூர் மரக்குண்ணம் மாமுதலூர்
செஞ்சிநகர் தாசைத் திருக்குழசை—விஞ்சுபுகழ்

வங்காரம் பொன்னூர் வளத்தி குறக்கோட்டை
சிங்கபுரி வீரைத் திருப்பரம்பை—தங்குபுகழ்

ஆடையூர் கன்னலமோ டாலைப் பதிகூனம்
பாடிவிரு தூர்தச்சாம் பாடியெயில்—நீடுபுகழ்

வீடை நகர்குளந்தை வேலூர் வயலையுடன்
பீடு பெறுவிழுக்கம் பேருலூர்—நீடியசீர்

வாழைப் பதியகலூர் வண்மை வளர்திறக்கோல்
கீழைக் கனைாயூர் கிரியருகை—வாழியநற்

சண்பைநகர் தச்சூர் சயலையூர் பூண்டியுடன்
வெண்குணமோ தல்பாடி வில்விளந்தை—பண்பாம்

அருகந்த மங்கலமோ டானதிருத் தீபை
வருவிளங் காடுசேந்த மங்கலமும்—அருகியலாம்

அண்டர்முனி வோர்கடொழும் ஆலயமே சூழ்ந்தநறுங்
கொண்டை நகர்தழைக்கக் கூறுவாம்—புண்டரிக

## கொண்டைநகர்வளம்—மலையும் சுனையும் நதியும்

மாணிக்கம் பச்சை வயிடூ ரியம்வயிரம்
ஆணிக்க ரத்தினமோ ரைந்துமே—பேணிப்

பிறந்த மலையழகும் பெய்பூஞ் சுனையும்
நறுந்தா மரைநன் னலமுஞ்—சிறந்த

கெடில நதியழகுங் கேடில் முனிவர்
அடைகுகையும் பூங்காவு மாதேர்—கடிமலர்சூழ்

## அதிசயப் பூங்கா

மல்லியிரு வாட்சி மகிழ்புன்னை யானகுட
மல்லி கரவீரம் மாதுளையும்—சொல்லரிய

செண்பகம்செவ் வந்திசெங் கெத்தி சிறியவாம்
சண்பகம் நாகமல்லி சாமந்தி—நண்பாகும்

மந்தாரம் முல்லை மகிழம் குருக்கத்தி
செந்தா மரைகுவளை செங்கழுநீர்—கந்தாரும்

வெட்டிவிலா மிச்சி விருட்சி மருக்கொழுந்து
வட்டமா நந்தியா வட்டமும்—மட்டுலாங்

கோங்குநற் பாதிரியுங் கொன்றை மயிற்கொன்றை
தாங்கருணை வாடாத தாமரையும்—பாங்கினிய

நற்பாரி சாதமொடு நல்மௌவல் செம்பரத்தைப்
பொற்பாம் மலர்நிறைந்த பூங்காவும்—அற்புதமாம்

நாரங்கம் நற்குளஞ்சி நன்னுவல் மாவுடனே
பாரக் கனிசேர் பலாமரமும்—சீரொக்குந்

தேங்கும் கமுகும் சிறந்து வருவாகை
பாங்கான சம்பீரம் பன்மருந்து—நீங்காத

சந்தனமு மேமதுகம் சாதி யகில்மரமும்
சிந்தை மகிழ்குரவும் சீராக—நந்தா

அமலகஞ் சாதி அசோக மரமும்
கமழ்கடம்பும் வில்லைக் கழிதம்—அமர்கமையும்

புங்கும் பொரிசொரிந்த தொக்குமே பூமிதனில்
தங்குநிம்ப மாத்தி தழைத்தோங்கப்—பொங்கமுடன்

தேமா புளிமாவும் தேவ தருவுடனே
ஆமா துளுங்கத்தோ டச்சுவத்தம்—தாமாகும்

ஆல முதுமரமும் ஆனகூந் தற்கமுகுஞ்
சாலப் புகழ்பெற்ற சான்மலியும்—தாலமொடு

திந்த்ருணி தரணி திகழ்நாக மேகதம்பம்
அந்தமிகு வாழை அரிதகியும்—சுந்தரமாய்க்

கூவுங் குயிலும் குருகு புருக்கிள்ளை
காவெங்கும் பூவை கலகலென—மேவியே

வானரங்கள் கூடி வளர்கிளையிற் கூத்தாட
ஆனதும்பி வண்டுமிக வார்ப்பரிக்கத்—தானதனுல்

ஆடரங்கம் போன்ற அதிசயப் பூங்காவும்
சூடு முகிற்கணத்தைச் சூழவே—ஈடில்

## நீர்வளமும் நிலவளமும்

அலைதவழும் வாவிதனில் ஆனவரால் துள்ளி
மலர்ப்பொழிலைத் தாண்டி மதியாக்—குலைநெருங்கும்

வாழைபலா தேமாவின் வன்கனிகள் தாம்சிதறத்
தாழை மலர்சிதைத்துத் தாவிவிழ—வீழுங்

கனிகள் பலரசமும் காவின் மதுவும்
வனமலையின் வீழருவி வாரி—வசனமொடு

மாமலர்கள் கொண்டு வயல்தோறும் பாய்கின்ற
பூமலரும் மூதூர் பொலிவாக்—மாமலராள்

## மூதூரில் அப்பாண்டை நாதர் தேரில் எழுந்தருளல்

(இருபத்தேழு நட்சத்திரப் பெயர்ச் சிலேடை)

தங்குநறுங் கொண்டை தழைத்து விளங்கவரும்
புங்கவன் பொன்னெயிலன் பூரணன்—இங்குலகின்

அச்சுபதி தேரில் அலங்கார மாயமர்ந்தோன்
நச்சு வினைவென்ற நாயகன்—மெய்ச்சொல்

அறுபரணி யானேன் அருந்தொண்டர் தங்கள்
மறுபரணி யாயமர்ந்த வாமன்—அறுதியாம்

கார்த்திகைகள் தோற்றக் கதிருந் தொளிர்கோடி
ஆர்த்தமிகு தேக மழகுடையான்—தீர்த்தன்

சிரோகணியாய்த் தேவர் திருமுடி மீதின்
நிரோபநிரு பர்க்கிறையாம் நீதன்—சுரேசன்

மிருக சிரிட ராசன் மீதுவரு போதித்
திருவா திரைக்கடலான் தேர்ந்தோன்—திருமூர்த்தி

மாதைப் புனர்ப்பூச மாபொருப்பி லேநின்று
ஆதித் தபசுறையும் ஆனந்தன்—நீதிசேர்

பூசம்பூத் தீவின் புகழ்பரத மீதிலுயர்
காசிநாட் டிற்செனித்த காவலன்—ஆசிலா

மாதவர்போற் றும்மகத் தன்விசுவ சேநமன்னன்
ஆதி சுதனபி ராமியருள்—போதிசேர்

பொங்குகடல் பூரத்தன் பூமாரி கற்பூரம்
தங்கு மலர்ப்பதத்தன் தானியலாம்—இங்குலகின்

உத்தரங்கள் சொல்ல உதவு புகழான்
தத்துவங்கள் ஓதுந் தகைமையான்—நித்தநித்தம்

அத்தம் பயத்தம ஆருயிர்க்கு மேயீந்தோன்
சித்திரைத்தன் முக்குடைக்கீழ்ச் செல்வன்—வித்தகன்

சோதி மணிப்ரபையான் சோதியொரு மூன்றிலெழு
சோதிவரஞ் சோதிபரஞ் சோதியான்—தாதுமலர்

ஆனசெம் பூவிருட்சத் தவ்விசா கத்திருந்தோன்
வானவிசா கத்தெழில்நாள் வந்துதித்தோன்—காணின்

அனுஷனெனக் கல்மழையா லக்கமடன் பெய்ய
சநுவிற் செயிற்றனத்தைச் சாத்தி—அனுதபனால்

நாகமிது நங்கேட்டை நன்ஞானத் தாலறிந்து
ஆக மகிழ்மந் தரமருளி—வாகமுடன்

காலன் றனைக்கடிந்து கன்ம மலத்தருவை
மூல மறக்கெடுக் கும்முத்தன்—மூலமேல்

பூராட கற்பகத்தின் பொங்குவினை யான்கன்ம
பேரார் விதேகத்துப் பெம்மானான்—சீராரும்

உத்தர வாடகமே ஒள்ளியனு மாதவர்தஞ்
சுத்துக் கதியைத் தொலைத்திட்டோன்—நித்தன்

திருவோணப் புள்ளுறையுந் திண்கொடிக்கு நாதன்
மருமேவும் பிண்டி மகேசன்—பெரியோர்

இதைய மவிட்டமானோன் இருவினைகள் தன்னைச்
சிதையவிட்ட சித்திக் கிறையான்—சிதையாத

மோகனிய மாமலையை முன்னின் தசசதையம்
வாகுசுக் கிலத்தியான வாளொளி—ஆகியநற்

கற்பூரட் டாதி கமழ்குங் குமமுடனே
செப்பரிய கெந்தாபி ஷேகத்தன்—மெய்ப்பாகும்

தீவுத் திரட்டாதித் தீரௌக சோதியத்தன்
பாவுத் திரட்டாதிப் பண்ணவன்—மேவுற்ற

ஈரே வதினூலான் செல்வன லாமலினி
ஆரே வதினூல் அருளுவான்—ஆரேசொல்

## பன்னிரு இராசிப் பேர்

மேடனமூன் றின்மீது மேவுபா தாம்புயத்தன்
சாடிவினை சாடிமறஞ் சாடினோன்—நீடும்

விடபசர்ப்பத் துச்சத்தன் வீறும் விமலன்
விடபமறக் கேடுற்ற வீரன்—வடிவாம்

நகமிதுன தேசத்தன் நாவலர்கள் தங்கள்
அகமகிழ ஓதுகின்ற ஆசான்—செகமகிழ

கற்கடகக் கையால் கடமருப் பால்நிறைத்து
அற்திபெறுஞ் சென்மாபி ஷேகத்தன்—சொற்கரிய

சிங்கம் பொதிந்தரத்னச் சீரியலு மாசனத்தின்
சிங்கவணை மீதுறை யுஞ்செல்வன்—பொங்குமின்னு

கன்னிக் கொடிவல்லி கற்பதருச் சேர்ந்ததுபோல்
அன்னமுத்திக் கன்னி தனையடைந்தோன்—மன்னும்

மதியிலா மாந்தமலை யாபற் றுலையாக்
கெதிவிதி யைத்தொலைத்த கேள்வன்—மதியா

விறட்சகாதித் தரவர் விடமெந்தன் கைதரும்
விருட்சிமல ரொத்துங்க வேதனே—அறத்திண்

தனுசு மகரத்தின் றன்முழமு மூன்றும்
பனகநிழற் பாரீச நாதன்—இனிதாம்

மகரக் குழையணிந்த மாதருண தேவி
பகர வருச்சித்த பாதன்—திகழும்

நற்சொர்ண கும்பாதி நன்மங் கலமேந்தி
விச்சா தரர்பரவ வீறுடனே—மெச்சவே

தேனத்துப் பூமுடியாஞ் சீர்சேர னுஞ்சோழன்
மீனக் கொடியுடைய மீனவனும்—தேனொத்துச்

## சித்திரை முதலிய பன்னிரு திங்களின் பேர்

சித்திரை மண்டபத்துச் சீர்சிறப்புஞ் செய்தவராய்
சிந்திரைநற் பூசை தனிற்சிறந்தோன்—சித்திரைமே

லவ்வையா சிக்கும் அருங்கலச் செப்பீந்த
திவ்வியாக மப்பொருளாந் தீர்த்தனே—செவ்வையாம்

மானி யடிச்சுருதி மாதவற்குத் தானளித்து
மாநிய மத்தை யறிவிப்போன்—ஆனிமேல்

ஆடி யமரர்கோன் ஆயிரந் திண்புயத்தாய்
ஆடிச் சிறப்புடனே யாடவே—வீடுடையான்

ஒவ்வா வணியா துருவே திருமூர்த்தி
ஒவ்வாத ரத்தின த்ரையமுடன்—ஒவ்வாத

சிங்கபுரட் டாசியான் சீர்தேவ தாருநிழல்
தங்கு தவயோகம் தான்தரித்தோன்—சங்கரன்

அற்பதி நோயிலா வாதி பரமேசன்
அற்பசிக்கு மாமந் திரமருள்வோன்—அற்பசிமேல்

கார்த்திகை யம்பரவன் காலன் றனைக்கடிந்தோன்
ஆர்த்திக மில்லா அருளுடையான்—கார்த்திகைபால்

அம்மார் கழிநிமலர் அற்புதமாய்க் கொண்டேத்தும்
இம்மா நிலத்தோர்க் கிதமுடையோன்—அம்மார்கண்

தையல் மயல்தீர்ந்த தயாபரனும் எங்களிறை
தையி பரதமா தேயுதித்தோன்— தையின்மேல் 165

மாசிலா மேனியான் மாமுனிவர் கொண்டேத்தும்
மாசுமறு வில்லா மதிக்குடையான்—மாசினர்சேர்

பங்குனிகள் பொன்னெயிலைப் பாற்றுநடை பேத்திநித்தம்
பங்குனிகள் போற்றும் படியருள்வான்—பொங்குகதிர்

## நாதரின் திருமேனி வருணனை - கேசாதிபாதம்

(ஏழு கிழமைப் பெயர்)

நாயறு திங்களொளி நற்காந்தி ரூபத்தின்
வாயமுக விற்புருவ மாமன்றல்—வாயதனில்

செவ்வா யிதழுடையோன் செவ்வியநன் றேசெவிக்கு
அவ்வள்ளைத் தாளதுவும் நேரல்லான்—ஒவ்வாத

அற்புதனு மெங்கள் அருகர் திருக்கழுத்துக்
கொப்புவமை தானில்லை யோதவே—பொற்பாகும் 170

அவ்வியா ழும்போன் றணிமறுவார் நன்மார்பன்
எவ்வுயிர்க்கு மன்பா யிதமுடையோன்—கவ்வுமுகில்

வெள்ளிமலை நேரான வேணுதண்ட மேபுயத்தன்
கள்ளச் சனிப்பகைநோய்க் காதித்தோன்—வெள்ளம்

நிறைந்த நிதிதனவன் நீர்ச்சுழியை யொத்த
வரையுடன் நாபி வனசன்—அரையதனில்

ஆடை யணியா வழகனலர் வாழைத்தண்
டிடில் தொடையாகு நல்லீசன்—நீடிய

நன்முழந் தாளுக்கு நற்கெண்டை தானெவ்வா
நன்காலிற் பாதம் நளினமலர்—நன்கான 175

ஆயிரத் தின்மேலெட் டானசுப லக்கணத்தின்
ஆயிரமே லெட்டாந் திருநாமம்—ஆயிரமாம்

நாவிலம ரேந்திரனல் நற்றுதிசெய் தேமுடியா
தாவு புகழாகுந் தன்மையான்—மேவியே

மானவருந் தானவரும் வானவர்கள் ஏல்வகையால்
ஆன சுரர்வந் தடிபரவக்—கோனடியின்

## இசை முழக்கம்

பேரிசங்க நாதம் பிறழபஞ்ச வாத்தியமும்
வாரிதி யோசை மறுத்தொலிப்பப்—பேருலகின்

## வருகைக் கட்டியம்

நாத னவன்வந்தான் நற்கே வலன்வந்தான்
வேத முரைத்த விதிவந்தான்—போதவே

வானவர் கோன்வந்தான் வாக்கொன் றதிசயமாய்
ஆனபதி னெண்பா டையன்வந்தான்—தானியலாம்

பொன்னினெயி லான்வந்தான் போதில்வரு வான்வந்தான்
நன்றெண் குணநா யகன்வந்தான்—மன்னிய

சீர்பத்தான் வந்தான் சேர்ந்துறையும் நன்னெஞ்சின்
ஆர்வத்தான் வந்தான் அயன்வந்தான்—பார்மேல்

நறுங்கொண்டை யான்வந்தான் நன்ஞானன் வந்தான்
வறுந்தமியே னுள்ளிருந்தோன் வந்தான்—திறங்கொண்டு

அப்பாண்டை நாதன் அருள்முனிகோன் வந்தானே
இப்பார் துதித்து மிறைஞ்சியே—மெய்ப்பான

## இந்திர விமானத்து எழுந்தருளல்

பொன்னுமணி முத்தும் புனைந்து மிகவழுத்தும்
மின்னுமலர்ப் பூவும் மிகநிறைத்து—மின்னொளிசேர்

இந்திரநவ மாணிக்க மிட்டிழைத்த மேகலைமேல்
இந்திரவி மானத் தியல்பாக—இந்திரர்கோன்

வெற்றிபெறும் வெண்கவரி விண்ணவர்கள் வீசவே
எத்திசையும் ஏத்த வெழுந்தருளிச்—சித்திரமா

மண்டபத்தை மேவ மணிமுத்த முக்குடையை
அண்டர் நிழற்றவலங் காரமுடன்—தண்டலர்சூழ்

மாதேவ தேவர் மகிழ்ந்து கரங்குவித்துப்
போதே மலர்பொழியப் பூதேவி—மீதே

## இறைவன் உலாக் காட்சி

இறைவ னுலாவெழ வேபுளக மாகி
இறைஞ்சி அடிதொழு தேத்த—நிறைந்தெங்கும்

பொன்னால வட்டமுடன் பூச்சக்ர வண்கவிகை
இஞ்ஞால மேத்தத் திசைதிசையின்—நன்றாக

தூபக் குடமேந்தித் தூங்கி இருமருங்கும்
தீப மணிகள் திசைவிளக்கத்—தாபிதமாம்

## பல்லக்கு சேவை

முத்துநவ ரத்ன முழுப்பச்சை தானிழைத்த
சித்திரத்தின் பல்லக்கின் சீராக—மெத்தவே

பொற்பட்டுக் குச்சும் புனைந்த மணியணிசும்
நற்பட் டினியொருகி நன்றாக—மெய்ப்பட்ட

பல்லக்கு சேவை பணிந்தமரர் தாமேத்திச்
செல்லச் செயகோ டணைமுழங்க—மெல்லக்

கொடிகள் பலநிரைத்த கோபுர வாயிற்
படிகள் பலகடந்து பாங்காய்—அடைய

## கோபுரவாயிலில் தேர்மேல் திசை விளங்கத் தோன்றுதல்

வச்சிரத்தா லச்சு வயிடூர்ய மேற்பலகை
நச்சரவின் மாணிக்கம் நன்கிழைத்து—விச்சித்திர

முத்துரத்ன மார்ந்த முழுப்பவழக் காலதன்மேல்
சித்திரத்தின் போதிகையுஞ் சேர்த்தினிதாய்—அர்த்திபெறும்

பைம்பொன்மணி உத்தரமேல் பத்மரா கக்கொடுங்கை
பண்பி னொளிகள் பரந்தெறிப்ப—அம்புவியெண்

பூமாலை பொன்மாலை புண்டரிகப் பொற்கமல
மாமாலை பச்சை வனமாலை—தாமாகும்

பொற்பாளை சோலை பொதிந்த கொடிநிரைத்து
நற்சா மரைசல்லி நாற்றியே—பொற்பாக

நற்பதும ராக நயந்தசித்ர கூடத்தின்
பொற்பதுமை தான்வீசப் பூங்கவரி—அற்புதமாய்

நீடா ரொளிபரவ நீளுஞ் சிகரமேல்
சூடா மணிக்கலச மேற்சூட்டிப் —பீடான

கோமே தகமுங் கொழும்பொன் மிகவணிந்து
மாமேரு வன்ன மணித்தேரில்—தாமேறி

ஆயிரங் கோடிகதிர் ஆர்ந்த மணிவரைபோற்
தூய திசைவிளங்கத் தோன்றினான்—தூயனும்

## இந்திரன் முதலாம் தேவர் பணிசெய்தல்

இந்திரனை ராவதத்தின் ஏறிச் சசியோடு
வந்து மலர்பொழிந்து வாழ்த்தவே—இந்திரன்பால்

அக்கினி யாங்குமரன் ஆயிரந் திண்புயமாய்
மிக்கதூ பக்கடத்தை மீதேந்த—தக்க

யமன்வேத்ர கொண்ட மியல்பாய்த் தரித்துச்
சமனிருபக் கம்விலக்கத் தானே—யமன்பால்

நிருதியாந் தேவனம் நீள்பலி யேந்தி
வருதிக்கின் பிண்டமிட வாழ்த்தித்—திருவார்

வருண குமாரன் வருசுகந்தப் பன்னீர்
திருமா நிலத்திற் றெளிப்ப—வருணன்பால்

வாயு குமாரன் வருசுகந்த மாருதமாய்
தூயதல மெங்குந் துகளகற்ற—ஆயுங்

குபேரனவ மாணிக்கக் கூட்டம் விளக்காய்ச்
சுபேச னெதிர்துதிக்கச் சோதி—குபேரன்பால்

ஈசானன் வந்துயூ கத்தின் கணமுடனே
ஈசனென வேத்த இயல்பாகத்—தேசாம்

## அசுரர், கின்னரர் முதலிய பல்கணத்தார் பணிதல்

அசுர குமாராதி யான பதின்மர்
பசும்பொன் பவணர் பணிந்து—திசைதோறும்

கின்னரர் தம்முடனே கீத வியந்தரர்கள்
பன்னிப் புகழ்ந்தெண் மரும்பணிந்து—சின்னமுடன்

சந்திரன் றன்முதலாய்த் தாஞ்சோ திடரைவர்
அந்தரத் தின்வந்து அடிபரவச்—சுந்தரமாச்

சோதமீ சானச் சுதமான கற்பத்தில்
சாதமுடி பன்னிருவர் தாம்பரவப்—போதவே

விஞ்சையர் வந்து விரைவின் மலர்கொண்டு
அஞ்சலி தான்செய் தடிபரவத்—தஞ்சமெனப்

## மன்னரும் மாமுனிவரும் இறைஞ்சுதல்

பார்போற்று மன்னர் பதினறு மேபடைத்த
சீர்பெற்ற வாயிரவர் சேர்ந்திறைஞ்ச—ஆர்வமுடன்

மாதவத்தின் மாமுனிவர் மாகணங்கள் தாம்சூழ்ந்து
வேதமொழி கூறி மிகவோதப்—போதவே

## சின்னங்கள் எடுத்தல்

வண்மைப் பதாகையாம் வைசயந்தி முன்செல்ல
நன்மை யறவா ழிநடக்க—எண்மையுடன்

பேரிசங்க நாதம் பெருமுரசு நின்ருர்ப்பப்
பாரிட மாரமிகப் பாடிரட்டத்—தாரியமாம்

## இசைக் கருவிகளின் முழக்கம்

எக்காளை நாகசர மேதூது பூரிகையுந்
திக்கார்ந் தொலிப்பத் திசைதிசையுந்—தொக்கார்ந்த

கண்டை கரதாளம் கைச்சாரி கைம்மணியுந்
தெண்டிரையி னோசைமிகச் சேர்ந்தொலித்துக்—கொண்டே
நரகெச மேளம் நவரி கரணை
சரமண் டலமான தட்டொலியும்—அரவமிகத்
தித்திமிக வீணை திகழ்கின் னரமுழவம்
வெற்றிபெறும் யாழ்வேணு நாதமுடன்—மெத்தவே
கொண்டலுரு முங்கடலுங் கூடிக் கலந்தனபோல்
அண்டருல கும்மதிர வார்ந்தொலிப்ப—அண்டித்

## குடை, கொடி, ஆலவட்டம் கொண்டு செல்லுதல்

தவளக் குடையொருபால் தான்பொன் னிழைத்த
பவளக் குடையே பரந்து—திவளுமணி
முத்துக் குடையொருபால் மொய்த்துமிடை யந்தரத்தை
உற்று நெருங்கி ஒளிவெறிப்ப—மற்றும்
அதிகத் துசக்கொடிகள் அந்தரமே சேர்ந்து
மதியின் மறுத்துடைத்து மன்னி—விதியாக
முற்றுநவ ரத்ன மிடைந்துபூம் பட்டணிந்து
வெற்றிபெறு மாலவட்ட மேநெருங்கி—மற்றும்
மகரமாந் தோரணமு மன்னி நடப்பப்
பகர சுரரே பணிய—நிகரிலா

## வானவர்கோன் தேவியர் சூழவந்து வணங்குதல்

வானவர் கோனங்கே வாக்கு மனங்கரமும்
ஆன மலாக்கரங்கள் ஆயிரமாய்க்—காணும்
குணங்கள் பலதுதித்துக் கூப்பியும் போற்றி
வணங்கிமலர் தூவி மகிழ்ந்தும்—இணையிலா
மின்னுக் கொடிபோல் மிகுதேவி யர்சூழப்
பொன்னின் முடியசைத்துப் புங்கவன்றாள்—மன்னியே
ஆனந்த நாட்யம் அதிசயமாய்த் தான்செய்தும்
ஆனந்த மீறநிறை யார்ப்பருகிக்—கோனவன்முன்

## கடவுளடி போற்றுதல்

காமாதி வென்ற கடவு ளடிபோற்றி
பூமாலை பூணுப் பொருள்போற்றி—தாமெண்
குணமுடையாய் போற்றி கோதி லறமே
மணமலிந்த கெந்தாடி மால்போற்றி—குணமார்ந்த
நீதியாய் போற்றி நிலாவெயிலாய் தாள்போற்றி
ஆதியாய் போற்றி அயன்போற்றி—நீதிசேர்

மூவொளியாய் போற்றி மூவா முதலான
பூவலரும் பிண்டிப் பொருள்போற்றி—தேவனே

நின்மலனே போற்றி நிராயுத னேபோற்றி
தன்மமிலா ஞானக் கடல்போற்றி—நன்மைப்

பரஞ்சோதி போற்றி பணுநிழலோய் போற்றி
நிரஞ்சனனே போற்றிநிழல் போற்றி—பரவுவினை

மாற்றிவரு வாய்போற்றி மன்னுபுக ழாய்போற்றி
போற்றியே போற்றி யெனப்போற்றி—நாற்றிசையும்

நால்வகைத் தேவர் நயந்து துதித்திறைஞ்ச
மால்வரைவிஞ் சையர் மகிழ்ந்தேத்த—நால்வகையால்

பூமிதனில் மன்னர் புரசனமும் சாவகரும்
பாமிகவே பாடிப் பணிந்தேத்த—வேல்விழியார்

## மடவார் வந்து திரளுதல்

ஓவியமே போல்வார் ஒலிக்குங் குயில்வென்ருேர்
காவி விழியளகக் கார்மடவார்—மேவிவரும்

அன்னமே போல்வார் அரவிந்த மேயடியார்
வன்னப் பசுங்கிளியின் வண்ணத்தார்—மன்னியசீர்

மின்னுக் கொடியிடையார் மேகலைப்பூம் பட்டுடையார்
பொன்னின் கலசநிகர் பூண்முலையார்—துன்னும்

இலங்குபொன் ஞேலை யெரிமணிகள் மேவ
அலங்கல்முத் தாரத் தழகா—இலங்குகின்ற

நீல மணிக்கதிர்போல் நீள்வயிற்றின் மீதினுறை
கோல மயிரின் கொழுந்தினர்—சாலவே

தட்டுப் புழுகு சவாது மிகவணிவார்
மட்டுவிரி யோதி மலரணிவார்—வட்டமதி

ஒத்த முகத்தின் ஒளிர்திலத மேயிடுவார்
வெற்றிவிழி மையெழுதி மேவுவார்—ஒத்தநிலைக்

கண்ணுடி பார்த்துக் களித்து மனமகிழ்ந்து
கண்ணுடி மாலை கலனணிவார்—நன்ருடிப்

பூம்பந்து தாம்புடைப்பார் பூவையர்க ளெல்லோரும்
பூம்பதுமத் தார்நாணும் பொற்புடையார்—ஆம்பின்

பவழத்தா ணுட்டிப் பசும்பொன்மணி உத்ரப்
பவழ மணைசேர்த்துப் பாங்காய்த்—தவழுமணி

மின்னுங் குழாங்கூடி மேவு மணிக்கயிற்றின்
பொன்னூச லாடும் புகழினர்—நன்ருக

இன்பரச மாகு மியல்முக் கனிரசமும்
அன்பி.னமிர்தின் நலம்பயில்வோர்—இன்பாங்

களிப்பிளவு வெற்றிலையுங் காச்சுண்டைச் சுண்ணம்
ஒளிவாய்க் கவுட்கொண் டுகந்து—பொலிவாய்

அபரஞ்சி மாணிக்கம் அமைந்தமெத்தை யிட்டு
சுபரஞ் சிதக்கொடுங்கை சுற்றும்—அபரஞ்சின்

சப்பிர கூடமீதின் சார்ந்தன்பர் தம்மோடும்
செப்பரிய லீலைச் செருக்கிஞர்—ஒப்பில்

பழக்கோவை வாயாற் பசும்பொனர வல்குல்
மழைக்கண்ரதி நாணும் வடிவார்—கழுத்தார்

மரகத மாமணியை மாநிலம்வைத் தோர்மின்
பரம னுலாவதனைப் பார்ப்ப—விரவின்

கதிரெறிப்ப ஓடிக் கலைமா னணுகிக்
கதிர்க்கொடிபுல் லென்றே கறிப்ப—விதியாம்

நகைப்பரான் ஞணி நடந்தே ஒதுங்க
நகைப்பைங் கிளியும் நகைப்ப—வகையாகும்

பூம்பாவை யில்லொருத்தி பொங்குகொங்கை நேர்பந்தை
தேம்பாக் கரத்தால் திசைத்தடிப்பப்—பூம்பாங்

கருங்குழலீர் செங்கழுநீர் கண்கணிகர் தானெனன்
றிரங்கி யடியி னிறைஞ்ச—வருங்கெருட

## மாடத்தின் மேலிருந்து மகளிர் உலாக் காண்டல்

வீதி யிருபால் விளங்குமணி மாடமிசை
தாதி யுடன்மடவார் தாமிருப்ப—ஆதி

முகிற்கூட்டங் கண்ட முழுமா மயில்போல்
துகிற்கொடிகள் கண்டு துலங்கி—அகிற்புகையும்

மாடநிரை மீதும் மகிழ்ந்துமலர் தூவி
ஆடகப் பொற்சிலம்பு மார்ப்பரிக்கச்—சூடகமாம்

பூமகளிர் போலவே போற்றி மிகத்துதிக்குந்
தாமரைக் கண்ணர் தமக்குள்ளே—ஆமொருத்தி

## பேதைப் பருவப் பெண்

பேதை யெனும்பருவப் பெண்ணேழ் வயதுடையாள்
பாதமணிக் கச்சை பலவணிந்து—பேதையாய்க்

கண்முலைதா னில்லதனுற் கண்பிசைந்து தானிற்பாள்
நன்முலைக்கச் சேதெனக்கு நல்கவெனும்—துன்னும்

இளங்கரும்பு போல்வா ளிலகியஊை தூசாள்
வளங்கொள் பணிபெய் வளையாள்—துளங்குமணி

முச்சிலிரு கையின் முழுமுத்துத் தான்கொழிக்கும்
உச்சிமயிர்ப் பின்ன லுறுமலராள்—மெச்சுமணிச்

சிற்றில் மிகவிழைத்துச் சிற்றடிசில் தான்சமைத்து
ஒத்தே யருந்தும் ஒளியிழையாள்—நித்திலமார்

மின்னு மணியின் மிளிர்பொன் மிகறேற்றும்
மன்னுமணிச் சுட்டி மதிநுதலாள்—பொன்னின்

மணிக்கழ லாடும் மலரின் கொடியாள்
பணைத்து வளரரும் பன்னாள்—மணிக்கனகப்

பொற்பாவை கொண்டு பொலிவி னியல்பான
விற்பொற் புருவம் வெறுநோக்காள்—பொற்பாகும்

சிற்றாடை தான்புனைந்து செல்வக் களிப்புடனே
ஒத்தாடக் கைச்சிலம்பி னோசையாள்—உற்றேதன்

பொற்பாவை வாயிற் புகட்டிபா லென்னநின்ற
நற்றா யொடுபுலம்பி யேநலிவாள்—நற்பாகும்

பைம்பொற் சிறுதொட்டிற் பாவை தனைவளர்த்திப்
பண்புபெறத் தாலொன்றும் பாடுவாள்—வினையமொடு

ஏலங் கமழுவா யின்பைங் கிளிமொழியாள்
நீலவிழி மையெழுதி நின்றவள்தான்—கோலமணி

ஆரமுத்து மாலை அழகிய மார்பகத்தாள்
மார னடிசேர் மலர்க்கொடியாள்—சீரியலும்

தேர்ந்தசின னல்லாத தேவர்களைப் போலவே
வீந்து பிறந்த வெயிற்றினாள்—சேர்ந்து

மயில்பயில் மேனி மழலைவாய் கொஞ்சுங்
குயில்பயில் கின்ற குழன்மான்—துயில்பயிலும்

ஆடவரோ டன்பாய் அலர்பூ வணைமீதில்
கூடிப் பிரியாக் குழாத்தினாள்—ஈடில்

சிறுநகை தானறியாச் செவ்வா யிதழாள்
வெறுநகை மேவு மெயிற்றாள்—எறியுமலர்க்

காமனுக்கு மஞ்சாக் கருதுசெவ் வாய்த்தத்தை
மாமனுக்கு மஞ்சாத மான்கன்று—ஆமெண்

புழுதிக்குள் மாணிக்கம் போலவிளை யாடும்
எழுதரிய மேனி யிளையாள்—அழகார்

முகத்துநிழல் முன்னோட வோடிக் குறுகிப்
பகைத்துத் துவைத்தவடிப் பாவை—வகையாகுங்

கன்னிக் குழாங்கூடிக் கைவளைகள் ஓசையெழப்
பொன்னின் மணிச்சிலம்பு பூசலெழ—மன்னுதிரு

வைம்பாவை தன்னின் அருகர் பதம்போற்றி
நண்பாகக் கூறி நடந்தளவில்—விண்பால

வாரண வாசிநகர் மாவிசுவ தேவிகெற்ப
தாரணத்தின் கல்யாணந் தானமைந்து—பூரணமாய்

சத்தியோ சாதனெனச் சாற்ற வமரர்கோன்
வெற்றியோ டொத்தமர்ந்த விண்ணவன்—ஒத்தொளிரும்

திங்கள்நிகர் முக்குடைக்கீழ்த் தேவர் பெருமானுர்
இங்குலக மேத்தி இனிமையுடன்—எங்கோமான்

புட்பக் கனகப் பொருட்டின் மிசையுறைந்து
நட்பா யுலாப்பவனி தானடப்ப—இப்பாரின்

இன்னிய மார இயல்மங் கலம்பாட
பன்னுமொழி யானுணர்ந்து பண்பாக—மின்னெளியாம்

பொற்சதங்கைக் கிண்கிணிகள் போத வொலிபரவ
இச்சையி னேடி இறைஞ்சினுள்—மெச்சும்

## பெதும்பைப் பருவப் பாவை

பெதும்பையாள் பன்னென்றே பேராம் வயதாள்
பசும்பொன் னிறமேனிப் பாவை—விசும்புதனில்

இந்திரசா பம்போல் இயன்ற புருவத்தாள்
சந்திரனென் றேவதனஞ் சாற்றலாம்—சுந்தரமாம்

மாமகளிர் நேரிழையாள் மாநில மாணிக்கத்
தாமக் கதிர்வாங்குந் தன்மைபோல்—ஆமயிரைக்

கூட்டி முடித்த குழலினு ளம்மழலை
யோட்டி யுரைசெய் யுரையினுள்—காட்டின்

மதியெழுகப் பானனுகி வீழ்மாலைச் சிறந்த
புதியகுவ ளைப்பருவம் போல்வாள்—விதியாகக்

கோமளமுஞ் சாமளமுங் கொண்ட உருவத்தாள்
ஆமளகக் கன்னத் தணைவிழியாள்—தாமிகவே

ஈட்டிய காமத் தியல்பை யுரைப்போர்முன்
கேட்டுங்கே ளாதுபோற் கேட்டிருப்பாள்—நாட்டியநற்

## கழங்காடுதல்

பொற்கா வணநிழலில் போந்துமட மானென்ன
நற்பாவை யாயமொடு நாணின்றிப்— பொற்பார்

பளிங்குநிழற் பீடத்திற் பாவை யிருந்து
துலங்கு மயிற்றேகை யென்ன—விளங்கும்

பணக்கா வணநிழலாள் பாரமலை வெற்பில்
மணக்காக் கழைமுத்தம் வாரி—வணக்கமுடன்

சேந்திட்ட முத்தத்தைச் சேயிழையாள் தானெடுத்து
ஆர்ந்து கழங்காட வேயமர்ந்து—ஏந்திழையின்

## கழற்பாட்டு

அன்னைமார் கற்பித்த ஆடுங் கழற்பாட்டை
வன்னமொடு சொற்பற்றி வாழ்த்தியே—தன்னருகன்

ஏதமிலீ ரொன்பான் இயல்பாஷை யொன்ருக
ஓதிய தீவத் தொளியொன்றும்—நீதியாய்ப்

பத்தியுடன் சம்பந்தர் பாடப்பத் தும்பதியம்
வெற்றிபெறப் பெற்ற விழியிரண்டும்—மெத்தவே

அத்தி பெறுந்தரணன் அற்புதமாய்த் தான்செய்த
தொத்து விளங்கும் ஒளிமூன்றும்—நித்தம்

அடர்ந்த மலர்ப்பிண்டி யான திருநாள்
நடந்த விழாவீதி நான்கும்—அடும்பொன்

அமர்ந்த கிரீடத் தமரேந் திரனுல்
அமைந்ததிருக் கல்யாணம் ஐந்தும்—சுமந்தே

அகன்றமலர்த் தாளான் ஆதி யருகன்
புகன்று நிறைந்தபொரு ளாறுஞ்—சிகனேகன்

வென்றி யறவாழி வேந்தன் அருட்கடலான்
நன்றி யுரைத்த நயமேழும்—ஒன்றியனும்

போதாதி நாதன் புகழ்பாடி யாடுமவள்
வேதாதி வேதாதி வேதனுந்—தாதார்

## அருகன் கழலின் வீறுபுகழ்

நறுந்தா மரைமீது நன்றுகழ லென்றுஞ்
சிறந்தோர் தொழுஞ்சீர்க் கழலோன்—சிறந்த

அயிரா வதமீதில் ஆர்ந்தகழல் என்றும்
அயிராணி கையின் அமர்ந்தே—குயிருத

பாண்டுசிலை மீது பதிந்தகழல் என்றேமார்த்
தாண்டமண்ட மீது தயங்குகழல்—வீண்டாக்

கமடன்விடு கல்மழையுங் காலின் மலராய்
அமடன் இறைஞ்ச அருளாய்—சுமடனெனும்

கூற்றை யுதைகழலாங் கூறு மரும்பிறவிச்
சேற்றைக் கழுவிமிகச் சேர்த்தகழல்—ஏற்றமுடன்

வெற்றிக் கழலென்று வீறு புகழ்பாடி
அத்தியுடன் ஆடும் அளவிலே—வித்தகனும்

## தெய்வவுலாக் கண்டு மகிழ்தல்

வாமனன் சென்மாபி டேகத்தன் வானவர்கோன்
தாமறந்து செய்யுஞ் சதுர்முகத்தன்—நாமமுயர்

போதிமணிப் பொன்னெயிலிற் பூவிதழி லாதிமணி
காதி யுரகக் கருடமணி—கோதிலா

முத்து சுமந்தமணி மூவுலகிற் சோதிமணி
நற்றவர்சிந் தாமணிநண் ணுயமணி—வெற்றிமணி

தேவாதி தேவரிஷி தேர்ந்து துதித்தமணி
தேவாதி தேவமா தேவமணி—தாவாய்

நயந்த உயர்ந்தநன் ஞானத்தன் முத்தன்
சயந்தங் குலவும்நற் சாந்தன்—வியந்தன்

அலைப்பிறவி வெம்பிணிக் கான மருந்து
திலப்பமுதற் கற்றோர்கள் தெய்வம்—கலைப்பொருளின்

ஞான மெனுங்கொழுந்து நன்றிப்பே ரின்பம்
ஈனமத்தோர் தங்கட் கெதிராணி—வானுலகின்

மாக்கொண்டல் போல வருள்புலவர் செஞ்சொல்லாம்
பாக்கொண்டு முத்தி பணித்திட்டோன்—ஆக்கமுடன்

வெற்றி ரதமேறி வீதி தனில்நடப்ப
மற்றொரு தோழி மகிழவே—முத்தின்

## பெதும்பையர் கழங்காடல் மறந்து அருட்கடலை இறைஞ்சுதல்

கழங்காடல் கைம்மறுத்துக் காரிகையார் கூடி
வழங்கு மருட்கடலை மன்னிக்—கொழுங்கன்றி

பூணாரந் தாளுடைப் பொற்கிண் கிணியார்ப்பச்
சேணாட ரேத்துஞ் சிலம்பலம்பத்—தோணுந்

திருநுதல் முத்தரும்பத் தேரெதிரே சென்று
இருகரமுங் கூப்பி இறைஞ்சிப்—பரவவே

நீண்ட புகழான் நிகரிலான் மற்றுமொரு
பூண்டவயல் வீதி புகுதலால்—ஆண்டொருத்தி

## மங்கைப் பருவ நல்லாள்

மங்கை யெனும்பருவம் மன்னியே சீர்பன்மூன்
றென்கை வயதி னியலுடையாள்—தங்குபுகழ்ப்

பொங்குமுலை யங்குரித்துப் போத வடிக்கொண்டு
சங்கரிக்கு தன்றோ தவத்தோரை—இங்குலகின்

கூற்றம் விழியென்றே கூறும் பரிபுரங்கள்
ஏற்றவுயிர் ஒன்றுடையீர் ஏற்றமெனப்—பூத்தோய்

அளக முடிமீ தணிவண்டு கூடி
இளகா மனமொன் றிரங்கப்—புளகவிளங்

கூட்டுநிகர் திங்கள் குலாவுமுத்தி நாதர்தான்
காட்டுமட மான்பாவைக் கன்றினாள்—பாட்டியலும்

பாலமணி யாழென்றும் பைங்கிளிசொல் வாய்மையென்றும்
வேலனைய கண்ணாள் விறல்மொழிக்குச்—சாலக்

கரும்பின் ரசம்பிழிந்து காய்ச்சித் திரண்ட
விரும்பியபா கென்ன விளம்பின்—திருந்திய

வாழ்முகத்தைக் கண்ட மதிவடுவுண் டென்றேதான்
தாழ்விலுயர் வானுலகஞ் சார்ந்ததே—வாழ்வாம்

புருவநிக ரல்லவென்று போந்தே யொளிக்குந்
திருவினெளி வானிந்திர சாபம்—இருவிழிக்கு

நேரல்ல நாமென்று நீடு கயற்குவளை
பாரறியப் பூந்தடத்திற் பாய்ந்ததே—சீரியலும்

நங்கோன் சுனையருவி நாடு முவள்கணீர்ப்
பொங்கி வலஞ்சுழித்த போலுந்தி—பொங்கமாய்

அண்டி அடிசேர்ந் தருகிருந்த தாயருக்கு
உண்டில்லை யென்னும் நுசுப்பினாள்—கண்டோர்கள்

அன்ன மெனுந்தேனே ஆரணங்கே பொற்கொம்பே
நன்பவழப் பூங்கொடியே நன்மானே—மின்னரசே

என்றுமயல் கொண்டுருகு மேந்திழை யும்பொன்னுங்
கன்னிக் கொடியென்னக் காட்சியாள்—பெண்பெருமாள்

## மங்கையர் பந்தடித்தல்

என்னமயி லென்னவமு தென்னவர சென்னமதி
என்னமணி யென்னநிதி யென்னவே—துன்னி

இருந்து மெழுந்து மிழைந்து மிடைந்து
வருந்திப் பொருந்தி மகிழ்ந்து—திருந்தி

அடிக்கடி கைக்கெழுக அர்த்தியுடன் பந்தைப்
பிடித்து மடித்தும் பிடித்தாள்—அடுத்தடுத்

தெத்தன்மை யேங்கொல் இமைய மலைச்சாரல்
அத்திமயி லாடும் அழற்றுப்போல்—வெற்றியுடன்

மங்கை முதலரும்ப மாரன்செங் கோல்செலுத்தும்
தங்கு துருவ தனதடத்தாள்—நங்கை

சுரும்பை அழைத்துச் சுகந்தமன் றம்நடத்தித்
திருந்து மளகந் திருத்திப்—பொருந்தியே

காற்சிலம்பு பூசலெழக் கைவளைகள் ஓசையெழ
ஆர்க்க முடன்பந் தடித்தளவில்—தீர்க்கற்குச்

## பரமனருளால் பவனிவரும் காட்சி காண்டல்

சூட்சிலௌ காந்தியரே சொல்லத் துறவறமாம்
தீட்சாகல் யாணஞ் சிறப்பித்து—சாட்சாத்

தகோர னுமகிற் றமரர் போற்றும்
சகோ ரஞ்சிதனைச் சார்ந்தனன்—அகோசப்

பவக்கடலை நீந்தப் பணையாகித் தோன்றும்
தவக்கட லான தயாளன்—புவிக்குணம்

கேட்ட புரத்தரசன் கேள்வி தனிற்கற்றும்
ஈட்டிய நற்பா ரணைஇசைந்து—நாட்டின்மிகு

பஞ்சாச் சரியனைப் பார்த்திப னுக்கிசைந்து
விஞ்சு தருக்குருவு மேயளித்தோன்—செஞ்சொல்புகழ்

ஆன பரமன் அருளால் பவனிவர
மானனையாள் வந்து மனமகிழ்ந்து—கோனடியின்

ஆர்ந்த மலர்த்தாள் அழகிய கற்பூரம்
சேர்ந்த குழம்பு செயற்சுண்ணம்—வாய்ந்து

மணிமலர்கள் தூவி மலரடியில் வீழ்ந்து
தணிவிலா இன்பத் தமர்ந்தாள்—அணியா

## மடந்தை

மடந்தைப் பருவத்தின் வாழும் வயதின்
தொடர்ந்தபதி னொன்பான் றுலங்கும்—தடங்கண்ணாள்

மாரன்முன் பின்பருவ மாறு நடைவைத்துச்
சீரர சாளுஞ் செயல்மடந்தை—சேரவே

இன்பப் பயிர்செய் இயல்முக் கனிமொழியாள்
நன்பவளக் கோட்டின் நலமுடையாள்—துன்பமறுந்

தூமாரி கோதை தொகுத்த வனமுலையாள்
தேமனகீ தப்பால் திரவூட்டி—காமக்

குழவி மிகவளர்ப்பாள் கோதையரிற் கொம்பே
மழலைக் கிளிச்சொல் மயிலின்—அழகாம்

முகத்திற் றிலதம் முகில்நே ரளகம்
வகைப்பொன் மணிக்குச்சி மன்னத்—திகழ்ந்து

புருவச் சிலைவளைத்த போன்று புகழும்
பருவப் பிறைநுதலாம் பாவை—வரிசைபெறக்

காய்ந்து மிகத்தோய்ந்து கடைந்து கனலுமிழந்து
வாய்ந்தமைந்த வைவேல் வரும்விழியாள்—ஏய்ந்தம்

மடமானின் நோக்குவிலை மாநிலமும் ஒவ்வா
கடைசிவந்து நீண்டகயற் கண்ணாள்—வடிவாய்

இலங்குபொற் றோடும் எரிமணிநற் கொப்பும்
குலுங்கியசை காதின் குழையாள்—விலங்கிய

கண்ணாரு மையாள் கருதிமதி யின்வட்டக்
கண்ணாடி யொத்த கபோலத்தாள்—நன்றாங்

குமிழடிப்பூ தானொத்துக் கூர்ந்து கிரணம்
உமிழ்தருக்காம் நாசி ஒளியாள்—கமழ்கின்ற

தொண்டைக் கனிவாய் துலங்குமுல்லைத் தந்தத்தாள்
அண்டர் மயங்கும் மருங்கையாள்—மண்டலமெண்

கன்னிக் கழுத்தங் காய்பொன் கலந்தாழ்ந்து
மின்னுமணி மாலை மிகப்புனைந்து—மன்னியசீர்

வேய்த்தோள் வளையணிந்து வீணையெனுங் கையதனிற்
பார்த்தோர் மயங்கும் பலவளையாள்—வாய்த்துமிகத்

தீந்தமணி ரத்னந் திரண்ட கடகத்தாள்
காந்தட்செங் காந்தட் கரத்தினாள்—ஏந்திழைதன்

ஒற்றைவிரல் தன்னில் ஒளியாழி தானழுத்தி
மற்றும் பலமோ திரமணிந்து—உற்றுமிக

ஆங்கிடையை நோவித் தணிவட்டந் தானொத்து
வீங்கித் திரண்டெழுந்த வெம்முலையின்—பாங்கினிய

நீலமணி யன்ன நிகராத கண்படைத்துக்
கோல மிகுகுங் குமமெழுதி—சாலக்

கடைந்ததிருப் பொன்னால் கலசங் கதித்தே
வடஞ்சுமந்த கொங்கையிணை மார்பாள்—வடிவாகும்

ஆலிலை நேர்வயிற்றின் அந்நீர்ச் சுழியென்ன
போலியலா முந்திப் பொறிச்சுழியாள்—சாலவே

உட்பகையாஞ் செல்வம் ஒடுங்கிய போலிடையின்
நற்செம்பொன் ஒட்டியாணம் நல்கிய—பொற்பான

வேழத்தின் மத்தகம்போல் மேவுஞ் சகனத்தாள்
நீழலர வப்பண நேரல்குல்—சூழும்

அரசிலைத் தொங்கல் அணிமுத்து ரத்னம்
வரிசைபெறத் தேக்கி வளமாய்—அருகின்

எழுமுருக்கம் பூவொத் தெழுநூற் றெழுபொன்
வழுவா விலைச்சேலை வாங்கி—பழுதில்

அரையதனிற் சேர்த்தி அணிமே கலையைப்
பரவை யுலகம் பகர—விரவின்

கதலித்தண் டொத்த கதித்த துடைக்கீழ்
பொதியுமல வன்சானுப் போல்வாள்—அதியதொரு

அப்புருத் தோணிநிக ராகு முழந்தாளாம்
பொற்றராசின் தட்டாகும் பூங்கணைக்கால்—பொற்புமிகுஞ்

சீறடிய கிண்கிணியாஞ் சீர்சிலம்பு பாடகத்தாள்
போருடைய வாமைப் புறவடியாள்—கூறவே

சேர்ந்தவிர லாழி சிறந்த வுகிர்சேர்த்தாள்
வேய்ந்துசெம் பஞ்சூட்டு மெல்லடியாள்—வாய்ந்துவளர்

வல்லிக் கொடியோ வளரும் பசுங்கிளியோ
சொல்லுங் குயிலோபொற் றேகையோ—மெல்ல

நடக்குமிவள் அன்னமோ நாகர்தல மின்னோ
வடக்குமலை தன்னிலுறை மாதோ—நுடக்குமிடை

ரம்பை யுருவசியோ ராக்குயில் பூமகளோ
அம்பிற் கொடியகண்ணா ளாரோவென்—றன்புற்றுக்

கண்டோர் மனங்களித்துக் காதல் மிகக்கூர்ந்து
வண்டார் மலர்வாடி வன்மத்தம்—கொண்டே

மடந்தைதனைக் கண்டு மலரடியின் வீழ்ந்து
தொடர்ந்துபின் சென்று தொழுது—அடைந்தே

மடலெழுதி நிற்போரும் மாதவஞ்செய் வோமென்
றடர்ந்த மலர்க்கா வடைந்து—தொடர்ந்துருகி

இவ்வுலகத் தோர்க ளியன்ற விதிதன்னை
வெவ்விமிகச் சொல்லி வெறுப்போரும்—அவ்வென்

## கிளியொடும் பூவையொடும் களித்தல்

மயங்குந் திருப்பதத்தாள் மாதலர்மா தன்னாள்
வியன்கொள் புரிசைதனில் மேவி—நயங்கொண்

டிழைக்குமிகு பொற்கூ டினிதா யெடுத்துப்
பழக்கோவை வாய்க்கிளியும் பண்போ—டழைத்தினிதாம்

பூவைகளை நோக்கிப் புகழ்ந்து பொலிவாகத்
தேவர் துதிபாடல் செப்பென்னப்—பூவைதான்

தத்தை குலத்தரசே சாமளப்பொற் கிஞ்சுகமே
ஒத்தினி தாய்ப்பாடென் றோதவே—உற்றுக்

குடதிசை யான்பதத்தைக் கூடியது பாட
மடமாதும் கேட்டு மகிழ்ந்தும்—அடவாக

ஆன்பால்நெய் முப்பழமோ டானநற் சக்கரையும்
தேன்மொழியாள் ஊட்டிச் செழித்தளவில்—நூன்மொழியால்

## சினேந்திரனின் சீர்ப்பவனி

இல்லறமே பாரின் இனிய துறவறமும்
புல்ல வுரைத்துப் புரிதவத்தின்—எல்லையெலாங்

காவல் புரிந்தியல்பாய்க் காதி வினைகெடுத்து
கேவல ஞானக் கிளர்மணத்தின்—தேவர்புகழ்

ஈசா நனனென் றிறைஞ்சி இயல்பாகத்
தேசாய் விளங்கு சினேந்திரன்—தேசாகும்

ஞான மெனுந்தேசம் நற்பொறை யாமமைச்சும்
மானதனங் கோச மருட்சியாம்—ஈனமில்சீர்

வாய்மை யெனும்பலத்தான் மன்னுதம மேதுருவம்
தூய்மைபுகழ் வாகன் றுரகம்—தீமையிலாச்

சித்தி நகர்ச்செல்வன் சீர்மன் னியபொற்பாம்
முத்தியெனுங் கன்னியுடை மோகத்தன்—ஒத்த

அனந்தகுண சந்தானன் ஆன்ம மரணம்
புனைந்த திருவாளாம் புல்கச்—சினந்தவிராத்

துன்பமறச் சேதிக்குந் தொல்தேவ ராசனும்
சண்மதமே போற்றுஞ் சதுர்முகத்தான்—வண்மைபெறத்

தேனைத் திசைபாடச் சேர்ந்து நகைத்தலர்ந்து
தானைத்துப் பூப்பொருட்டின் தண்மையுடன்—கோனைத்து

இப்பா ரருளால் எழுந்தே யுலாநடப்பப்
பொற்பா மணிகிரணம் போங்தெறிப்ப—வைப்பார்

முளரிமல்லி முல்லை முழுநீலப் பூக்கொண்
டுளமகிழ்ந்து தோத்திரங்கள் ஓதி—வளமையுடன்

சிந்தா மணிபோல் திசைவிளங்க வேதோன்றிக்
கொந்தார் மலர்ப்பிண்டிக் கோமான்றன்—கந்தாரும்

ஈனந்தீர் பாதத் திறைஞ்சி யடிவணங்கி
ஆனந்த வெள்ளத் தழுந்தினாள்—மாநல்

## அரிவைப் பருவத்து அணங்கின் கேசாதி பாத வருணனை

அரிவைப் பருவத்தை யைந்து வயதாள்
தெரிவைக் கிளையசெழுந் தென்றல்—திருவைநிகர்

தோற்றத் தழகுற்றாள் தூங்கிய வீரியமாம்
ஏற்ற நிலமா மிவளளகஞ்—சாற்றரிய

சஞ்சரிக புஞ்சச் சகோர மெனுமுலையாள்
கொஞ்சுகிளி யின்சொற் குயில்மொழியாள்—செஞ்சொல்மிக

வாய்ந்தநறுங் கொண்டை வருமம் பிகையவள்தன்
கூந்தற் கமுகனைய கூந்தலாள்—ஆர்ந்தவயன்

அன்றுரும மந்தற் கருளினான் வெற்பிலே
நின்று தவழ்ந்தபிறை நெற்றியாள்—நன்றியே

மெய்ம்மை யுடன்முழுக மேலாம் பதமருள்வோன்
பொய்கைத் தரங்கப் புருவத்தாள்—வெய்ய

பவரோகப் பாகடவன் பார்புகழும் வெற்பில்
நவமாகுஞ் செண்பகப்பூ நாசிப்—புவிமீதின்

சொற்குரியான் வெற்பதனைச் சூழ்ந்த சுனைதன்னில்
நற்குவளை போன்ற நயனத்தாள்—பொற்பணமாம்

ஐந்தலைநன் னாகத் தணிநிழலோன் பூஞ்சுனையில்
வந்தகொடி வள்ளை மணிக்குழையாள்—சுந்தரமாம்

நற்கமல மீதுறையும் நாதன் சினகிரிமேல்
சொற்கரிய தொண்டைத் துவர்வாயாள்—நற்கிழங்கு

கல்லு குருடனுக்குக் கண்பலிப்பா னன்பொருப்பில்
முல்லைமுகை யன்ன முறுவலாள்—மெல்லவே

நன்றி யமரர்முடி நாடுப தன்மலைமேற்
கன்னிக் கமுகுநிகர் கண்டத்தாள்—துன்னி

விசும்பு நிமிர்ந்தோங்கும் வேதன் பொருப்பில்
பசும்பொற் கழையனைபைந் தோளாள்—இசைந்ததவம்

மெய்ம்மையெண் ணுயிரவர் வீறு முனிகிரியில்
மொய்கின் னரர்வீணை முன்கையாள்—துய்யபுகழ்ச்

செவ்வியர்வந் தேத்தும் சிரீகொண்டை வேணுகிரிச்
செவ்விளநீர் ஒத்த செழுமுலையாள்—ஒவ்வா

மலைகுனிய நின்றபிரான் வாழ்தென் மலைபோல்
மலைகுனிய வென்ற முலையாள்—வலம்புரியும்

கொல்லா வதமருளுங் கோமான் றனக்குநிகர்
இல்லாத போலும் இடையினாள்—சல்லாபஞ்

சாடி வினையறுத்த சாந்தனுறை நற்சயிலத்
தாடு மணிநாக வல்குலாள்—நாடினரைத்

தன்னடிமை யாக்குந் தலைவனுறை நற்சயிலந்
துன்னுங் கதலித் துடையினாள்—உன்னியே

மர்க்கடம் நண்ணுபொழில் வாழ்தென் மலையருவிக்
கர்க்கடக மன்னமுழங் காலினாள்—மிக்கவயன்

அன்றுசம் பந்தருக் கன்பாய் அளித்தபார்
கன்றி வராலின் கணைக்காலாள்—வென்றியாங்

கொண்டை கிரியருகில் கொண்ட குளந்தன்னில்
வண்டுறையுஞ் செந்தா மரைத்தாளாள்—வண்டமிழோர்

கற்கவர விக்கநடை காட்டுசின்ன வேதமொழி
நற்கவிதை யன்ன நடையினாள்—மிக்க

## தெய்வ மகளிரை ஒத்த பேரழகி

சுணங்கணிந்த மார்பத்தாள் சொல்லரிய தெய்வ
வணங்கு நிலத்திழிந்த தன்னாள்—வணங்கா

அதிகவனப் போதில் அரவிந்தப் போதின்
பொதிந்தமகா லட்சுமியைப் போல்வாள்—சிதைந்தமுடி

சௌபாக்கிய போக சரசசல் லாபத்தின்
சௌந்தரவிந் த்ராணியெனுந் தையல்—புவனிதனில்

பாவின் கமலம் படித்தவத னூல்மிக்க
நாவின் கிழத்தியென நல்கலாம்—மேவியநற்

சீர்மணிகள் தான்புனையச் செவ்விய ளாதலால்
நீர்மக டன்னை நிகரொப்பாள்—பார்முழுதும்

விற்றலும் போதா விணைநோக்கி னுள்நிலமாம்
பொற்றெடி போன்ற பொறையினுள்—உற்றுமிக

## ஆயத்தாரோடு அமர்ந்து அரிவை வீணை மீட்டிப் பாடுதல்

நீடும் புரிசைதனில் நேராயந் தன்னேடு
பீடும் பெறுமணிசெய் பீடத்தின்—கூடமர்ந்து

சொல்லரிய மாதுஞ் சுகோடலன்யாழ் வீணைதனை
மெல்ல நரம்பி னிசைமீட்டி—நல்ல

குயில்பயில் மென்மொழியாள் கோமா னறங்காத்
தியல்பயில் வாரணமே லீசன்—செயலாம்

அரியினன் மைந்தன் அயனைப் புகன்று
பரவி விரவிமிகப் பாடி—சரஸ்வதிதன்

குங்குமங்கள் தங்குகொங்கை கொண்டிலங்கு மங்கையங்கம்
பொங்கவங்கஞ் சேர்ந்து புணர்ந்துமிக—இங்கிதமாய்

மின்னைப்பொன் னுக்கினீர் மீதணையினே சேர்ந்து
என்னைப்பொன் னுக விதுவேளோ—என்றென்றே

எண்ணரசி பாடுமியலே ரிசைகேட்டே
மண்ணவரும் வாடி மயங்கினுர்—விண்ணவரும்

வீணை தனைவீழ்த்தார் விஞ்சையர் மெய்சோர்ந்தார்
நாணி மதனற் கணைமறந்தான்—காணரிய

ஆகாயப் புள்ளும் அறிவிழந்து வீழவே
வாகாய் இவள்பாடும் அவ்வளவில்—ஏகாத

## வரதன் இரதத்தில் வந்து அரிவையின் எதிர்ப்படுதல்

ஐந்தாங் கதியடைய அகாதிகே டுற்றளவில்
ஐந்தாங் கல்யாணம் அவற்கியற்றி—ஐந்தாகும்

தற்புருட நாமஞ் சதுவர்ண வீரியத்துச்
சற்புருடர் போற்றிய நற்சாந்தன்—அற்புதன்

வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரனும்
பூண்டமலர்த் தாள்நாணிப் பூணிலான்—பூண்டமதி

யொத்த குடையன் உவமை தனிலொவ்வான்
பற்றுபுக ழான்மிக்க பற்றிலான்—நித்தன்

வரதன் திருமூர்த்தி மாதி மணுளன்
இரதந் தனில்வந் தெதிர்ந்தான்—அருகின்

## அருகன் பக்கலிலே அரிவை சென்று தெளிந்து போற்றுதல்

அணைத்தாய மோடும் அவர்மாட் டணுகி
உணைத்தெளிந்து பேசுவதே உண்மை—எனத்தொழுது

பாரரசே பேரரசே பண்ணரசே விண்ணரசே
சீரரசே வேணு கிரியரசே—தேரரசே

திவ்யசின நாதனே தேவாதி தேவனே
பவ்யசென மாங்கமலப் பானுவே—செவ்வி

கடவா வுலகங் கடந்த பிரானே
மடவார் வலைகடந்த மாலே—தடமாம்

பமாண மெனுநூலைப் பாரி லுதவும்
புமானே அமாண னெனும்பெம் மானே—சிமாணற்

படைவாளு மில்லாமற் பாரேழு மாளு
முடையாய் திருமுக் குடையாய்—குடியாகும்

தக்கதிரு ஞானத்திற் றான்மதனை வீத்திட்ட
முக்கணனே முன்னால்வாய் மொய்கரனே—தொக்க

அதிக வினைதன்னா லாற்றுமே லீந்தேன்
விதிதனிற்புற் பற்றானே வாடி—மதியா

தடர்வெம் பிணிநோயின் றாற்றுமே லீந்தேன்
கடல்வீழ் துரும்பாய்க் கலந்தேன்—தொடர்ந்துமிக

அண்டிவருங் கூற்றால் அத்தி விளாங்கனியை
உண்டதுபோல் உள்ளம் உருகினேன்—எண்டிசையுங்

கறங்காய்ச் சுழன்றே கதிநான்கு தன்னில்
இறந்து பிறந்தேன் இசைந்தேன்—நிறைந்தேதான்

மாயமிகு மானத்தில் மன்னி மலிந்ததனால்
ஆயன் சிதைத்தமர மாயினேன்—சீயவணை

அத்தி பெறவமர்நத ஆதி முதற்பொருளே
உற்றதுணை நீயென்றே ஓதிப்பின்—வெற்றிப்

பரன்றாள் பசுந்தாள் படிந்தாள் பணிந்தாள்
விரைந்தாள் எழுந்தாள் வியந்தாள்—வரந்தாளின்

நின்றுமலர் தூவ நெடுந்தே ரயல்வீதி
சென்று திசைவிளக்கிச் சென்றதே—என்ற

## தெரிவைப் பருவத்தாளின் பண்பு நலம்

தெரிவையெனு மாறைந்தின் சீர்தினமே லொன்றும்
பருவ வயதுதனிற் பண்பாள்—மருவியநற்

காதற் குளிகை கருதி னதிசுரத
தீதிற் பனிதரசத் தின்தேனும்—மாதுபர

மானந்த வெள்ள மமிர்த ரசபானம்
வானினதே னுன்கையின் வாழ்வல்லி—தானன்

மரகத மெய்யொளியா மனோகர மஞ்சரி
விரகவலங் காரி விபூதி—வருவேள்

கணைக்கி லக்க மாகியநற் காமநிதி யன்னாள்
இணைக்குலக்கந் தன்னி லிணையாள்—வணக்கமுயர்

## தெரிவைப் பெண்ணின் உருவ நலம்

ஆனபடி யானைநடை ஆனமட மானின் விழி
யானகுயி லான மொழியாளுள்—வானினிடு

சாபவன ரூபச் சலாப மயிலிந்த்ர
கோபவன ரூபக் கொடிப்பவள—சோபிதமாம்

மையொப் பனகுஞ்சி வஞ்சி யபரஞ்சி
மெய்யைம்பான் வண்கிளி மிஞ்சுகொஞ்சி—எய்யும்

வனச முகிழுடனே வாது பொரவோ
வனமா மலைமற் பொரவோ—கனிரச

சூதுடனே வாது தொடங்கவோ சொல்லரிய
கோதிலிள நீர்கண்ணில் குத்தவோ—காதல்மிகு

மாரன் முடிக்கு மணிதா னிடவோ[பொற்]
பூரண கும்பம் புடைக்கவோ—கூறிட்டு

பட்டுக்கச் சிட்டுச்செப் பொத்தொப்பற் றுக்குப்புற்றுக்
கிட்டிக் கொட்டிக்கப்பட் டுக்கென்ன—மட்டுக்கற்

பூரத்தைச் சாரித்துப் பூரித்திட் டாரித்துச்
சீரொத்திட் டாரத்தைச் சேர்வித்துப்—பாரித்த

கொங்கையாள் ஆகாய கொங்கையாள் செங்காந்தள்
நங்கையாள் நன்கமல நங்கையாள்—மங்கை

## மகளிர் நீராடல்

பவளக் கொடியிடையீர் பாகின் மொழியீர்
தவளத் தரளநகை தாரீர்—தவனுகும்

அத்தனெங்கள் கோமான் அனகன் அறவாழி
முத்தன் முழுதுணர்ந்த மூர்த்தியே—நித்தமாய்

கொண்டை மலையருவி கொண்ட குளந்தன்னில்
மண்டல மெண்கொண்ட மானனையீர்—அண்டியே

நீராட என்னோடு நீராட நன்னீர
நீராட வாருமென நீராடச்—சீரார்

## பளிங்கு மாடத்தை அணுகிய பாவை பரமன் உலாக் காண்டல்

பளிங்குகெழு மாடத்தைப் பாவை அணுகி
விளங்கு மணுவில் விளங்கத்—துளங்கியே

ரத்தினபீ டத்திருந்து நாகரிக மாம்பஞ்ச
ரத்தினவன் னந்தனு லர்ச்சிக்க—ரத்தினத்தின்

வட்டிகைமேற் பூந்தாரி வண்மை யுடன்கொண்டு
தொட்டினிமை யாக வேதொகுத்துத்—திட்டமாய்க்

கொண்டை மலைமீது கோமான் திருநிலைய
மண்டபங்கள் சூழ்ந்த மதில்வாயில்—உண்டாம்

படியும் பரம நறுங்காத் தொனிப்பும்
வடிவா யமைத்து மகிழ்ந்த—முடிவெல்லை

குற்றசெற்ற பத்தற துத்தி சதபத்திற்
பற்றறப்பற் றற்ற பராபரன்—மற்றுமிகு

தேனொத்து வானொத்து சீரொத்து நேரொத்து
பூமொய்த்தும் பேர்பெற்றுப் பூரித்துத்—தானொத்த

பிண்டியான் அண்டர்தொழப் பிண்டியான் மண்டலமெண்
கொண்டையான் கொண்டைநறுங் கொண்டையான்—
[வண்டமிழோர்

என்னவிறை யென்னபர னென்னசின னென்னசெய
னென்னகுண னென்னநிதி யென்னவே—வன்னமொடு

வாத்தியங்க ளேயொலிப்ப வண்புலவர் தாம்படிப்ப
நாற்றிசையும் ஏத்தி நலஞ்சிறப்ப—மேற்றிசையின்

நின்றான் நடந்தான் நெடுந்தே ரெதிரோடிச்
சென்றாள் வணங்கி மிகச்சேர்ந்து—நன்றாக

## தேரெதிரே சென்று தெரிவை வணங்கி வேண்டுதல்

ஈரைந் தவதார மொன்றின் இயல்பாகச்
சீரின் கணத்துதியைச் செப்பவே—பாரின்கண்

ஆதி மருபூதி அய்ய வருளென்றாள்
சோதிமரு பூதிச் சுடரென்றாள்—நீதியாம்

அவச்சிர கோடனும் அத்திமத மேயென்றாள்
வவச்சிரக் கோட்டுக் கிறையென்றாள்—ஒவ்வாத

சகசிரா கற்பகத்திற் சாரமர வென்றாள்
சகசாரம் பூனைச் சயம்பு—செகம்போற்றும்

அக்கினி வேகத் தருந்தவனே காமத்தின்
அக்கினிவே கந்தீர்த்த அய்யனென்றாள்—விக்கினமில்

வானச் சுதத்தின் வருமரனே யென்றாள்
கோனச் சுதநற் குணவென்றாள்—தானியலாம்

மானவச்சிர நாபியெனும் வாழ்சக் கரவென்றாள்
நானவச்சிர நாபி நளினவென்றாள்—மன்னும்

நவக்கிர வேத்தின் நனமத் திபதேவா
நவக்கிரகவே கந்தீர்த்த நாதா—புவிமீதின்

அனந்த மகராய வருள்பாரு மென்ருள்
அனந்தகுண மிக்க வயனென்ருள்—சினந்தவிர்ந்த

ஆனந்த கற்பத் தமரேந் திரவென்ருள்
ஆனந்த வேகத் தவனென்ருள்—ஞானமிகு

பாரீச நாதப் பராபரனே காவென்ருள்
பாரீசர் போற்றும் பதவென்றே—தேரீசர்

தம்மைத் துதிப்பதற்குத் தக்க தவஞ்செய்தேம்
இம்மைதனிற் பெண்பிறந்த யாமன்றே—செம்மைநற்

பாதந் தனில்வணங்கிப் பாதந் தனில்நுடங்கிப்
பாதந் தனிலமரர் தான்பரவப்—போதவே

பன்மணிநற் பொற்றேரின் பார்விளங்க வேதோன்றி
நன்மணிசேர் வீதி தனில்நடந்தார்—மின்னனையாள்

## பேரிளம்பெண் வந்து பெருமானைப் பணிதல்

பேரிளம்பெண் ணென்பாள் பெருக்கிய வாருறின்
சீரியலு மேவயதாள் செப்பவே—பாரின்

கலையி னகலமெலாங் கற்றுதெரி சிக்கும்
கலையின் வசனமொழிக் கல்வி—விலையில்

கொடிசேர்ந்த மந்தரமே கூறுகெனச் சற்றே
முடிசாய்ந்து நின்ற முலையாள்—வடிவாரும்

மாடக வீணை மதுரமொழிச் செங்கனிவாய்ப்
பாடகி வந்து பணிந்தாளே—நீடுபுகழ்

## சேடியர் வினவும் பேரிளம் பெண்ணின் மறுமொழியும் அங்கங்களுக்கு அழகு அவனைப் போற்றுதலே

ஆர்ந்த மடமாதே அன்னநடை மின்னரசே
கூந்த லழகேது கூறென்ன—வாய்ந்தசினன்

தீர்த்தமலர்ச் சேடை திருவழக தாமென்ருள்
ஏத்துநுதற் கேதழகி தேதென்ன—தீர்த்தற்கு

நன்றர்ச் சனைகெந்தம் நல்கு திலதமிரு
கண்ணுக் கழகேது காட்டென்ன—புண்ணியநற்

சுந்தரமா முச்சவத்தின் சூழ்பா லியல்முளையே
அந்தவிழிக் கானந்தம் அல்லவோ—பைந்தாள்

செவிக்கழ கேதென்ன திருமேற் றிசையான்
மொழிச்சுருதிச் சொல்லதைமுன் கேட்பப்—புவிமீதே

நாவு தனக்கழ கேதென்ன நயந்துரைப்ப
மேவுமெழுத் தைந்தோது மேன்மையே—பூவையே

கண்டந் தனக்கழகு காட்டென் றியம்பினுள்
கொண்டையான் தங்குமருங் கோயிலே—உண்டழகா

கைக்கழ கேதென்னக் கவளமுனி வர்க்கீதல்
மெய்க்கழ கேதென்று விளம்பினுள்—மிக்கசினன்

பாத மலரிற் பணித லழகென்ருள்
பாதந் தனக்கழகே பார்த்துரையாய்—நீதமுடன்

தீர்த்தநதி வந்தனேயே சேர்ந்த வழகென்றே
பேர்த்தகுயில் வவ்வுமொழி யாரிருப்ப—வார்த்தைமொழி

## அவ்வையொருத்தி அங்கு வருதலும் அவளே வரவேற்றுப் பேரிளம்பெண் தன் ஐயம் வினவித் தெளிதலும்

அவ்வை யொருத்தி யவளணுகா வாசலின்கண்
செவ்வடியாள் சேடிகண்டு செப்பவே—ஒவ்வும்

வரவிடு வென்றுரைத்து வந்தெதிர் கொண்டு
புரிசை தனிலழைத்துப் போந்து—வரிசைபெறும்

ஆசனத்தின் மீதிருத்தி அவ்வை தனேநோக்கி
வாச மலர்க்குழலாள் வண்மையுடன்—தேசுடனே

## முப்பொருளில் முதற்பொருள்

மெய்ப்பாக வேநின்று மேதினியிற் பேரான
முப்பொருளி லாரே முதலாவார்—செப்பின்

உரையென் னெனக்கென்ருள் ஓதுமவ்வை சொல்வாள்
வரிசைபெறக் கேளினிதாய் மாதே—பிரமன்ருன்

மௌஞ்சியுடன் குஞ்சி மணிச்சரமுங் கைத்தண்டும்
பௌஞ்சிமுக ஞன்காகப் பண்ணி—சமைஞ்சமகள்

ஆகுந் திலோத்தமைமேல் ஆசையாய் மோகித்தான்
வாகு பெறுமாலும் வாழசுரன்—தேகத்தின்

மார்பு தனேப்பிளந்தும் வன்சமரில் அர்ச்சுனர்க்காய்
பாரிலச் சியோதனனேப் பாற்றியும்—பூரித்த

வாசுகி மேற்பள்ளி வண்மை பெறத்துயின்றும்
தூசெடுத்து நன்மரத்தில் தொத்தியும்—தேசொளியார்

ஈரெட்டி ஞயிரமாம் இந்து நுத லார்போகஞ்
சேர்மிகு மோகமுறச் சேர்ந்தார்—நாரீசன்

முப்புரமே தானெரித்து முன்கைக் கபாலமொடு
அப்ப வினேயால் அவனிரந்தும்—செப்பின்

மசானத்தின் நீறதனே மன்னியங் கம்பூசிப்
பிசாசினுடன் ஆடுகின்ற பித்தன்—வசீகரமாய்

என்புபுனை மாலை இயல்பாக வேதரித்துக்
கொம்புபுனை வாரணத்தை யேகொன்றும்—செம்பாய்

சருமந் தனையுரித்துச் சாத்திமெய் போர்த்தும்
உருவத்திற் பாதியுமைக் கீந்தும்—விரிசடைமேல்

கங்கை தனைச்சுமந்தும் கைச்சூலந் தான்பிடித்தும்
அங்கை தனில்மழுவும் மான்றரித்தான்—மங்கைநல்லாய்

மற்றும் பலவென்ன மால்கொண்டு மோகத்தால்
பித்த ரெனவே பிரமித்தார்—உற்றதுகேள்

## வினை செற்ற அருகனே மேலாம் முதல்வன்

இந்தியங்க ளைந்தும் இயலாக மோகமுடன்
சிந்தைதனில் அற்றுவிழுஞ் செல்லாதால்—நிந்தைமிகு

குற்றமெனும் ஈரொன்பான் கூறரிய காதிவினை
செற்றம் முதலகன்ற செல்வனே—மற்றும்

அனந்தகுணம் நான்கால் அகிலம் உணர்ந்து
மணந்திகழும் பொன்னெயிலுள் மன்னிக்—கணஞ்சூழ்ந்த

கெந்தகுடி தன்னில் கிளரவரி தான
அந்த மிகுமடங்க லாசனமேல்—நந்தார்

கமலமலர்க் கர்ணிகையிற் கையிற்றான் விரல்விட்டு
அம்மய விருந்த அருகேசன்—சமியன்றான்

அல்லாம லாமத்தார் அரவு தனக்கன்று
உல்லாச மந்திரமே ஓதினேன்—சொல்லின்

சுருதிமொழி நூலெடுத்துச் சொன்னா னெனவே
பருதி தனிலிருந்து பண்பாய்க்—கருதி

## வினாவுரையாக அருகன் புகழைப் பேசுதல்

உலக முழுதும் உணர்ந்தோ னவனே
இலகிய முக்குடையன் யாரே—உலகெலாஞ்

சாரவுரைப் போனவனே சன்னிதியில் வந்தளவில்
தீரா வினைதீர்ப் பவனவனே—பாரின்

பணப்பந்த லானவனே பார மகமேரின்
மணப்பந்தல் வந்தே மகிழ்ந்து—தணிப்பாய்

இறந்தும் பிறவா வியல்புடையோ னார்தான்
அறந்தழுவ மானைய னார்தான்—சிறந்தபுகழ்

கொல்லா வதமே கூறியுரைப் போனார்தான்
வில்லாள் மதனைவென்றோன் வேறார்சொல்—எல்லாருந்

துன்னி யமரர் துலங்கு மணிமகுடம்
மன்னுபா தாம்புயத்தன் மற்றார்சொல்—உன்னித்

தனக்குவமை யில்லாமல் தன்னடியைச் சேர்ந்தோர்
மனக்கவலை நீக்கும் வரத்தார்—இணக்கத்

தவனே யயனும் அவனேமால் என்றும்
அவனே தேதீச னுகும்—அவன்றன்மேற்

பாடல் புகழ்பரவின் படித்து மிகவோதக்
கூடு மமரர் குழாம்பரவல்—நாடியே

பொன்னுலகி னுய்க்கும் புகழுத் தியர்பதமும்
மன்னுமென வேசொன்னுள் மற்றினிதாய்—மின்னேயே

## பாகம் பெண்ணுடையார் பரமராவரோ?

மோகந் தனில்நீடி முன்தபசு மேயழித்துப்
பாகத்திற் பெண்ணுடைய பண்பினரை—மோகத்தால்

குன்றி தணைச்செம்பொற் குன்றகுன்ற மோடேதான்
என்றி நடப்போரை என்செய்வோ—மின்மினியே

துன்னி யிருட்டறுக்குந் தோற்று மதியொளியால்
என்னவெனு மேழரை என்செயலாம்—மின்னொளியார்

சல்லாப மோகத்தின் சார்ந்து மிகவழுந்தும்
எல்லாரை யுந்தெய்வ மென்றுரைத்தால்—நல்லாய்கேள்

மாற்றற்ற பொன்றனக்கு மன்னுதரா வேற்குமோ
ஏற்றமணிக் காச மிசையாதென்—வாய்த்தபுகழ்

## அவ்வை அறமொழி உணர்ந்து அருகனடியைப் புகழ்ந்து போற்றுதல்

அவ்வை யறமொழியை அன்பாக வேயுணர்ந்து
கொவ்வைக் கனிவாயாள் கொண்டாடி—அவ்வையே

அன்பாக வென்றன் அகமகிழப் போதித்தே
நன்பாக வென்சென்மம் நல்கினுய்—பண்பாக

அவ்வையடி தான்பரவி ஆனந் தமிர்தமிகச்
செவ்வி யுடன்பருகி யேசெழிக்கும்—அவ்வளவில்

## அப்பாண்டை நாதரின் தெய்வப் புகழ்

அப்பாண்டை நாதன் அகில சினனுதன்
கற்பாந்த நாதன் கணநாதன்—மெய்ப்பாக

மாமுனிவர் தங்கள்கோன் மண்ணவர்கோன் [விண்ணவர்கோன்
தாம மணிந்த தரணர்கோன்—நாமமுயர்

திவ்வியவாக் கீசன் திருமுன் றுலகீசன்
செவ்வி யறவாழி சேர்த்தீசன்—ஒவ்வுமையின்

முத்த னவர்தனித்தன் மூவுலக மேயுணர்ந்த
சித்த னசித்தன் செகப்ரசித்தன்—வித்தகர்செய்

அந்தரத்த மந்திரத்தின் அந்தநற் சிந்தனைக்கண்
அந்தபர மன்றங் கும்மருகன்—சுந்தரமாம்

அண்டர் பரவ அருமணிநற் பொன்முரசுந்
தெண்டிரை யோசைத் திசைத்தொலிப்பக்—கொண்டைதனில்

பொற்புநவ ரத்னம் புனைந்து கதிரிலங்கும்
புற்ப மிகநிறைந்த பொற்றேரின்—சற்பநிழல்

சங்க ரனமரத் தக்க துதிபாடி
பொங்க முடன்பூப் பெயல்பொழியப்—பொங்கும்

மணிமாட வண்கதலி மன்னுகொடி பூகம்
மணிவீதி தன்னி லவரேக—மணிசேர்

## மடவார் அருகன் தேரெதிரே வந்து வணங்கி வாழ்த்துதல்

சிலம்பு கலகலெனச் செம்மே கலையை
புலம்பச் சலசலெனப் போர்த்து—நலஞ்சிறப்ப

வந்தா னெனவே வணங்கி யெதிரே
கொந்தா ரிருகரமே கூப்பி—சிந்தா

மணியேநற் பச்சை மலையேநன் னெஞ்சின்
அணியே அயனே அருளே—தனிமையே

வேத விழுப்பொருளே வேதமே வேதத்தின்
பாத மயமே பரஞ்சுடரே—நாத

பரமே பராபரமே பண்ணவனே விண்ணவனோர்
விரவிய தத்துவத்தின் வித்தே—அரசனே

ஆதி முதலே அமரர்தொழு மர்ச்சனையே
சோதியே மூவுலகின் சொர்ணமே—போதீ

மதியே நெடுமாலே வானோர்க்கு மெட்டாத
கதியே விதியே கதிரே—துதிமிக்க

வானோ ரமுதமே வண்மைப் பொருளே
தானே மிகத்தேடு வார்தனமே—கோனேமுன்

கற்றோர்க்கு ஞாலமே கல்லோர்க ளாலமே
பெற்றோர் மனத்திற் பெருந்தகவே—உற்றோர்

சிவமே தவத்தோர்கள் செல்வமே சீலத்
தவமே வரமளிக்குந் தாயே—புவிமீதின்

நாடிச் சுரந்தொழுகி நல்லன்ப ராங்கன்றை
தேடியறப் பாலூட்டுந் தேனுவே—கூடித்தன்

தஞ்சமெனுஞ் சொன்னைஞ் சாலிக் கொழுந்தெழுந்து
மிஞ்சச் சொரிகாள மேகமே—பஞ்சமித்தர்

கூக்கொண்டு சொல்மாரர் குற்றமெனுஞ் செற்றைகளைப்
போக்குந் தரங்கப் புனைகடலே—ஆக்கமாம்

புள்ளினங்கள் வண்டினங்கள் போலு மிகச்சேர்வே
உள்ள மகிழுமுயர் கற்பகமே—மெள்ளவே

மண்மீ தடியார்த மாற்றம் வினைப்பனியைக்
கன்ற வெறிக்குங் கதிரவனே—நின்னையே

அன்னையே வந்தடைந்தோர் அஞ்ஞான மாமிருளை
முன்னி யகற்று முழுமதியே—துன்னியே

மன்றாடு பத்தர் மனமிடியைப் போக்குதற்கு
நன்றாக வாய்த்த நவநிதியே—வென்றோர்கள்

ஆதாரத் தானே அடியேன் மனமகலாப்
போதாரும் பிண்டிநிழற் பூரணனே—பாதார

விந்தா ரவிந்தத்தின் மீது வருபோதா
சிந்தா சுசிந்தா நிசிந்தாவெண்—கொந்தார்

## மங்கையரின் மங்கல வாழ்த்து

மலர்ப்பிண்டி யானடியில் வாழ்த்தி மலர்தூவி
சிலமா னனையரொடு சேர்ந்தே—விலையில்

கொடிநே ரிடைதுவளக் கோலந் திவளப்
புடைமுலை முற்றம் புணர்ந்து—துடியிடையாள்

குங்குமநன் னீரால் குளிர்வசந்தந் தானாடிப்
பொங்கி மிகவாழ்த்தி யேபுகல்வாள்—இங்குலகின்

திங்கள்மும் மாரி திறலாக வேபொழிய
எங்க ளருகனற மேவீறச்—செங்கோலே

நன்மை யரசான்க நாடுசெழித் தேவிளைக
தன்ம மிகுசெனமே தான்தழைக்க—நன்மையாம்

முத்தமிழே பாரில் முயற்சிபெற வேவீற
மற்று மிகப்புலவர் வாழ்கவே—நித்தநித்தம்

புங்கவன்றன் பாடல் பொலிவு பெறவீரக்
கங்கைகுலத் தோர்வாழ்க காசினியில்—இங்கிதமாய்

உண்மை முனிவ ருலகில்மிக வாழ்கவென
வண்மை பெறத்துதித்து வாழ்த்தினாள்—செம்மை

## எல்லாரும் போற்ற நறுங்கொண்டை அருகந்தன் உலாப்போந்தான்

நிலமடவார் நீர்மடவார் நீடுபுகழ் வெள்ளி
மலைமடவார் நாக மடவார்—குலமடவார்

பேதை முதலாகப் பேரினம்பெண் ணந்தமாய்
ஏதமி லெப்பருவத் தெல்லோரும்—நீதியால்

வந்திறைஞ்சி வாழ்த்தி மலர்மாரி தூவவே
அந்தநறுங் கொண்டை அருகந்தன்—சுந்தரமாய்

பொல்லா வினைசனத்திற் போக்கி விடும்புனிதன்
எல்லோரு மேத்த யினிமையுடன்—சொல்லால்

நிறைந்த மிகுபொருளாம் நீடுங் கிரிமேல்
உறைந்தபிரான் போந்தான் உலா.

## நூற்பயன்

### வெண்பா

ஏழுல கத்தோரும் ஏழுகிரி யுற்றோரும்
ஏழுபரு வத்தோரும் ஏத்தவே—சூழும்
மலையுடை யானப்பன் வாழருக னிம்மூன்
றுலகுடையான் போந்தான் உலா. 1

கருதித் தொழுமன்பர் காட்சியான் கொண்டை
அருகனறங் காத்தருளு மையன்—விரவியசீர்
தொங்குகண்டை யங்கண்விஞ்சு துங்கவெங்க யற்கணிங்கு
தங்குதுங்கப் பங்கயங்கத் தாள். 2

மன்னியுல காளலாம் வாழ்நிதியைச் சேரலாம்
துன்னி வினையைத் துணிக்கலாம்—நன்மைபுகழ்
வித்தைக் கனந்த விசய னுரைத்தவுலா
நித்தம் படித்தால் நினைந்து. 3

# உலா இலக்கியம்[1]

அம்மையப்பர்
கனகசபை நாதன் உலா

அருணசலக் கவிராயர்
அவிநாசி உலா
பேரூர் உலா

அழகிய கூத்த தேசிகர்
செப்பறை உலா

அனந்தவிசயர்
அப்பாண்டை நாதர் உலா

ஆதித்தர், அ. கு.
காமராசர் உலா

இரட்டையர்
ஏகாம்பரநாதர் உலா

எல்லப்பப் பூபதி
திருப்பனந்தாள் உலா

ஒட்டக்கூத்தர்
இராசராசசோழன் உலா
குலோத்துங்கசோழன் உலா
விக்கிரமசோழன் உலா

கந்தசாமிப் புலவர்
திருப்பூவணநாதர் உலா

கந்தப்பையர்
திருத்தணிகை உலர

கபாலமூர்த்திப் பிள்ளை
சிவசுப்பிரமணியர்
திரு முருக உலா

காளமேகப் புலவர்
திருக்காளத்திநாதர் உலா

சங்கராச்சாரியர்
ஞான உலா

சரவணமுத்துப் புலவர்
நெல்லை வேலவர் உலா

சிவக்கொழுந்து தேசிகர்
கோடீச்சுர உலா
தஞ்சைப் பெருவுடையார் உலா

சிவபிரகாச சுவாமிகள்
திருவெங்கை உலா

சுப்பிரமணியக் கவிராயர்
திருக்கடவூர் உலா

சுப்பிரமணியன் செட்டியார்
மயூரகிரி உலா

சேரமான் பெருமாள் நாயனர்
திருக்கைலாய ஞான உலா

சேறைக் கவிராச பிள்ளை
சேயூர் முருகன் உலா
திருக்காளத்திநாதர் உலா
வாட்போக்கிநாதர் உலா

தத்துவராயர்
சிலேடை உலா
ஞானவிநோதன் உலா

திரிகூடராசப்ப கவிராயர்
திருக்குற்ருலநாதர் உலா

நம்பியாண்டார் நம்பி
ஆளுடைய பிள்ளையார்
திருவுலா மாலை

நாராயணசாமி ஐயர்,
பின்னத்தூர்
தென்தில்லை உலா

படிக்காசுப் புலவர்
சிவந்தெழுந்த பல்லவராயன்
உலா

---

1. இப் பட்டியலில் தரப்பட்டுள்ள விவரம் சிதம்பரம் மணிவாசகர் நூலகம் வெளியிட்டுள்ள திரு. ந. வி. செயராமன் எழுதிய 'உலா இலக்கியங்கள' என்னும் நூலைத் தழுவி அமைக்கப்பெற்றது. உலா இலக்கியங்கள் பற்றிய விரிவான செய்திகளை அந்நூலுள் காணலாம்.

**பண்டாரக் கவிராயர்**
திருவிலஞ்சி முருகன் உலா

**பல பட்டடைச் சொக்கநாதப் புலவர்**
தேவை உலா

**பிச்சுவையர், சிலேடைப் புலி**
குன்றக்குடி சண்முகநாதர் உலா

**புராணத் திருமலை நாதர்**
மதுரைச் சொக்கநாதர் உலா

**மீனாட்சிசுந்தரம் பிள்ளை**
திருவிடைமருதூர் உலா

**வீரராகவ முதலியார், அந்தகக் கவி**
கயத்தாற்றரசன் உலா
கீழ்வேளூர் உலா
திருக்கழுக்குன்றத்து உலா
திருவாரூர் உலா

**வெறிமங்கைபாகக் கவிராயர்**
மருங்காபுரி உலா

**வேத நாயக சாஸ்திரி, சுவிசேடக் கவிராயர்**
ஞான உலா

**வேலைய தேசிகர்**
மயிலத்து உலா

**ஆசிரியர் பெயர் காணா உலா நூல்கள்**

அழகியநம்பி உலா
உண்மை உலா
கடம்பர் கோயில் உலா
காளி உலா
குலசை உலா
சங்கரசோழன் உலா
சங்கரநயினார் கோயில் சங்கரலிங்க உலா
சிறுத்தொண்டன் உலா
சேனைத்தலைவர் உலா
தருமைஞான சம்பந்தசாமி உலா
திரிசிரகிரி உலா
திருக்குவளை தியாகராச சுவாமி உலா
திருச்சிறப்புலியூர் உலா
திருச்செந்தூர் உலா
திருப்புத்தூர் உலா
திருவேங்கட உலா
தில்லை உலா
நடுத்தீர்வை உலா
பரராசசேகரன் உலா
புதுவை உலா
முப்பன்தொட்டி உலா
விருத்தாசல உலா

# சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி

[எண் : கண்ணி எண்]


அ

அக்கினி 208
அக்கினி வேகத்து அருந்தவன் 515
அக்கினி வேகந் தீர்த்த அய்யன் 515
அகலூர் 91
அகளங்கன் 72
அகன்ற மலர்த்தாளான் ஆதி அருகன் 317
அகாதி 462
அகில் மரம் 106
அகில சினனுதன் 580
அகிலம் 557
அகிற்புகை 269
அகோச பவக்கடல் 361-362
அகோசம் 361
அகோரன் 361
அங்க பூர்வம் முதனூல் 54
அங்கம் 550
அச்சு 198
அச்சுதன் 16, 516
அச்சுபதி 120
அச்சுவத்தம் 109
அசுரகுமாராதி 215
அசுர குமாராதியான பதின்மர் 215
அசுரன் 545
அசோகமரம் 107
அசோகன் 2
அஞ்சனமலை 33
அஞ்ஞானம் 604
அட்ட குணக் கன்றினன் 59-60
அட்ட திக்கு 72
அடர்ந்த மலர்ப்பிண்டி 315
அடி 367
அடும்பொன்...அமரேந்திரன் 316
அண்டர் 65, 68, 94, 189, 228, 380, 507, 585
அண்டர் உலகு 228
அண்டர் முனிவோர் 94
அணி 591
அணிசு 195
அணிமறுவார் நன்மார்பன் 171
அணியா உருவே திருமூர்த்தி 160
அணியா தழகியான் 2
அணு 500
அணுகா வாசல் 539
அணை 274
அத்தம் 130
அத்தன் 2, 497
அத்தி 476, 479, 513
அத்தி பெறுந்தரணன் 314
அத்தி மதம் 513
அத்தி விளாங்கனி 476
அத்தி விளாங்கனியை உண்டதுபோல் 476
அதிசயப் பூங்கா 114
அதிசுரதம் 483
அந்தரம் 230, 231
அந்தரத்த மந்திரம் 584
அந்தன் 428
அப்பர் 55

அப்பன் 55, நூ. ப.[1] 1
அப்பாண்டைநாதன் 30, 185, 580
அப்பாண்டை நாயகர் கா.[2] 2
அப்புருத்தோணி 395
அபரஞ்சி 260, 489
அபிராமி 127
அம்பிகை 76, 427
அம்பிற்கொடிய கண்ணுள் 400
அம்புயத்தின்மேல் நடந்தோன் 5
அம்புயம் 5
அமடன் 323
அமரர் 159, 196, 295, 361, 435, 523, 567, 570, 594
அமரர் குழாம் 570
அமரர்கோன் 159, 295
அமரேந்திரன் 177, 316, 520
அமரேந்திரனல் நற்றுதி......
தாவுபுகழாகுந் தன்மையான் 177
அமலகம் 107
அமலன் 8
அமாணன் 471
அமிர்தம் 484, 579
அமிர்தரச பானம் 484
அமுதம் 596
அமுது 353
அமைச்சு 414
அய்யன் 55, 64, 512, 515
அயல்வீதி 481
அயன் 181, 183, 240, 427, 456, 519, 569, 591
அயிராணி 321
அயிராவதம் 321
அயிராவதமீதில் ஆர்ந்த கழல் 321
அர்ச்சனை 531, 544
அர்ச்சுனன் 546
அரசனே 593
அரசி 459
அரசிலை 391
அரசிலைத் தொங்கல் 391
அரசு 353, 369, 408, 612
அரவப்பணம் 390
அரவல்குல் 262
அரவிந்தப் போதின் பொதிந்த மகாலட்சுமி 448
அரவிந்தம் 248, 448, 607
அரவு 262, 560
அரன் 516
அரிகரபுத்திரன் 64
அரிதகி 111
அரிவை 424
அருகந்த மங்கலம் 93
அருகந்தன் 618
அருகர் 170, 293
அருகன் கா. 2, 311, 317, 584 611, நூ. ப. 1, 2
அருகன் அறம் 611
அருகேசன் 559
அருங்கலச்செப்பு 157
அருட்கடல் 335
அருட்கடலான் 318
அருட்கடலும் ஆயினேன் 10
அருந்தவன் 515
அருவி 117, 349, 443, 498
அருள் 12, 185, 318, 335, 591
அருள் புலவர் 333
அருள்முனிகோன் 185
அருளாழியான் 12
அரை 173, 393
அல்குல் 262, 390, 441
அலங்கல் 250
அலமத்தார் 560
அலர்மாது 405
அலவன் 394
அலோகமொடு லோகம் கனக மணிக்கரத்திற் கண்டோன் 8
அவ்வை 539, 541, 543, 577, 579
அவ்வை அறமொழி 577
அவச்சிரகோடன் 513
அவதாரம் 511
அவிட்டம் 139
அவிட்டமானேன் 139

1. நூ. ப. நூற்பயன்.
2. கா. காப்பு.

அவிரோதிப் பிரபந்தத்தி 70
அழகர் 250
அழகு 122, 529-531, 533-538
அழகுடையான் 122
அழறு 356
அழியாத கல்வி அறிவன் 44
அளகம் 342, 358, 373, 425
அளகமுடி 342
அற்பசி 162
அற்புதன் 170, 463
அறம் பொழியும் மாரி 49
அறமுரைக்குந் தீர்த்தகரன் 39
அறமே மணமலிந்த கெந்தாடி
மால் 239
அறமொழி 577
அறவாழி 222, 318, 497, 582
அறவாழி சேர்த்திசன் 582
அறவாழியான் 12
அறவாழி வேந்தன் 318
அறிவன் 44
அறிவு 461
அறுப்பத்து நாற்கலை 47
அன்பர் காட்சியான் நூ.ப.2
அன்பு 578
அன்னம் 47, 248, 351, 399, 529
அன்னநடை மின்னரசு 529
அன்ன வாகனத்தாய் 47
அன்னைமார் 311
அனகன் 8, 497
அனம் 144
அனந்தகுண சந்தானன் 417
அனந்த குணம் 417, 519, 557
அனந்த குணம் நான்கு 557
அனந்த குணமிக்க அயன் 519
அனந்த தெரிசனத்தன் 6
அனந்தம் 519
அனந்தமாம் வீரியத்தன் 7
அனந்தவிசயன் நூ.ப. 8
அனந்த வீறு சுகமுடையன் 7
அனுபரணியானேன் 121
அனுஷன் 133

ஆ

ஆகாய கொங்கையாள் 495
ஆகாயப்புள் 461
ஆகாயம் 461, 495
ஆசனம் 541, 558
ஆசான் 146
ஆடகப் பொற்சிலம்பு 270
ஆடரங்கம் 114
ஆடவர் 287
ஆடி 159
ஆடு மணி நாகம் 441
ஆடை அணியாவழகன் 174
ஆடையூர் 89
ஆணிக்கரத்தினம் 95
ஆத்தி 108
ஆத்மத்தியானம் பயில்வோர் 52
ஆதன் கா. 1, 61
ஆதாரத்தான் 606
ஆதி 5, 127, 162, 317, 327, 479
512, 594
ஆதிக் கடவுள் 5
ஆதிசுதன் 127
ஆதிபரமேசன் 162
ஆதி மணி 327
ஆதி மருபூதி அய்யன் 512
ஆதிமுதல் 594
ஆதிமுதற்பொருள் 579
ஆதியருகன் 317
ஆதியாய் 240
ஆபரணம் 66
ஆபற்சகாயன் 22
ஆமைப்புறவடியாள் 396
ஆய்ந்துதலங்காத்தோர் 28
ஆயம் 307, 453, 467
ஆயன் 478
ஆயன் சிதைத்த மரம் 478
ஆயிரங்கோடி கதிர்
ஆர்ந்த மணிவரை 206
ஆயிரமேலெட்டாந் திருநாமம் 176
ஆர்வத்தான் 183
ஆரணங்கு 351
ஆரதி 41
ஆரம் 336, 494

ஆரியார்கள் 82
ஆல் 110, 388
ஆலம் 597
ஆலமுதுமரம் 110
ஆலவட்டம் 192, 232
ஆலிலை 388
ஆலைப்பதி 62, 89
ஆவணி 160
ஆழி 384, 397
ஆறுறின் சீரியலுமே வயதாள் 525
ஆறுமுகவன் 10
ஆறைந்தின் சீர்தினமே
லொன்றும் பருவ வயது 482
ஆன்பால் 410
ஆன்ம மரணம் 417
ஆனந்தமிர்தம் 579
ஆனந்த கற்பத்தமரேந்திரன் 520
ஆனந்த கற்பம் 520
ஆனந்த நாட்யம் 237
ஆனந்தம் 532
ஆனந்த வெள்ளம் 423
ஆனந்த வேகத்தவன் 520
ஆனந்தன் 125
ஆனி 158

இ

இசக்கியம்மை 79
இசை 419, 454
இசைபாடல் 419
இடை 389, 440, 609
இண்டை நிரை தீவு 53
இணக்கத்தவன் 568, 569
இதழ் 171, 288
இந்தியங்கள் ஐந்து 555
இந்த்ராணி 449
இந்திரகோபம் 488
இந்திரசாபம் 301, 347
இந்திரர்கோன் 187
இந்திர நவமாணிக்கம் 157
இந்திர விமரனம் 187
இந்திரன் 207
இந்து 548
இந்து நுதலார் 548
இமைப்பொருப்பு 37
இமையமலை 356
இயக்கி 75
இயல்மங்கலம் 298
இரதம் 466
இருகரம் 590
இருட்டு 574
இருவாட்சி 98
இருவிழி 347
இருவினைகள் 139
இல்லறம் 411
இலக்கு 486
இலங்கு பொன்னேலை 250
இலை 388
இளங்காடு 93
இளநீர் 438, 491
இறை 123, 165, 508, 513
இறையான் 139
இறைவன் 191
இறைவனுலா 191
இன்பப்பயிர் 370
இன்னியம் 298

ஈ

ஈசன் 9, 174, 455, 569
ஈசானம் 218
ஈசானன் 214, 413
ஈரெட்டி னுயிரமாம் இந்து
நுதலார் 548
ஈரைந்தவதாரம் 511
ஈரொன்பான் இயல்பாஷை 312
ஈரொன்பான் கூறரிய
காதிவினை 556
ஈனமத்தோர் 332
ஈனமத்தோர் தங்கட்
கெதிராணி 332

உ

உகிர் 397
உச்சயந்த வாழ்மலை 74
உச்சவம் 532
உத்தரம் 129, 200, 256
உத்தியர் பதம் 571
உத்திரட்டாதி 142
உத்திரவாடகம் 137

உதைகழல் 324
உந்தி 349, 388
உந்திப்பொறிச் சுழியாள் 388
உம்பர் உலகு கா. 1
உமை 552
உருமு 228
உருவசி 400
உல்லாச மந்திரம் 560
உலகப் பிரசித்தன் 2
உலகம் 404, 470, 562
உலகம் முழுதும் உணர்ந்தோன் 562
உலகு நூ. ப. 3
உலகெலாம் சார உரைப்போன் 562-563
உலா கா. 2, 191, 263, 420, 620, நூ. ப. 1, 3
உலா நடப்ப 420
உலாப் பவனி 297
உவமைதனில் ஒவ்வான் 465
உள்ளம் 476
உள்ளிருந்தோன் 184

எ

எக்காளை 224
எண்குணமுடையாய் 238-239
எண்ணாயிர முனிவர் 67
எண்ணாயிரவர் 437
எண்பாடயன் 181
எண்மர் 216
எதிராணி 332
எயில் 89, 327, 557
எயிலான் 182
எயிறு 285, 288
எவ்வினையுமே கெடுத்திட்டீசன் 9
எழுத்தைந்து 534
எழுநூற்றெழுபொன் வழுவாவிலைச்சேலை 392
எழுபதின்மர் 28
எழுபதின்மர் ஆய்ந்து தலங்காத்தோர் 28
என்புபுனைமாலை 551

ஏ

ஏழர் 574
ஏழுகிரியுற்றோர் நூ. ப. 1
ஏழு பருவத்தோர் நூ. ப. 1
ஏழுலுலகத்தோர் நூ. ப. 1

ஐ

ஐந்தலை நன்னாகம் 432
ஐந்தாகும் தற்புருடம் 462-463
ஐந்தாங்கதி 462
ஐந்தாங் கல்யாணம் 462
ஐம்பால் 489
ஐம்பாவை 293
ஐயன் 61, 565, நூ. ப. 2
ஐயைந்து வயது 424
ஐராவதம் 207

ஒ

ஒட்யாணம் 389
ஒத்தேயருந்தும் ஒளியிழை 276
ஒப்பில் பழக்கோவை வாய் 261-262
ஒப்புவமை 170
ஒவ்வா வணியா துருவே திருமூர்த்தி 160
ஒளிமூன்று 314
ஒன்றியன் 318

ஓ

ஓதல்பாடி 92
ஓலை 250
ஓவியம் 247

க

கங்கை 24, 553, 614
கங்கை குலநாதர் 24
கங்கை குலத்தோர் 614
கச்சி 13
கச்சு 493
கச்சை 272
கடகம் 383
கடம் 147
கடம்பு 107
கடல் 228, 475, 601
கடல்வீழ் துரும்பு 475

கடவா வுலகம் கடந்த பிரான் 470
கடவுள் 238
கண் 434, 531
கண்டம் 435, 535
கண்டை 225
கண்ணுடி 378
கண்முலை 273
கணத்துதி 511
கணதரர் 50, 84
கணநாதன் 580
கணம் சூழ்ந்த கெந்தகுடி 557-558
கணை 460, 486
கணைக்கால் 395, 444
கத்தன் 3, 63
கதம்பம் 111
கதலி 394, 442, 598
கதலித்தண்டு 394
கதி 3, 477, 535
கதி கடந்த காவலன் 3
கதி நான்கு 477
கதிர் 122, 206, 586, 595
கதிரவன் 603
கபாலம் 549
கபோலம் 377
கமடன் 133, 323
கமலநங்கை 495
கமலப்பானு 569
கமலம் 201, 433, 450, 559
கமலமலர்க் கர்ணிகை 559
கமல மீதுறையும் நாதன் 433
கமுகு 66, 105, 110, 427, 435
கயல் 348
கயற்கண்ணுள் 376
கயிற்றா 505
கர்க்கடகம் 443
கரணை 226
கரதாளம் 225
கரந்தை 21
கரம் 337, 383
கரவீரம் 98
கருங்காகம் 37
கருடமணி 327
கரும்பின் ரசம் 345
கரும்பு 274, 345
கருமக் கடலைக் கணத்திற் கடந்தோன் 29
கல்மழை 323
கல்யாணம் 294
கல்வி 41, 526
கல்வி வளர்கொடி 41
கலசம் 387
கலம் 381
கலன் 254
கலையினகலம் 526
கலைமான் 264
கலைப்பொருள் 331
கலைப்பொருளின்...கொழுந்து 331-332
கலைமகள் 41
கவளம் 536
கவிகை 192
கவிதை 446
கவிதையன்ன நடையினுள் 446
கவுள் 259
கழங்காடல் 335
கழங்காடுதல் 310
கழங்கு 310, 335
கழல் 278, 311, 320-325
கழலோன் 320
கழற்பாட்டு 311
கழிதம் 107
கழுநிமலர் 164
கழுத்து 170, 381
கழை 107, 309, 436
கழை முத்தம் 309
களிப்பிளவு 259
களிப்பிளவு வெற்றிலை 259
கற்கடகம் 147
கற்பதரு 149
கற்பம் 218, 602
கற்பாந்த நாதன் 580
கற்பூரம் 128, 366, 493-494
கறங்கு 477
கன்ம மலத்தரு 135
கன்மமிலா ஞானக்கடல் 242
கன்னம் 305

கன்னலமோடு 89
கன்னி 149, 416
கன்னிக்கமுகு 43ப
கன்னிக் குழாம் 292
கனக பொகுட்டு 297
கனல் 375
கனிமொழியாள் 370

கா

காகம் 37
காச்சுண்டைச் சுண்ணம் 259
காசிநாட்டிற் செனித்த காவலன் 126
காசி நாடு 126
காசினி 614
காட்டு மடமான் 343
காட்டு மடமான் பாவை 343
காதற் குளிகை 483
காதியுரகக் கருடமணி 327
காதிவினை 412, 556
காந்தட் செங்காந்தட் கரத்தி னாள் 383
காந்தள் 383
காமக்குழவி 371-372
காமத்தியல்பு 306
காமநிதியன்னாள் 486
காமம் 515
காமன் 289
காமாதி வென்ற கடவுள் 238
காய்ந்து ..விழியாள் 375
கார்த்திகை 122, 163
கால் 199, 323, 443
காலன் 135, 163
காலன்தனைக் கடிந்தோன் 163
காவணம் 307, 309
காவலன் 3
காவி 247
காளமேகம் 600
காற்சிலம்பு 359

கி

கிஞ்சுகம் 408
கிண்கிணி 299, 336, 396
கிரணம் 379, 420
கிரி 620
கிரியருகை 91
கிரீடம் 316
கிழங்கு 433
கிழங்கு கல்லு குருடன் 433-434
கிள்ளை 112
கிளி 248, 372, 398, 406, 426, 489
கிளி இன்சொல் 426
கிளிச்சொல் 372
கின்னரம் 227
கின்னரர் 216, 437

கீ

கீதப்பால் 371
கீதம் 371
கீதவியந்தரர்கள் 216
கீழைக்களையூர் 91

கு

குங்குமங்கள்...மங்கை 457
குங்கும நன்னீர் 610
குங்குமம் 141, 386, 457, 610
குச்சு 195
குஞ்சி 489, 544
குடதிசையான் 409
குடம் 193
குடமல்லி 98
குணதரன் 84
குணபத்ர மாமுனிவன் 84
குணன் 508
குந்துநாதர் 21
குபேரன் 213
கும்பம் 154
குமிழ் 379
குயில் 112, 247, 286, 398, 400, 426, 455, 487, 538
குயில்மொழி 426
குயில் வவ்வு மொழியினர் 538
குரவு 106
குரா 20
குருக்கத்தி 100
குருகு 112
குருடன் 434
குலமடவார் 616

குவளை 100, 304, 348, 431
குழம்பு 366
குழல் 303
குழை 377, 432, 541
குழையாள் 377
குளஞ்சி 104
குளத்தூர் 87
குளந்தை 90
குளம் 445, 498
குற்றம் 505, 556
குறக்கோட்டை 88
குன்றி 573

கூ

கூந்தல் 110, 427, 523
கூந்தற் கமுகனைய கூந்தலாள் 427
கூந்தற்கமுகு 110, 427
கூற்றம் 341
கூற்று 324, 476
கூனம்பாடி 89

கெ

கெடிலநதி 97
கெண்டை 175
கெந்தகுடி 558
கெந்தம் 531
கெந்தாடி மால் 239
கெந்தாபிஷேகத்தன் 141
கெருடவீதி 267-268
கெற்பதாரணம் 294

கே

கேட்டை 134
கேவலஞானம் 412
கேவலன் 180

கை

கை 382, 437, 484, 536
கைக்கபாலம் 549
கைச்சாரி 225
கைச்சிலம்பு 280
கைச்சூலம் 553
கைத்தண்டு 544
கைம்மணி 225
கைவளை 292,359

கொ

கொங்கை 387, 457, 495
கொங்கையாள் 495
கொடி 197, 202, 278, 527
கொடி யிடை 496
கொடிகள் பல நிரைத்த கோபுரம் 197
கொடிநேர் இடை 609
கொடிப்பவளம் 488
கொடிய கண்ணுள் 400
கொடியிடை 249
கொடுங்கை 200, 260
கொண்டல் 228, 333
கொண்டல் உருமு 228
கொண்டை கா, 1, 2, 83, 86, 94 119, 427, 438,445, 507,585, 618, நூ. ப. 2
கொண்டைகிரி 445
கொண்டை சிலையம் 86
கொண்டை நறுங் கொண்டையான் 507
கொண்டை மலை 31, 65, 498, 503
கொண்டை மலையருவி 498
கொண்டையான் 184, 507, 535
கொப்பு 377
கொம்பு 551
கொல்லாவதம் 440, 566
கொல்லாவத மருளும் கோமான் 440
கொவ்வைக்கனி 577
கொவ்வைக்கனி வாய் 577
கொன்றை 102

கோ

கோங்கு 102
கோடணை 196
கோதிலா முத்துச் சுமந்த மணி 327-328
கோதையரிற் கொம்பு 379
கோபுரவாயில் 130
கோமளம் 305

கோமான் 296, 422, 440, 455, 497, 503
கோமேதகம் 205
கோயில் 535
கோவை 262, 406
கோன் 34, 185, 237, 365, 419, 516, 596

ச

சக்கரன் 517
சகசாரம் பூணுச் சயம்பு 514
சகசிரா கற்பத்திற் சாரமரன் 514
சகசிராகற்பம் 514
சகனம் 390
சகோரஞ்சிதன் 361
சகோரம் 426
சங்கம் 179, 223
சங்கரன் 587
சசி 207
சஞ்சரிக புஞ்சச் சகோரம் 426
சடை 552
சண்பகம் 99
சண்பை நகர் 92
சண்மதம் 418
சத்தியோசாதன் 295
சதங்கை 299
சதபத்திர மாமாலை 82
சதுர்க்கதி 49
சதுர்முகத்தன் 326
சதுர்முகத்தான் 62, 418
சதையம் 140
சந்தனம் 106
சந்தானன் 417
சந்திரகாந்தப் படிகச் சந்திர நன்னுதன் 17
சந்திரகாந்தப் படிகம் 17
சந்திரநன்னுதன் 17
சந்திரன் 17, 217, 301
சந்திரனேர் முக்குடை 17
சப்பிரகூடம் 261
சம்பந்தர் 55, 313, 444
சம்பு 5
சம்புத்தீவு 126
சம்பீரம் 105
சமர் 546
சயந்தங் குதவமநற் சாந்தன் 330
சயம்பு 514
சயலையூர் 92
சயிலத்து...அல்குலாள் 441
சயிலம் 441, 442
சர்க்கரை 410
சர்ப்பம் 145
சரச சல்லாபம் 449
சரஸ்வதி 456
சருமம் 552
சல்லாப மோகம் 515
சல்லாபம் 440, 449, 575
சல்லி 202
சவாது 252
சற்பகிழல் 586
சற்புருடர் 463
சன்னிதி 563
சனம் 619
சனி 172
சனிப்பகை நோய் காதிற்றேன் 172

சா

சாட்சாத் தகோரணமம் 360, 361
சாந்தன் 330, 441
சாந்திமுனி 28
சாநு 394
சாபம் 488
சாமந்தி 99
சாமரை 202
சாலி 600
சாமளம் 305, 408
சாவகர் 246
சான்மலி 110

சி

சிகரம் 204
சிகன் 317
சிகாமணி நாதன் 22
சிங்கபுரி 25, 88
சிங்கபுரி நாதர் 25
சிங்கம் 148
சிங்கவணை 148

சிங்காசனம் 65
சிட்டர் 52
சித்திநகர் 25, 416
சித்தரசம் 40
சித்தன் 2
சித்திநகர்ச் செல்வன் 416
சித்ரகூடம் 203
சித்திரத்தின் போதிகை 199
சித்திரத்தின் பல்லக்கு 194
சித்திரம் 188
சித்திரமா மண்டபம் 188-189
சித்திரை 130, 156
சித்திரை நற்பூசை 156
சித்திரை மண்டபம் 156
சிந்தாமணி 328, 422, 590-591
சினநாதன் 469
சியோதனன் 546
சிரீகொண்டை 438
சிரோகணி 123
சிலம்பு 270, 280, 292, 336, 359, 396, 589
சிவம் 598
சிற்றடிசில் 276
சிற்றுடை 280
சிற்றில் 276
சிறந்தோர் தொழும் சீர்க்கழலோன் 320
சிறிய சண்பகம் 99
சிறுதொட்டில் 282
சின்னம் 216
சினகஞ்சி 13
சினகஞ்சி சேர்கச்சி 13
சினகிரி 55, 433
சின தர்ம சக்கரத்தன் தெரிசனத்த ஞானன் 6
சினம் 417
சினவரன் 8
சினர் 166
சினன் 285, 508, 529, 536,
சினேந்திரன் 413

சீ

சீயவணை 478
சீர் 506
சீரசாளும் செயல் மடந்தை 369
சீர்நாதர் 13
சீர்பத்தான் 183
சீரரசு 468
சீரியத்தின் செல்வச் சிறப்புடையன் 7
சீலதரன் 62
சீலத்தவம் 598

சு

சுக்கிலத்தியானம் 140
சுகந்தப் பன்னீர் 211
சுகந்தம் 211,212
சுகந்த மன்றம் 358
சுகந்த மாருதம் 212
சுகோடலன்யாழ் வீணை 454
சுட்டி 277
சுண்ணம் 259, 366
சுணங்கு 447
சுதமான கற்பம் 218
சுபரஞ்சிதக் கொடுங்கை 260
சுபேசன் 213
சுமடன் எனும் கூற்று 323-324
சுரர் 178, 233
சுரனசுரன் 34
சுருதி 533, 561
சுருதிமொழி 561
சுருதிமொழி நூல் 561
சுருதியவதி 52
சுரும்பு 358
சுரேசன் 123
சுணை 349, 431, 432

சூ

சூட்சி 360
சூடகம் 270
சூடாமணிக் கலசம் 204
சூடாமணி 204
சூது 491
சூலம் 553

### செ

செகப்ரசித்தன் 583
செகம் 4, 514, 583
செகமூன்று 4
செகமூன்றுடைய திகழ் தேசன் 4
செங்கழுநீர் 100, 267
செங்காந்தள் 383, 495
செங்கெத்தி 99
செங்கோல் 357, 611
செஞ்சி நகர் 87
செஞ்சொல் புகழான
பரமன் 364-365
செஞ்சொலாம்....
பணித்திட்டோன் 333
செண்டு 56
செண்பகப்பூ 430
செண்பகப்பூ நாசி 430
செண்பகம் 99
செந்தாமரை 100, 445
செந்தாமரைத் தாளாள் 445
செப்பு 493
செம்பஞ்சு 397
செம்பஞ்சூட்டு மெல்லடியாள் 397
செம்பரத்தை 103
செம்பூவிருட்சம் 132
செம்பொற்குன்றுழ்வார் 14
செயகோடணே 196
செயன் 508
செல்வக்களிப்பு 280
செல்வச் சிறப்புடையன் 7
செல்வம் 598
செல்வன் 130, 416, 556
செவ்வடியாள் 539
செவ்வந்தி 99
செவ்வாய் 169, 288, 289
செவ்வா யிதழுடையோன் 169
செவ்வியள் 451
செவ்விளநீர் ஒத்த
செழுமுலேயாள் 438
செவி 169, 533
செற்றம் முதலகன்ற
செல்வன் 556
சென்மாபிடேகத்தன் 326
சென்மாபிஷேகத்தன் 147
செனம் 612

### சே

சேடி 539
சேணுடர் 336
சேந்தமங்கலம் 93
சேர்ந்துறையும் நன்னெஞ்சின்
ஆர்வத்தான் 183
சேரன் 155
சேலே 392

### சொ

சொர்ணகும்பம் 154
சொர்ணம் 594
சொல்லால் நிறைந்த
மிகுப்பொருள் 619
சொல்லுங்குயில் 398

### சோ

சோதமீசானச் சுதமான
கற்பம் 218
சோதி 131, 594
சோதிடம் 81, 217
சோதிடரைவர் 217
சோதிமணி 131, 328
சோதி மணிப்ரபையான் 131
சோதி மருபூதிச் சுடர் 512
சோதியொரு மூன்றிலெழு
சோதி 131
சோதியொரு மூன்று 131
சோபிதம் 488
சோழன் 155

### சௌ

சௌந்தரம் 449
சௌபாக்கிய போக....
இந்த்ராணி எனுந்தையல் 449
சௌபாக்கியம் 449

### ஞா

ஞாலங் 15,597
ஞாலம்தனில் விளங்கும்
நாயகர் 15

ஞானக்கடல் 242
ஞானத்தன் 330
ஞானமெனும் கொழுந்து 332
ஞானமெனுந் தேசம் 414
ஞானன் 184

த

தக்கபொருளாறு 11
தக்கபொருளாறு உரைத்த தன்மையான் 11
தச்சாம்பாடி 89
தச்சூர் 92
தட்டொலி 226
தடங்கண்ணள் 368
தண்டு 394
தணிவிலா இன்பம் 367
தத்துவங்கள் 129
தத்துவங்கள் ஓதுந் தகைமையான் 129
தத்துவத்தின் வித்து 593
தத்தை 80, 289, 408
தத்தை குலத்தரசு 408
தபசு 572
தமமே துருவம் 415
தமிழ்ப் பாவலர்கள் 35-36
தமிழோர் 31, 445, 507
தயா 598
தயாபரன் 165
தயாளன் 29, 362
தர்மதேசிகன் 59
தரங்கப் புருவத்தாள் 429
தரங்கப் புனைகடல் 601
தரங்கம் 429, 601
தரணர்கோன் 581
தரணன் 314
தரணி 111
தரளநகை 496
தரளம் 48, 496
தராசின் தட்டு 395
தராசு 395
தருக்குருவு 364
தருமக்கடலான் 29
தர்மதேவி 66
தவக்கடல் 362
தவத்தோர் 340
தவம் 411
தவயோகம் 161
தவளக்குடை 229
தவளம் 229, 496
தவன் 496
தற்புருடன் 463
தனம் 596
தனிமை 591
தனுசு 152

தா

தாசை 87
தாண்டமண்டம் 322
தாதி 268
தாமரை 96, 102, 271, 320
தாய் 598
தாயர் 350
தால் 282
தாலம் 110
தாழை 116
தாள் 366, 445, 464
தானவர் 171

தி

திகையம்பரவன் 163
திங்கள் 168, 296, 343, 611
திங்கள் நிகர் முக்குடை 296
திங்கள் மும்மாரி 611
தித்திமிக வீணை 227
திந்த்ருணி 111
திரு 424
திருக்கல்யாணம் ஐந்து 316
திருக்குழசை 87
திருஞானம் 473
திருநாள் நடந்தவிழா 315
திருப்பதத்தாள் 405
திருப்பரம்பை 88
திருப்பருத்திக்குன்று 14
திருமுக்குடை 472
திருமூர்த்தி 124, 466

திருமூன்றுலகீசன் 582
திருமேற் றிசையான் 533
திருவாதிரை 124
திருவாதிரைக் கடலான் 124
திருவெம்பாவை 292-293
திருவோணப்புள்....திண் கொடி 138
திருவோணம் 138
திலதம் 253, 373, 531
திலப்பமுதற் கற்ருேர்கள் தெய்வம் 331
திலோத்தமை 545
திறக்கோல் 91
திறவோர் 32

தீ

தீட்சாகல்யாணம் 360
தீபம் 193
தீபமணி 23
தீபமணிகள் 193
தீபை 93
தீர்க்கன் 359
தீர்த்தகரன் 39
தீர்த்தவந்தனை 538
தீர்த்தன் 122, 157, 530
தீராவினை 563
தீவம் 312
தீவு 53

து

துகிற்கொடிகள் 269
துசக்கொடிகள் 231
துடியிடை 609
துடை 442
துதித்தமணி 329
துதிபாடல் 407
தும்பி 113
துரகம் 415
துரும்பு 475
துருவதனம் 357
துலை 150
துறவறம் 360, 411
துன்பமறச் சேதிக்குந் தொல் தேவராசன் 418
துன்பம் 418

தூ

தூசு 547
தூபக்கடம் 208
தூபக்குடம் 193
தூய்மைபுகழ் வாகன் 415

தெ

தெய்வ வணங்கு 447
தெய்வம் 331, 575
தெரிவை 424, 482
தென்பருத்திக் குன்று 60
தென்மலை 439
தென்றல் 424

தே

தேங்கு 105
தேசம் 414
தேசன் 4
தேமா 109, 116
தேர் 120, 205, 337, 468, 481, 510, 524
தேர்ந்தோன் 124
தேரரசு 468
தேரீசர் 521
தேவதரு 109
தேவதாரு 161
தேவமணி 329
தேவர் 123, 296, 407, 412
தேவர் பெருமானர் 296
தேவராச வல்லபர் 23
தேவராசன் 418
தேவன் 241, 518
தேவாதிதேவமா தேவமணி 329
தேவாதிதேவரிஷி 329
தேவாதிதேவர் 329
தேவாதிதேவரிஷி ..துதித்த மணி 329
தேவாதிதேவன் 1,469
தேவியர் 236
தேன் 351, 506
தேன்மொழியாள் 410
தேனு 599
தேனுன்கையின் வாழ்வல்லி 484

### தை

தை 165
தையல் 449

### தொ

தொங்கல் 391
தொடை 174, 394
தொண்டைக் கனிவாய் 380
தொண்டைத் துவர்வாய் 433
தொண்டர்...மஞபரணியாய் அமர்ந்த வாமன் 121
தொண்டை வளநாடு 86

### தோ

தோகை 78, 398
தோடு 377
தோணி 395
தோத்திரங்கள் 421
தோரணம் 233
தோழி 334
தோள் 382, 436

### ந

நகை 496
நங்கை 357, 495
நச்சரவின் கீழலுறை நாயகர் 16
நச்சரவின் மாணிக்கம் 198
நச்சரவு 198
நடை 455, 484
நண்ணுயமணி 328
நந்தியாவட்டம் 101
நயம் ஏழு 318
நயனம் 431
நரகெசமேளம் 226
நரம்பினிசை 454
நன்ஞானத்தன் 330
நன்ஞானன் 184
நன்மரகத......விபூதி 484-485
நவக்கிரக வேத்து 518
நவநிதி 605
நவமாணிக்கம் 187
நவரத்தினம் 194, 232, 586
நவரி 226
நளினம் 175
நளினன் 517
நற்கமல மீதுறையும் நாதன் 433
நற்காட்சியான் 9
நற்குணன் 516
நற்கேவலன் 180
நற்காந்தன் 330, 463
நற்சாமரை 202
நற்சிந்தனை 584
நற்பொறை 414
நற்றவர் சிந்தாமணி 328
நற்றவன் 80
நறுங்கொண்டை கா. 1, 2: 94, 119, 427, 507, 618
நறுங்கொண்டையான் 184
நன்றிப் பேரின்பம் 332
நன்ஞானம் 134
நன்பு 578
நன்மங்கலம் 154
நன்னலம் 96
நன்னெஞ்சின் அணி 591

### நா

நாகசரம் 224
நாகத்து அணிநிழலோன் 432
நாகம் 33, 111, 432, 441
நாகமடவார் 616
நாகமல்லி 99
நாகம் மிகுமலை 33
நாகர்தலமின் 399
நாசி 430
நாட்யம் 237
நாடு 612
நாதபரம் 592-593
நாதன் 80, 138, 180, 319, 433, 518
நாபி 173
நாபிவனசன் 173
நாமமுயர் போதிமணி 326-327
நாயகர் 15, 16
நாயகன் 120
நாயறு 168

நாரங்கம் 104
நாரீசன் 548
நால்வகைத் தேவர் 245
நாவல் 104
நாவலர்கள் 146
நாவின் கிழத்தி 350
நாவு 534
நாற்றிசை 509

நி

நிகண்டு 83
நிகரிலான் 338
நித்த கலியாணன் 3
நித்தன் 2, 137, 465
நிதி 353
நிம்பம் 108
நிரஞ்சனன் 243
நிராயுதன் 242
நிருதி 210
நிரோப நிருபர் 123
நிலம் 447, 452
நிலமடவார் 616
நிலாவெயிலாய் 240
நிலைக்கண்ணாடி 253-254
நின்மலன் 3,242
நின்றுமன் 3

நீ

நீடாரொளிபரவ நீளுஞ்சிகரம் 204
நீடுங்கிரிமேல் உறைந்த பிரான் 620
நீண்ட புகழான் 338
நீதன் 123
நீதியான் 240
நீர்மகள் 451
நீர்ச்சுழி 388
நீர்மடவார் 616
நீலம் 421
நீலமணி 15, 251, 386
நீல மணியொளியும் நேரல்லா நேமீசர் 15
நீள்பலி 210
நீறு 559

நு

நுசுப்பு 350
நுதல் 337, 374, 530, 548

நூ

நூன்மொழி 410

நெ

நெஞ்சு 591
நெடுந்தேர் 481
நெடுமால் 595
நெய் 410

நே

நேமி சினநாதர் 26
நேமீசர் 15
நேர் 506

நோ

நோக்கு 452
நோய் 475

ப

பகவதி 67, 76
பகைபிணி பாவம் பழியும் இலாதோன் 4
பங்கயத் தாள் நூ. ப. 2
பங்குனி 167
பங்குனிகள் 167
பச்சை 95, 194
பச்சை மரகதம் 4
பச்சைமலை 591
பச்சை ரத்னம் 16
பச்சை ரத்தினம் நிறைந்த பாரீசுவநாதர் 16
பச்சை வனமாலை 201
பசுங்கிளி 398
பசும்பொன்மணி உத்தரம் 256
பஞ்சாச்சரியன் 364
பஞ்சமித்தர் 600
பஞ்சவாத்தியம் 179
பஞ்சரத்தின வன்னம் 501
பட்டுடையார் 249
பட்டுக் கச்சு 493
பட்டுக்குச்சு 195
படிகள் 197
படை 472
படைவாளும் இல்லான் 472
பண்ணரசு 468
பண்ணவன் 142, 593

பணநேரல்குல் 390
பணப்பந்தல் 564
பணம் 390, 421
பணிமிழலோய் 243
பணித்திட்டோன் 333
பணை 362
பத்தியுடன் சம்பந்தர்...விழி 313
பத்தும்பதியம் 313
பத்மராகம் 18, 200
பத்மராகம் போன்ற பதுமப் பிரபுதேவர் 18
பதக்கம் 40,65
பதம் 571
பதாகை 222
பதாம்புயம் 567
பதினெண்பாடயன் 181
பதினறுமே படைத்த சீர்பெற்ற வாயிரவர் 220
பதுமப் பிரபுதேவர் 18
பதுமம் 255
பதுமராகம் 203
பதுமை 203
பந்து 255, 266, 355, 359
பமாணம் 471
பரஞ்சுடர் 592
பரஞ்சோதி 131, 243
பரணி 121
பரதம் 126
பரமன் 263, 365
பரமன் உலா 263
பரமானந்தம் 483-484
பரமானந்த வெள்ளம் 483-484
பரவுவினை மாற்றி வருவாய் 243-244
பரவை 393
பரவையுலகம் 393
பரன் 480, 508
பராபரம் 593
பராபரன் 505, 521
பரிபுரங்கள் 341
பருதி 561
பருவம் 369, 482, 617
பல்லக்கு 194, 196
பல்லக்குச் சேவை 196
பலவளையாள் 382
பலா 104, 116
பலி 210
பவ்யசெனம் 469
பவக்கடல் 362
பவக்கடலை...தவக்கடலான தயாளன் 362
பவணர் 215
பவரோகப்பாகடவன் 430
பவரோகம் 430
பவழத்தூண் 256
பவழம் 199, 351
பவழப் பூங்கொடி 351
பவழமணை 256
பவளக்குடை 229
பவளக் கொடி இடை 496
பவளக்கோடு 370
பவளக்கோட்டின் நலமுடையாள் 370
பவளம் 496
பவனி 365
பவுத்தர் 71, 72
பழக்கோவை வாய்க்கிளி 406
பள்ளி 547
பளிங்கு 308, 500
பளிங்கு நிழற்பீடம் 308
பற்றறப்பற்றற்ற பராபரன் 505
பற்றிலான் 465
பற்று புகழான் 465
பறம்பாபுரி 71
பன்னிருவர் 218
பன்னீர் 211
பனக நிழற் பாரிசநாதன் 152
பனகம் 152

பா

பாகடவன் 430
பாகின்மொழி 496
பாகு 345
பாடகம் 396
பாடகி 528
பாடல் 407, 570, 614
பாண்டுசிலை 322
பாண்டுசிலை மீது பதிந்தகழல் 322
பாதமலர் 537

பாதம் 423, 523, 537, 592
பாதாரவிந்தா 606-607
பாதிரி 102
பாந்தள் நீழலுறை போதன் 30
பாமாலை 82
பார் 451, 472, 524
பார் ஏழ் 472
பார்த்திபன் 364
பார்மொழி 41
பாரடம் 223
பாரதி 41
பாரரசு 468
பாரணை 363
பாரிசாதம் 103
பாரீசநாதப் பராபரன் 521
பாரீசநாதன் 152, 521
பாரீசர் 521
பாரீசுவநாதர் 16
பால் 281, 599
பாலியன் முனை 532
பாவை 43, 266, 279, 281, 282, 291, 300, 307, 308, 343, 374, 500
பாளை 74, 202
பானம் 484
பாஷை 312

பி

பிசாசு 550
பிண்டம் 210
பிண்டி 138, 315, 422, 606
பிண்டிக்கோமான் 422
பிண்டி நிழற் பூரணன் 606
பிண்டிமகேசன் 138
பிண்டியான் 507
பிணி 475
பித்தர் 554
பித்தன் 550
பிரமதேவர் 56
பிரமன் 543
பிரான் 439, 470
பிளவு 259
பிறவிச் சேற்றைக்.... சேர்த்த கழல் 324
பிறவிச் சேறு 324
பிறவி வெம்பிணி 331
பிறவி வெம்பிணிக்கான மருந்து 331
பிறை 374, 428
பிறைநுதல் 374
பிறைநெற்றியாள் 428

பீ

பீடம் 308, 453

பு

புகழான் 465
புங்கவன் 119, 236, 614
புங்கு 108
புட்கலை 57
புண்டரிகப் பொற்கமலம் 201
புதன் 170
புமான் 471
புயம் 172
புரசனம் 246
புரட்டாசியான் 161
புரத்தரசன் 363
புரிசை 405, 453, 540
புருவச்சிலை 374
புருவம் 168, 301, 347, 374, 429
புல் 264
புலவர் 333, 509, 613
புவனி 449
புழுகு 252
புள் 461
புள்ளினம் 602
புளிமா 109
புற்பற்று 474
புறவடி 397
புரு 112
புன்னை 98
புனர்பூசம் 125
புனிதன் 1,619

பூ

பூங்கவரி 203
பூங்கா 97, 103, 114
பூங்காவனம் 73

பூங்கொடி 351
பூச்சக்ர வண்கவிகை 192
பூசம் 126
பூஞ்சுனை 73
பூண்டி 92
பூணாரம் 336
பூணிலான் 464
பூதப்பசாசு 58
பூதம் 80
பூதேவி 190
பூந்தடம் 348
பூந்தாரி 502
பூம்பட்டு 232, 249
பூம்பந்து 255
பூம்பாவை 266
பூம்பொகுட்டு 419
பூமகள் 400
பூமாரி 128
பூமாலை 201, 238
பூமாலை பூணும்பொருள் 238
பூரட்டாதி 141
பூரணகும்பம் 492
பூரணன் 119, 606
பூரணை 57
பூரத்தன் 128
பூரம் 128
பூராட கற்பம் 136
பூராடம் 136
பூரிகை 224
பூவணை 287
பூவலரும் பிண்டி 241
பூவை 112, 407, 534
பூவைகள் 407
பூவையர்கள் 255

**பெ**

பெண் 522, 572
பெண் பெருமாள் 352
பெதும்பையாள் 300
பெம்மான் 471
பெரியோர் 138
பெருந்தகம் 597
பெருமுரசு 223

**பே**

பேதை 272, 617
பேரி 179, 223
பேரிளம் பெண் 525, 617
பேரின்பம் 332
பேருலகின் நாதன் 179-180
பேரூர் 90
பேறுடைய மூன்றுலகம் 10

**பை**

பைங்கிளி 265, 283
பைங்கிளிச் சொல் 344
பைம்பொற் சிறுதொட்டில் 282
பைம்பொன் மணி உத்தரம் 200

**பொ**

பொகுட்டு 297, 419
பொங்குமணி மாடம் 587
பொங்குமுலை 340
பொய்கை 73, 429
பொருப்பு 434, 436
பொருமதனை வென்ற புனிதன் 1
பொழில் 443
பொற்கமலம் 201
பொற்கழை 436
பொற்கிண்கிணி 336
பொற்குன்றம் 573
பொற்கூடு 406
பொற்கொம்பு 351
பொற்ரேகை 398
பொற்பணம் 431
பொற்பணமாம் ஐந்தலை நன்னாகம் 431-432
பொற்பதுமை 203
பொற்றேர் 524, 586
பொற்றொடி 452
பொற்றோடு 377
பொற்றோடும் கொப்பும்... காதின் குழையாள் 377
பொறை 414, 452
பொன் 186, 576
பொன்மணிக் குச்சி 373
பொன்மாலை 201
பொன்முரசு 585
பொன்னங் கண்ணிக் கொடி 352

பொன்னாலவட்டம் 192
பொன்னிழைத்த பவளக் குடை 229
பொன்னின் கலசம் 249
பொன்னுலகு 571
பொன்னூசல் 257
பொன்னூர் 88
பொன்னெயில் 327, 557
பொன்னெயிலன் 119
பொன்னெயிலான் 182

போ

போகம் 449
போதன் 30
போதாதிநாதன் 319
போதி 127
போதிகை 199
போதிமணி 327
போதில் வருவான் 182
போற்றி 238-244

பௌ

பௌஞ்சிமுகன் 544

ம

மகத்தன் 127
மகம் 127
மகரமாங்தோரணம் 233
மகமேரு 564
மகரக்குழை 153
மகரம் 152, 153, 233
மகராயன் 519
மகாமலை 22
மகாலட்சுமி 448
மகிழ், மகிழம் 98, 100
மகுடம் 567
மங்கலம் 298
மங்கை 339, 357, 457, 495
மசானம் 550
மஞ்சை 87
மஞ்சைக் குளத்தூர் 87
மடங்கல் 558
மடங்கலாசனம் 558
மடந்தை 368, 369, 402
மடமாது 409
மடமான் 487
மடல் 403
மடலெழுதி நிற்போர் 403
மடவார் வலை கடந்த மால் 470
மடவார் 247, 470, 617
மண்டபங்கள் 503
மண்டபம் 189, 503
மண்டலம் 498, 507
மண்டலமகாபுருடன் 83
மண்ணவர் 459, 581
மண்ணவர் கோன் 581
மணக்காக் கழை முத்தம் 309
மணப்பந்தல் 564
மணி 186, 195, 277, 278, 353, 367, 381, 383, 386, 451, 453, 492, 576
மணி அணிசு 195
மணிக்காசம் 576
மணிக்கழல் 278
மணிக்கழலாடும் மலரின் கொடி 278
மணிக்குழை 432
மணிகள் 193
மணிகிரணம் 420
மணிச்சரம் 544
மணிப்ரபை 131
மணிமகுடம் 567
மணிமலர்கள் 367
மணி மாடம் 587
மணிமாலை 381
மணி முத்தம் 189
மணிமுத்த முக்குடை 189
மணியணிசு 195
மணியாழ் 344
மணிவரை 206
மத்தகம் 390
மத்திபதேவன் 518
மதன் 1, 460, 473, 566
மதனை வென்ற புனிதன் 1
மதனை வென்றோன் 566
மதி 231, 304, 346, 353, 378, 574, 595
மதிக்குடையான் 166
மதிநுதல் 277

மதியொத்த குடையன் 464-465
மதிள் 503
மதுகம் 106
மதுர மொழி 528
மந்தரம் 527
மந்தாரம் 100
மயிர்ப்பின்னல் 275
மயில் 269, 286, 353, 356, 372, 488
மயிற்கொன்றை 102
மயிற்ரேகை 308
மர்க்கடம் 443
மரக்குண்ணம் 87
மரகதமாமணி 263
மரகத மெய்யொளியாள் 485
மரம் 478
மருக்கொழுந்து 101
மருங்கை 380
மருந்து 33, 105, 331
மருந்து மாமலை 33
மருபூதி 512
மருபூதிச் சுடர் 512
மல்லி 98, 421
மலர் 422, 464, 608, 618
மலர்க்கா 403
மலர்க்குழலாள் 541
மலர்ச்சேடை 530
மலர்த்தாள் 366, 464
மலர்த்தாள் நாணிப் பூணிலான் 464
மலர்ப்பிண்டி 422
மலர்ப்பிண்டியான் 608
மலர்ப்பொழில் 115
மலர்மாரி 618
மலரடி 367, 402
மலராள் 118
மலை 435, 443
மலை குனிய நின்ற பிரான் 439
மலைகுனிய வென்ற முலையாள் 439
மலை நாதர் 27
மலையருவி 443
மழலை 286, 303, 372
மழலைக் கிளிச்சொல் 372
மழலைவாய் கொஞ்சுங் குயில் 286
மழு 553
மழை 323
மன்னர் 220, 246
மன்னு புகழ் 244
மனக்கவலை 568
மனமிடி 605
மனுபரணி 121
மனோகர மஞ்சரி 485

மா

மா 104
மாகணங்கள் 221
மாசாத்தன் 59
மாசு 166
மாசு மறுவில்லா மதிக்குடையான் 166
மாசிலா மேனியான் 166
மாசினர் 166
மாடக வீணை 528
மாடநிரை 270
மாடம் 268
மாணிக்கம் 95, 187, 198, 213, 260, 290
மாணிக்கமிட்டிழைத்த மேகலை 187
மாதருணதேவி 153
மாதவம் 403
மாதவர் 137
மாதவன் 158
மாதி மணுளன் 466
மாது 399, 409
மாதுளுங்கம் 109
மாதுளை 98
மாதேவதேவர் 190
மாமலராள் 118
மாமாலை 201
மாமுதலூர் 87
மாமுனிவர் 166, 221
மாமுனிவர்கோன் 581
மாமேரு 205
மார்கழி 164
மார்பதக்கம் 40
மார்பாள் 387
மார்பு 447, 546
மாரர் குற்றம் 601

மாரன் 284, 357, 369, 492
மாரி 49, 611
மாருதம் 212
மால் 545
மால்வரை 245
மாலை 551
மாவிசுவதேவி 294
மான் 286, 289, 307, 343, 351, 365, 376, 470, 487, 498, 553, 608
மான்கன்று 289
மான்றரித்தான் 553
மானம் 478
மானவருந்தானவரும் 178
மானின் விழி 487

மி

மிக்க பற்றிலான் 465
மிதுன தேசத்தன் 146
மிதுனம் 146
மிருகசீரிடம் 124
மிருகசீரிட ராசன் 124
மின் 249, 458
மின்னரசு 351, 529
மின்னுக்கொடி 236, 249
மின்னுக் கொடியிடை 249
மின்னு மணிமாலை 381
மின்னொளி 186

மீ

மீனக்கொடியுடைய மீனவன் 155
மீனவன் 155

மு

முக்கணன் 473
முக்கனி 258, 370
முக்கனி மொழியாள் 370
முக்குடை 1, 17, 130, 189, 296
முக்குடைக்கீழ்ச் செல்வன் 130
முக்குடையன் 562
முக்குடையாய் 472
முகத்திற் றிலதம் 373
முகம் 168, 346, 373
முகில் 373
முகில் நேர் அளகம் 373
முடி 492, 527
முத்தமிழ் 613
முத்தன் 135, 330, 497, 583
முத்தாரம் 250
முத்தி 333, 416
முத்தியெனும் கன்னி 416
முத்திக்கன்னி 149
முத்தி நாதர் 343
முத்து 186, 194, 199, 230, 275, 310, 391
முத்துக்குடை 230
முத்துச் சுமந்த மணி 328
முத்துமாலை 48, 284
முதல் நூல் 54
முதற்பொருள் 479
முதுமரம் 110
முப்பழம் 410
முப்புரம் 549
முப்பொருள் 542
மும்மாரி 611
மும்முனிவர் 20
முரசு 223
முருக்கம்பூ 392
முல்லை 100, 380, 421, 434
முல்லை முகையன்ன முறுவலாள் 434
முலை 249, 340, 385, 426, 438, 439, 527, 609
முலைக்கச்சு 273
முழந்தாள் 175, 395
முழவம் 227
முழுதுணர்ந்த மூர்த்தி 497
முழுநீலம் 421
முழுப்பவழக்கால் 199
முழுமதி 604
முளரி 421
முறுவல் 434
முனிகிரி 437
முனிவர் 536, 615
முனிவர் அடைகுகை 97
முனிவோர் 94

மூ

மூதூர் 118
மூலம் 135

மூவா முதலான பூவலரும் பிண்டிப்பொருள் 241
மூவுலகிற் சோதிமணி 328
மூவுலகு 583, 594
மூவுலகுமே யுணர்ந்த சித்தன் 583
மூவொளியாய் 241
மூன்றுலகம் பெற்றளித்தோன் 10
மூன்றுலகீசன் 582
மூன்றுலகு 10, 582, நூ. ப. 1
மூன்றுலகுடையான் நூ. ப. 1

மெ

மெத்தை 260
மெய் 460

மே

மேகலை 187, 249, 393, 589
மேடனம் 144
மேலாம் பதமருள்வோன் 429
மேளம் 226
மேற்பலகை 198
மேற்றிசையின் நடந்தான் 509-510
மேற்றிசையின் நின்றான் 509-510
மேனி 290, 300

மை

மை 253, 378, 489
மைந்தன் 456

மொ

மொய்கரன் 473
மொழி 455, 487

மோ

மோகத்தன் 416
மோகம் 548, 554, 555, 572, 575
மோதிரம் 384

மௌ

மௌவல் 103

ய

யமன் 209

யா

யாழ் 227, 344
யானை நடை 487

யூ

யூகத்தின் கணம் 214
யூகம் 214

ர

ரசத்தின் தேன் 483
ரசம் 345, 484
ரத்தினத்ரையம் 160
ரத்தின பீடம் 501
ரத்தினம் 95, 199, 391
ரதம் 334
ரதி 262
ரம்பை 400

ரூ

ரூபச் சலாபமயில் 488

ரே

ரேவதி 143

லீ

லீலைச் செருக்கினர் 261

லௌ

லௌகாந்தியர் 360

வ

வங்காரம் 88
வச்சிரம் 198
வச்சிரநாபி 517
வசந்தம் 610
வசனமொழிக் கல்வி 526
வஞ்சி 489
வட்டக் கண்ணாடி 378
வட்டக் கண்ணாடி யொத்த கபோலத்தாள் 378
வட்டப்பரியோன் 59
வட்டம் 385
வட்டமதி 252
வட்டிகை 502
வடக்குமலை தன்னிலுறைமாது 399
வடபாழியான் 11-12
வடம் 387
வடிவு 504
வண்டமிழோர் 31, 445, 507
வண்டினம் 602
வண்டு 113, 342

வண்புலவர் 509
வண்மைப் பதாகையாம்
 வைசயந்தி 222
வணகிளி 489
வதனம் 301
வந்தனை 538
வய்யம் 73
வயதாள் 525
வயது 482
வயல் 118
வயலை 90
வயிடூரியம் 95, 198
வயிரம் 95
வயிறு 388
வரங்கோயிலான் 19
வரஞ்சோதி 131
வரத்தார் 568
வரதன் 466
வரபிரமதேவர் 56
வரமளிக்கும் தாயே 598
வரால் 115, 444
வருணகுமாரன் 211
வல்லிக்கொடி 398
வலம்புரி 435
வலம்புரியும்...கோமான் 439-440
வலை 470
வவச்சிரக் கோட்டுக்கிறை 513
வள்ளியம் 39
வள்ளை 169, 432
வள்ளை மணிக்குழையாள் 432
வளத்தி 88
வளை 274, 359, 382
வன்னப்பசுங்கிளி 248
வன்னம் 311
வனசமுகிழ் 117, 490
வனமாலை 490
வனமுலையாள் 371

வா

வாக்கீசன் 582
வாக்கொன்று அதிசயமாய்
 ஆன பதினெண் பாடயன் 181
வாகன் 415
வாகை 105
வாசுகி 547
வாணி 48
வாத்தியங்கள் 509
வாமன் 121
வாமனன் 326
வாய் 168, 288, 289, 380, 433, 577
வாய்மை 415
வாய்மை யெனும் பலத்தான் 415
வாயில் 503
வாயிற்படி 197
வாயுகுமாரன் 212
வாரணம் 57, 455, 551
வாரணமேலீசன் 455
வாரணவாசி நகர் 294
வாரிதி 41, 179
வாவி 115
வாழ்நிதி நூ. ப. 3
வாழ்முகம் 346
வாழை 111, 116, 174, 396
வாழைத்தண்டு 174
வாழைப்பதி 91
வாள் 417, 472
வான் 487, 506, 516
வானச் சுதத்தின் வருமரன் 516
வானரங்கள் 113
வானவர்கள் 178
வானவர்கோன் 181, 234, 326
வானிடு சாபம் 487-488
வானுலகம் 346
வானுலகின் மாக்கொண்டல்
 போலவருள் புலவர் 332-333
வானுலகு 332
வானேமுதம் 596

வி

விக்கின விநாயகன் 11
விச்சாதரர் 154
விசாகத் தெழில் நாள்
 வந்துதித்தோன் 132
விசாகம் 132
விசும்பு 436
விசுவசேந மன்னன் 127

விசுவ தேவி 294
விஞ்சையர் 219, 245
விடயம் 145
விண்ணரசு 468
விண்ணவர் 459, 581
விண்ணவர்கள் 188
விண்ணவர்கோன் 581
விண்ணவன் 295
விண்ணவனோர் விரவிய தத்துவம் 593
வித்தகர் 583
வித்தகன் 130
வித்தகனும் வாமனன் 325-326
வித்தகி 77
வித்து 593
வித்தை நூ. ப. 3
விதி 180, 474, 591
விதேகத்துப் பெம்மானன் 136
விதேகம் 136
விநாயகன் 11
விபூதி 485
விமலன் 11, 145
வியந்தரர்கள் 216
வியந்தன் 330
வியாழம் 171
விரக அலங்காரி 485
விரதசீல மூல குணத்தர் 50-51
விரல் 397, 559
விரலாழி 397
விரிசடை 552
விருட்சி 101
விருதூர் 89
விருஷப சேனதியர் 50
வில்லாள் மதன் 566
வில்லை 107
விலாமிச்சி 101
விழா வீதி 315
விழி 253, 305, 347
விழிமை 253
விழுக்கம் 90
விளக்கு 38, 213
விளந்தை 92
விளாங்கனி 476
விறுட்சிமலர் 151
வினை மாற்றி வருவான் 243-244
வினையம் ஆறு 9
வினையம் ஆறும் அகன்ற நற்காட்சியான் 9
வினை வென்ற நாயகன் 120

வீ

வீடுடையான் 159
வீடை நகர் 90
வீடைப்பதி 78
வீண்டாக் கமடன்விடு கல்மழை 322-323
வீணை 227, 382, 437, 454, 460, 528
வீணை முன்கை 437
வீதராகன் 11
வீதி 334, 524, 588
வீரன் 63, 145, 464
வீரியத்தனுமன் 7
வீரியற்ற சற்புருடர் 462-463
வீரேந்திரன் 83
வீரை 77, 88
வீறுசுகமுடையன் 7

வெ

வெட்டி 101
வெண்கவரி 188
வெண்குணம் 92
வெள்ளம் 423, 484
வெள்ளி 172
வெள்ளிமலை 172, 616
வெள்ளிமலை மடவார் 616
வெள்ளைக்கமலம் 45
வெள்ளைக்குடை 46
வெள்ளைக்கொடி 45
வெள்ளைப் பளிங்கு 46
வெற்பு 428, 430, 431
வெற்றிக் கழல் 325
வெற்றிமணி 328
வெற்றிரதம் 334
வெற்றிலை 259
வென்றி அறவாழி வேந்தன் 318

வே

வேகம் தீர்த்த நாதா 518
வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரன் 464

வேணு 227, 468
வேணுகிரி 438, 468
வேணுகிரியரசு 468
வேணு தண்டம் 172
வேணு நாதம் 227
வேணுமலை 32
வேத்ரகொண்டம் 209
வேதசந்தம் கா. 1
வேதத்தின் பாதமயம் 592
வேத நூல் 81
வேதம் 592
வேதமுரைத்த விதி 180
வேத மொழி 221, 446
வேத விழுப்பொருள் 592
வேதன் 319, 436
வேதாகமம் 46
வேதாதி வேதாதி வேதன் 319
வேய்த்தோள் 382
வேல் 375
வேலூர் 90
வேழம் 390
வேள் 485
வேளை 458

வை

வைசயந்தி 222
வையாசி 157
வைவேல் 375
வைவேல் வரும் விழியாள் 375

# திருநறுங்கொண்டைக் கல்வெட்டுகள்

தென்னார்க்காடு மாவட்டத்தில் சைனர்கள் சிறப்பாகக் கொண்டாடும் திருத்தலம் திருநறுங்கொண்டை. இது சைனர்களின் திவ்ய யாத்திரைத் தலங்களுள் ஒன்று. இங்கே சர்ப்ப நிழலில் முக்குடையின்கீழ் பார்சுவநாதர் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். இவரை அப்பர் என்றும், கனகசினகிரி அப்பர் என்றும், அப்பாண்டார் என்றும், அப்பாண்டைநாதர் என்றும் அழைக்கின்றனர். இத் திருக்கோயிலேயே சந்திரநாதர் திருக்கோயிலும் உள்ளது ; இது கோயிலின் முன்வாயிலை ஒட்டி அமைந்துள்ளது.

இவ்விரு கோயில்களுக்கும் மன்னரும் பிறரும் நிபந்தங்கள் அளித்த செய்திகளும் பிறவும் இங்குப் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுகளால் தெரியவருகின்றன. இவை கி. பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரையிலும் பல காலங்களில் பொறிக்கப்பெற்றனவாகும். தென்னிந்திய சாசனவரிசையில் ஏழாம் தொகுதியில் திருநறுங்கொண்டைச் சாசனங்கள் சில இடம் பெற்றுள்ளன (S. I. I. VII, No 1011-1017. 381 of 1902–385B of 1902), பின்னால் படியெடுக்கப்பெற்ற வேறு சில சாசனங்கள் இன்னும் வெளியிடப்பெறவில்லை (299 of 1939-40 —320 of 1939-40). வெளியிடப்பெறாத சாசனங்களின் படிகளை எனக்குத் தந்துதவினார் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் துறைத் துணைப் பேராசிரியர் டாக்டர் சண்பகலட்சுமி அம்மையார். அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

சந்திரநாதர் திருக்கோயிலைக் கீழைப்பள்ளி என்றும், அப்பாண்டைநாதர் திருக்கோயிலை மேலிற்பள்ளி என்றும் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. இரண்டு பள்ளிகளுக்கும் தனித்தனியாக நிபந்தம் வைத்த செய்திகளும், இரண்டற்கும் சேர்ந்து நிபந்தம் விட்ட செய்திகளும் சாசனங்களில் காணப்படுகின்றன.

'ஸ்ரீ திருநறுங்கொண்டைக் கீழைப்பள்ளிக்கு கீழ்மண்டகமு சதுர்முகத் திருக்கோயிலுஞ் செய்வித்தார்'' (306 of 1939-40)

" மேலிற் பள்ளி '' (S. I. I. Vol. VII. No. 1013)

"இருகழஞ்சுப் பொன் இரண்டு பள்ளிக்கும்'' (307 of 1939-40)

"இரண்டு பள்ளிக்கும் பத்துப் பொன் கொடுத்தார் (308 of 1939-40)

"ஸ்ரீ திருநறுங்கொண்டை இரண்டு பள்ளிக்கும்'' (309 of 1939-40)

மேலும், சந்திரநாதர் 'பாழியிலாழ்வார்' என்றும் குறிக்கப் படுகின்றார். இதற்குத்

" திருநறுங்கொண்டைத் தேவர் அப்பர்க்கும் பாழியிலாழ்வார்க்கும் திருவமுர்துபடிக்கு'' (317 of 1939-40)

எனவரும் சாசனம் சான்றாம்.

இங்குள்ள சாசனங்கள் சோழர், பாண்டியர், விஜயநகர அரசர் காலங்களில் அப் பேரரசர்களாலும் அவர்களுக்குட் பட்ட குறுநிலமன்னர், வீரர் முதலியோராலும் திருக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகளைக் குறிப்பிடுகின்றன. முதல் இராசராசன், முதலாம் இராசேந்தின், முதற்குலோத் துங்க சோழன் ஆகியோர் இக்கோயிலில் நந்தாவிளக் கெரிக்க நிபந்தம்விட்டதுபற்றிச் சில சாசனங்கள் குறிப் பிடுகின்றன. இராசராசனின் சகோதரி குந்தவை தனது பெயரால் 'குந்தவைப் பேரேரி' என்னும் ஒரு பெரிய ஏரியை இங்கு அமைத்தாள். இந்த ஏரிக்கு ஆறையூரைச் சேர்ந்த பெருமாள் என்பவர் நீர்பாய்வதற்கான தூம்பு அமைத்த செய்தியை ஒருச்சாசனப்பாடல் தெரிவிக்கின்றது (325 of 1939 40).

திருநறுங்கொண்டையைக் குறிப்பிடுமிடத்துச் சாச னங்கள் பின்வரும் அடைகளோடு அறிமுகப் படுத்து கின்றன.

"நடுவில் மண்டலத்து திருமுனைப்பாடி நாட்டு குறுக்கைக் கூற் றத்து ஆதனூர்ப்பற்று திருநறுங்கொண்டையில் கோயில் தானத்தாற்கு இப்பற்று நாட்டவரோம். அப்பாண்டார் திருமுன்பே நாங்கள் வைத்த திருநந்தா விளக்கு. (304 of 1939-40)

"ராஜ ராஜ வளநாட்டு திருமுனைப்பாடிக் குன்றத்தூர் நாட்டுத் திருநறுங்கொண்டையில்...'' (310 of 1939-40)

திருநறுங்கொண்டைத் திருக்கோயில் திருப்பணி பல காலங்களில் நடைபெற்று வந்துள்ளது. பின்வரும் சாசனப்பகுதி கோபுரத் திருப்பணி நிறைவேறிய செய்தியைக் குறிப்பிடுகிறது. அது வருமாறு :

> "யுவஸூ பங்குனிமீ 2உ துதியையும் ரேவதி நக்ஷத்திரமும் நாயற்று நாளுள் திருநறுங்கொண்டை அப்பாண்டார் கோபுரம் கல் வேலைமட்டும் பறமசிந தெவசீயர் மேலை தெசம் தீர்த்த வந்தனை பண்ணி யிதுவே நிமந்தம் ஆக கட்டட முகிஞ்சுது தர்மம் சிநநாகள்ளூர் சாத சேர்வை.
>
> (315 of 1939-40)

இச் சாசனத்தால் கோபுரத்தின் கல்வேலை முடிந்த செய்தி தெரியவருகிறது. பரமசிநதேவசீயர் தீர்த்தவந்தனை பண்ணினர் என்பது கோபுர வேலை முடிந்து குடமுழுக் காட்டிய நிகழ்ச்சியைக் குறிப்பதுபோலும்.

மற்றொரு சாசனப் பகுதி,

> " திருநறுங்கொண்டைத் தெற்கில்
> ஸ்ரீ கோயில்த் திருநடை மாளிகை
> செய்தான் பாலையூர் சிங்கனேன் ..
>
> (313 of 1939-40)

என்று உள்ளது. இவற்றால் கோயில் திருப்பணி பற்பல காலங்களில் பல்லோரால் செய்விக்கப்பெற்றமை தெரிய வரும்.

திருநறுங்கொண்டையில் வைகாசித் திங்களில் நடைபெறும் திருவிழாவைப்பற்றியும் ஒரு சாசனம் குறிப்பிடுகிறது. இப்பொழுதும் வைகாசித் திங்களில் சிறப்புத் திருவிழா இத்தலத்தில் நடைபெற்று வருகிறது. இதனைக் குறிக்கும் சாசனப்பகுதி வருமாறு :

> "ராஜ ராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடிக் குன்றத்தூர் நாட்டுத் திருநறுங்கொண்டையில் வைகாசித் திருநாளில் திருவுத்ஸவம் எழுந்தருளும் அருமொழி தேவற்கும் நித்திய கலியாண தேவற்கும் திருப்பள்ளிச் சிவிகைப் புறமாக மலையன் மல்லனை விக்கிரமசோழ மலையமான் இத் திருநறுங்கொண்டையில் குந்தவை ஏரிக்கீழ் உடைப்பின் பாடு திருத்திவிட்ட நிலத்து..." (310 of 1939-40)

வைகாசித் திருவிழாவில் அருமொழி தேவரையும் நித்திய கலியாண தேவரையும் எழுந்தருளுவிக்கும் பல்லக்கிற்கான நிபந்தம் பற்றியது இச் சாசனம். திருநறுங்

கொண்டையில் உள்ள குந்தவை ஏரி ஒரு சமயம் உடைப் பெடுத்துச் சில நிலங்களைப் பாழ்படுத்திவிட அதனைத் திருத்திச் சிவிகைப் புறமாகத் திருக்கோயிலுக்கு மலையன் மல்லனை விக்கிரசோழ மலையமான் நிபந்தம் வைத்தான் என்னும் செய்தியும் இதில் குறிக்கப்பட்டிருத்தல் காண லாம்.

திருநாமத்துக் காணியாகத் திருக்கோயிலுக்கு விட்ட நிலங்களில் முக்குடைத் தாபனம் பண்ணிக்கொள்ளும் படிக்கும் சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

> "நந்தா விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரையும் எரிவதாக சிமுக்குடைத் தாபனம் பண்ணிக்கொள்ளும்படிக்கு கொப் பண்ண உடைய....வாங்கி வித்துக்குடுத்த அளவுக்கு சிமுக் குடைத்தாபனமு........ணிக்கொண்டு சந்திராதித்தவரையும் நடத்திப்போதவும்" (303 of 1939-40)

> "விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரையும் நடத்திப் பொதவும் இ[ன்]...த்துக்குஞ் முக்குடைத்தாபனம் பண்ணிக்கொள்ளும் படிக்கு . உடையார்...வித்துக் ... ஒன்றுக்கு ஸ்ரீ முக்கு[டை]... ....பனமும் பண்ணிக்கொண்டு தாழ்வற நடத்திப்போதவும்..." (304 of 1939-40)

முக்குடைத்தாபனம் பண்ணுதலாவது முக்குடை பொறிக்கப் பெற்ற எல்லைக்கல்லை நாட்டுதலாகும் என்பர்.

கோயில் வாயிலின் மேல்தளத்தில் குணபத்திர முனி வரைத் துதிக்கும் பாடல் ஒன்று காணப்படுகிறது (302 of 1939-40). இதனை அடுத்துவரும் சாசனப்பாடல்களில் முதற்கண் காணலாம். இப் பாடல் பதினொம் நூற்றாண்டு வழங்கிய எழுத்து வடிவில் உள்ளது. குணபத்திரர் தென் னாட்டில் புகழுடன் விளங்கிய சமண முனிவராவர். இவர் திருநறுங்கொண்டையில் சிறந்த ஞானியாய்த் திகழ்ந்தார். வீர சங்கத்தை நிறுவி 'வீர சங்கப் பிரதிஷ்டாசாரியார்' என்னும் பெயரைப் பெற்றார். இவர் சூடாமணி நிகண்டினை ஆக்கித்தந்த வீரைமண்டல புருடரின் குருவுமாவர் (303 of 1939-40). இம் மண்டல புருடரையும் குணபத்திர முனி வரையும் அப்பாண்டை நாதர் உலாவும் குறிப்பிடுகிறது (81-83).

# சாசனப் பாடல்கள்

திருநறுங்கொண்டைச் சாசனங்களுள் சில பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இப்பொழுது கிடைத்துள்ள சாசனங்களிலிருந்து இரண்டு வெண்பாக்களும், இரண்டு கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களும் உள்ளமை தெரிய வருகின்றன. கட்டளைக் கலித்துறைச் செய்யுள் ஒன்றின் ஒரு பகுதி பிற்காலக் கட்டடத்திற்குள் மறைபட்டுப் போனமையால் அறைகுறையாகக் காணப்படுகிறது.

### வெண்பா

வண்டமிழின் பண்பும் வடநூலும் நன்குணர்ந்து
தெண்டிரைசூழ் மண்மீது சீர்பெற்றான் —கொண்டைமலை
வித்தகன ருட்கடல்மி குத்தபுகழ் வெற்பிலிசை
வைத்தகுண பத்திரமுனி வன். (302 of 1939-40)

மாட மதிளாறை மன்னு புகழ்ப்பெருமா
ணீடு நறுங்கொண்டை நெல்விளையப்—பீடார்ந்த
காருக்கு நேராகு மண்கையன் கார்க்கடல்போ
லேரிக்குத் தூம்பமைத்தான் இன்று. (325 of 1939-40)

### கட்டளைக்கலித்றை

வீரன் திருவறம் பேணுமெய்
வீரசங் கத்தவரே
சேருங் கனகச் சினகிரி
யப்பர்க்குத் தெய்வமணங்
காலுந் தெரியற் குலோத்துங்க
சோழன் கொடுத்த நல்லூர்
சேலா ரும்பழ னஞ்செறு
சரந்தைத் தடம்பதியே. (299 of 1939-40)

இயங்குஞ் செயலு மிருக்குஞ்
செயலு மருவினைக்குள்
முயங்குஞ் செயலுந் தவத்தின்
......... ......... .........
......... ......... .........
......... மானந்திலே
தயங்குஞ் சதபத்திர தாளா
......... ............ (305 of 1939-40)

# அப்பாண்டைநாதர் உலாவின் ஏட்டுப் பிரதி

சமண சமயச் சார்பாக அப்பாண்டைநாதர் உலா உள்ளமை தமிழுலகில் கேள்வி வாயிலாய்த் தெரிந்த ஒன்ருயிருந்தது. ஆயினும் இதனை ஆக்கியவர் பெயரோ பிற செய்திகளோ எதுவும் தெரியவில்லை. காரணம் இந்நூலின் ஏட்டுப்பிரதி மிக அருகியிருந்தமையே. ஏனைய சமயத்தார் இந் நூலைப் போற்றினரில்லை; சமண சமயத்தாரிடையே தான் இது பெரிதும் புழக்கத்திலிருந்திருக்க வேண்டும்.

இந் நூலை அச்சிடுதற்குக் கிடைத்த பிரதி தென்ஞர்க் காடு மாவட்டம் மேல் சித்தாமூர் ஜைனமடத்திலிருந்து கண்டெடுக்கப் பெற்றதாகும். சமயச் சார்பான நூல்களை மடங்கள் தொகுத்துள்ளமையால்தான் இதுபோன்ற நூல் களை நாம் இன்று பெறும் வாய்ப்பினைப் பெறுகிருேம். மேல் சித்தாமூர் மடத்திலிருந்து கண்டெடுத்த இச் சுவடியைப் போற்றி இப் பதிப்பிற்கு உதவ முன்வந்த ஜீவபந்து T. S. ஸ்ரீபால் அவர்களுக்குப் பொதுவாகத் தமிழுலகமும் சிறப்பாகச் சமண சமய உலகமும் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

ஓலைச்சுவடியின் முகப்பு ஏட்டின் நடுப்பகுதியிலே முக்குடை சித்திரம் வரைந்து, அதன் கீழாக முக்குடை என்றும் அதன் கீழாக அருகந்தர் என்றும் ஏடெழுதினர் குறிப்பிட்டுள்ளனர். இந்த உலா இலக்கியமும், 'திருவுறையும் முக்குடைக் கீழ் தேவாதி தேவன்' என்று முக்குடையைச் சிறப்பித்தே தொடங்குகிறது. இது தவிர நூலுள்ளும். 'சந்திரனேர் முக்குடை' (17) 'முக்குடைக் கீழ்ச்செல்வன்' (130), 'மணிமுத்த முக்குடை' (189) 'திங்கள் நிகர்முக்குடைக்கீழ் தேவர் பெருமானர்' (296), 'இலகிய முக்குடையன்' (562), 'திருமுக்குடையாய்' (472) என்று இவ்வாறு திருமுக்குடையும் அதன்கீழ்த் திகழும் அருகதேவரும் சிறப்பித்துரைக்கப் பெற்றிருத்தல் காணலாம். சமணச் சமயச் சார்பான பிற தமிழ் நூல்களிலும் இம் முக்குடை முதன்மையாக வைத்துப் புகழப்பெறுதல் கவனிக்கத்தக்கது.

# நூல் வரலாறுபற்றிய ஒரு குறிப்பு*

## மயிலை சீனி. வேங்கடசாமி

அப்பாண்டை நாதர் உலா என்னும் பெயருள்ள ஏட்டுச் சுவடி ஒன்றை மேல் சித்தாமூர் ஜைன மடத்தினின்றும் கொண்டு வந்து ஜீவபந்து திரு. டி. எஸ். ஸ்ரீபால் ஜெயின் அவர்கள் சில காலத்துக்கு முன்பு என்னிடம் கொடுத்தார்கள். அதனைப் படித்துப் பார்த்தபோது, அது சொல் வளமும் பொருள் வளமும் பொதிந்த சிறந்த நூலாகக் காணப்பட்டது. அதனைப் பிரதி எழுத நினைத்து எழுதத் தொடங்கினேன். ஓய்வு கிடைக்காத படியால் சிறு பகுதியை மட்டும் எழுதினேன். இதற்குள்ளாக அவ்வேட்டுச் சுவடியை வேறு ஒரு புலவர் படிக்க விரும்பியபடியால், அச்சுவடியை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டு போய்விட்டார். அந்தப் பிரதி இன்னும் திரும்பிவராத படியால், நான் எழுதிவைத்த சிறு பகுதியை மட்டும் இங்கு வெளியிடுகிறேன். வேறு பிரதிகள் யாரிடமேனும் இருந்தால், அதனை அனுப்பி வைப்பார்களானால், நூல் முழுவதையும் வெளியிட வாய்ப்பாக இருக்கும். அப்பாண்டை நாதர் உலா, திருநறுங்கொண்டையில் எழுந்தருளியுள்ள அருகப் பெருமான் மீது பாடப் பெற்றது. இந் நூலை இயற்றியவர் பெயர் அனந்த விசயர் என்பது. இவரைப் பற்றிய வரலாறுகள் இப்போது எனக்குக் கிடைக்கவில்லை.

---

* 1961ஆம் ஆண்டு 'நல்லறம்' இதழ் நான்காம் மலர் முதலிரு இதழ்களில் இந்நூலின் முதற்பகுதியில் 47 கண்ணிகளை இவர் வெளியிட்டுள்ளார். அதன் முகவுரையே இங்குத் தரப்பட்டுள்ளது. முடிவில் 'மற்றப் பகுதிகளை எழுதவில்லை. ஒப்பு நோக்குவதற்கு வேறு பிரதி இல்லாதபடியால் ஏட்டில் கண்டபடியே பதிப்பிக்கப்பட்டது. சில இடங்களில் சொல்லும் பொருளும் விளங்கவில்லை' என்றும் எழுதியுள்ளார்.

# விளக்கக் குறிப்புகள்

**காப்பு 1.** உறுங்கண்டீர்...பணிந்தக்கால் : வேதசந்தம் : வேத வடிவம். பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானுயோகம், திரவ்யானுயோகம் முதலிய வேதசந்தங்கள். விந்தம் - அரவிந்தம், தாமரை; 'விந்தமாப் பிண்டிமுல்லை...நீலங் கோலவழகு.' (நாமதீப. 59)

**காப்பு 2.** நறுங்கொண்டை...காப்பு : அனிதன் - காலம் இடங்களின் கணக்கிறந்தவன்.

1. திருவுறையும் முக்குடை : திரு - அழகு, தெய்வத்தன்மை ; முக்குடை - அருகதேவர், ஒன்றன்கீழ் ஒன்றாய் அமைந்த மூன்று குடைகளின் நிழலில் உறைபவர். மூன்று உலகத்தையும் காப்பதன் சின்னமாய் இம் முக்குடை உள்ளது. இக்குடைகளுக்குக் கீழிருந்து முறையே சந்திராதித்தம், நித்தியவினோதம், சகலபாசனம் என்பது பெயர்.

'திங்கள்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த
ஆதியிற் றோற்றத் தறிவனை வணங்கி'

(சிலப். 11, காடுகாண். 1-4)

'முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை
அச்சுதன் அடிதொழு தறைகுவன் சொல்லே.' (நன்னூல், 258)

5. அம்புயத்தின்மேல் நடந்தோன் - தாமரை மலர்மேல் நடந்தவன்.

'மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (குறள். 3)

தர்ம சக்கரம் - சின தர்ம சக்கரம். 24 ஆரைகள் கொண்டது ; இவை 24 தீர்த்தரர்களைக் குறிக்கும். இச்சக்கரத்தின்கீழ்ப் பொறிக்கப் பட்டுள்ள எருதும் சிங்கமும் ஆதிபகவான் விருஷபதேவர், அந்திய பகவான் மகாவீரர் சின்னங்களையும் குறிப்பன. இதுவே சின தர்ம சக்கரம் என்பதாகும்.

6-7. அருகன் எண் குணங்களுள் முதல் நான்கு இக் கண்ணிகளில் சுட்டப்பட்டுள்ளன. கடையிலா ஞானம் (அனந்த ஞானம்) - முடிவிலா அறிவுடைமை ; கடையிலாக் காட்சி (அனந்த தரிசனம்) - எல்லையில்லாது யாவற்றையுங் காணும் குணம். கடையிலா வீரியம் (அனந்த வீரியம்) - எல்லையில்லா ஆற்றலுடைமை. கடையிலா இன்பம் (அனந்த சுகம்) - முடிவில்லா ஆனந்தமுடைமை. (சிலப். 10, நாடு

காண். 188 அடியார்க். உரை ; சீவக சிந்தாமணி, 2847 உரை பார்க்க). இவற்றோடு நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியா வியல்பு—என்பனவும் சேர எண் குணங்களாம்.

'அனந்த ஞானம் அனந்த தரிசனம்
அனந்த வீரியம் அனந்த சுகியே
நாம மின்மை கோத்திர மின்மை
ஆயு வின்மை அழியா வியல்பென
ஏயுங் காலை இறைவன் எண்குணம்...'

(திவாகரம் : பல்பொருட்கூட்டத் தொருபெயர்த் தொகுதி)

கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (திருக்குறள், 9)

வடார்க்காடு மாவட்டம் வைகைத் திருமலையில் குந்தவைப் பிராட்டியாரால் கட்டப்பெற்ற அருகன் ஆலயம் 'எண்குண இறைவன் கோயில்' என்று அக்கோயில் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.

7. செல்வச் சிறப்புடையன் - பஞ்ச கல்யாண வைபவத்தையுடையவன். 'சுவர்க்காவதரணம், மந்திராபிஷேகம், மகாப்பிரஸ்தானம், கேவலோத்பத்தி, பரிநிர்வாணம் என்ற ஐவகைப்பட்ட அருகக் கடவுளுக்குரிய சிறப்புகள்' (திருநூற்றந்தாதி, 4 உரை).

9. அவ்வினையம் - (அவ்விநயம்) :

'அச்சமே ஆசை உலகிதம் அன்புடைமை
மிக்கபா சண்டமே தீத்தெய்வம்—மெச்சி
வணங்குதல் அவ்விநயம் என்பவே மாண்ட
குணங்களிற் குன்றுதவர்.' (அறநெறிச்சாரம், 13)

எவ்வினையுமேகெடுத்திட் டீசனே - கெடுத்திட்ட ஈசன் : கெடுத்திட்டீசன் ; வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்.

10. ஆறுமுகவன் - ஆன்மாக்கள் வினையின் நீங்கித் தன்மயமாதற்குரிய அறவழி காட்டியவன் ; ஆறுதலளிக்கும் முன்னோன் என்றும் ஆம்.

மூன்றுலகம் பெற்றளித்தோன் - பேருடவனுய்ப் பிறந்து வினையை வென்றவனே மூன்றுலகிற்கும் முத்திநெறி வேண்டிப் பாதுகாப்பவன்.

'அறிவிற்கும் இயற்கைக்கும் அமைந்தபெரும்
அமைதிதரும் அமர வாழ்வை
உறவிற்கும் உணர்விற்கும் உயர்விற்கும்
ஒற்றுமையின் வித்தாய் ஈந்தே
துறவிற்கும் இல்லறத்தின் வாழ்விற்கும்
தூயதொரு தொடர்பா யின்ப
நிறைவிற்கும் கருவான நெறிவகுத்து
நின்மலன் பாது காத்தல்.' (ஜினானந்தம்)

*11.* விக்கினவி நாயகன் - உலகாயத இடையூறுகளைப் போக்கி நன்னெறி காட்டும் தலைவன்; வீதராகன் - பற்றற்றவன்; பொருள் ஆறு - ஜீவன், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம்.

*20.* மும்முனிவர் சேரும் முதலாங் குராநீழல் - மும்முனிவர்: மல்லிஷேணர், புஷ்பசேனர், சமய திவாகர வாமன முனிவர். குரா நீழல் - திருபருத்திக்குன்றிலுள்ள குராமரத்து நிழல்:

'தன்னளவிற் குன்று துயராது தண்காஞ்சி
முன்னுளது மும்முனிவர் மூழ்கியது—மன்னவன்றன்
செங்கோல் நலங்காட்டுந் தென்பருத்திக் குன்றமர்ந்த
கொங்கார் தருமக் குரா.' (கல்வெட்டுப் பாடல்)

*22.* ஆபத்சகாயன் - ஆபத்துக்காலத்தில் துன்பம் அகல உதவியா யிருப்பவன்.

*26.* பூமிதனிற் சென்னியுறப் போற்றுதல் - நிலத்தில் நெடுஞ் சாண்கிடையாய் விழுந்து வணங்குதல்; அதாவது தலை பூமியில் படியுமாறு வணங்குதல்; எட்டு உறுப்புகள் நிலம் தோய வணங்கும் அட்டாங்க நமஸ்காரம்; இரு பாதம், இரு கை, இரு புயம், மார்பு, முன்தலை ஆகியவை நிலத்தில் படியுமாறு தொழுதலாகும்.

*37.* இமயம் சேர்ந்த காகம் பொன்னிறமாதல்: ஒப்பு: 'பொற்குன் றஞ்சேர்ந்த தோர்காக்கை பொன்னாம்' (சுந்தரர் தேவாரம், 7-50-4)

'சுருக்கமில் கேள்வித் துகள்தீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றேவிவ் விருநிலமே.'

(யாப்பருங்கலக் காரிகை, 3; அவையடக்கம், 1)

*38.* விளக்கிற் புகையொழுங்கிருப்பினும் இகழாது பயன் கொள்வர். ஒப்பு:

'உள்வி ரிந்த புகைக்கொடி யுண்டென
எள்ளு கின்றன ரில்லை விளக்கினை
உள்ளு கின்ற பொருட்டிற மோர்பவர்
கொள்வ ரெம்முரை கூறுதற் பாலதே.'

(யசோதர காவியம், 3; அவையடக்கம்)

*40.* சித்தரசம்....பொன்னொளியு மாகுமே:

'கொல்லுலை யகத்திட் டுதிக் கூரிரும் பிரதங் குத்த
எல்லொளிச் செம்பொ னாகி எரிநிறம் பெற்ற தன்றே.'

(சீவகசிந்தாமணி)

42. ஒப்பு :

'படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி.'

(கம்பர் வாக்கு : பெருந்தொகை, 120)

43. நன்று மறை - நல்லோர் புகழும் வேதம்.

'மாறில் கலையுணரான் மாண்பிலர்பால் மன்னுதான்
தேறும் பொருள்மேல் திகழ்கின்றான்—ஈறில்
முதல்வனாய் நின்றான் மொழியமுத மென்னும்
புதல்விதான் தேடும் பொருள்.' (ஜீவசம்போதனை)

45. ஒப்பு :

'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.'

(காளமேகப் புலவர் பாட்டு : பெருந்தொகை, 121)

47. அறுபத்து நாற்கலை :

'ஐயனுக் கமைந்த நீரார் அறுபத்து நால்வர் அம்பொன்
வையகத் தமிர்த மன்னார் வாக்கமை பாவை யொப்பார்.

(சீவகசிந்தாமணி)

'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

(கம்பர் வாக்கு : பெருந்தொகை, 119)

52. மதியாம் சுருதி யவதி மன்னு மனம் : மதி - பொறி மன அறிவு ; சுருதி - கேள்வி யறிவு ; அவதி - வரம்பிற்குட்பட்ட உருப் பொருளறியும் அறிவு ; மனம் - மனமாறுதல்களை யறியும் அறிவு.

54. அங்கபூர்வாங்க முதனூல்: இது ஆகமம் மூன்றையும் குறிக்கின்றது. அங்காகமம், 12 ; பூர்வாகமம், 14 ; பகுசுருதி ஆகமம், 16. 'அங்கம் பயந்தோன் அருகன் அருண்முனி' (சிலப். 11, நாடுகாண். 187).

55. அப்பர் சம்பந்தர்க்கு அன்பாய் விழிகொடுத்த அப்பன். விழி கொடுத்த அப்பன் - விழி இங்கே ஞானக் கண்ணினைக் குறிக்கும். இவ் விருவரும் அருகனடியாராவர். வரையறுத்த பாட்டியலைத் தந்தவர் சம்பந்தமாமுனிவராவர்.

56. செண்டு - சாத்தன் கரத்திலிருக்கும் ஆயுதம், இதனால் சாத்த னுக்குச் 'செண்டலங்காரன்' என்னும் ஒரு பெயரும் உண்டு. இத் தெய்வம் உதவிய செண்டு கொண்டு கரிகாலன் இமயமலையைத் திரித் தான் என்பது கதை. இதனைப் பின்வரும் பாடல் விளக்கும் :

'கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவல்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு.'

இப்பாடல் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய உரை மேற் கோளாகும் (சிலப். 5, இந்திர. 95-98 உரை.)

69-70. ஒப்பு :

'நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவா ணகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்
தரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி.'

(சிலப். 12, வேட்டுவ. 55-59)

70. தத்தைக்கரத்தி - கொடையளிக்கும் கையினையுடையாள். அவிரோதிப் பிரபந்தத்தி - எவர்க்கும் விரோதமற்ற பொதுவாகிய பிரபந்தங்களைப் போற்றுபவள். எம்மதமும் சம்மதமென ஏற்றுக் கொள்ளும் பொதுமறையுடையோள். முரண்பட்ட மறை என்பது உலக, புருட, சாத்திர முயற்சிகளாகிய மூன்று காட்சியளவைக்கும் ஆண்டவன், ஆகம, சம்சார, மீட்டுணர்ச்சி, வினைப்பயனுகர்வு, வீடு பேறு எனப்படும் அறுவகைக் கருதலளவைக்கும் மாறாக இருப்பன.

'தலைமகனும் நூலும் முனியும் பொருளும்
தொலைவின் துணிவொடு பக்கம்—மலைவின்றி
நாட்டியிவ் வாறும் உரைப்பரே நல்நெறியைக்
காட்டி அறமுறைப் பார்.'

'தத்தம திட்டம் அதிட்டம் எனஇவற்றோடு
எத்திறத்தும் மாறாப் பொருளுரைப்பர்—பித்தரவர்
நூல்களும் பொய்யேயக் நூல்விதியின் நோற்பவரும்
மால்க ளெனவுணரற் பாற்று.

(அறநெறிச். 30, 31)

79. இசக்கியம்மை : காவல் தெய்வம்.

'பூங்கண் இயக்கி' (சிலப். அடைக்.)

120. நச்சுவினை வென்ற நாயகன் : நச்சுவினை - விட மொத்த எண்வினை.

'மன்னிய அறிவு காட்சி மறைத்தல்வே தனியத்தோடு
துன்னுபோ கனிய மாயு தொடர்நாம கோத்திரங்கள்
முன்னும் அந்தராயம் மொழிந்தவெண் குற்றமாகும்
இன்னவை தவிர்ந்தோன் யாவன் யாவர்க்கு மிறைவனுமே.

(சூடாமணி)

176. ஆயிரத்தெட்டு சுப லக்கணம் : 'அம்பொன் பிதிர்வின் மறுவாயிரத்தெட் டணிந்து' (சீவகசிந்தாமணி). ஆயிரத்தெட்டுத் திருநாமம் : ஆயிரத்தெட்டு (1008) நாமாவளி.

'ஜிநன்' என்றால் ஜெயித்தவன், ஊழையும் உப்பக்கம் காண்பவன், வேட்கை வெகுளி முதலிய உள்ளக் கிளர்ச்சிகளை வென்றவன், தூய பூரணத் தன்மையை, நித்தியானந்தத்தை நீடித்த வாழ்வைத் தன்னுழைப்பனுவத்தால் பெற்றவன் என்பதே.

பெயருச்சரிப்பில் என்ன இருக்கிறது? எப்பெயரால் உச்சரிப்பினும் ஒரு ரோஜா இனிய நறுமணந்தான் வீசும். பெயரில் ஒன்றுமில்லை ; நாமநிட்சேபந்தான். பெயர், நினைப்பூட்டும் வெற்றறிகுறியே, வெற்றொலியே. அது ஒரு பொருளிலிருந்து பிறிதொன்றை, அதுவே தான், தானே அது எனும் ஒற்றுமை வேற்றுமைகளை நினைவுறுத்திக் கொள்ளும் உபாயம் ; முயற்சியே. மெய்ப்பொருட்டன்மையை உள்ளபடியே புரிந்துகொண்டால் போதும் ; வெறுமுச்சரிப்பால் மட்டும் வரும் பயன் சிறிதேதான்.

அதை சிவன் நித்தியானந்தன் சங்கரன் என்றும், பிரம்மா படைப்புக் கர்த்தன் கரும கர்த்தன் எல்லா நல்வினை தீவினைகட்குக் காரணமான அனைத்து நல்லெண்ண தீயெண்ணங்களினால் தன் வலையைப் பின்னும் விதியின் சிற்பி என்றும் கூறுவர். அதை எங்கும் பரவிய எல்லாமுணர்ந்த விஷ்ணு எனினும் ஒன்றே.

அது எங்கும் இருக்கிறது ; எல்லாங் காண்கிறது ; அறிகிறது. எங்கும் என்றும் எல்லா உயிரோடும் மறைமுகமான உள்ளார்ந்த உறவாய்த் தானேயதுவாய் அதுவேதானாய் இருக்கிறது. அதைப் புத்தர் - உள்ளொளி பெற்றவர், போதிப்பவர் ; தன்னை, தன் ஆன்ம தரிசனத்தைக் கண்டவர், காணவழிகாட்டுபவர் எனினும் ஒன்றுதான்.

ஜிநர் அருகர் எனவும்படுவார். அவர் முற்றறிவன், புடமிட்ட தூய பூரண ஆன்மா. எனினும் மாற்றுயிர் வினையுடலாற் கட்டுண்டு கவரப் பட்டுள்ளது. ஆயினும், உடல் தூய்மை பூரணத்தன்மையைப்

பொறுத்தவரையில் உருவில் பொதுமையாயுளது. உண்மையில் அது மிக நுண்மையே; அது உடலூட்டத்திற்குத் தேவையான பசிதாக முதலிய பதினெண் வேட்கைக் குற்றங்களுக்குக் கட்டுண்டதன்று. அதற்குக் கண்ணிமைப்பதில்லை, உதடசைவதில்லை. அப்படிப்பட்ட பரமான்வுக்குத்தான் அஞ்சலி வழிபாடு செய்யப்படுகிறது.

வெறுஞ் சிலைவழிபாடன்று, வெற்றுருவ வழிபாடுமன்று; வெறுஞ் சகசிரநாம உச்சரிப்பு மன்று. அவ்வழிபாடு தன் பூரணத் தன்மையின் பல பரியாய குணங்களின் வழியொழுகலாகும் இறைவழிபாடென்பது முன்னேற்பாடாக வைத்துள்ள சிலையின் குணங்கள் தன் வாழ்க்கையில் ஊடுருவித் தூண்டும் ஒரு திடசங்கல்பமான எத்தனப் பிரயத்தனத்தால் அக்குறிக்கோளடையும் ஓர் இடையரு முயற்சியின் அறிகுறியேயாம்.

(The Jaina Gazette, Vol. XXIII, No. 2.

'அலகி லாஅறி வின்கண் ணடங்கிவந்
துலகெ லாமுள் ளடங்கிய உன்னையென்
மலமி லாத மனத்திடை வைத்தபின்
அலகி லாமைய தென்கண தாயதே.' (மேருமந்தரம்)

*191.* உலாவெழுதல் - பவனி வரல்.

*196.* செயகோடணை - 'செயசெய!' எனத் தேவர் ஏத்தும் பேரொலி.

*217.* சோதிடர் ஐவர்: சந்திரன், சூரியன், தாரகை, நாண்மீன்கள், கோள்கள். இவரைப் பஞ்சவர்' என்றும் உரைப்பர்.

'சந்திரரும், சூரியரும், தாரகையும், நாள்மீனும்,
வெந்திறல கோள்களும்ஆம் என விளங்கி விசும்புஆரு
மந்தரத்தை வலம் சூழ்ந்து வருபவரும் நிற்பவரும்
சுந்தரம்சேர் மணிமுடியாய் சுடர்பவரும் சோதிடரே.'

(சூளாமணி. துறவு, *206*)

'அண்ணரும் பேர்அழல் ஆக்கிய கமழ்புகை
மாதிரத்து இயங்கும் சோதிடர் விமானமும்
வாசம் ஊட்டும் வகையிற்று ஆகி.'

(பெருங்கதை. *2 : 18 : 49-51*)

'முகில்தலை மதியம் அன்ன
முழுமணி மாடத்து இட்ட
அகிற்புகை தவழ்ந்து வானத்து
அருவிசும்பு அறுத்து நீண்டு

பகற்கதிர்ப் பரப்பிற்று ஆகி,
பஞ்சவர் விமானம் முட்டி,
புகற்கு அரும் அமரர் கற்பம்
புக்கு, அயாவுயிர்த்த தன்றே. (சீவக. 600)

231. துசக்கொடிகள் - துவசக்கொடிகள்.

238. காமாதி வென்ற கடவுள் - காமம், வெகுளி, மயக்கங்களைக் கடந்தவனாகிய கடவுள். பூமாலை பூணாப் பொருள், அணியாதழகியான்- கடவுள்.

240. நீதியாய் - நீதிநெறி மயமானவர்; நீதியைப் போதித்தவர்; கடவுள். அயன் - படைப்புத் தொழிலைக் கொண்டவன்; தன்னைத் தானறியும் தெய்விகப் பேறுவழி படைத்தவன்.

241. மூவொளியாய் - மனம், வாக்கு, காய சோதியுடையவனே.

மூவா முதலான பிண்டிப் பொருள்:

"உலகம் ஒருவரால் படைக்கப்பட்டதொன்றன்று; ஆதி அந்தமின்றி இயங்கி வருவது. 'மூவா முதலா உலகம்' என்றார் தேவர். பிரபஞ்சம் உண்மையானது; நித்தியமானது. அது என்றுமில்லாதிருந்ததுமில்லை. ஒன்றுமே இல்லாத சூன்யத்திலிருந்து தோன்றுவதும் ஒன்றுமில்லை. அதற்கோர் தொடக்கத்தைக் கற்பிப்பது ஆதாரமற்ற நம்பிக்கை; கட்டுக்கதை; பேதைமையின் பலவீனம். தன்னம்பிக்கை இன்மையால் ஓராதரவைத் தேடுகிறது. முடவன் ஊன்றுகோல் தேடிச் சாயப் பார்ப்பதைப்போல ஏதோ ஒன்றில் சாயப் பார்க்கிறது. மயக்கத்துக்குப்பட்டிருக்கிறது. அதனால்தான் பிரபஞ்சம் அழிந்துபோகும்; நிலையற்றுப் போகும் எனப் பிரபஞ்சத்தின் முதற்காரணமாக ஒரு தோற்றத்தை நாடும் மயக்க உணர்ச்சியே அதற்கோர் முதற் காரணமின்றியே மற்றுமோர் முதற்காரண இருப்பைத் தேடுகிறது. அம்மயக்கம் அறியாமையால் விபரீத உணர்ச்சியாலாயது; பிழைபாடுடையது. எனவே, மனிதன் தன்னுள்ளார்ந்த மதிப்பீட்டை, சுயமரியாதையை, சுதந்திரமான முழு ஞானத்தை, முழு ஆற்றலின்பங்களை உய்த்துணரும் வாய்ப்பிழந்து போகிறான். மனிதன் ஓர் உள்மறைப்புண்ட கடவுள்; தெய்வத்தன்மையே அவன் சாரம். அத் தெய்வத் தன்மை முடிவுற்ற காலமாய், மயக்கப்பட்டும் ஒடுக்கப் பட்டும், தாழ்த்தப்பட்டும், அழுத்தப்பட்டும் உள்ளொடுங்கியிருக்கிறது. மனிதன் வெற்றிபெற முடியும். யாவனாயினுஞ் சரி, வினை வென்றவன் ஜினன். இதுவே ஆடவனின் இலட்சியம்; வாழ்க்கையின் குறிக்கோள்.

மனித இனத்தைப்பற்றிய நேர்மையான கல்வி மனிதனேதான். பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வோர் பொருளிலிருந்தும் மனிதனை வேறு படுத்திக் காணும் தனித்தன்மை, ஒரே அம்சமாகிய தன்னறிவு, ஆற்றல், தீர்மானம், உணர்ச்சிகளேயாம். இத்தன்னறிவே,

விவேகமே, உயிராகிய தத்துவப் பொருள். உயிர்ப்பொருள் உயிரல்லாத பொருள்களால் உலகம் அமைந்திருக்கிறது. உயிரே, அறிவே, உயிர்ப்புள்ள மெய்ப்பொருளாய், பூரணமாய், அழிவற்ற தாய், அறிவு மயமாய், கேவலஞான மயமாய், எல்லாமாய், ஏக காலத்தில் உடனிகழ்ச்சியாய், நிலையாய், எல்லாச் சமயங் களிலும் இருக்கிறது; என்றும் இருந்துகொண்டிருக்கும். இன்பமும் ஆற்றலும் உடனிகழ்ச்சியாய்க் கேவல ஞானத்துடன் நிலைத்திருக் கிறது. இங்ஙனம் முற்றறிவுத் தன்மையே மேன்மையானது; தலைசிறந்தது; தூய்மையானது. அதுவே மனிதனுடைய கடவுட் டன்மை, தெய்வத் தன்மை, பிதாமகன், மோட்சானந்தம், நித்யானந்தம், சிறைவீடு, கரையேற்றம், நிர்வாணம். அதுவே இலட்சியம், சமய சாரம், மெய்ப்பொருள். அதுவே, தற்றூய்மை, தன்னறிவு, மாசற்ற பரமாத்மா, எல்லாமுணரும் முற்றறிவு, மனித சாரம், இழந்த மோட்சம், மீண்டும் அடையும்பேறு. அது தன் முயற்சியாலேயே பெற முடியும். இழப்பும் மீட்சிப்பேறும் என்ற சொற்கள் ஈண்டுப் பொது அறிவு நோக்கால் ஒப்பீடான பொருளில் கையாளப்படுகிறது. வேர்ப் பொருளில், சுதந்திரமாய்க் கூறுவதென்றால், ஒருவனுடைய உள்ளாற்ற லாகிய தன்மை, தன்னுயிரின் சாராம்சம் என்றும் இழக்கமுடியாது; இழந்ததுமில்லை. மீட்சிப் பேறடையத் தேவையுமில்லை; என்றும் உள்ளாற்றலாயுள்ள சிறப்புரிமை தொடர்ந்து பிரகாசிக்கிறது.''

(The Jaina Gazette, Vol. XXIII, No. I)

*292-293* திருவைம்பாவை - திருவெம்பாவை.

*294.* கெற்பதாரணம் - கருப்பாவதரணம்.

சத்தியோசாதன் - அப்பொழுதே பிறந்தவன்.

*312.* ஏதம் இல் ஈரொன்பான் இயல் பாஷை ஒன்றாக - குற்ற மில்லாத பதினெட்டு பாஷை. பாஷைகட்குப் பொதுமையான ஒன்றாய் - அதாவது ஒன்றாகிய சருவ அர்த்தமாகதி பாஷையில்.

*318.* நயம் ஏழும் - நயங்கள் ஏழு வகையும். *312*-ல் 'ஒளி ஒன்றும்' என்று தொடங்கி இதில் ஏழும் என எண்ணலங்காரம்படச் சிலேடையாய் முடித்தார்.

*326.* வாமன் - பிறவிப் பண்பாகவே அவதிஞானமுடையோன்; ஜன்மாபிஷேகப் பெயர்.

*330.* நயந்த - விரும்பிய; சயந்தம் - வெற்றி. வியந்தன் - அதிசயமுடையோன்.

*331.* மருந்து - சாவா மருந்து.

'பேர்தற் கரும்பிணி தாமிவை யப்பிணி
தீர்தற் கரிய திரியோக மருந்து.' (நீலகேசி—மும்மணி)

11

332. ஈனமத்தோர் - குறைபாடுடைய இவ்வுலகத்தோர்.

411. ‘இல்லறம் ஏனைத் துறவறம் என்றிவற்றைப்
புல்ல உரைப்பது நூல்.’ (அருங்கலப் செப்பு)

413. ஈசானன் - அருகனுடைய கேவலோற்பத்தியின் காரணப் பெயர்.

462. ஐந்தாங்கதி - பஞ்சமகதி. அகாதி - அகாதி கருமங்கள் : வேதனீயம், நாமம், கோத்திரம், ஆயுஷ்யம். ஐந்தாங் கலியாணம் - ஐந்தாவது பரிநிர்வாணம்.

463. தற்புருடன் - தனக்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் கைவரப் பெற்றவன்; தன் புருடார்த்த சித்தியை அடைந்ததனுல் வந்த காரணப் பெயர். ஈசன் ஐம்முகப் பெயர் என்பது இப் பஞ்சகலியாணத்தின் காரணமாய்த் தேவர்க ளிட்ட பெயர்.

‘கோதில் புகழ் சத்தியோ சாதன்வாம
னகோரன் ஈசானன், தற்புருட னென்று
சாதமுதற் கலியாண மைந்தின் வானோர்
தாமன்பால் இட்டதிரு நாமந்தானே.’ (திருக்கலம்பகம்)

464. வேண்டுதல்வேண் டாமை இல்லாத வீரன் - ஒப்பு :

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.’ (குறள். 4)

465. உவமைதனில் ஒவ்வான் - ஒப்பு :

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (குறள். 7)

469. பவ்விய செனம் - வீடுபேறடையும் பான்மையுடைய மக்கள்.

471. பமாணம் - பிரமாணம், அளவை நூல், நியாய நூல். அம்மாணன் - அமணன், நீட்டல் விகாரம்.

472. படை வாளும் இல்லான் - கொலைக் கருவிகளும் வாளா யுதமும் இல்லாதவன், நிராயுதன்.

‘படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம். (குறள். 253)

473. ‘யானையுண்ட விளாம்பழம்’ (பழமொழி)

478. ஆயன் சிதைத்த மரம்—இதனை ஒடியெறிதல் என்றும் கூறுவர். கலித்தொகை 68 ஆம் பாடலில்,

‘ஊடியார் நலந்தேம்ப ஒடியெறிந் தவிர்வயின்
மாறீர்க்கு மவன்மார்பென் றெழுந்தசொல் நோவேமோ’

(கலித். 68 : 12-13)

எனவரும் பகுதியில் ‘ஒடியெறிந்து’ என்பது குறிக்கப்பட்டுள்ளது. இங்கே வரும் ‘ஒடியெறிந்து’ என்பதற்கு நச்சினார்க்கினியர் ‘இடையன் கொன்ற மரமாக்கி வைத்து’ என்று உரை வகுத்துள்ளார். பழமொழி நானூறு செய்த முன்றுறையரையனார் ‘இடையன் எறிந்த மரம்’ என்னும் பழமொழியையும் 314 ஆம் பாட்டில் அமைத்துள்ளார். அவர் தரும் விளக்கம் வருமாறு :

‘அடையப் பயின்றவர்சொல் ஆற்றுவராக் கேட்டால்
உடையதொன்று இல்லாமை ஒட்டின்—படைவென்று
அடைய அமர்த்தகண் ஆயிழாய் அஃதால்
இடையன் எறிந்த மரம்.

(பழமொழி. 314)

‘கெடலருங்குரை கொற்றங் கெடப்பிறந் ததுவுமன்றி
நடலையு ளடிகள் வைக நட்புடை யவர்க ளைய
இடைமகன் கொன்ற இன்னா மரத்தினேன் தந்த துன்பக்
கடலகத் தழுந்த வேண்டா களைகவிக் கவலையென்றான்.

(சீவகசிந்தாமணி, 1914)

511. ஈரைந்து அவதாரம்-அப்பாண்டை நாதருடைய முன்னைய பத்துப் பிறப்பு. அருந்தவத்தால் ஆண்டவனும் மாபேராடவனுடைய முற்பிறவியே எண்ணிலவாதலால் பிறவித் தொடர்பாய் ஊழ்வினை உருத்து வருமுறையை அறிவுறுத்தற்காகவே முன்னைப் பத்துப் பிறப்புகளைக் கூறல் மரபு.

512 மருபூதி-போதபுராதிபதி அரவிந்த மன்னனுடைய புரோகிதன் விஸ்வபூபதியின் மகன் மருபூதி.

513. வச்சிரகோடன்-சல்லகீவனத்தில் வச்சிரகோடன் (வச்சிர கோஷம்) என்னும் யானைக்கு இறை.

517. வச்சிர நாபி-அசுவபுரத்தரசன்; ஆறு கண்டம் ஆண்ட சக்கரவர்த்தி.

521. பராபரன்-மிக மேலான கடவுள். பாரீசநாதர் விசுவசேன அரசன் புதல்வர்.

525. பெருக்கிய ஆறுறின்-ஆறால் பெருக்கிய ஆறு, முப்பத்தாறு.

512. முப்பொருள் - பிரம்மா, விஷ்ணு, சிவன். மும்மூர்த்திகளின் உண்மைப் பொருள். இந்து மதத்திலும் ஈசுவரன் உலகைப் படைத்தான் என்னும் கோட்பாடு, படைப்போனாகிய பிரம்மா தொழிலின் உண்மைச் சிறப்பியல்பான சிக்கலைத் தீர்ப்பதாய் உள்ளது. உண்மையில் ஆன்மாவே படைப்பாளியாய் இருக்கிறது. ஒவ்வோராான்மாவும் தன்னுடலையும் நிலைமைகளையும் தானே படைத்துக் கொள்கிறது. வாழ்க்கை அவ்வாறிருக்கிறபடியால் அது ஒரு ஆன்மிக சாராம்சமாயேயுளது. பிரம்மா என்பது ஆன்மிக வாழ்க்கையை நோக்கித் திருப்பப்பட்ட புத்தி அல்லது அறிவின் உருவகப் பொருளேயாம். வேறோர் ஆளின் உருவகமன்று. எனவே, பிரம்மாவின் படைப்பு தம்மறிவால் மாபேராடவர்கள் தம் மனோராஜ்யத்தால் மேற்கூறியவாறடைகிறார்கள் என்னும் ஆன்மிகக் கருத்தில் பொருந்தியிருக்கிறது. இப்படைப்பைத் தான் விஷ்ணு (தருமம்) பாதுகாக்கிறது.' இவ்வாறு திரு. கே. என். ஐயர் தம்முடைய நிலையான பாரத வரலாற்று நூலில் மெய்ப்பித்திருக்கிறார்.

(Permanent History of Bharathavarsha, Vol. I, P. 314)

" பிரம்மாவின் படைப்பென்பது உண்மையில் மனிதனிடத்திலுள்ள எல்லாவகைப் போக்கின் அழிவையும் அதன் காரணமாய்த் தோன்றும் ஒரு தெய்விகப் பக்திப் போக்கையும் குறிப்பதாகவே பொருள். ஓர் ஆணையன்று. விஷ்ணு பிரம்மாவால் படைக்கப்பட்ட புத்தியைக் காக்கிறது. வேறெப் பொருந்தாப் பொருளையும் பாதுகாக்கிறதில்லை. சிவம் (வைராக்கியம்) முதலில் அவனுடைய உலகப்பற்றைக் அழிக்கிறதாலும் முடிவில் சமயபக்திப் பயிற்சியின் நல்வினையைக் கெடுத்து இறுதியான வீடுபேற்றுக்குக் காரணமாயும் இருக்கிறார். பிரம்மா - ஆத்மன்; விஷ்ணு - புத்தி; சிவம் - வைராக்கியம் எனும் பண்புகள் மனிதனுடைய வீடு பேற்றிற்கு வேண்டிய சமயாசாரத் தேவைகளை வெளிப்படுத்துகிறது."

(Permanent History of Bharathavarsha, Vol. I, P. 395.)

543. பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் முப்பொருள் வரலாற்றைச் சீவக சிந்தாமணி பின்வருமாறு கூறுகிறது:

பெரும்பெயர்ப் பிரம னென்னும் பீடுறு பெரிய நீரான்
அரும்பிய முலையி னாளுக் கணிமுகம் நான்கு தோன்ற
விரும்பியாங் கவளை யெய்தான் விண்ணக மிழந்த தன்றித்
திருந்தினாற் கின்று காறுஞ் சிறுசொல்லாய் நின்ற தன்றே.

கைம்மலர்க் காந்தள் வேலிக் கணமலை யரையன் மங்கை
மைம்மலர்க் கோதை பாகங் கொண்டதே மறுவதாகக்
கொய்ம்மலர்க் கொன்றை மாலைக் குளிர்மதிக் கண்ணி யாற்குப்
மெய்ம்மல ரலங்கல் மார்ப பெரும்பழி யாயிற் றன்றே.

நீனிற வண்ணன் அன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண னேக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனற் றொழுனை யாற்றுட்
கோனிற வளையி னார்க்குக் குருந்தவ னொசித்த தென்றான்.

காமமே கன்றி நின்ற கழுதை கண் டருளினாலே
வாமனார் சென்று கூடி வருந்தினீ ரென்று வையத்து
ஈமஞ்சேர் மாலை போல இழித்திடப் பட்ட தன்றே
நாமவேற் றடக்கை வேந்தே நாமிது தெரியி னென்றான்.

படுபழி மறைக்க லாமோ பஞ்சவ ரன்று பெற்ற
வடுவுரை யாவர் பேர்ப்பார் வாய்ப்பறை யறைந்து தூற்றி
யிடுவதே யன்றிப் பின்னும் இழுக்குடைத் தம்ம காமம்
நடுவுநின் றுலகம் ஓம்பல் நல்லதே போலும் என்றான்.

(சீவக. 207-211)

548. நாரீசன்-அர்த்த நாரீசுவரன்; அர்த்தம்-பாதி, அரை; நாரி-பெண்; பெண்பாலுகந்த பெருமான், உமையொருபாகன்.

555. இந்தியங்கள் ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகள். மோகமுடன்-மோகனீய கருமத்தோடு; அற்று-கட்டற்று செல்லாதால்-பொறிவேட்கை மோகனீய கரும வாற்றல் குன்றிச் செல்லும்படியாகாது.

'பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்'

எனப் பொய்யாமொழியார் இறைவன் முனிவன் (குரு) ஆகமம் நிலை யான பொருளைக் கற்றார் காண வேண்டிய மெய்ப்பொருளை அறி வுறுத்துகிறார். 'தெய்வந் தெளிமின்' என்றார் இளங்கோவடிகள்.

556. குற்றம் பதினெட்டு :

'பசி யதிசயமே உள்ளல் பயமே கையறவு மூப்புக்
கசிவுநீர் வேட்டல் வேண்டல் கதமதங் கேதத்தோடே
ஒசியுநோய் பிறப்பிறப்போடு உவகையே உறக்க மின்பம்
இசையுமீ ரொன்பான் குற்றம்இவைதீர்ந்தோன்இறைவனாமே.

(சூடாமணி)

557. அனந்த குணம் நான்கு - கடையிலா அறிவு, காட்சி, இன்பம், ஆற்றல் என்னும் நான்மை; பொன்னெயில் - சமவசரணம்; கணம்-ப்ன்னிரு கணங்கள்.

562. முற்றறிவு என்பது யாரோ ஒருவரின் தனிப்பட்ட சிறப் புரிமைப் பொருள் அன்று. அனைத்துயிர்களின் சிறப்புரிமைச்

சிறப்பியல்பேயாகும் என்பதும் மேலும் முற்றறிவுண்மையும் முற்றறிவனுண்மையும் விஞ்ஞானம் மெய்ப்பித்துள்ளது.

(The Science of Thought, PP. 15-19.)

முற்றறிவின் நடைமுறை விளக்கம் - அருந்தவமியற்றும் ஆடவனுடைய வினை விடுதலைக்கேற்பத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த புத்தம் புதிய விளக்கங்கள். மனப்பதிவுகள் தாமாகவே அறிகாட்சிப் புலன்களைப் பெருக்கிக் கொண்டே சென்றுமுடிவில் வினைமுற்றுங்கெடும். அக்கணமே முனையுருவில் தன்னுள் மறைப்புண்டிருந்த முற்றறிவு நடைமுறை விளக்கமாகிறது. சர்வக்ஞன் ஆண்டவன் கடவுளாகிறுன்.

(Jaina Religion and Literature, P. 61)

*562-563.* உலகெலாம் சார உரைப்போன் - குறிப்பிட்ட ஒரு கூட்டத்தார்க்கன்றி உலகத் துயிர்க்கெலாம் உறுதுணையாய்ப் பின் வீடுபேறடைய வேண்டி எந்நாட்டவர்க்கும் எம்மொழியவர்க்கும் பொதுவான அறவமுதம் பொழிவோன். இக்காரணத்தால்தான் ஜைனசிராவகர்களுக்கு 'உலக நோன்பிகள்' எனப் பெயர் வழங்குகிறது. விரதங்கட்குள் உலக நோன்பு அவனியின் விரதம் என வழங்குகிறது. இந்த அவனியின் விரதக் கப்பலைப் பிறவிக் கடலிற் செலுத்தும் மீகாமன் அருகன் (ஜிநன்) என்பர் ஆதிநாதர் பிள்ளைத் தமிழாசிரியர்.

'தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.'' (குறள். 7)

அவாவடக்கித் தேவையோடு திருப்தியடைய வழிகாட்டும் நல்லறவாழ்க்கையொன்றே மனக்கவலை மாற்றும் மருந்து.

*569.* 'வந்தே பிரம்மாணம் ஆத்யம் விரஷயம் அரிகரம் திரியம் பகம் விஷ்ணுமீசம்' —ஸ்ரீபுராணம்.

*572.* மோகந்தனில் - காம மயக்கத்தில்.

*580* கற்பாந்தநாதன் - கற்ப உலகங்கட்கு மேலாகிய வீட்டுலகத் தலைவன்; 'வானோர்க்குயர்ந்த உலகம்'. கணநாதன் - பன்னிரண்டு கணங்களுக்குத் தலைவன்.

*581.* முனிவர் தங்கள்கோன் - முனிவர்கள், ஆரியாங்கனைகள், கொலையைவிட உடன்பட்ட விலங்குகள், பவணர், வியந்திரர், சோதிடர், கற்பவாசிரியர், பவணதேவியர், வியந்தர தேவியர், சோதிட தேவியர், கற்பவாசி தேவியர், சக்கரவர்த்திகள். சக்கரவர்த்திகள் என்றுல் உலகெலாம் அடங்கும். இப் பன்னிரு கணங்களையும் பிறவிக் கடற்கரையேற்றும் நாதன்.

*582.* திவ்விய வாக்கீசன் - திருமொழியருளும் ஈசன், வாகீசன். மூன்றுலகீசன் - மூவுலகுணர்ந்தமூர்த்தி ; திரிலோகநாதன். தேவர்,

நரகர் முதலிய யாரும் மனிதனாய்ப் பிறந்து அறங்கேட்டு ஆடவனாய் அருந்தவனாய் ஆண்டவனாகும் வாய்ப்பை அளித்துப் போற்றுவோன் அருகன், ஜிநன், மாபேராடவன். ஆதலால், அருகனை மூவுலகீசன் என்றார்.

594. ஆதிமுதலே - அறமுரைத்த மகாபுருடர்கள் பன்மையால் பலரெனினும் தன்மையால் ஒருவரேயாதலின், 'ஆதிமுதலே' என்றார்.

'பலவாம் பருவமெலாம் பாரலைக்குங் காலை
உலவாவொன் றாக உரைத்தார்—பலரெனினுங்
காவலராங் தேவர் ஒருவரே ஆங்கவர்தாள்
பூவலரா நாம்சூடும் பூ. (திருக்கலம்பகம்)

597. ஒப்பு : 'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (குறள். 356)

600. பஞ்சமித்தர் - ஐவகைத் தீக்காட்சியாளர்: ஏகாந்தம், விபரீதம்,சம்சயம், அஞ்ஞானம், விநயம் என.

605. நவநிதி - சிந்தித்தவற்றை அளிக்கு ஒன்பது வகைச் சிந்தா மணிகள்.

607. போதா -இல்லற துறவறங்களைப் போதித்தவனே.

611. வீற - வீறு பெறுக.

திங்கள்மும் மாரி பெய்க திருவறம் வளர்க செங்கோல்
நன்கினி தரச னாள்க நாடெலாம் விளைக மற்றும்
எங்குள அறத்தி னோரும் இனிதூழி வாழ்க எங்கள்
புங்கவன் பயந்த நன்னூல் புகழொடும் பொலிக மிக்கே.
(சீவக. வாழ்த்து)

இவ் வாழ்த்தால் ஆப்தன், ஆகமம், குருக்களைத் தெளியும் நற் காட்சியை அறிவுறுத்துகிறார்.

616. நீர்மடவார் - இமவான், மகா இமவான், நிடதம், நீலி, ருக்மி சிகரி என ஆறுமலைகள் உண்டு என்பதும், அவற்றில் முறையே பத்மை, மகாபத்மை, திங்கிச்சை, கேசரி, புண்டரீகை, மகாபுண்டரீகைகள் உண்டு என்பதும், அப்பொய்கையில் முறையே ஸ்ரீ. ஹரீ, திருதி, கீர்த்தி, புத்தி, இலக்குமி என ஆறு தெய்வமங்கையர் உறைகின்றார் என்பதும் ஜைன நூல் வழக்கு. திருமகளின் காட்சியை,

'அருமணி மரகதத் தயங்க னாறிய
எரிநிறப் பொன்னித ழேந்து தாமரைத்
திருமக ளிவளெனத் திலக வெண்குடைப்
பெருமகன் கோயிலுட் பேதை வைகுமே' (சீவக. 183)

எனவரும் சிந்தாமணிப் பாடல் சிறப்புறக் காட்டும். மலைமடவார்- விஞ்சை மாதர் ; நாகமடவார் - பவண மாதர்.

# விளக்கக் குறிப்பு - மேற்கோள் நூல்கள்


அருங்கலச் செப்பு
அறநெறிச்சாரம்
ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்
கம்பர் வாக்கு
கல்வெட்டுப் பாடல்கள்
காளமேகப் புலவர் பாட்டு
சிலப்பதிகாரம் - உரை
சீவகசிந்தாமணி
சுந்தரர் தேவாரம்
சூடாமணி நிகண்டு
சூளாமணி
திருக்கலம்பகம்
திருக்குறள்
திருநூற்றந்தாதி
திவாகர நிகண்டு
நன்னூல்
நாமதீப நிகண்டு
நீலகேசி
பழமொழி
பெருங்கதை
பெருந்தொகை
மேருமந்தர புராணம்
யசோதர காவியம்
யாப்பருங்கலக்காரிகை
வரையறுத்த பாட்டியல்
ஜினேந்தம்
ஜீவசம்போதனை
ஸ்ரீபுராணம்
Jaina Religion and literature
Peramanant History of Bharatha-varsha, Vol. I
The Jaina Gazette, Vol. XXIII No. 1 & 2.
The seience of Thought

# திருநறுங்கொண்டைத் திருத்தல வரலாறு

*திருமா மகளுறை கின்றசெந் தாமரை யொன்றதன்மேல்*
*வருமா மலர்க ளிரண்டுடை யான்மதி போல்நிழற்றுங்*
*குருமா மணிக்குடை மூன்றுடை யான்குண நான்கமைந்த*
*பெருமான் நறுங்கொண்டை யென்னவல் லார்க்கில்லை பேரிடரே.*

*ஊரின் இருப்பிடம்*

தென்னார்க்காடு மாவட்டத்தில் சைனர்கள் சிறப்பாகக் கொண்டாடும் திருத்தலம் திருநறுங்கொண்டை. இது சைனர்களின் திவ்விய யாத்திரைத் தலங்களுள் ஒன்று. இது திருக்கோயிலூர் (திருக்கோவலூர்) வட்டத்தைச் சார்ந்த ஊராகும்; திருக்கோயிலூரிலிருந்து பன்னிரண்டு மைல் தென்கிழக்காக உள்ளது.

உளுந்தூர்ப்பேட்டையில் திருச்சி நெடுஞ்சாலையிலிருந்து திருவெண்ணெய்நல்லூர் செல்லும் கிளைச் சாலை வழியிலே ஏறக்குறைய ஏழு மைல் தூரத்தில் 'பிள்ளையார் குப்பம்' என்னும் சிற்றூர் உள்ளது. அங்கிருந்து வடகிழக்காகச் சுமார் மூன்று மைல் சென்றால் 'திருநறுங்குன்றம்' என வழங்கும் திருநறுங்கொண்டைத் திருமலையை அடையலாம்.

*ஊரின் நிலைமை*

மலையின் தென்கீழ்பால் இப்பொழுது மக்கள் வாழும் தெருக்கள் அமைந்துள்ளன. 1961ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி இங்குள்ளார் தொகை 489: இப்பொழுதும் ஊரின் நிலைமையைப் பார்க்கும்பொழுது, இங்கு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இருக்கலாம் என்று தோன்றுகிறது.

*சாலைகளின் தன்மை*

பிள்ளையார்குப்பம் வரையில் கருங்கல் சரளையிட்ட கப்பிச் சாலையாகவும், அதற்கு மேற்பட்ட பகுதி மண் சாலையாகவும் உள்ளது.

உளுந்தூர்ப்பேட்டைக்கு எல்லாத் திசைகளிலிருந்தும் ரயில் வழியாகவும் பேருந்து வழியாகவும் சென்று சேரலாம். அங்கிருந்து மலைக்குச் செல்லும் தொலைவாகிய ஏறக்குறைய பத்து மைல் தூரத்திலும் பொதுப் போக்குவரத்து வசதிகள் இல்லை. தனி ஏற்பாடு செய்து வண்டிகளிலோ தனிப் பேருந்துகளிலோ செல்லலாம். தனி உந்துவண்டியுடையார் நினைத்த மாத்திரத்தில் எளிதில் செல்லலாம்.

### வழிக் காட்சிகள்

உளுந்தூர்ப்பேட்டையை விட்டதுமே திருநறுங்கொண்டைக்கு வந்து விட்டது போன்ற உணர்ச்சி மேலிடுகிறது. கொண்டை மலையை நோக்கிச் செல்லும் கிளைச்சாலை நன்செய் புன்செய் நிலங்களின் வழியே செல்லுகிறது. இடையிடையே சில சிறு பாடிகள் தென்படு கின்றன. இவற்றில் கல்கட்டடங்களைக் காண்பது மிக அருமையா யிருக்கிறது. அவ்வாறு ஏதேனும் குறுக்கிட்டால், அது கோயிலாகவோ அஞ்சல் நிலையமாகவோ இருக்கும். விழல் வேய்ந்த கூரை வீடு களுக்கு மத்தியில் ஏகதேசமாய்க் காணப்படும் இரண்டொரு காரை வீடுகள் அங்கு வாழ்வாரின் நிலைமையை நன்கு உணர்த்தும். பொதுவாகப் பார்க்குபோது, இன்னும் அங்குள்ள சிற்றூர்களை நவ நாகரிகம் முற்றும் ஆட்கொள்ளவில்லை என்னலாம்.

வழிநெடுகிலும் அங்கங்கே சிறிதும் பெரிதுமான ஏரிகள் சிலவும் கண்ணுக்கினிய காட்சிகளை நல்குகின்றன. இவற்றில் பெருகும் நீரின் துணைகொண்டு நன்செய்ப் பயிர்கள் நன்கு நடைபெறுகின்றன. முன்பனிப் பருவத்திலே எங்குப் பார்த்தாலும் பச்சைப்பசேல் எனக் காணும் வயல் வெளிகளே. பூமிதேவி, இப் பகுதியிலே பச்சைப்படாம் போர்த்து விளங்குவதுபோலக் காட்சி தருகிருள்.

### ஊர்சூழ் ஏரிகள்

திருநறுங் கொண்டையில் திருமலையை அடுத்துத் தெற்கிலும் வடக்கிலும் பெரிய ஏரி இருக்கிறது. இப்பொழுது ஏரியின் தென்மேல் பகுதியில்தான் நீர் மிகவும் நிரம்புகிறது. இது வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற ஏரியாகும். இதனை ஆக்கி உதவியவர் இராசராச சோழனின் சகோதரியாகிய குந்தவைப் பிராட்டியாராவர். அதனுல் இந்த ஏரி யைக் ‘குந்தவைப் பேரேரி’ என முன்பு வழங்கினர். இத் திருக் கோயிலில் காணப்படும் சாசனங்கள் இந்த ஏரியைக் ‘குந்தவைப் பேரேரி’ என்றும், ‘இவ்வூர்ப் பேரேரி’ என்றும் குறிப்பிடுகின்றன. இப்பொழுதுள்ளார் இதனைப் ‘பெரிய ஏரி’ எனச் சொல்லுகின்றனர்.

இதற்குச் சற்றுத் தென்மேற்கே மற்ஹெரு பெரிய ஏரியும் உள்ளது. இதன் குறுக்கே இவ்வூர்க்குச் செல்லும் மண்சாலை சென்று, பெரிய ஏரியின் தென்கரையைச் சார ஊரினுள் செல்லுகிறது. பெரிய ஏரியிலிருந்து சாலையின் குறுக்காக மதகுத் தூம்புவாயினின்று நீர் பாய்ந்து வயல்களுக்குச் செல்லுகிறது. இந்த இடத்தில் நிலையான பாலங்கட்டித் தண்ணீரைச் சாலையின் அடிவழியே பாயவிட்டால் சாலைப் போக்குவரவுக்குத் தடையின்றியிருக்கும். பேருந்துகள் செல்ல இந்த இடம் மிகவும் சிரமமாயுள்ளது. தனி ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்தாலன்றி இவ்விடத்தை ஊர்திகளின்வழிக் கடப்பது மிக அருமை யாம். இந்த இடம் சுதந்திரம் பெற்றுக் கால் நூற்றுண்டிற்கு மேலாகி யும் தக்க வசதியின்றி விடப்பட்டிருப்பதிலிருந்தே இக் கிராமம் எவ் வளவு ஒதுங்கியிருக்கிறது என்பதனை உணரலாகும்.

### அப்பாண்டைநாதர் பாலம்

பேரேரிக்குச் சிறிது தொலைவில் உள்ள மற்றொரு பெரிய ஏரிப்பக்கத்தும் இத்தகைய தொல்லை முன்பு இருந்துவந்தது. அங்குள்ள வாய்க்காலில் நீர் மிகுங்காலத்து அதன் ஊடே செல்லும் சாலையின் ஒரு பகுதி வெள்ளம் நிரம்பி, வண்டிகள் போகக்கூடாத நிலைமையாயிருந்தது. தாற்காலிகமான மரப் பாலம் அமைத்துத்தான் மக்கள் நடமாடி வந்தனர். இந்த இடைவெளியால் கொண்டை மலை வரையில் பேருந்துகள் செல்லலக்கூடாத நிலை முன்பு நேர்ந்து வந்தது. இந்தப் பகுதியில் இறங்கி மக்கள் நடந்தே சென்றுவர வேண்டியவரா யினர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஜைனப் பெரு மக்களின் நன்கொடை யால் இங்கு ஒரு பாலம் அமைக்கப்படவே, அத் தொல்லை அதனோடு நின்றது. இப் பாலப்பணிக்கு முன்னின்று மக்களை ஊக்கி, நன்கொடை திரட்டிக் கட்டி நிறைவேற்றியவர் வேதாரணியம் திரு. அனந்தராஜய்யன் முதலியார் அவர்களும், நல்லூர் திரு. A. சின்னதுரை, B.E. அவர்களும் ஆவர். இப் பாலத்திற்கு 'திரு. அப்பாண்டை நாதர் பாலம்' எனப் பெயர் சூட்டியுள்ளனர். 20-3-1970ஆம் நாள் இந்தப் பாலம் திரு. அனந்தராஜய்யன் முதலியார் அவர்களால் திறத்துவைக்கப்பட்டது.

இதுபோன்றே இப்பொழுது பெரிய ஏரிலிருந்து நீர்பாயும், இடத்தும் சிறியதொரு பாலம் கட்டி, அதற்குச் சந்திரநாதரின் திருப் பெயரைச் சூட்டலாம். சைனப் பெருமக்களின் திருப் பயணத் தலமாய்ச் சிறந்து விளங்கும் இவ்வூருக்குச் செல்லும் சாலை இன்னும் திருத்தமுற அமையாதது வியப்பைத் தருகிறது.

### வரலாற்றுச் சின்னம்

அரசாங்கம் முன்வந்து இவ்வூருக்குச் செல்லும் சாலையை நன்கு அமைத்து, குறிப்பிட்ட சில திருநாள்களின் போது, தனிப் பேருந்து வசதி உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து செய்யப்படுமானால், தொண்டர் திருக்கூட்டம் இங்குத் திரண்டு வந்து கொண்டேயிருக்கும். இத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகும் போது கொண்டைமலை சைனப் பெரு மக்களால் மட்டுமன்றி வரலாற்றுப் பழமையைக் காணவிழையும் வரலாற்றுசிரியர்களையும் உல்லாசப் பயணிகளையும் பெரிதும் கவரும்.

### சைனர் திருத்தலம்

திருத்தமில்லா இச் சிறிய கிளைச்சாலை வழியாய் இன்று வந்து போகும் சைனத் திருத்தொண்டர்களுக்குக் குறைவேயில்லை. திருப்பதி, திருத்தணி, பழனிமலைகளுக்கு இந்து சமயத்தார் சென்று பிரார்த்தனை செலுத்துவது போலவே சைனப் பெருமக்களும் இவ்வூருக்கு வந்து வழிபட்டு நேர்ச்சை செலுத்திப் போகின்றனர்.

பத்திப் பரவசத்துடன் சிராவகப் பெருமக்கள் இங்கு வந்து அப்பாண்டை நாதருக்குச் சிறப்பு வழிபாடு செய்வதைக் காண்பது கண்கொள்ளாக் காட்சியாகும். படை யாதுமின்றித் தியானமாகிய வாளைக் கொண்டு அணியாது அழகியானாய்த் திருவளர் தாமரைமலர் மேலே நின்றருளும் அப்பாண்டை நாதரின் அருட்பார்வைக்கு இலக்காவார் உலகச் சுழற்சியிலிருந்து அமைதிநிலை பெறுவார் என்பது திண்ணம்.

### திருநறுங்கொண்டை மலை

இத் திருமலையை அப்பாண்டை நாதர் உலாப் பாடிய அனந்த விசயர் பின்வருமாறு போற்றுகிறார் :

'கருமக் கடலைக் கணத்திற் கடந்தோன்
தருமக் கடலான் தயாளன்—திருமேவும்

அப்பாண்டை நாதன் அடைந்தோர் தமைக்காக்கும்
பொற்பாந்தள் நீழலுறை போதனும்—இப்பாரெண்

கொண்டை மலையாய்க் கொழும்பசும்பொன் மாமலையாய்
வண்டமிழோர் போற்றும் வனமலையாய்க்—கண்டோர்

சினமலையாய் வேணு மலையாய்த் திறவோர்
மனமகிழ்ந்து போற்றும் மலையாய்—வனமுடைய

நாகம் மிகுமலையாய் நன்மருந்து மாமலையாய்
ஆகும் புகழுஞ் சனமலையாய்—சீகரமே

ஆனபுக ழானமலை ஆணிவிழி காணுமலை
ஆன சுரனசுர னுனமலை—கோனுறையும்

தென்மலை'—

(அ. உலா. 29-35)

இத்தகைய வனப்புடைய இந்த இனியமலை, இன்று கருங்கற் பாறைகளாய்க் காட்சி தருகிறது. இங்கே சிறிதும் பெரிதுமாய்ச் சங்கிலிப் பின்னல் போன்ற பொற்றை முகடுகள் மலையைச் சூழவும் உள்ளன. கொண்டையூரின் வடபகுதியிலே இரண்டு பெரும் கற்பாளம் போன்ற பெருங் கற்பாறைகளைத் தன்மேல் கொண்டதாய்க் கண்ணைக் கவரும் இச் சிறு குன்று காட்சி தருகிறது. இஃது அறுபதடி உயரமுள்ளது.

### மலைக்கோயிலின் அமைப்பு

எல்லாவற்றினும் பெரியதாய் அமைந்த கற்பாளம் போன்ற பெரும்பாறைகள் இரண்டும், எதிரெதிரில் கிழக்கும் மேற்குமாய், இயற்கையில் அமைந்து உச்சியில் ஒன்றாய் இணையும் நிலையில் நெருங்கியுள்ளன. இவ்விரண்டு பாறைகளுள் கீழ் பாலுள்ள பாறையில்

பார்சுவநாதரின் திருவுருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இவர் திருவுருவம் பாறையிலேயே செதுக்கி அமைக்கப் பெற்ற புடைப்புச் சிற்பமாகும். பார்சுவநாதரின் திருமுடியின் மேலாக ஐந்தலைப்பாம்பின் படமும் அதன்மேல் திருமுக்குடையும் காட்சியளிக்கின்றன. இருபுறமும் பறக்கின்ற நிலையில் அமைந்த இருதேவப் பணியாளர்களும் உள்ளனர். இவருடைய திருவடியின் கீழே தாமரைமலர் உள்ளது. அதன் கீழே பாறையுடன் இணைத்துக் கல்மேடை ஒன்றும் அமைக்கப் பட்டிருக்கிறது. அப்பாண்டை நாதரின் திருவுருவத்திற்கு வழிபாடு செய்வதற்காக இது பின்னுளில் அமைக்கப் பெற்றதாகும்.

### பார்சுவநாதர்

பார்சுவநாதர் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுள் இருபத்து மூன்ருமவராவர். இவரை 'அப்பர்' என்றும், 'அப்பாண்டார், என்றும், 'அப்பாண்டை நாதர்' என்றும் ஆன்ருேர் முதல் யாவரும் அழைக்கின்றனர். அப்பாண்டை நாதர் என்ருல், அப்பனுயும் ஆண்டையாயும் நம்மைக் காத்தளிக்கும் இறைவன் என்பது பொருளாம். அப்பா, ஆண்டை, நாதா என்றெல்லாம் இறைவனை அழைப்பது பக்தர்களிடைப் பெரு வழக்காமன்ருே?

### திருமலையின் அடிவாரம்

திருநறுங் கொண்டைத் திருமலையின்மேல் செல்லுவதற்கு கிழக்குப் பகுதியில் தெற்கணையத் திருத்தமுற அமைந்த படிக்கட்டுகள் உள்ளன. படிக்கட்டின் வடபால் தொடக்கத்திலேயே மலைமேல் ஏறப் புகுவார்க்கு வலப்புறமுள்ள மேடையில், கிழக்குநோக்கி விருஷப தீர்த்தங்கரரின் திருமேனி காணப்படுகிறது. இத் திருவுருவம் திருக்கோயிலூருக்கு ஒன்பது மைல் தொலைவில் தென்கிழக்கில் உள்ள பாவண்டூரிலிருந்து கொண்டு வரப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது.[1]

அம் மேடையின் வடபுற மதிலோரமாகக் காவல் தேவதைகளின் உருவங்கள் உள்ளன. இது சாத்தையனின் உருவம் போலும். கல்லெழுத்துப் பொறிக்கப் பெற்ற கல் ஒன்றும் அதில் உள்ளது.

### சுனைக் காட்சி

படிக்கட்டுகளைக் கடந்து மேலே திருவாயிலிலுள்ள கோபுர வாயிலை அடையலாம். அங்கிருந்து கிழக்குநோக்கி ஏற்றமாகச் செல்லும் பாறைவழி மேலே சென்ருேமாயின், தென் மேற்கு மூலையில், நமக்கு இடப்புறமாக நீர் நிரம்பிய ஓர் இயற்கைச் சுனை காட்சிக்கு இலக்காகும். இதன் நீர் சற்றுப் பாசி படிந்ததுபோல் தோற்றமளிக்

1. District Gazetteers, South Arcot by Dr. B. S. Baliga, B. A (Hons) Ph.D (London)—Page 481 of 1962.

கிறது. ஒரு காலத்தில் இச் சுனைநீர் பொங்கி அருவியாய் வழிந்தது என்றும் தெரியவருகிறது. 'சிரியலும் தங்கோன் சுனையருவி' என அனந்தவிசயர் தம் உலாப் பிரபந்தத்துள் குறித்திருப்பது (349) இதற்குச் சான்றாகும்.

மேலும், இச் சுனையில் அழகிய குவளை, வள்ளை முதலிய நீர்ச் செடி கொடிகள் நிரம்பிப் பூத்துக் கண்ணுக்கினிய காட்சி நல்கியதெனவும் உலா ஆசிரியர் குறிப்பிடுகிறார் :

'சொற்கரியான் வெற்பதனைச் சூழ்ந்த சுனை தன்னில்
நற்குவளை போன்ற நயனத்தாள்—பொற்பணமாம்

ஐந்தலை நன்னாகத் தணிநிழலோன் பூஞ்சுனையில்
வந்தகொடி வள்ளை மணிக்குழையாள்' (அ. உலா. 431-432)

எனவரும் உலா-ஆசிரியரின் சித்திரம் இச் சுனை, அழகின் இருப்பிடமாய் விளங்கியமையைப் புலப்படுத்தும். இன்றோ, பச்சை வண்ணராம் பார்சுவநாதரை நினைப்பூட்டுவதுபோல அமைதியாய்ச் சலனமின்றிப் பசுமை பூத்துக் கிடக்கிறது.

### வெளிச் சுற்றுலை

இச் சுனைப் பகுதியிலிருந்து வலப்புறம் திரும்பி மேலும் சற்று ஏற்றமான சாய்வாய் அமைந்த பாறை வழியே சென்றால் திருக் கோயிலின் முன் வாயிலை அடையலாம்.

கோபுர வாயிலிலிருந்து மேற்கு நோக்கிய ஏற்றம் சென்றதும் சுனைப் பகுதியிலிருந்து வலப்புறம் திரும்பிக் கிழக்கு நோக்கிச் சன்னிதிக்கு வாராமல், திருக்கோயிலை வலமாக வந்தும் பத்தர்கள் திருமுன்பை அடைகின்றனர். இந்த வெளிச் சுற்றுலை பள்ளம்மேடாய் அமைந்த பாறை பரம்பிய வழியாகும். திருக் கோயிலின் வெளிச் சுற்றுலை மலைப் பகுதியைச் சூழ சதுர வடிவில் மதில் எடுக்கப் பட்டிருக்கிறது. அம்மதிலின் தென்புறம் நோக்கினால் குந்தவைப் பேரேரியும் திருநறுங் கொண்டையூரும் நன்கு தெரியவரும். வெளிச் சுற்று மதிலின் நாற்புறமும் வெளியே சிறிது தொலைவு வரை அங் கங்கே சிறிதும் பெரிதுமான கற்பொற்றைகள் தலைநீட்டிக் கொண் டிருக்கின்ற தோற்றம் தேவகணத்தார்தம் பரிவாரங்களுடன் மலையைச் சூழவும் நெருங்கி நின்று அப்பாண்டை நாதப்பெருமானுக்கு வணக்கம் செலுத்துவது போலுள்ளது.

வடபாலுள்ள வெளிச் சுற்று மதிலில் ஒரு வாயில் அமைக்கப்பட் டிருக்கிறது. அவ் வாயில் அடிவாரத்துள்ள பேரேரிக்குச் சென்று திருக் கோயிலுக்கான நீர் முகந்து வருவதற்காகப் பயன்படுத்தப் பெற்ற வழியாகும் என்று அங்குள்ளார் உரைக்கின்றனர். ஆனால், இப்பொழுது

அப்பக்கத்துள்ள ஏரியும் தூர்ந்த நிலையில் உள்ளது; படிக்கட்டுகளும் சிதைந்து போய்விட்டன.

### சன்னிதி முகப்பு மண்டபம்

திருக்கோயிலின் முகப்புச் சன்னிதி கிழக்கு நோக்கியுள்ளது. கொடிமரத்தையும் முகப்பு மண்டபத்தையும் தாண்டி உள்ளே திருவாயிற்படி ஏறும்போது, எதிரே சந்திரநாதரின் திருவுருவம் முதலில் காணப்படும். வெளிமுகப்பு மண்டபத்தை அடுத்திருந்த பதுமாவதியம்மன் கோயில் இப்பொழுது பழுதுபட்டுள்ளது. ஆகவே, அங்கிருந்த அம்மையாரின் திருவுருவம் ஸ்ரீ சந்திரநாதர் திருக்கோயிலின் சன்னிதி அர்த்தமண்டபத்தின் வடபால் தென்திசை நோக்கி வைக்கப்பட்டிருக்கிறது. மற்றும் தருமதேவி, இயக்கி முதலியோர் திருவுருவங்களும் அதே வரிசையில் உள்ளன.

### சந்திரநாதர் திருக்கோயில்

ஸ்ரீ சந்திரநாதர் திருக்கோயிலின் தென்சார்பிலும் பெரும் பாளப் பாறை ஒன்று உள்ளது. இதனோடு சேர்த்துச் சந்திர நாதர் திருக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. இவருடைய கோயிலை வலம் வரும் நிலையில் சுருங்கிய அளவிலான உள் சுற்றாலையும் திறந்தவெளியும் உள்ளது. தென்புறச் சுற்றாலை பாறையுடன் இணைந்து செல்லுகிறது.

ஸ்ரீ சந்திரநாதரை வலம் வந்து சன்னிதிமுன் அர்த்த மண்டபத்திலிருந்து நோக்கும்போது, அவர் வெண்ணிறத் திருமேனியுடையராய் மண்டலமிட்டு மலர்மேல் அமர்ந்த நிலையில் தியான ரூபியாய்க் காட்சி தருகிறார். ஸ்ரீசந்திர நாதர் எட்டாம் தீர்த்தங்கரராகிய சந்திரப்பிரப சுவாமியாவார். இவருடைய நிறம் 'வெள்ளை' என்பது ஸ்ரீபுராணத்துள் வரும் இவர்தம் சரித வாயிலாகத் தெரியவரும். (ஸ்ரீ புராணம், பக். 214—221). இவருடைய திருவுருவம் வெள்ளைப் படிகக் கல்லால் சமைக்கப் பெற்றது போலக் காட்சி தருகிறது. அது சுதை முதலியவற்றாலான திருவுருவம் என்றும் தெரிந்த ஒரு சிராவகர் சொல்லக் கேள்வி. அவரைத் தாம் பாடிய உலாவில் அனந்தவிசயர்,

'சந்திர காந்தப் படிகச் சந்திரநன் னாதனே' (அ. உலா. 17)

என்று போற்றுவதால் அவருடைய பளிங்குத் திருமேனியின் பழமை புலப்படும்.

### பார்சுவநாதர் சன்னிதி வழி

ஸ்ரீ சந்திரநாதரின் சன்னிதியின் முன்னர் உள்ள அர்த்த மண்டபத்தின் வடபால் நடுப்பகுதியில் உள்ள இருபாறைகளின் இடைவெளி

வழியே பார்சுவநாதரின் சன்னிதிக்குச் செல்ல வேண்டும். பாறை மேல் சாய்வாயுள்ள இடைவெளி வழி மேலே சென்றதும் அப்பாண்டை நாதரின் சன்னிதியை அடைகிறோம்.

### அப்பாண்டைநாதர் திருமுன்

சன்னிதி முன்பும், அதனை அடுத்து அப்பாண்டை நாதரின் வலப்புற மாய் வடபாலும் உள்ள சமதளமண்டபம் இருபெரும் பாறைகளையும் இணைத்துக் கட்டப்பட்டிருக்கிறது. இதில் பாறையின் அகத்து முன்னு ளில் முனிவர்கள் வாழ்ந்த பாழியும் உள்ளதாக அவ்வூரார் ஒருவர் உரைத்தனர். அப்பாண்டை நாதரின் எதிரிலும் வலப்புறமாயும் மக்கள் அமர்ந்து தியானம் செய்வதற்கேற்ற நிலையில் இம் மண்டபம் உள்ளது. இதில் உற்சவ மூர்த்தங்கள் வடபக்கச் சுவர் ஓரமாகவும் கிழக்குப் பக்கமும் வைக்கப்பட்டுள்ளன. அப்பாண்டை நாதரின் எதிரேயுள்ள பாறையின் இடப்பக்கத்துள்ள நிலத் தூணிலும் அப்பாண்டை நாதரின் இடப்புறமாய் மேற்கூரையிலிருந்தும் இரண்டு மணிகள் தொங்கவிடப் பட்டுள்ளன.

### வடபாழியான்

ஸ்ரீ சந்திரநாதர் சன்னிதியின் வடபுறமாகவும் திருமலையின் வட புறமாகவும் அப்பாண்டை நாதரின் சன்னிதி உள்ளமையால் அவர் நின்றருளும் திருக்கோயிலை 'வடபாழி' என ஆன்றோர் குறிப்பிட் டுள்ளனர்.

— 'மிக்கவட
பாழியான் பாறவினை பாழியா நன்மையரு
ளாழியான் வாழியற வாழியான்' (அ. உலா. 11-12)

என அனந்தவிசயர் தம்முடைய உலாவில் அப்பாண்டை நாதரை 'வடபாழியான்' எனக் குறிப்பிடுதல் காணலாம்.

### அப்பாண்டைநாதர் திருவுருவம்

வடபாழியானின் திருவுருவம் கிழக்குப் பெரும்பாறையில் குடைந்து புடைப்புச் சிற்பமாகப் பொறிக்கப் பெற்றிருக்கிறது. அப் பாண்டை நாதர் நின்ற திருக்கோலத்தில் இரு கரங்களையும் தொங்க விட்ட நிலையில் தியானமூர்த்தியாய் விளங்குகிறார். இவர்தம் திருவடி களின் கீழ் தாமரைமலர் உள்ளது. மேலே ஐந்தலை நாகம் தன் படத் தால் அணி செய்து விளங்குகிறது. அதற்கும் மேலாகத் திருமுக்குடை காட்சி தருகிறது. இரு புறமும் இரண்டு தேவர்கள் ஏத்துவது போன்ற உருவமும் பாறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேற்குத் திக்கு நோக்கி அப்பாண்டை நாதர் அருட்காட்சி நல்குகிறார். இவர்தம் திரு வுருவம் உள்ள பாறையோடும் எதிரேயுள்ள மேற்குப் பெரும் பாறை யுடனும் இணைத்துக் கல்லால் மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இம்

மண்டபத்தின் மேலைச் சுவரில் சிறிய கற்புழைகளும் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றின் வழியாய் வெளிச்சம் உள்ளே வந்து பரவு கிறது.

### வழிபடு முறை

பெருமானின் திருமேனியில் எவ்வகையான ஆடை அணிகளும் இல்லை; சாத்துவதும் இல்லை. அவன் திகம்பரனுய்த் திகழும் பெருமான். 'அரையதனில் ஆடையணியா வழகன்' (அ. உலா. 174) என்கிருர் அனந்தவிசயர். பகவானின் திருப்பாதங்களில் மலர் வைத்து வணங்குகின்றனர்.

அப்பாண்டை நாதருக்குத் திருமஞ்சனம் நடைபெறுகிறது. பால், தயிர், இளநீர், பழங்கள், சந்தனம் முதலியவற்ருல் திருமுழுக் காட்டு கின்றனர். தேன் மட்டும் இங்கு அபிஷேகத்திற்குச் சேர்க்கப்படுவ தில்லை. சிறப்பு நிகழ்ச்சிகளின்போது அபிஷேகம் பெரிய அளவில் நடைபெறுகிறது. அனந்தவிசயரும் தம்முடைய உலாவில், அப் பாண்டை நாதரை,

'கற்பூரட் டாதி கமழ்குங் குமமுடனே
செப்பரிய கெந்தாபி ஷேகத்தன்' (அ. உலா. 151)

என்றும்,

'மணமகிழ்ந்த கெந்தாடி மால்போற்றி (அ. உலா. 239)

என்றும் அப்பெருமானின் திருமுழுக்கினைச் சிறப்பாய்ப் போற்றியுரைக் கின்ருர்.

### போற்றி மாலை

ஞானத்தின் திருவுருவாய் விளங்கும் அப்பாண்டை நாதரைப் பத்தி சிரத்தையுடன் தேவரும், விஞ்சையரும், மன்னவரும், சிராவகரும் பணிந்தேத்திப் பிறவிப் பெரும்பயனைப் பெறத் திரளுகின்றனராம். இன்றும் பத்தர் குழாம் வந்து வழிபாடு செய்தவண்ணம் உள்ளது. அப் பெருமானைப் போற்றி வழிபட்டு உய்வதற்கு அனந்தவிசயர் தம்முடைய உலாமாலையில் ஒரு போற்றிமாலையும் தருகிருர். அது வருமாறு :

காமாதி வென்ற கடவுளடி போற்றி !
பூமாலை பூணுப் பொருள்போற்றி !—தாமெண்

குணமுடையாய் போற்றி! கோதி லறமே
மணமலிந்த கெந்தாடி மால்போற்றி !—குணமார்ந்த

நீதியாய் போற்றி! நிலாவெயிலாய் தாள்போற்றி !
ஆதியாய் போற்றி ! அயன் போற்றி !—நீதிசேர்

மூவொளியாய் போற்றி ! மூவா முதலான
பூவலரும் பிண்டிப் பொருள் போற்றி !—தேவனே,

நின்மலனே போற்றி ! நிராயுதனே பேற்றி !
கன்மமிலா ஞானக் கடல்போற்றி!—நன்மை

பரஞ்சோதி போற்றி ! பணிநிழலோய் போற்றி !
நிரஞ்சனனே போற்றி ! நிழல் போற்றி !—பரவுவினை

மாற்றிவரு வாய்போற்றி ! மன்னுபுக ழாய்போற்றி !
போற்றியே போற்றி ! (அ. உலா. 238-244)

### திருக்கோயிலின் பழமை

அப்பாண்டை நாதர் திருவுருவம் இம் மலைப்பாழியில் முன்பு வாழ்ந்திருந்த தவமுனிவர்களால் அமைக்கப் பெற்றதாகும். கால வெள்ளத்தில் பெருமானின் திருவுருவம் இருந்த பகுதிகள் எல்லாம் மண்மேடிட்டு மறைக்கப்பட்டிருந்ததாம். அதன் மேலே செடி கொடிகள் முதலியனவெல்லாம் தூறுகளாய் மண்டிக் கிடந்தன.

ஒரு சமயம் மருந்து மூலிகைகளை வெட்டியெடுக்கச் சென்ற வேடர் சிலர், பெருமான் இருந்த பகுதியில் மண்வெட்டி கொண்டு வெட்டலாயினர். அப்பொழுது மண்வெட்டி பெருமானின் முன்கால் பகுதியில் பட்டு, வடுவும் உண்டாயிற்று. இப்பொழுதும் முன்பு வேடர்களால் நேர்ந்த வடு இதுவாகும் என்று முன் திருக்கால்களில் அருச்சகர் விளக்கொளியைக் காட்டி விளக்குகின்றார்.

வேடர்களால் தற்செயலாய்க் கண்டுபிடிக்கப்பட்டுப் பின்னர் மக்களுக்குப் பெருமான் எழுந்தருளியிருக்கும் செய்தி தெரிய வந்ததாம். இச் செய்தியை இத்தலம் பற்றிய பாடல்களிலும் கவிஞர் இணைத்துப் பாடியுள்ளனர் ; வாய்மொழியாய் வழங்கும் ஒரு சிந்துப் பாடலும் உள்ளது (இணைப்பு-3ல் காண்க).

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான மலைகளில் காணப்படும் ஜினர் பள்ளிகளைப் போன்றதொரு பள்ளியாகவே இம்மலைப்பாழி முன் காலத்தில் அமைந்திருந்தது. அங்கு வசித்த தவத்தவர் மறைந்த பின்னர் காலகதியில் அப்பகுதி மண்மூடிப்போய்ச் செடி கொடிகள் முளைத்துத் தூறுமண்டியிருக்கலாம். பின்னாளில் வேடரால் பெருமானின் திருவுருவம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே மண்டபங்களும் கோபுரங்களும் அமைத்துத் திருக்கோயில் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்று ஊகிக்க இடமுண்டு.

### கல்வெட்டுகள்

திருநறுங்கொண்டையிலுள்ள பழைய கல்வெட்டுகள், இவ்வூர் நடுவில் மண்டலத்துத் திருமுனைப்பாடி நாட்டைச் சார்ந்துள்ளதாய் அறிவிக்கின்றன. திருமுனைப்பாடி நாடு என்பது பெண்ணையாற்றல்

வளம் பெருக்கப்படும் பகுதி. சோழராட்சிக் காலத்தில் இது 'ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடி' என வழங்கப்பெற்றது.[1]

**திருநறுங்கொண்டை**

திருநறுங்கொண்டையைத் 'திருநறுங் குன்றம்' எனவும் இப்பொழுது வழங்குகின்றனர். இத் திருத்தல அருகர் தோத்திரப் பூந்துணருக்கு, 'பல ஜினதாசர்களால் பாடப்பெற்ற திருநறுங்குன்றம் அப்பாண்டை நாதர் தோத்திரத் திரட்டு' எனப் பெயர் சூட்டியுள்ளனர். 'திரு' என்னும் சிறப்படை மொழியைப் புள்ளியிட்டுக் காட்டியுள்ளனர். எனவே, நறுங்குன்றம் என்பதுவே இதன் இயற்பெயர் என்பது போதரும். 'நறுங்குன்றம்' என்னும் வழக்கு மிகவும் பிற்பட்டெழுந்ததாகும். இத் தலத்துள்ள சாசனங்களும், சாசனப் பாடல்களும், பழைய நூல்களும், பல காலங்களில் பாடப்பெற்ற தோத்திரப் பாக்களும் 'திருநறுங்கொண்டை' என்றே குறிப்பிடுகின்றன. இலக்கியப் பாடல்கள் சிலவற்றில் நறுங்கொண்டை,[2] கொண்டை[3] என்றும் இவ்வூர்ப் பெயர் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம். அப்பாண்டை நாதர் உலாவில் ஓரிடத்து, 'சிரீகொண்டை' (438) என்றும் இவ்வூர்ப் பெயர் சுட்டப்பட்டுள்ளது.

'திருநறுங்கொண்டை' என்னும் இவ்வூரின் பெயரை, 'திரு' என்னும் அடைமொழியின்றி 'நறுங்கொண்டை' எனவும்,[4] அடைமொழி எதுவுமின்றிக் 'கொண்டை' எனவும்,[5] இலக்கியப் புலவர்கள் வழங்குகின்றனர்.

ஊரின் பெயராதலேயன்றி இக் 'கொண்டை' என்பது அங்குள்ள திருமலையையும்[6] சினாலயத்தையும்[7] குறித்தும் வழங்கப்படுகிறது.

---

1. 'ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடி நாட்டுத் திருநறுங்கொண்டை' (S.I.I. Vol. VII. 1011)

   'ராஜராஜ வளநாட்டுக் குன்றத்தூர் நாட்டுத் திருநறுங்கொண்டை' (S.I.I. Vol. VII. 1012)

   'முனைப்பாடிப் பள்ளிச் சந்தம் திருநறுங்கொண்டை' (S.I.I. Vol. VII. 1015)

   'ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடிப் குன்றத்தூர் நாட்டுத் திருநறுங் கொண்டை' (310 of 1939-40)

   'நடுவில் மண்டலத்து திருமுனைப்பாடி நாட்டு குறுக்கைக் கூற்றத்து ஆதனூர்ப் பற்றுத் திருநறுங்கொண்டை' (303, 304 of 1939-40)
2. நறுங்கொண்டை: அப்பாண்டை நாதர் உலா, காப்பு 1, 2; கண்ணி 94 119, 427, 507, 618.
3. கொண்டை: அப்பாண்டை நாதர் உலா, கண்ணி 83, 86, 94, 445, 585.
4. 'நறுங்கொண்டை நகர்' அ. உலா. 94.
   'நறுங்கொண்டை' அ. உலா, காப்பு 1, 2, 94, 119, 427, 507.
5. 'கொண்டை' அ. உலா. 83, 507, 585, 618.
6. 'கொண்டைமலை' அ. உலா, 31, 65, 498, 503.
   'கொண்டைகிரி' அ. உலா, 445.
7. 'கொண்டை சினாலயம்' அ. உலா. 86.

கொண்டை மலையில் திகழ்வதனுல் அப்பாண்டைநாதர் 'கொண்டையான்' என்றும் அழைக்கப்படுகிருர். கொண்டை மலையும் 'சிரீ கொண்டை'[1] என்னும் சிறப்படை பெறுகிறது.

'கொண்டை' என்பது உச்சி, மலைக்குன்று, மலை என்னும் பொருள் தருவதாகும். நாகார்ச்சுனகொண்டா, ரேணிகொண்டா, பள்ளிகொண்டா முதலிய ஊர்ப் பெயர்களிற்போல இங்கே கொண்டை என்பது மலையைக் குறிப்பது என்பது தெளிவு. பூமிக்குக் குடுமிபோன்று தலை தூக்கியுள்ளமையால் மலை என்பது கொண்டை என்னும் பெயரையும் பூண்டிருக்கலாம். கொண்டைகிரி (445), கொண்டைமலை (31, 65, 498, 503) என அப்பாண்டைநாதர் உலாவில் வரும் வழக்குகளும் சிந்திக்கற்பாலன.

### வேறுபெயர்கள்

மேலும், சினகிரி, உச்சயந்தவாழ்மலை, வடபாழி, வடதிருமலை, திருமேற்றிசை முதலிய பெயர்களும் இத் தலத்திற்கு உண்டு.[2]

### குந்தவைப் பேரேரி

இங்குள்ள பெரிய ஏரிக்குக் 'குந்தவைப்பேரேரி' என்பது பெயர். இதனை இராசராசசோழனின் சகோதரியான குந்தவைப்பிராட்டியார் செய்வித்தமையால் இதற்கு இப்பெயர் வழங்குவதாயிற்று.[3] இந்த ஏரிக்கு ஆற்றூரைச் சேர்ந்த பெருமாள் என்பவர் நீர் பாய்

---

1. 'சிரீகொண்டை' அ. உலா. 438.
2. 'சினகிரி யப்பர்க்கு' (299 of 1939-40)
   'சினகிரி வாழுய்யன்' (அ. உலா. 55)
   'நற்கமல மீதுறையும் நாதன் சினகிரிமேல்' (அ. உலா. 433)
   'பச்சை மரகதமேய் பாளைப் பரிமளத்தாள்
   உச்சயந்த வாழ்மலைமேல் ஓங்குவாள்' (அ. உலா. 74)
   'பிறவிப் பெருங்கடலை நீந்திய பெய்வளையாய்
   உறவுத் தமர் வாழும் உச்சந்த வாழ்மலைமேல்
   அறமிகவும் செய்யும் அம்மையடி யிணைகள்
   நறை மிக்க பூவணையால் நல்லிப் பொழிந்தேத்தி' (திருவெம்பாவை, 16)
   'மிக்க வடபாழியான்' (அ. உலா. 11-12)
   'வடபாழிப் புயல் வண்ணனே' (திருமேற். அ. 5)
   '(ஆதியே) திரு நறுங் கொண்டை வடதிரு மலைமே
   லப்ப னேயடி யேனையு மஞ்சலென் றருளே' (சம்பந்தர் பதிகம் 1-11)
   'திருமேற்றிசைச் செல்வன்' (திருமேற். அ. 88)
   'திருமேற்றிசையான்' (அ. அ. உலா. 533)
3. 'குந்தவைப் பேரேரி' (S. I. I. Vol. VII. 1017)
   'இவ்வூர்ப் பெரிய ஏரி' (S. I. I. Vol. VII. 1015)
   'இத்திரு நறுங் கொண்டையில் குந்தவைப் பேரேரி உடைப்பின்பாடு
   திருத்திவிட்ட நிலத்து' (310 of 1939-40)

வதற்கான தூம்பு ஒன்று அமைத்த செய்தி சாசனப் பாடல் ஒன்ருல் தெரியவருகிறது :

'மாட மதிளாறை மன்னு புகழ்ப்பெருமாள்
நீடு நறுங்கொண்டை நெல்விளையப்—பீடார்ந்த
காருக்கு நேராகு மாண்கையன் கார்க்கடல்போல்
ஏரிக்குத் தூம்பமைத்தான் இன்று.' (325 of 1939-40)

கார்க்கடல் போன்றது குந்தவைப் பேரேரி என வருணிக்கப் படுவதால் இதன் பெரும்பரப்பு நன்கு புலனுகும்.

**பெரும் பள்ளி**

திருநறுங்கொண்டை அப்பாண்டை நாதரின் திருக்கோயிலை 'நாற்பத் தெண்ணுயிரப் பெரும்பள்ளி' என்றும் ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது (S.I. I. Vol. VII, 1014). 'பள்ளி' என்பது சைன சமயத் தவத்தோர் தவம்புரிந்த குகைகளைக் குறிக்கும்.

**சமணர்பாழி**

இதனைப் 'பெரிய பாழி' என்றும் ஒரு சாசனம் சுட்டுகிறது (S. I. I. Vol-VII, 1015). பாழி என்பது இடம், கோயில், நகரம், ஊர், பாசறை, முனிவர் வாழிடம், குகை முதலிய பல பொருள் பயக்கும் சொல்லாகும். எனினும் இப் 'பாழி' என்பது சிறப்பாகத் துறவு பூண்டொழுகுஞ் சான்றேர் இருப்பிடங்களைச் சுட்டுவதாய்க் கொள்வதே ஈண்டைக்குப் பொருத்தமாகும். எனவே, இத்திருத்தலம் சமண சமயச் சான்றேர் பலரின் இருப்பிடமாய் முன்பு விளங்கியமை போதரும்.

**வீரசங்கம்**

திருநறுங்கொண்டைப் பாழியில் சமண முனிவராகிய சான்றேர் பலர் வாழ்ந்திருந்தனர். இங்கே மெய்ஞ்ஞானியாய்த் திகழ்ந்த குணபத்திரமுனிவர் 'வீரசங்கம்' என்பதை நிறுவினர். இதனுல் இவருக்கு 'வீரசங்கப் பிரதிஷ்டாச்சாரியர்' என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இம்மூதூரில் தவத்தவர் சங்கமும் நற்றமிழ் வல்ல புலவர் குழுவும் எண் திக்கும் புகழச் சீருஞ் சிறப்புமாய் விளங்கின.

' வீரன் திருவறம் பேணுமெய் வீரசங் கத்தவரே
சேருங் கனகச் சினகிரி யப்பர்க்குத் தெய்வமணங்
காலுந் தெரியற் குலோத்துங்க சோழன் கொடுத்த நல்லூர்
சேலா ரும்பழ னஞ்செறு சரந்தைத் தடம் பதியே.'
(கல்வெட்டுப் பாடல், 299 of 1939-40)

' இடரழுங் கும்பரிசு சுடர்விளங் குங்கனகம்
எனவருந் துந்தி ருவுளத்
திடதவங் கொண்டுசெறி பவர்கடஞ் சங்கம்வளர்
திருநறுங்கொண்டை மலையே ?
(திருநறுங்கொண்டை மலைப் பதிகம் : 6)

'உற்றதுணை யுன்னடிக்கே யறன்றான் வீர
ஓங்குதன்ம தேவதையு முயரு மூதூர்
நற்றமிழ்சேர் நறுங்கொண்டை யருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே.

(அப்பர் பதிகம்: 2)

இவ்வாறு கல்லெழுத்திலும் அப்பர், சம்பந்தர் முதலியோர் பாடிய துதிப்பாடல்களிலும் வீரசங்கத்தையும் முனிவர் திருக்குழாங்களையும் தமிழ்ப்புலமை மிக்காரையும் போற்றியுள்ளமை காணலாம்.

*குணபத்திர முனிவர்*

குணபத்திர முனிவர் சூடாமணி நிகண்டினை ஆக்கிய வீரை மண்டல புருடரின் குருவுமாவர். இவரைப் போற்றும் பாடல் ஒன்று அப்பாண்டை நாதர் கோயில் கோபுர வாயிலின் மேல்தளத்தில் உள்ள கல்வெட்டில் காணப்படுகிறது.

'வண்டமிழின் பண்பும் வடநூலும் நன்குணர்ந்து
தெண்டிரைசூழ் மண்மீது சீர்பெற்றான்—கொண்டைமலை
வித்தகன ருட்கடல்மி குத்தபுகழ் வெற்பிலிசை
வைத்தகுண பத்திரமுனி வன்'

என்னும் இப் பாடல் குணபத்திர முனிவரின் தமிழ்-வடமொழிப் புலமையை நன்கு சிறப்பித்துரைத்தல் காண்லாம். இப் பெரு முனிவரையும் இவர்தம் சீடராகிய மண்டல புருடரையும் அப்பாண்டை நாதர் உலாப் பாடிய அனந்தவிசயரும் அன்புடன் இறைஞ்சிப் புகழ்ந்துரைக்கிறார் :

'ஆமாரி யார்கள் அமைந்தசத பத்திர
மாமாலை சொற்கொண்ட மாதவன்—பாமாலை

மண்டலம காபுருடன் மன்னியவீ ரேந்திரனால்
கண்ட நிகண்டின் கவிசிறந்தோன்—கொண்டை

குணபத்ர மாமுனிவன் கொண்டுலகம் ஏத்தக்
கணதரராய்க் காசினியில் வந்தோன்—குணதரனும்

இம்முனிவன் பாதம் இறைஞ்சி யியல்பாகச்
செம்மையுடன் நான்றெழுது செப்பவே'— (அ. உலா, 82-85)

மேலும், சிற்றாமூர் தருமதேவி ஊசலில், அக் கவிஞர் திருநறுங் கொண்டையை வாழ்த்துமிடத்து,

'அருட்சிந்தை யிளங்கொடிக ளாசு பாடி
அதன்முன்னும் சம்பந்தன் பாடல்கொண்டு
குறிச்செல்வன் குணபத்திர முனிவன் சிந்தை
குடிகொண்ட அப்பனறுங் கொண்டை வாழ்த்தி'

(சிற்றாமூர் தருமதேவி ஊசல், 6)

என அப்பாண்டை நாதரைக் குணபத்திர முனிவனின் சிந்தையையே கோயிலாய்க் கொண்டவர் என்று புகழ்ந்துரைத்தலால் அம் முனிவருக்கும் திருநறுங்கொண்டைத் திருத்தலத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு இனிது விளங்கும்.

### வீரசங்கப் புலவர் பெருமை

குணபத்திர முனிவர் ஏற்படுத்திய வீரசங்கமும், அவரைப் போலவே வடமொழி, தென்மொழி வல்ல புலவர் பெருமக்கள் நிறைந்ததாய், வழிவழியாகத் தமிழகத்திலே புலமைக்கோர் பெரு நிலையமாய் விளங்கி வந்தது என்பது பிற வரலாற்றுக் குறிப்புகளாலும் செவிவழிச் செய்திகளாலும் தெரியவருகின்றன.

கல்வியில் சிறந்த கம்பர் தாம் இயற்றிய இராமாயணப் பெருங் காவியத்தை இங்கு வாழ்ந்த சமணப் புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றி அவர்களின் ஒப்புதலைப் பெற்ருர் என்று சொல்லுகின்றனர்.[1] கிட்கிந்தா காண்டம் நாடவிட்ட படலத்திலே சுக்கிரீவன் அனுமனுடன் தென்திசைச் செல்லும் வானரவீரர்க்கு வழிகூறுமிடத்து வடசொற்கும் தென்சொற்கும் வரம்பாய் நிற்கும் திருவேங்கட மலையை அறிமுகப்படுத்துகிருன். இந்த இடத்தில் திருவேங்கடமலையில் உறையும் உயர்தவத்தவராகிய அருகமுனிவரின் அளப்பில் பெருமையை அவன் எடுத்து மொழிகிருன் :

'இருவினையும், இடைவிடா எவ் வினையும்,
இயற்ருதே, இமையோர் ஏத்தும்
திருவினையும், இருபதம்தேர் சிறுமையையும்,
முறை ஒப்பத் தெளிந்து நோக்கி,
'கரு வினையது இப்பிறவிக்கு' என்று உணர்ந்து, அங்கு
அது களையும், கடை இல் ஞானத்து,
அரு வினையின் பெரும்பகைஞர் ஆண்டுஉளர் : ஈண்டு
இருந்தும் அடி வணங்கற் பாலார்.

(கம்ப. கிட்கிந்தா. நாடவிட்ட. 27)

இருவினை கடிந்து கடையில் ஞானத்தோராய் வாழ்ந்த அருக முனிவரை 'அருவினையின் பெரும்பகைஞர்' என்றும், அவர் திக்கு நோக்கித் தொழற்குரிய பெரியரூவர் என்பதனை 'ஈண்டு இருந்தும் அடிவணங்கற்பாலார்' என்றும் கம்பர் மணங்கசிந்து போற்றுகிருர். இப் போற்றுதல் பாட்டையும் 'வீரசங்கத்தவர்க்கு' அவர் வாசித்துக் காட்டினர் என்பர்.

மற்றும் அருகமுனிவர் வாழும் அம் மலையை அடுப்பார் வீடு பேற்றுக்குரிய நெறிச் செல்வர் என்னும் குறிப்பையும் கம்பர்,

---

1. Madras District gazetteers, South Arcot by Dr. B. S. Baliga, B. A., (Hons), Ph. D. (London), Late Curator, Madras Record Office, 1962. Page 481.

'கோடு உறு மால் வரையதனைக் குறுகுதிரேல்
உம்நெடிய கொடுமை நீங்கி
வீடு உறுதிர்; ஆதலினால் விலங்குதிர்; அப்
புறத்து, நீர் மேவு தொண்டை
நாடு உறுதிர்; உற்று, அதனை நாடுறுதிர்;
அதன் பின்னை, நனிநீர்ப் பொன்னிச்
சேடு உறு தண் புனல் தெய்வத் திருநதியின்
இரு கரையும் தெரிதிர் மாதோ'

(கம்ப. கிட்கிந்தா. நாடவிட்ட. 29)

என்னும் பாட்டில் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்திரசித்தன் போர்க்களத்தில் மாய்ந்தபோது தேவர்கள் எல்லோரும் களிப்பு மேலிட்டவர்களாய், தாம்தாம் உடுத்திருந்த ஆடைகளையே அவிழ்த்து மேல்நோக்கி வீசித் துள்ளி ஆரவாரித்தார்கள் என்னும் செய்தியைக் 'கம்பர்' சொல்லவருகின்றார். ஆடையின்றி நின்ற அத்தேவர்கள் கொல்லாத விரதம் மேற்கொண்டொழுகும் அருக சமயத்தவருடைய தெய்வங்களை யொத்தார் என்று உவமித்துப் பாடியிருந்தார்.

'வில்லாள ரானார்க் கெல்லா மேலவன் விளித லோடும்
செல்லாதவ் விலங்கை வேந்தற் கரசெனக் களித்த தேவர்
எல்லாருந் தூசு நீக்கி யேறிட ஆர்த்த போது
கொல்லாத விரதத் தார்தம் கடவுளர் கூட்ட மொத்தார்'

(கம்ப. யுத்த. இந்திர. வதை. 56)

எனத் தாம் பாடிய இப் பாடலைச் சமண சங்கத்தார் முன்னிலையில் வாசித்தபோது அவர்கள் எல்லாரும் உளமகிழ்ந்தார்கள் என்பது செவிவழியாய்த் தெரியவரும் ஒரு செய்தியாகும்.

### வீரசங்க அறிஞர் தொண்டு

திருநறுங்கொண்டையில் விளங்கிய வீரசங்கத்தைச் சார்ந்த அறிஞர் பெருமக்கள் அருக சமய தவத்தோர் வாழ்ந்த வெவ்வேறிடங்களுக்கும் சென்று அறிவுக்கொடை வழங்கலாயினர். இங்ஙனம் வேறிடங்களுக்குச் சென்றவர்களுள் வீரநந்தியடிகள் என்னும் தவத்தவர் வாழ்க்கை ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும். இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருச்சரணமலையில் விளங்கிய பல்கலைக் கழகத்திற்குச் சென்று, அங்குள்ள முனிவர் பெருமக்களுடன் அரும்பொருள் ஆய்ந்து தவம்புரியலாயினர். அப்பொழுது அங்குள்ள மலையில் ஜினர் சிலைகளை வடித்தமைக்க இவர் முன்னின்றார். அன்றியும் ஆண்டுள்ள சான்றோரின் முயற்சியால் திருநந்திக்கரைக் குகைக் கோயில் தோன்றுவதற்கும் இவர் தூண்டுகோலாயிருந்தார். அக் கோயில் ஓர் ஆற்றின் கரையில் அமைவதாயிற்று. வீரநந்தியடிகளின் முயற்சியால் ஆக்கப்பெற்ற அவ்விடத்திற்கு அங்குள்ள சைனப் பெருமக்கள் அவருடைய பெயரையே சூட்டலாயினர். அதுமுதல்

அங்கு ஓடும் ஆறு நந்தியாறு என்றும், அதன் கரையில் அமைந்த குகைக் கோயில் திருநந்திக்கரைக் கோயில் என்றும் வழங்கப்படலாயின. இவ் வரலாற்றுச் செய்திகள் திருச்சரணத்துப் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளால் தெரிய வருகின்றன.

### திருக்கோயில் திருப்பணி

திருநறுங் கொண்டை அப்பாண்டை நாதரின் திருக்கோயிலை மேவிற்பள்ளி (மேலைப்பள்ளி) என்றும், சந்திரநாதர் திருக்கோயிலைக் 'கீழைப்பள்ளி' என்றும் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. இரண்டு பள்ளிகளுக்கும் தனித்தனியாய் மன்னர் முதலியோர் நிபந்தம் வைத்த செய்திகளும் இரண்டற்கும் சேர்ந்து நிபந்தம் விட்ட செய்திகளும் சாசனங்களில் காணப்படுகின்றன.[1] ஸ்ரீசந்திரநாதர் 'பாழியிலாழ்வார்' என்றும் சாசனங்களில் குறிக்கப்படுகிருர்.[2]

இத் திருக்கோயில் திருப்பணி முதன்முதல் சோழர் காலத்தில் தொடங்கப்பெற்றது. பாறைப்புடைப்புச் சிற்பமாய் விளங்கிய அப்பாண்டை நாதரை மூலமூர்த்தியாகக் கொண்டு பாறையுடன் இணைத்து இக் கோயில் அமைக்கப்பட்டது. கோயிலில் நித்திய நைமித்திகங்கள் குறைவற நடைபெறச் சோழர், பாண்டியர், விஜய நகர மன்னர் முதலியோரும் பல நிபந்தங்களைப் பற்பல காலங்களில் ஏற்படுத்தியுள்ளனர்.

### அரசர் முதலியோரின் அறக்கட்டளை

முதல் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்க சோழன் ஆகியோர் இத் திருக்கோயிலில் நந்தா விளக்கெரிக்க நிபந்தம் விட்ட செய்திகள் இங்குள்ள கல்வெட்டுகளால் தெரிய வருகின்றன.

இக் கோயிலின் கோபுரத் திருப்பணி நிறைவேறிய செய்தியை ஒரு சாசனம் நமக்கு விளக்கமாய் உரைக்கின்றது.

> 'யுவஸு பங்குனிமீ 2௨ துதியையும், ரேவதி நட்சத்திரமும் நாயற்று நாளுள் திருநறுங்கொண்டை அப்பாண்டார் கோபுரம் கல் வேலை மட்டும் பறமசிந தேவசியர் மேலைதேசம்

---

1. i. 'மேவிற்பள்ளி' (S. I. I. Vol. VII, 1013)
   ii. 'ஸ்ரீநறுங்கொண்டைக் கீழைப் பள்ளிக்கு கீழ்மண்டகமும் சதுர்முகத் திருக்கோயிலும் செய்வித்தார்.' (306 of 1939-40)
   iii. 'திருநறுங் கொண்டைக் கீழைப்பள்ளி' (S. I. I. Vol. VII, 1016)
   iv. 'இரண்டு களஞ்சுப் பொன் இரண்டு பள்ளிக்கும்' (307 of 1939-40)
   v. 'இரண்டு பள்ளிக்கும் பத்துப் பொன் கொடுத்தார்' (308 of 1939-40)
   vi. 'ஸ்ரீதிருநறுங் கொண்டை இரண்டு பள்ளிக்கும்' (309 of 1939-40)
2. 'திருநறுங் கொண்டைத் தேவர் அப்பர்க்கும் பாழியிலாழ் வார்க்கும் திருவமுர்து படிக்கு' (317 of 1939-40)

தீர்த்தவந்தனை பண்ணி இதுவே நிமந்தம் ஆக கட்டடம் முகிஞ்சது தர்மம் சிந நாகள்ளூர் சாத சேர்வைவ."

(315 of 1939-40)

இச் சாசனத்தால் கோபுரத்தின் கல்வேலை முடிந்த செய்தி புலனுகிறது. 'பரமசிநதேவசியர் மேலைதேசம் தீர்த்தவந்தனை பண்ணினுர்' என்பது கோபுர வேலை முடிந்து மேலைப்பள்ளிக்குக் குடமுழுக்காட்டிய நிகழ்ச்சியைக் குறிப்பதாகும்.

தீர்த்ததிவந்தனை என்பது தீர்த்தங்கரர் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுக்குத் திவ்விய யாத்திரை செய்து வழிபடுதலையும் குறிக்கும் போலும்.

'கைக்கழ கேதென்னக் கவளமுனி வர்க்கீதல்
மெய்க்கழ கேதென்று விளம்பினுள்—மிக்கசினன்

பாத மலரிற் பணித லழகென்ருள்
பாதந் தனக்கழகே பார்த்துரையாய்—நீதமுடன்

தீர்த்ததி வந்தனையே சேர்ந்தவழ கென்றே
பேர்த்தகுயி லம்மொழியி ஞரிருப்ப' (அ. உலா, 536-538)

எனவரும் அப்பாண்டை நாதர் உலாப் பகுதியில் கால்களுக்கு அழகு தீர்த்ததிவந்தனை என்று குறிப்பது மேற்கூறிய செய்திக்குத் தக்க சான்ருகும்.

இன்னெரு சாசனம் இக்கோயிலில் தெற்கு நடை மாளிகை கட்டப்பட்ட செய்தியைக் கூறுகிறது.

"திருநறுங்கொண்டைத் தெற்கில் ஸ்ரீகோயில் திருநடை மாளிகை
செய்வித்தான் பாலையூர்ச் சிங்கனேன்......" (313 of 1939-40)

என்பதால் அப்பாண்டார் திருக்கோயிலிலே தெற்குத் திருக்கோயிலாகிய ஸ்ரீசந்திரநாதர் திருக்கோயிலுக்குத் திருநடை மாளிகை செய்வித்தவன் பாலையூர்ச் சிங்களுவன் என்பது தெரியவரும்.

இராஜராஜ தேவரின் 9ஆம் ஆட்சியாண்டில் கிளியூர் மலையமான் அத்தி சொக்களுன ராஜகம்பீரச் சேதிராயன் திருநறுங்கொண்டைத் தேவர் அப்பர்க்கும் பாழியிலாழ்வார்க்கும் திருவமுர்துபடிக்குச் சில ஆயங்களைவிட்டுக் கொடுத்த செய்திகளை ஒரு சாசனம் அறிவிக்கிறது. (317 of 1939-40)

இங்ஙனமாக இத் திருக்கோயில் திருப்பணிகளும் தொடர்ந்து பல காலங்களில் அரசர் முதலியோர்களால் செய்விக்கப்பெற்று வந்தன. இதனுல் இத் திருக்கோயிலின் பெருஞ் சிறப்புகளும் விளங்கக் காணலாம்.

**வைகாசிப் பெருவிழா**

திருநறுங்கொண்டையில் நிகழும் சிறப்பு விழாக்களுள் வைகாசிப் பெருவிழா குறிப்பிடத்தக்கது. அந்நாளில் அப்பாண்டை நாதர் வீதியில் உலாவருவார். பெருமானின் வீதி உலாப் பவனியைத் 'திருமேற்றிசையந்தாதி'ப் பாடல் ஒன்று பின்வருமாறு எடுத்துக் கூறுகிறது :

'பெருகுந் தவங்களில் என்செய்த வோபின்பு பேணித் தொண்டர்
உருகுங் குடதிசை வீரன் உலாவர உற்றமிர்து
முருகுந் ததும்புஞ்செந் தாமரைமேன் மொய்த்து முன்னும் பின்னும்
அருகும் பிறிவறி யரவுடன் சேவிக்கும் ஆடல் வண்டே'!

(திருமேற்றிசை யந்தாதி, 70)

அப்பாண்டை நாதரின் வீதித் திருவுலாவையே சிறப்பாக வருணித்துரைக்க எழுந்த உலாப் பிரபந்தத்தில், இறைவனுடைய திருவுலாக் காட்சிகள் அழகாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளன. பேரி, சங்கம் முதலிய வாத்திய இசை முழங்க, கட்டியங் கூறுவார் வருகைக் கட்டியம் உரைக்க, இந்திர விமானத்தில் பெருமான் எழுந்தருளி வருகிறார்; ஆலவட்டம், தூபக்குடம் முதலிய சின்னங்கள் தாங்கிவரப் பல்லக்கில் ஏறிக் கோபுர வாயிற்படிகள் பலவற்றையும் கடந்து திருவீதிக்கு வருகிறார். திருவீதியிலே அழகிய மணித்தேரின்மீது ஆரோகணித்து, எல்லாத்திக்கினும் தொண்டர்குழாம் போற்ற அவர் வீதியுலா வருகிறார்.[1]

'கோமே தகமுங் கொழும்பொன் மிகவணிந்து
மாமேரு வன்ன மணித்தேரின்—தாமேறி

ஆயிரங் கோடிகதிர் ஆர்ந்த மணிவரைபோற்
தூயதிசை விளங்கத் தோன்றினன்' (அ. உலா. 205-206)

என்கிறார் அனந்தவிசயர்.

இறைவன் எழுந்தருளி உலாவரும் பல்லக்கு முதலியவற்றிற்கு ஆகும் செலவுகளுக்காக விடப்பட்ட நிபந்தங்கள் பற்றிய குறிப்பு ஒரு சாசனத்துள் காணப்படுகிறது. அது வருமாறு :

'ராஜ ராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடிக் குன்றத்தூர் நாட்டுத் திருநறுங்கொண்டையில் வைகாசித் திருநாளில் திருவுத்ஸவம் எழுந்தருளும் அருமொழி தேவற்கும் நித்திய கலியாண தேவற்கும் திருப்பள்ளிச் சிவிகைப் புறமாக மலையன் மல்லனை விக்கிரம சோழ மலையமான் இத்திருநறுங் கொண்டையில் குந்தவை ஏரிக்கீழ் உடைப்பின்பாடு திருத்தி விட்ட நிலத்து...' (310 of 1939-40)

1. அப்பாண்டைநாதர் உலா வெழுந்தருளத் திருவீதிக்கு வந்த வகையினை 179 முதல் 206 வரையுள்ள கண்ணிகளில் காணலாம்.

இச் சாசனக் குறிப்பினால் வைகாசித் திருவிழாவில் அருமொழி தேவரையும் நித்திய கலியாண தேவரையும் எழுந்தருளுவித்தற்கான பல்லக்கிற்குரிய நிபந்தம் விடப்பட்ட செய்தி தெரியவரும். திருநறுங் கொண்டையிலுள்ள குந்தவைப் பேரேரி ஒரு சமயம் உடைப்பெடுத்துச் சில நிலங்களைப் பாழ்பாடுத்திவிட்டதுஎன்பதும், அவற்றைத் திருத்திச் சிவிகைப் புறமாகத் திருக்கோயிலுக்கு மலையன் மல்லனான விக்கிரம சோழ மலையமான் நிபந்தம் வைத்தான் என்பதும் இதனால் விளக்க மாகும். இப்பொழுதும் இத் திருக்கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் ஆண்டுப் பெருவிழா நடைபெற்று வருகிறது.

### அத்தத் திருநாள்

வைகாசித் திருநாளைப் போலவே தைம்மாதம் அத்த நாளிலும் அப்பாண்டாரை எழுந்தருளப் பண்ண வேண்டுமென்று இருங்கொளப் பாடி நாட்டுத் தவத்தாளன் தேவர் இராசாக்கணாயன் என்பார் சொன்னார். அவ்வாறே அவருடைய பெயரால் 'இராசாக்கணாயன் திரு நாள்' என்று தை மாதம் அத்தத்திலே நிகழ்த்தும்படி ஏற்பாடுசெய்யப் பட்டது. அதற்காக நாயனாரின் இறையிலி நிலத்துப் பயிரேறாமற் கிடந்த நிலங்களைப் பயிர்செய்து கொடுத்துத் தைமாத அத்தத் திருவிழா எழுந்தருள வகை செய்தனர்.[1]

குவிகை கொண் டிந்திரநர பதிகடம் பெண்களொடு
 குறுகவெம் பந்த வினைவென்
றவிகை கொண் டம்பொனெயி லதனினொண் பிண்டிநிழல்
 அமருநஞ் சம்ப வனிடம்
கவிகையங் தொங்கனிரை கவரிமுந் துங்கொடிகள்
 கனகர்தம் பஞ்ச தரளச்
சிவிகையன் புந்திரு விழவொடெங் கெங்குமிகு
 திருநறுங் கொண்டை மலையே !

என இங்கு நடைபெறும் விழாவினைச் சிறப்பித்துத் திருநறுங் கொண்டை மலைப் பதிகப் பாடல் ஒன்றும் (5) போற்றியுரைக் கின்றது.

---

1. "திருநறுங்கொண்டை நாற்பத்தெண்ணாயிரப் பெரும்பள்ளித் தானத் தாறகுத் தங்களூர் நாயனார் அப்பாண்டார்க்கு முன்பிலாண்டு எழுந்தருளு கிற வைகாசித் திருநாளுடனே நம் பேராலேயும் ஒரு திருநாள் எழுந்தருள வேணுமென்று இருங்கொளப்பாடி நாட்டுத் தவத்தாளன் தேவர் சொலலுகையில் இதுக்கு உடலாக இவ்வூரில் நான் கெல்லைக்கு உட்பட்ட எல்லைகளுள் முன்பு இந்நாயனாருக்கு இறையிலியான நிலத்தில் பயிரேறா மற் கிடந்த நிலமும் குடுத்துப பயிர் செய்து கொலலி ஏந்தல் உட்பட புறவுடன் முன்பு நாலாவது கண்டு கொண்டு ஆறாவது முதல் நம் பேராலே இராசாக்கணாயன் திருநாளென்று தைம்மாதத்து அத்தத்திலே நித்த மாகத் திருநாள் எழுந்தருளுவிப்பதாகச் சொன்னோம் ......."

(S. I. I. Vol. VII, 1014)

### கோயிற் பணி புரிவார்

திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானான விக்கிரம பாண்டியன் காலத்துப் பொறிக்கப்பெற்ற ஒரு கல்வெட்டு இத் திருக்கோயிலுக்குரிய பணிகளைப் புரிவார்க்கு நிபந்தம் வைத்த செய்தியை உரைக்கின்றது. கோயிற்கு வேண்டும் பணிபுரிவாரை 'அமண்பிடாரர்' என்று இச் சாசனம் குறிப்பிடுகிறது.

> "ஸ்வஸ்திஶ்ரீ திரி புவனச் சக்கரவர்த்தி கோ நேரின்மை கொண்டான் கூகிலிலாடற்பாடி வானவன் மாதேவி புரத் தொடும் கூடினபடியே வேறு இருக்கிற சிறு சாத்தநல்லூர் ஊரார்க்கு ராஜராஜவளநாட்டுக் குன்றத்தூர் நாட்டுத்திருநறுங் கொண்டைப் பள்ளிக்கு வேண்டும் நிபந்தங்களுக்கும் அமண பிடாரர்களுக்கும் இறுப்பாகத் தங்களூர் நீர் நிலத்திலே ஒரு பக்கமடைய நிலம் பதிற்று வெலிக்கு மூன்றுவது முதல் வெலி ஒன்று 2க்கு நெல்லு இருபதின்கலமாக இறைகட்டின நெல்லு இருநூற்றுக் கலத்தினால் எண்கலப் பிடிபாடை இருபத்தைஞ்சு யாண்டு மூன்றுவது முதல் பள்ளிச் சந்த இறையிலியாக இட்டு வரியிலாரும் வரிக்குக் கூறு செய்வார்களும் எழுத்திட்ட உள்வரி பொதக காட்டுச் சொன்னோம் இந்நிலத்துக்கு அமண பிடாரர்கள் சொன்னபடி செய்வது .....இவர்கள் வசம் கடமை இறுக்கு........
>
> (S. I. I. Vol. VII, 1012)

இதிலிருந்து கோயில் நிலங்களைப் பரிபாலித்துத் திருக்கோயிலுக் குரிய பூசை முதலியவற்றையும் பிறவற்றையும் குறைவற நடத்திவந்த கோயில் திருப்பணியாளர்களே இவ் அமண்பிடாரர்கள் எனத் துணியலாம். திருக்கோயில் ஏவல்தொழில், சமையல் தொழில் செய் வோரைக் குறிப்பிடும் 'பரிசாரகர்' என்பது 'பிடாரர்' எனத் திரிந்ததோ என்றும் நினைக்க இடமுண்டு. ஏவல் செய்வோரைக் குறிக்கவரும் 'படர்' என்னும் சொல், 'பிடாரர்' எனக் காலகதியில் மாறி வழங்கி யிருத்தல் கூடும் என்றும் தோன்றுகிறது.

### அடுத்துள்ள ஊர்கள்

திருநறுங் கொண்டையின் அண்மையிலுள்ள சில ஊர்களை பற்றிய குறிப்புகளும் கல்வெட்டுகளால் தெரியவருகின்றன. ஆற்றூர்,[1] ஏறுதிமங்கலம்,[2] சிறுசாத்த நல்லூர்,[3] ஆதனூர்,[4] செம்பூர்,[5] பழம் பட்டணம்,[6] குன்றத்தூர்,[7] நரியப்பாடி,[8] சினநாகள்ளூர்.[9] இவற்றுள்

1. S. I. I. Vol. VII, 1011, 1015
2. S. I. I. Vol. VII, 1011
3. S. I. I. Vol. VII, 1012
4. 303 of 1939-40
5. 303 of 1939-40
6. 303 of 1939-40
7. 303 of 1939-40
8. 308, 309 of 1939-40
9. 315 of 1939-40

ஆற்றூர் என்பது ‘ஆறை’[1] எனவும் மரூஉவழக்காய் எடுத்தாளப் பட்டிருக்கிறது.

கொண்டை சினாலயத்தை நடுநாயகமாகக் கொண்டு தொண்டை நாட்டில் சினாலயங்கள் பல சூழ்ந்து விளங்குவதை அப்பாண்டைநாதர் உலாவில் அனந்தவிசயர் அழகுற எடுத்துக் காட்டியுள்ளார்.[2]

‘தொண்டைவள நாட்டில் துலங்கும் புகழ்வீறும்
கொண்டை சினாலயமே கூறுவாம்-வண்டமிழ்சேர்

மஞ்சைக் குளத்தூர் மரக்குண்ணம் மாமுதலூர்
செஞ்சிநகர் தாசைத் திருக்குழசை-விஞ்சுபுகழ்

வங்காரம் பொன்னூர் வளத்தி குறக்கோட்டை
சிங்கபுரி வீரைத் திருப்பறம்பை-தங்குபுகழ்

ஆடையூர் கன்னலமோ டாலைப் பதிகூனம்
பாடிவிரு தூர்தச்சாம் பாடியெயில்-நீடுபுகழ்

வீடை நகர் குளந்தை வேலூர் வயலையுடன்
பீடு பெறுவிழுக்கம் பேரூவூர்-நீடியசீர்

வாழைப் பதியகலூர் வண்மை வளர்திறக்கோல்
கீழைக் கனாயூர் கிரியருகை-வாழியநற்

சண்பை நகர் தச்சூர் சயலையூர் பூண்டியுடன்
வெண்குண மோதல்பாடி வில்விளந்தை-பண்பாம்

அருகந்த மங்கலமோ டானதிருத் தீபை
வருவிளங் காடுசேந்த மங்கலமும்-அருகியலாம்

அண்டர் முனி வோர்கடொழும் ஆலயமே சூழ்ந்தநறுங்
கொண்டை நகர் தழைக்கக் கூறுவாம்[3].

(அ. உலா. 86-94)

இவ்வுலாவாசிரியர் எடுத்துக்காட்டிய திருத்தல வரிசையில் ‘திருத்தீபை’ என்னும் தலமொன்றும் சுட்டப்படுகிறது. இங்குக் குறித்த

---

1. 320 of 1939-40

2. அ. உலா. கண்ணி 86-94.

3.

| | | | |
|---|---|---|---|
| மஞ்சைக்குளத்தூர் | சிங்கபுரி | குளந்தை | தச்சூர் |
| மரக்குண்ணம் | வீரை | வேலூர் | சயலையூர் |
| (மா) முதலூர் | திருப்பறம்பை | வயலை | பூண்டி |
| செஞ்சிநர் | ஆடையூர் | விழுக்கம் | வெண்குணம் |
| தாசை | கன்னலமோடு | பேரூவூர் | ஓதல்பாடி |
| (திருக்)குழசை | ஆலைப்பதி | வாழைப்பதி | விளந்தை |
| (வங்காரம்) | கூனம் | அகலூர் | அருகந்தமங்கலம் |
| பொன்னூர் | (பாடி) விருதூர் | திறக்கோல் | திருத்தீபை |
| வளத்தி | தச்சாம்பாடி | கீழைக்கனாயூர் | விளங்காடு |
| குறக்கோட்டை | வீடைநகர் | கிரியருகை | சேந்தமங்கலம் |
| | | சண்பைநகர் | |

'தீபை' எது என்பதும், எந்தப் பெயரின் சுருக்கமாக இஃது அமைந்துள்ளது என்பதும் சிந்தித்தற்குரியன.

### திருத்தீபை

'தீபை, என்பது தீபங்குடி அல்லது தீபனூர் என்பதன் மரூஉ வழக்காதல் கூடும். 'தீபங்குடி' என்ற பெயர்கொண்ட ஊர்கள் திருவாரூர்ப் பக்கத்தும் திண்டிவனப் பக்கத்தும் உள்ளன' என்று எழுதுகிறார் பேராசிரியர் மு. இராகவையங்கார்.[1] 'தீபங்குடிப்பத்து' என்னும் துதிப்பதிகம் ஒன்றும் கிடைத்துள்ளது. இதில் வரும் மூன்றும் பாட்டுத் 'தமிழ் நாவலர் சரிதை'யில், "செயங்கொண்டாரை அபயன் உமதூர் யாது என்று கேட்டபோது சொன்ன கவி "யாகத் தரப்பட்டிருக்கிறது. அது வருமாறு :

'செய்யும் வினையு மிருளுண் பதுவுந் தேனும் நறவும் ஊனுங் களவும்
பொய்யுங் கொலையும்மறமுந் தவிரப் பொய்தீர் அறநூல்
[செய்தார் தமதூர்
கையும் முகமு மிதழும் விழியுங் காலுங் நிறமும் போலுங் கமலம்
கொய்யும் மடவார் கனிவா யதரம் கோபங் கமழும் தீபங் குடியே.'

(பெருந்தொகை. 180)

தொண்டை வளநாட்டில் திருநறுங்கொண்டையைச் சூழவுள்ள தலங்களுள் ஒன்றாகக் குறிக்கப்படும் 'திருத்தீபை' திண்டிவனத்தின் பக்கத்தில் உள்ள தீபங்குடியாதல் வேண்டும் என்று கொள்ளலாம்.[2] தீபை என்பது திருநறுங்கொண்டையை அடுத்து மிக அண்மையில் உள்ளதா, அல்லது இவ்வூருக்கே திருத்தீபை என்னும் பெயர் உண்டா என்னும் ஐயத்தைக் 'திருமேற்றிசை யந்தாதி' என்னும் நூல் தோற்றுவிக்கிறது.

### திருமேற்றிசை

'திருமேற்றிசை என்பது திருநறுங்கொண்டை ஆலயத்தின் பிறிதொரு பெயராகும். பச்சை ரத்தினம்போல் விளங்கும் பார்சுவ நாதராகிய அப்பாண்டை நாதர் மேற்குத் திசை நோக்கி எழுந்தருளியிருக்கிறார். எனவே, அவர் விளங்கும் திருக்கோயில் திரு மேற்றிசை என்னும் சிறப்புப் பெயர் பெறுவதாயிற்று.

---

1. பெருந்தொகை, பாட்டு 180, விசேடக்குறிப்பு, பக்கம் 534-ல் அடிக்குறிப்பாக, "'தீபங்குடிப்பத்து' என்னும் பதிகத்தின் பிரதியொன்று 'ஜைன-கெஸட்' பத்திராதிபரான ஸ்ரீ வி. எஸ். மல்லிநாதன் அவர்களால் அன்புடன் எனக்கு அளிக்கப்பெற்றது"—என்று தெரிவித்துள்ளார்.

2. திண்டிவனத்தின் பக்கத்தில் தீபங்குடி என்னும் ஊர் இப்பொழுது அதே பெயரால் வழங்குவதாகத் தெரியவில்லை. 'தீவனூர்' என வழங்கும் ஊர் ஒன்று உளது. 'தீபங்குடி' என்பது இவ்வாறு பெயர் மாறியதா அல்லது அதே பெயரில் பிறிதொரு ஊர் உளதா என்பது ஆராய்தற்குரியது.

இதுபோன்றே பறம்பை என்னும் பறம்பாபுரியிலுள்ள பார்சுவ நாதர் திருக்கோயிலும் மேற்கு நோக்கிய சன்னிதியுடையது. ஆதலால், அவ்வூரையும் 'திருமேற்றிசை' என அழைப்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தகும். 'திருமேற்றிசைப் பத்து' என்னும் பதிகப் பாமாலை ஒன்றும் அவ்வூருக்கு உள்ளது.[1]

திருமேற்றிசை அந்தாதியின் காப்புச் செய்யுள் பெருமான் நறுங்கொண்டையைப் போற்றுகிறது. திருநறுங்கொண்டைத் திருமலையைப், 'பாழிவெற்பு'[2] எனவும், 'திருப்பாழி'[3] 'பாழி'[4] எனவும், 'வடபாழி'[5] எனவும் இந்த அந்தாதிப் பிரபந்தம் குறிப்பிடுகிறது. பாழி என்பது செய்தவத்தோர் மேவும் இடத்தையும் அருகன் திருக்கோயிலையும் குறிக்கும். திருநறுங்கொண்டை மலையில் சினநாதரும் செய்தவத்தோரும் இருக்கும் காரணத்தால் இம் மலையைப் 'பாழி' என இவ்வாசிரியர் போற்றுவது பொருத்தமுடைத்தாகும்.

இங்கே பச்சை ரத்தினமாம் மரகதம்போலும் பச்சை வண்ணராம் பார்ச்சுவநாதர் — அப்பாண்டைநாதர் — மேற்குத் திசை நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

'குடதிசை நோக்கி மரகத மாமணிக் குன்றமொன்று
வடதிசை மேருவில் நின்றது போல்வட பாழியிலெம்
இடர்திசை நீங்க நின்றார்.'[6]

'குடக்கே திசைநோக் களிக்கின்ற நாதர்'[7]

என்றெல்லாம் போற்றுகிறார் திருமேற்றிசை யந்தாதியுடையார்.

'— வடபாழி என்னும்
பொற்குன்றின் மீது குடபால் முகஞ்செய்து பூமிசையே
நிற்கின்ற கோல மணிக்குன் றெனக்கின்று நேர்பட்டதே'[8]

என்னும் அந்தாதிப் பாட்டு மேற்றிசை நோக்கி அப்பாண்டைநாதர் நிற்கும் திருக்கோலத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

---

1. திருநறுங்குன்றம் அப்பாண்டைநாதர் தோத்திரத் திரட்டு. பக். 57-60.
2. திருமேற். அந். 77, 94.
3. ,, 1, 32, 59, 74, 95.
4. ,, 47.
5. ,, 3, 5, 27, 30, 36, 39, 45, 54, 68, 79, 81, 96, 97.
6. திருமேற். அந். 38.
7. ,, 44.
8. ,, 45.

மேற்குத் திக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் காரணத்தால் அப்பாண்டைநாதர், மேற்றிசையான்,[1] குடதிக்கு நின்றுர்,[2] குடதிசையாய்[3] என்று இவ்வாறு திசைப்பெயரான் அழைக்கப் பெறுகிருர். மேற்றிசை வீரன்,[4] மேற்றிசை விண்ணவன்,[5] திருமேற்றிசைக் கொண்டல்,[6] மேற்றிசைச் செல்வன்[7] என்று இவ்வாறு பல்வேறு வகையாகத் திருமேற்றிசை யந்தாதியில்மேற்றிசை, குடதிசை என்பன குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே, திருமேற்றிசை என்பது திருநறுங் கொண்டைத் திருத்தலத்தின் சிறப்புப்பெயர் என்பது தெளிவு.

### தீபையுள் மேற்றிசை

திருமேற்றிசையைக் குறிக்கும்பொழுது இவ்வந்தாதிப் பாடல்கள் 'திருத்தீபையுள் மேற்றிசை' எனச் சிறப்பித்துப் பேசுகின்றன :

> 'தேவும் புகழ்ந்தமை யாத்திருத் தீபையிற் செய்தவத்தோர்
> மேவுந் திருப்பா ழியிற்றிரு மேற்றிசை வீரனே'[8]
>
> 'தீபையின் மேற்றிசை விண்ணவனே'[9]
>
> 'தீபையுள் மேற்றிசையான்'[10]
>
> 'திருத்தீபைக் குடதிசைக்கே'[11]
>
> 'திருத் தீபையிற் றிருமேற்றிசைச் செல்வன்'[12]
>
> 'வரந்தரு தீபையுள் மேற்றிசையானை'[13]
>
> 'திருத்தீபைக் குடதிசைக்கே நின்றுன்'[14]
>
> 'மேற்றிசைச் செல்வனை மல்லலந் தீபையென்னுமூரனை'[15]

இவ்வாருகப் பல பாடல்களிலும் 'தீபை' என்னும் ஊரில் மேற்றிசை நோக்கி நின்று அருள்சுரக்கும் கொண்டலாக அப்பாண்டை நாதரைத் துதித்துப் போற்றுகிருர் திருமேற்றிசை யந்தாதியுடையார். எனவே, 'தீபை' என்பது திருநறுங்கொண்டை நகரின் மற்ருெரு பெயராதல் வேண்டும் என்பது போதரும்.

'கொண்டைமலை' என அப்பாண்டைநாதர் உலாமாலை மலைக்கும் பெயராகச் சுட்டுதலால் கொண்டை மலைசார் ஊரும் 'கொண்டை' என்னும் காரணச் சிறப்புப் பெயரை நாளடைவில் பெற்றது இயல்பே.

---

1. திருமேற். அந். 23, 46
2. „ 55, 26
3. „ 10, 42
4. „ 1
5. „ 2
6. „ 20
7. „ 72, 88
8. „ 1
9. திருமேற். அந். 2
10. „ 46
11. „ 37
12. „ 88
13. „ 100
14. „ 75
15. „ 72

மலைத் திருக்கோயிலின் சிறப்பால் திருநறுங்கொண்டை என்னும் பெயர் சிறந்து மேலோங்கத் 'திருத்தீபை' என்னும் பெயர் வழக்குக் குறைந்தது போலும்!

**'தீபை' என்பது எது?**

திருமேற்றிசை யந்தாதி நூலின் 21 பாடல்களை 'நல்லறம்' திங்கள் வெளியீட்டில்,[1] வெளியிட்ட மயிலை சீனி, வேங்கடசாமி அவர்கள் 'திருமேற்றிசை' என்னும் ஊர்பற்றிக் கூறிய கருத்தும் கருதற்பாலது. அவர்கள் தரும் விளக்கம் வருமாறு:

> "திருமேற்றிசை என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள அருகப் பெருமான்மீது அந்தாதித் தொடையாக அமைக்கப்பட்ட நூல் இது. காப்புச் செய்யுளைத் தவிர 101 செய்யுளையுடையது. திருமேற்றிசை என்பது திருநறுங்கொண்டை என்னும் ஊர். இதனை 'நறுங்கொண்டை என்ன வல்லார்க்கில்லை பேரிடரே' என்று இந்நூலில் கூறுவதனால் உணரலாம். திருநறுங் கொண்டையாகிய திருமேற்றிசை தீபங்குடிக்கு மேற்கில் உள்ளது என்று அறிகிறோம். 'திருத்தீபையின் மேற்றிசை விண்ணவன்' என்றும் 'திருத்தீபைக் குடதிசைக்கே நின்றான்' என்றும், 'வரந்தரு தீபையுள் மேற்றிசையான்' என்றும் இந்நூலுள் கூறப்படுவதால் இதனை அறியலாம்."

இங்கே தீபங்குடிக்கு மேற்கிலிருப்பதால் திருநறுங்கொண்டை என்பது திருமேற்றிசை எனப்பட்டது என்பது மேலும் தக்க சான்று களுடன் நிறுவப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்துத் திருவாரூர்ப் பக்கத்துத் தீபங்குடிக்கு இத்தலம் மேலைத்திசையில் உள்ளது என்று சொல்வது பொருந்துமா என்பது சிந்தனைக் குரியது.

அப்பாண்டை நாதர் உலா தொண்டை நாட்டிலே சினாலயமுள்ள ஊர்களுள் ஒன்றாக, 'திருத்தீபை' (அ. உலா. 93) என்னும் ஊரைச் சுட்டு கிறது. திண்டிவனத்திற்குப் பக்கத்தில் ஒரு தீபங்குடி உள்ளது எனப் பேராசிரியர் மு.இராகவையங்கார் தெரிவித்துள்ளார். ஒருகால் இந்தத் தீபங்குடியைக குறித்துக் கூறியதாகுமா? அதுவும் திருநறுங் கொண்டைக்கு நேர்கிழக்காக உள்ள ஊராக ஆகமாட்டாது.

மேலும், திருமேற்றிசை யந்தாதியில் பெரும்பான்மைப் பாடல் களும் ஏழாம் வேற்றுமை உருபு சுட்டியே 'தீபை' என்பது குறிக்கப் படுகிறது. தீபையின் மேற்கு உள்ளது என்னும் எல்லை குறிக்கும் கருத்தினர் ஆசிரியராயின் எல்லைப் பொருள் சுட்டும் இன்னும் இல்லும் உருபுகளைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு எல்லைப் பொருள் தரும் உருபுகள் இன்றி இடப்பொருள் தரும் உள், இல் என்னும் உருபுகளாலேயே கவிஞர் குறிப்பிடுகிறார். எனவே, 'திருத்

1. மலர் 3, இதழ் 3, 15—3—1960 பக். 23—24; மலர் 3, இதழ் 6, 15—6—1960. பக் 2-3.

தீபையுள் மேற்றிசையான்' என்றால் திருத்தீபை ஊராகிய திருநறுங் கொண்டையில் மேற்குத் திருமுக மண்டலம் காட்சிதந்து நிற்பவன் என்பதுவே இயல்பாக அமையும் பொருளாகிறது.

## திருமேற்றிசை அந்தாதி

திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களுடைய முகப்புக் குறிப்பில், 'காப்புச் செய்யுளைத் தவிர 101 செய்யுளையுடையது' என்பது 'காப்புச் செய்யுளைத் தவிர 100 செய்யுளை யுடையது' என்று இருத்தல் வேண்டும். ஏனைய நூற்றந்தாதிகளோடு ஒப்பக் காப்புச் செய்யுளைத் தவிர்த்து நூறுபாடல்கள் அந்தாதியாய் மண்டலித்து இதில் அமைந் துள்ளது. இத் திருமேற்றிசை யந்தாதி ஒரு கலித்துறை நூற்றந்தாதி, அதாவது நூல் முற்றும் கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் இயன் றுள்ளது.

## திருமேற்றிசையார் திருப்புகழ்

திருமேற்றிசைச் செல்வராம் அப்பாண்டை நாதர் செந்தாமரை மலர்மேல் பச்சைமலைபோல் நின்று, ஞானவாளினையுடையராய், திசையாடை கொண்டவராய், அணிகலம் எதுவும் அணியாது அழகியராய், ஐந்தலை நாகம் தன் படங்களால் நிழல் செய்ய மேலே முக்குடை விளங்கக் காட்சி தருகிறார். இத் திருக்காட்சியைத் திருமேற்றிசை யந்தாதியுடையாரும் பிறரும் புகழ்ந்து பாடும் திருப்புகழ் மாலைகள் கற்பார் கேட்பார் உள்ளங்களையெல்லாம் பத்தி ஞானங்களால் நிறைவுறச் செய்வனவாம்.

'திருவளர் தீபைத் திருப்பாழி யிற்றிரு மேற்றிசைக்கே
யுருவளர் பச்சை மலையொன்றுமே' [1]

'நடைமன் னுதீபை வடபாழி யுணின்ற ஞானவொள்வாட்
படைமன் னவரையல் லானினி யாரையும் பாடலமே' [2]

'தியான வொள்வாள் கொண்டு வென்றார்' [3]

'வனைதரு முக்குடை திக்குடை யாடை மணியுரகப்
புனைதரு பந்தர்ப் பணமுடையார் மன்னு பொன்னகரே' [4]

—'பச்சைப் பிரானுலகை

முற்றுடை யானொளி மூன்றுடை யான்றிசை நான்குமன்றி
மற்றுடை யாடையில் லாவென்னை யாளுடை வானவனே' [5]

—'வடபாழி என்னும்

பொற்குன்றின் மீது குடபால் முகஞ்செய்து பூமிசையே
நிற்கின்ற கோல மணிக்குன் றெனக்கின்று நேர்பட்டதே!' [6]

---

1. திருமேற். அந். 32
2. ,, 39
3. ,, 53
4. திருமேற். அந். 9
5. ,, 63
6. ,, 45

'தொகுமதி முக்குடைக் கீழே விரிபணச் சுந்தரர்'[1]

'படவர வின்குளிர்ப் பந்தரின் கீழ்ப் பச்சை மேகன் நின்ற
வடவரை போல்வட பாழி'[2]

'அணியா வணிகலத் தெம் பெருமான்'[3]

'கற்றோர் புகழுந் திருத்தீபை யுட்பணக் காவணத்தார்
பொற்று மரையி லுலாவருந் தாமரைப் போது கண்டே'[4]

—'ஐந்தலைப் பாம்பு மசோகினம் பொற்
பணையுங் கவிப்ப நிற்கும் பரஞ்சோதிப் பதயுகமே'[5]

'பருமணி வேயும் பணப்பந் தரிற் பச்சை மாமுகில் நின்று
அருள்மழை நாளுந் தரவல்ல தேதன் னடியவர்க்கு'[6]

'வீரனை மும்மதி வேந்தனை வேரியந் தாமரைப் பூந்
தேரனை மேற்றிசைச் செல்வனை மல்லலந் தீபையென்னு
மூரனை யூரும் பெயருமில் லானையோ ராயிரத்தெண்
பேரனை யெத்திறத் தானென்று நாஞ்சில பேசுவதே!'[7]

இவ்வாறாக எத்தனை எத்தனையோ வகைகளில் திருமேற்றிசைச் செல்வராம் அப்பாண்டை நாதரைக் கவிஞர் போற்றிப் புகழுகின்றார். அவற்றை நாம் படிக்கும் போதும் கேட்கும் போதும் அப்பெருமானின் திருவுருவம் நம் அகக் கண்ணிற்குமட்டுமன்றி ஊனக் கண்ணிற்கும் உருவெளியாய்த் தோற்றமளிக்கும்.

'அப்பாண்ட நாதர் உலா' நூலுள்ளும் பல இடங்களில் பாரிச நாதப் பரம்பொருளின் திருவுருவக் காட்சி வருணனையும் அவர்தம் திருப்புகழ்களும் செறிந்து மிளிர்தலைக் காணலாம்.[8]

'முத்தொளி முக்குடையாய்! மூவுல காளுடையாய்!
உத்தம னேயருகா! உன்பத மேசரணம்!
தத்துவ னேயெனையாள் சங்கர னேவினையைக்
கொத்தற வென்றவனே கொற்றவ னேசரணம்!'

---

1. திருமேற். அந். 14
2. ஷை, 27
3. ஷை, 34
4. ஷை, 51
5. திருமேற். அந். 60
6. ஷை, 69
7. ஷை, 72
8. நாதரின் திருமேனி வருணனை, அ. உலா. 168-178.
தேவாதி தேவன் திருப்புகழ், அ. உலா. 1-12.

## திருநறுங்கொண்டையைப் பற்றிய தமிழ் நூல்கள்

1. அப்பாண்டை நாதர் உலா—
   அனந்த விசயர் அருளிச்செய்தது.

2. திருமேற்றிசை அந்தாதி—
   (ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை.)

3. ஜிநேந்திர ஞானத் திருப்புகழ்

4. தோத்திரத் திரட்டு :—

   i. திருநறுங் கொண்டை மலையின் பேரில் பதிகம், பக். 5

   ii. திருநறுங் கொண்டை அப்பாண்டை நாதர் பேரில் அப்பர் பாடிய பதிகம், பக். 7

   iii. திருநறுங் கொண்டை அப்பாண்டை நாதர் பேரில் சம்பந்தர் பாடிய பதிகம், பக். 9

   iv. திருநறுங் கொண்டை அப்பாண்டை நாதர் பேரில் கட்டளைக் கலித்துறை, பக். 12

   v. திருநறுங் கொண்டை மகா சாத்தய்யாபேரில் பதிகம், பக்.13

   vi. திருநறுங் கொண்டை மகா சாத்தய்யா பேரில் கட்டளைக் கலித்துறை, பக். 16

   vii. பாரீஸ்வ நாதர் பேரில் சரணப் பதிகம், பக். 44

   viii. சரணப் பத்தும் பதிகம், பக். 47

   ix. மந்திரப் பத்தும் பதிகம், பக். 48

   x. பணவரங்கப் பத்து, பக். 63

## அப்பாண்டை நாதர் உலா நூல் குறிப்பிடும் துதிப்பிரபந்தங்கள்

1. திருவைம்பாவை—293-93

2. பத்தும் பதியம்—313

   'பத்தியுடன் சம்பந்தர் பாடப் பத்தும் பதியம்
   வெற்றிபெறப் பெற்ற விழியிரண்டும்' (அ. உலா. 313)

## அருகர் புகழ் மாலை

1. ஆதிநாதர் பிள்ளைத் தமிழ்
2. திருநூற்றந்தாதி
3. தீபங்குடிப் பத்து
4. பெருந்தொகை—சென்னை யூனிவர்ஸிடி தமிழ்-லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் இராமநாதபுரம் மு. இராகவையங்கார் தொகுத்தது. (1935-36) அருகக் கடவுள்—பக். 32-48. பாடல்கள் 130 முதல் 183 வரை 54 பாடல்கள். (இவை யாப்பருங்கல விருத்தியுரை, காரிகையுரை முதலியவற்றினின்று திரட்டியவை.)

## பண்டை நூல்களில் அருகன் புகழ்மாலை

1. சிலப்பதிகாரம்
2. பெருங்கதை
3. சீவகசிந்தாமணி
4. சூளாமணி
5. நீலகேசி
6. யசோதர காவியம்
7. நாக குமார காவியம்
8. உதயண குமார காவியம்
9. குண்டலகேசி
10. மேருமந்தர புராணம்

## திருநறுங்கொண்டையைத் தொழுது பேறுபெற்றார்

அப்பர், சம்பந்தர் என்பார் அப்பாண்டை நாதரைப்பாடி ஞானம் பெற்றனர். இச் செய்தியை,

'அப்பர்சம் பந்தர்க்கு அன்பாய் விழிகொடுத்த
அப்பன் சினகிரிவா ழய்யன்' (அ. உலா. 55)

என்றும்,

பத்தியுடன் சம்பந்தர் பாடப் பத்தும் பதியம்
வெற்றிபெறப் பெற்ற விழியிரண்டும் (அ. உலா. 313)

என்றும் வரும் அப்பாண்டை நாதர் உலாக் கண்ணிகளால் தெரிய வரும்.

இங்குக் குறிக்கப்பெற்ற அப்பர், சம்பந்தர் என்னும் பெயர்களைக் கேட்ட அளவில் இவர் சைவசமய குரவர் நால்வருள் இருவராகிய அப்பர் சம்பந்தரோ என்று எண்ணத் தோன்றும். இவர்கள் சைவ சமயத்தார் போற்றும் நாயன்மாரல்லர்; சைன அறவோரேயாவர். திருநறுங்கொண்டையில் கோயில் கொண்டுள்ள பகவான் பாரிசுவ நாதரை அங்குள்ள கல்வெட்டுகள் அப்பர் என்றே குறிப்பிடுகின்றன. எனவே அந்நாதரின் பெயரைச் சூட்டிக்கொண்ட ஒரு முனிவரையே உலா நூல் குறிப்பிடுகிறது என்பது தெளிவு. இவ்வாறே தோத்திரத் திரட்டில் மூன்று இடங்களில் குறிக்கப்படும் ஜைன முனிவராகிய சம்பந்த முனிவரையே உலாப்பாடியவர் போற்றியுள்ளார் என்பதும் தெளிவு. வரையறுத்தபாட்டியல் இயற்றியருளிய சம்பந்த மாமுனிவரைப் பற்றிப் புலவர் உலகம் நன்கு அறியும். இவ் விவரங்களை ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் எழுதியுள்ள 'தமிழகத்தில் ஜைனம்' என்னும் கட்டுரையில் நன்கு விளக்கியுள்ளார்.

## கமடன் எறிந்த கற்குன்று

'நீசக் கமடன் எறிந்தகற் குன்றினும்
நின்றாய் ! (திருமேற். அங். 17)

'கமடன் விட்ட சரத்திற......செல்வனையே' (திருமேற். அங். 88)

'அனுஷ ரெனக் கன்மழையா லக்கமடன் பெய்ய
சறுவிற் செயிற்றனத்தைச் சாத்தி'— (அ. உலா. 133)

'கமடன்விடு கன்மழையுங் காலின் மலராய்
அமடன் இறைஞ்ச அருளாய்' (அ. உலா. 323)

## அந்தகர்க்கு வீட்டுநெறி அருளல்

'மைந்தர்க் கிரங்கி மகளிர்க் கிணங்கி வழியறியா
வந்தர்க்கும் வீட்டுநெறி தருங்காண்'— (திருமேற். அங். 8)

—ஆர்ந்தவயன்
அன் றுரும மந்தற் கருளினன் வெற்பிலே
நின் று தவழ்ந்த பிறை நெற்றியாள்' (அ. உலா. 427, 428)

## அவுணன் விடுசரந் தடுத்தது

—நின் ற தெப்பம் ஏற்றவுணன், விற்றொடர்
பாயவன் வெங்கணை மாரி விழவிழவே' (திருமேற். அங். 58)

—இகல்வா ளவுணன்
கதம்பார்த் தரவர சன்பணத் தாலிட்ட காவணத்தார்
சுதம்பார்த் தவரருளிச் செய்த மாற்றந் துணிந்தவாறே.
(திருமேற். அங். 61)

வானும் புவியுந் தொழுமணியே யுன்னை வாளவுணர்
கோனும் படையும் பொரவந்த நாளன்பு கூர்ந்துரகன்
தானுந் துணைவியுஞ் செய்த நன்றிக் கவர் தம்மையல்லால்
யானுங் கிளையுந் துதியாற் றொழுந்தெய்வம் எத்தெய்வமே.
(திருமேற். அங். 64)

— அன் றவுணன் விட்ட
இடியே றெனவந் தெதிர்ந் தெழு சீற்றத் திடிதடுத்த
கொடியே யெறிசிக ரத்திருப் பாழிக் குணக்குன்றமே.
(திருமேற். அங். 74)

# திருமேற்றிசை அந்தாதி

## காப்பு

திருமா மகளுறை கின்றசெந் தாமரை யொன்றதன்மேல்
வருமா மலர்கள் இரண்டுடை யான்மதி போல்நிழற்றுங்
குருமா மணிக்குடை மூன்றுடை யான்குணம் நான்கமைந்த
பெருமான் நறுங்கொண்டை என்னவல் லார்க்கில்லை பேரிடரே.

## நூல்

பூவும் புனலும் பொழிந்தொரு மூன்றுபுவ னத்தெல்லாத்
தேவும் புகழ்ந்தமை யாத்திருத் தீபையில் செய்தவத்தோர்
மேவும் திருப்பா ழியில்திரு மேற்றிசை வீரனையென்
நாவும் பரவுமென் றுல்என் சொலாரிந்த நாட்டவரே. 1

நாடேன் நினதற மல்லது நாற்கதி நாடகம்புக்(கு)
ஆடேன் அவரிவர் தெவ்வரென் றையமுற் றங்குமிங்கும்
ஓடேன் இனிவந் துனையடைந் தேன்ஒரு கால்நினைக்க
வீடே தருந்திருத் தீபையின் மேற்றிசை விண்ணவனே. 2

விண்ணிற் புகுந்தும் நிரயத் தழுந்தியும் மீளவந்து
மண்ணிற் பிறந்தும் இறந்துஞ்செல் லார்வட பாழிவந்தென்
கண்ணிற் புகுந்தென் கவியில் துவக்குண்டென் காதல்நெஞ்சத்(து)
உண்ணிற்கும் எந்தை சரணே சரணென் றுணர்ந்தவரே. 3

உணர்வது கண்டுமங் கேவலப் பாவையையுள் ளத்துள்ளே
புணர்வது மாற்றுவ தைப்பொறி வாயிற் பொறிப்பணத்தால்
உணர்வரி வன்றலைப் பாப்பர சன்செய்த தொப்பிநிற்ப
இணர்வரி வண்டரற் றும்பிண்டி நீழல் இருந்தவனே. 4

இருந்தும் கிடந்தும்நின் றும்சென்று நாடொறும் இவ்வுடம்பு
வருந்தும் தொழிலன்றி ஒன்றறி யாதுமன மும்இன்னம்
திருந்தும் குறியில் வருகின்ற தில்லை திருவடிக்கீழ்ப்
பொருந்தும் திறமுமுண் டேவட பாழிப் புயல்வண்ணனே. 5

---

2: 8-9. தெய்வமென் றையமுற் (அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ள பாடபேதக் குறிப்புகளில் முதல் எண் பாட்டையும் ஏனைய சீர்களையும் குறிப்பனவாம்.)

3: 3-4. நிரையத் தழுந்தியும்.

4: 2. கண்டமுங். 13-14. பாம்பரசன் செய்த.

வண்ணங் கரிய(து)அருள்நீ ரதுமறு வொன்றுமில்லா(து)
எண்ணுந் திருமறு ஆயிரத் தெட்டின(து) எண்குணத்த(து)
உண்ணின் றெழுமொரு பேரின்ப வெள்ளத் தும்பரெல்லாம்
நண்ணுங் குடதிசைக் கேயடியேன் பெற்ற நன்மணியே. 6

மணியால் அணிந்தசெம் பொன்னெயில் போலவிம் மண்ணில் [விண்ணில்
அணியா விளங்குநுங் கோயில்பல கோடிக ளாயினுமென்
பிணியாம் பிறவிக்கு நன்மருந் தாம்பெரு மானடிகள்
பணியா லயத்தன்றி யானறியேன் உன்னைப் பாவிப்பதே. 7

பாவிப் பதுநின் பணவரங் கம்பணிந் தேத்துவதுன்
வாவிப் பதும மலர்ச்சே வடியே வாய்ந்தடியேன்
சேவிப் பதுநின் திருத்தொண் டரைத்திரு மேற்றிசையாய்
வீவிப் பதுபண்டு செய்துசெய் தீட்டிய வெவ்வினையே. 8

வினைதரும் துன்பப் பகைப்பெரும் போர்வென்று வீற்றிருப்ப
நினைதரும் தொண்டர் நினையும் திருநகர் அந்தலத்தின்
வனைதரு முககுடைத் திக்குடை யாடை மணியுரகப
புனைதரு பந்தற் பணமுடையார் மன்னும் பொன்னகரே. 9

பொன்னும் துகிரும் புனைகுடை மூன்றுடன் பூசல்வண்டு
துன்னும துணர்ப்பிண்டி தண்ணிழற் செய்யவுஞ் சூளிகைமேல்
மின்னும் பருமணி வான்வெயில் வீசு விடமுகப்பாம்(பு)
இன்னுங் குடதிசை யாய்க்கென்கொல் நீழ விடுகின்றதே. 10

இடுசுடர் போல்நின் றெரியும் பணுமணி யெப்பொழுதும்
விடுசுடர் பல்பக லாய்வெயில் வீசும் வெவ்வினைவேர்
அடுசுடர் ஞானத் தவஞ்செய் கின்றாய்க் கெழுந்தகதிபடப்
படுசுடர் வாள்வெயி லும்படவேண்டும் கோலப் பண்ணவனே. 11

பண்ணறிந் தோமல்ல பாட்டறிந் தோமல்ல எட்டெழுத்தோ(டு)
எண்ணறிந் தோமல்ல இன்றறிந் தோமுற்றும் எவ்வுயிர்க்கும்
கண்ணறிந் தோமென் றறிந்தோர் தொழும்பணக் காவணத்தார்
தண்ணறுந் தோடவிழ் தாமரைத் தாள்நிழல் சாரவந்தே. 12

சாரும் கதிகள் நமதே முடிவிற்றகா தாமவரைக்
காரும் மணியு மனையரென றேத்தியெக் காடுங்கண்ட
ஊரும் இரைகளை புள்ளொத்து நாமுழந் தோடிவந்து
சேரு மிடம்எம் பிரான்நின்ற மேலைத் திசாமுகமே. 13

---

8: 6-7. வாவிப் பதுநின்.

10 : 15. விடமுடைப் பாம்பு.

11 : 15. கெழுந்த கதிபடப்.

12 : 15. சார்வந்ததே.

முகமதி ஒதி முகில்விழி நீலம் மொழிஅமிழ்தென்(று)
அகமதி வாடினை இல்நெடு நாள்இனிஅண் டர்முன்னே
தொகுமதி முக்குடைக் கீழே விரிபணச் சுந்தரர்க்காட்
புகுமதி யேமதி அல்லால் நினைமதி புன்மதியே. 14

மதியுடை யோம்பெருவாழ்வுடையோம்எண் ணில்மண் ணில்வைத்த
நிதியுடை யோம்என் றிருப்பார் இருக்க நிலவுமுத்திப்
பதியுடை யோம்ஐம் பதமுடை யோம்பணக் காவணத்தார்
துதியுடை யோம்இனி என்னுடை யோம்என்று சொல்லுவதே. 15

சொல்லார் திருவறம் சூடார் திருமணல் தொண்டருடன்
செல்லார் இறைவர் திருநகர் சூழத் திகழ்ந்திலங்குங்
கல்லார் பணப்பெருங் காவணங் கண்டுகண் ணீர்ததும்ப
நில்லார் பிறவிப்பிணிக் கென்செய் வார்சிலர் நீசர்களே. 16

நீசக் கமடன் எறிந்தகற் குன்றினும் நீநடந்த
வாசக் கமல மலரினும் தொண்டர் வலியவினைப்
பாசத் தின்நீங்கித் தருங்கமழ் போதினும் பன்மணிவாள்
வீசப் பணப்பந்தர் நின்றுய்க் கென்கொல் மெல்லியதே. 17

மெல்லியல் மங்கையர் கொங்கைத் துணைவிட்டு வீட்டுலகம்
செல்லிய சிந்திப் பவர்திகையார் திருத்தீ பையில்என்
சொல்லியல் மாலை புனைபணக் காவணஞ் சூழ்ந்தெறிக்குங்
கல்லியல் வெஞ்சுட ராயிர மேவழி காட்டுமென்றே. 18

என்றும் கடிகமழ் தாமரைப் போதும்எப் போதும்வண்டு
துன்றும் நறுமலர்த் தொங்கலம் பிண்டியும் தொண்டருடன்
சென்றும் பரேத்துந் திருமேற் றிசையும் செழுங்கவிகை
ஒன்றும் இரண்டும் உடைத்(து)எம்மை யாளும் ஒருவடிவே. 19

வடியும் பிணையும் அனையகண் ணார்வணங் கும்மருங்கில்
துடியும் முலையும் நினைந்துழல் வீர்தொழு வீர்துறந்தார்
முடியும் கடகமும் முத்தணியா ரமும்மூ ரிப்பைம்பொற்
கொடியும் குடையும் மிடைதிரு மேற்றிசைக் கொண்டலையே. 20

கொண்டலை அண்டர் தொழுதெழுங் கோனைஎம் கொற்றவனை
வண்டலர் தாமரைப் பொற்றேர் வலவனை மஞ்சுறங்குந்
தண்டலை மாடுயர் தீபையுட் பச்சைத் தவக்கொழுந்தைக்
கண்(டு)அலை யாழி நிகராம் பிறவி கழிந்தனமே. 21

கழியுந் தெரிவையர் பற்றென்று பொற்பணக் காவணத்தாய்
மொழியுந் திருமொழி யார்தெளி வார்ஒரு மூழ்த்தமும்நீ
ஒழியும் பொழுதில்லை கேவலப் பாவையையுள் ளத்துள்ளே
பொழியுங் களிகொண் டகலாள் கமலப் பொலங்குழையே. 22

---

17 : 15. பன்மணிவான்.
21 : 9. வல்வினை.

பொலங்குழை மாதர் நடஞ்செய்பொற் றேடன்ன புண்டரிக
நலங்கிளர் போதிரண் டாயிரம் சேவிப்ப நாற்றிசையும்
இலங்கிதழ் ஆயிரத் தெட்டுடன் ஈரிரு காதவெல்லை
மலர்ந்தது மேற்றிசை யான்அடி ஏந்து மணமலரே. 23

மணப்பந்த ரில்உம்மை வாழ்த்திய மாதரும் மைந்தரும்பின்
பிணப்பந்த ரில்கண் டழுதாற்று முன்னம் பேதுறுந்தீக்
குணப்பந்த வல்வினைப் பற்றற மேற்றிசைக் கோளரவின்
பணப்பந்தர் நீழல்நின் றுன்திருத் தாள்சென்று பாடுமின்னே. 24

பாடியும் எந்தை பணப்பந்தர் வாழ்த்தியும் பண்ணவன்தாள்
சூடியும் நன்னெறி சென்றுதுன் னூர்துவ ராடையின்மெய்ம்
மூடியும் வீழ்சடை கட்டியும் முக்கோல் பிடித்தும்முன்னீர்
ஆடியும் மூடர் படுவர் அந்தோநின்(று) அலந்தலையே. 25

தலைப்படு மின்குட திக்குநின் றூர்அறம் தாழ்குழலார்
வலைப்படு தெய்வம் வழிபடல் ஓம்புமின் வல்வினைப்பேர்
அலைப்படு துன்பப் பிறவிக் கடல்பின்னை ஆழுமின்றி
நிலைப்படும் அக்கடல் பொய்த்தரையாம் தம்மை நேர்படவே. 26

படஅர வின்குளிர்ப் பந்தரின்கீழ்ப் பச்சை மேகன்நின்ற
வடவரை போல்வட பாழித்திரு மணல்வா ரிக்கொண்டு
தடவர வேபிணி போந்தவ் வேந்தரைச் சேர்ந்தொழுக
அடவருஞ் சீற்றவெங் கூற்றமும் போம்நம்மை ஆசையற்றே. 27

அற்றேம் இருவினை அஞ்சோம் நெடுந்துயர்ஆர் வஞ்செற்றம்
செற்றேம் நினதற மேதெளிந் தோம்திரு மேற்றிசைக்கே
உற்றேம் இனிஐயம் ஒன்றும் உறேம்உனை யேதுதிக்கப்
பெற்றேம் முகில்வண் ணமற்றடி யோம்என் பிறநின்றதே. 28

நின்றும் இருந்தும் பணப்பந்தர் வேந்தை நினைந்துநினைந்(து)
ஒன்றும் முனிவர் உலாவும் திருமுன் றில்உள் ளத்துள்ளே
நன்றும் பெருகும் நசைக்கடல் ஈன்ற நவைக்கடலைப்
பொன்றும் படிநின் றிறைக்கவல் லார்க்கிடம் பொற்றலையே. 29

துலைமே லெடுத்திடை தூக்கினன் போல்முறை சூழ்மறலி
கொலைமேல் வரினும் உயிர்கோட் படுகிலும் கொண்டல்ஒன்று
மலைமேல் வளர்வது போல்வட பாழி மகிழ்ந்தவர்தாள்
தலைமே லனஎங் கள்நாமே லனஅவர் தம்புகழே. 30

புகழும் புலவர் புகழ்தற் கரியது புன்னெறி நின்(று)
இகழும் கயவர் இகழ்தற் கெளிய(து) இறந்தவமே
நிகழும் பொருளும் நிகழ்கின் றனவும் நினைப்பில் அங்கைத்
திகழும் கனிபோல் உணர்பசுஞ் சோதித் திருவறமே. 31

---

24 : 15. கோனரவின்.

திருவளர் தீபைத் திருப்பா ழியில்திரு மேற்றிசைக்கே
உருவளர் பச்சை மலையொன் றுமேபுணை உம் பர்செம்பொன்
தருவளர் வானம் தரும்நிரை யக்குழி தந்தமையாக்
கருவளர் பல்பிற விப்பெரு வேலை கடப்பவர்க்கே. 32

கடலொன் றெருகதிர் மண்டலத்துக் கண்டதொப்பச் செங்கேழ்
மடலொன் றுதாமரை மேல்வருவீர் ஒற்றை வைகலுமிவ்
விடலொன் றுசெய்தம்நன் றுண்டல்ல என்செய்வ(து)
[உம்மடியேன்
அடலொன் றுவெம்படை ஏவிவெங் காலன் அணிநிற்கிலே. 33

அணியா வணிகலத் தெம்பெரு மானறங் கேட்பவர்க்குத்
தணியா தழலுந் தழல்வெம் பசியில்லை தண்டரள
மணியால் விளங்கொளி முக்குடை நீழலவ் வாமன்வைகும்
பணியார் மணியரங் கம்பணி வார்க்கில்லை பல்பிணியே. 34

பிணிகளும் தீவினையும் போய்நின் சரணம் பெய்சரம்பூ
அணிகளும் சாந்தமு மானநின் சேவடிக் காட்புகுந்தேன்
பணிகளுங் கொண்டருள் செய்யத் தகாவல்ல பாந்தட்பணு
மணிகளும் பச்செனப் பச்செனத் தோன்று மரகதமே. 35

மரகத மேனிவெண் சாமரை பூமழை மாமதுரச்
சுரகத கீத முடையபெம் மாற்கிடம் சூழ்கதிரோன்
குரகத வீதி தொடுவட பாழிக் குடதிசையும்
உரகத மன்னவர் பல்பணக் காவும்என் உள்ளமுமே. 36

உள்ளத் துணர்வை உணர்வின் பயனை உணர்வினின்ப
வெள்ளக் கடலை முகந்துகொண் டேன்இனி மீளெதுங்க
அள்ளற் பழனத்து நெல்லரிவார் அரிதா ளில்முத்தங்
கொள்ளக் குறைவு படாத திருத்தீபைக் குடதிசைக்கே. 37

குடதிசை நோக்கி மரகத மாமணிக் குன்றமொன்று
வடதிசை மேருவில் நின்றது போல்வட பாழியில்எம்
இடர்திசை நீங்கநின் றூர்க்கற மாயுதம் எண்குணம்பூண்
படர்திசை யாடை உரகேந் திரன்பணப் பலகுடையே. 38

குடைமன் னவர்முதல் எக்குலத் தோரையும் கோத்தொகுத்த
தொடைமன் னுசெய்யுட் டுறைக்கோர் முடிவில்லை தொல்லறநூல்
நடைமன் னுதீபை வடபாழி யுள்நின்ற ஞானவொள்வாட்
படைமன் னவரையல் லால்இனி யாரையும் பாடலமே. 39

---

35 : 9-10. சேவடிக் காட்புகுந்தென்.

37 : 5. உணர்விலின்ப.

பாடலம் ஐம்பதத் தம்புயத் தோர்பசுஞ் சோதிபொற்றுள்
சூடலம் எந்தை துணையடித் தாமரை தூயநன்னீர்
ஆடலம் ஆடாப் படிவத் தருந்தவர்க் காவதொன்றும்
நாடலம் நம்பிற விக்கென் செய்கோம்இனி நன்மருந்தே. 40

மருந்தே குடதிசை மாமணியே மடமா தர்செவ்வாய்
முருந்தே முறுவல் முனிந்தோன் நீநிற்க முற்றுலகம்
தருந்தே வரும்அழிக் குந்தனித் தேவரும் சக்கரக்கைப்
பெருந்தே வரும்தே வராளம் மில்நீங்கிப் பெறுபவரே. 41

பெறுவார் பெறுக உலகொரு மூன்றும் பிறவியின்வேர்
குறுவார் குறுகுங் குடதிசை யாய்ஒரு குற்றமில்லா
மறுவார் மரகத மாமணி யேமணி மூன்றையும்என்
இறுவாய் வருமன்று மாமென்று வரமொன் றெனக்கருளே. 42

அருள்தரு செங்கட் பணக்கா வணத்தறி வாஅறியா
இருள்தரு நெஞ்சுடை யேன்ஒன்று கேட்பதுண் டெவ்வுயிர்க்கும்
பொருள்தரு நல்லறம் நீதரும் போதுநின் பூம்பிண்டிசேர்
மருள்தரு வண்டினம் என்செய் தவோதவம் யாதெளிவே. 43

தெளிக்கின்ற நல்லறந் தேர்ந்துண ரார்பலதீர்த் தங்கள்போய்க்
குளிக்கின்ற மாந்தர் தமக்கென்செய் வார்குடக் கேதிசைநோக்(கு)
அளிக்கின்ற நாதர் திருவடிநீர் படிந்தா டிச்சிந்தை
களிக்கின் றிலர்அவர் தந்துதி கேட்கிலர் கற்கிலரே. 44

கற்கின்ற செந்தமிழ்ப் பாக்கொண் டிவர்செங்கை கற்பகம்தோள்
மற்குன்றம் என்றினி வாழ்த்தல்செய் யேன்வட பாழியென்னும்
பொற்குன்றின் மீது குடபால் முகஞ்செய்து பூமிசையே
நிற்கின்ற கோல மணிக்குன் றெனக்கின்று நேர்பட்டதே. 45

பட்டக் களிற்றின் மிசைவெண் ணிலாவிரிப்பத் திருமுத்த
வட்டக் குடைநிழல் வேண்டுவரே பின்னுமள் ளர்கன்னல்
வெட்டத் தரளஞ் சொரிதிருத் தீபையுள் மேற்றிசையான்
முட்டப் பரந்த பணநிழற் காணும் முடிமன்னரே. 46

முடிக்குங் குறையினி யொன்றுள தோஇந்த மூன்றுலகும்
படிக்கும் புகழ்த்திருத் தீபைகண் டோம்அப் பதியுளம்பொற்
கொடிக்கும் பசாளரச் சூளிகைப் பாழிக் குடதிசைக்கே
வடிக்குந் திருவறத் தெள்ளமு தூற்று மடுத்தனமே. 47

---

41 : 6-10. முருந்தோ முறுவன் முனிந்தொரு நீநிற்க முற்றுலகம். 20. பெறுகிலரே.

42 : 6. ரறுவார்; 16-20. ளிறுவாய் வருமென்று மாமொன் வரவென் றனக்கருளே.

44 : 3-4. தேர்ந்துண ராபலதீர்த்.

46 : 9-10. பின்னுமள் ளர்சென்னல்.

47 : 11-12. கொடிக்கும் பசாரளச்.

மடுக்கு நறவு தெளியிரு ளுண மட வார்விழைவு
கெடுக்குங் கொலைபொய் களவு புலால்பொருள் கேளிர்சுற்றம்
விடுக்கும் முனிவரை வைதல்ஒல் லார்முத்த வெண்குடைக்கீழ்
அடுக்கும் பணக்குடை யார்அடி நீழல் அடைந்தவரே. 48

அடையொடு நாண்மலர் கொண்டடை வாய்இனி ஆருயிர்மேற்
படையொடு காலன் வரவெண் ணுமோவினைப் பாவையர்கட்
கடையொடு வார்குழை மேற்சென் றுலாவிக் கனதனஞ் சேர்ந்(து)
இடையொடு நேயுநெஞ் சேயெங்கள் மேற்றிசை ஈசனையே. 49

ஈசனை நான்முக னைத்திரு மாலையின் னுப்பிறவி
நாசனை நந்திரு மேற்றிசை நாதனை நாற்றிசையாந்
தூசனை ஆயிர மாயிர ஞாயிறு தொக்கமிக்க
தேசனை யாமடைந் தின்றே வினையிருள் செற்றனமே. 50

செற்றோம் இருவினை செய்தவத் தார்பெறுஞ் சித்தியன்றே
பெற்றோம் இனிநாம் பெறுதகென் னோபிழை யாவறநூல்
கற்றோர் புகழும் திருத்தீபையுட் பணக்கா வணத்தார்
பொற்றா மரையில் உலாவருந் தாமரைப் போதுகண்டே. 51

போதுகண் டாலெந்தை பொன்னடிக் கேற்றியெப் போதுமன்பாய்
ஓதுகண் டாய்திரு மேற்றிசை யானென்(று) ஒளியிழையார்
சூதுகண் டாலன்ன கொங்கைச் சுவடு தொடர்ந்துபின்போய்
யாதுகண் டாய்இங் ஙனேநெடு நாள்உழந் தென்னெஞ்சமே. 52

நெஞ்சே கொடிய மறலியுஞ் சேனையும் நேர்வரு மென்(று)
அஞ்சேன் இனிநம் மிலார்வலி யார்சுரே சனுமேவவ்
வெஞ்சே னையுங்கெடத் தியான வொள்வாள் கொண்டுவென்றார்
செஞ்சே வடிக்கல் லவோவின்று நான்தொண்டு செய்கின்றதே. 53

செய்யோம் அருந்தவம் சேவடிக் காவன செவ்விமென்பூக்
கொய்யோம் முனிவர் குழாமணு கோம்குல மேருவென்று
வெய்யோன் வலங்கொள் வடபாழி யிற்பச்சை மேகமென்னோம்
ஐயோ பிறந்தவ மேவினைப் பாசத் தழுந்தினமே. 54

அழுந்துந் துயர்ப்பிற விக்கடல் வாயலைப் புண்டழுந்தி
எழுந்தும் பதைப்பதற் கென்கடவோம் இமையோர் நெடுங்கண்
விழுந்துங் களிப்ப வெழும்பசுஞ் சோதி விசும்புமுட்டக்
கொழுந்தும் விடக்குட திக்கில்நின் றார்எங்கள் கொற்றவரே. 55

---

49 : 17-18. னையுநெஞ் சேயெங்கள்.

50 : 11-14. தாசனை ஆயிர மாயிரு ஞாயிறு.

52 : 5-6. போதுமன்பார் ஓதுகண்டாய்.

53 : 9-10. யார்சுரே சனுமவ்.

கொற்றக் குடைசுடர் மண்டிலம் பூமழை கோத்தமுத்தக்
கற்றைக் கவரி முரசுசிங் காசனம் காமர்வண்டு
சொற்றத் தழைக்கு மசோகந் துவனி தொழான்நிருதன்
செற்றப் படைகடந் தார்க்கும்பர் கோன்செய் திருச்சிறப்பே. 56

சிறக்கும் பெருஞ்சித்தி சிந்தைசெய் யோம்நினைச் சிந்தை
[செய்யா(து)
இறக்குங் கொடுவினை மாக்களை நீங்கி இருவினையும்
துறக்குந் திருமேற் றிசைச்சுட ரேயென்று சொல்லிச்சொல்லிப்
பிறக்கும் பிறவியெல் லாம்நின்னை யேதொழப் பெற்றனமே. 57

பெற்றெடுத் தாரும் கிளையுமென் றேரும் பிறர்தமக் கொன்(று)
உற்றிடத் தால்வந் துதவ லன்றேரு ஒருதனியே
பிற்றொடர்ப் பாடிகந் தாய்நின்ற தெப்பம் ஏற்றவுணன்
விற்றொடர்ப் பாயவன் வெங்கணை மாரி விழவிழவே. 58

விழப்போர் கடந்தடும் வெங்கடற் றிணைவது மெல்லிநல்லார்
அழப்போம் உடம்பு சுமந்துழல்வீர் ஒற்றை யாழியந்தேர்
எழப்போக வோங்குந் திருப்பாழி இந்திர நீலவெற்பைத்
தொழப்போம் வழிப்போ துமக்கது போலுந் துணையில்லையே. 59

துணையும் பெருங்கடற் சுற்றமும் சுற்றக் கடல்கடக்கும்
புணையும் பெறலரும் போகமு மாவன பொன்முடிமேல்
அணையுந் தவஞ்செய்த ஐந்தலைப் பாம்பும் அசோகினம்பொற்
பணையும் கவிப்ப நிற்கும் பரஞ்சோதிப் பதயுமே. 60

பதம்பார்த் தரசர் கடைநின் றுள்புக்குப் பணிந்தவருக்(கு)
இதம்பார்த் துரைசெய்வ தெண்ணிநில் லார்இகல் வாளவுணன்
கதம்பார்த் தரவர சன்பணத் தாலிட்ட காவணத்தார்
சுதம்பார்த் தவரருளிச் செய்த மாற்றந் துணிந்தவாறே. 61

துணிந்தோம் பிறவித் துயரொழிந் தோம்தொண்டர் தம்மிடைப்
[புக்கு
அணிந்தோம் குடதிசை முன்றில் திருமணல் அத்திசைக்கே
தணிந்தோம் பிறப்பறத் தாழாப் பெருநகை தாழ்ந்துசென்னி
பணிந்தோம் பணக்கா வணப்பற் றிலாவினைப் பற்றினமே. 62

பற்றுடை யாரைப் பரமரென் றேத்திப் பலபதங்கள்
பெற்றுடை யாருள ராயினும் பச்சைப் பிரான்உலகை
முற்றுடை யான்ஒளி மூன்றுடை யான்திசை நான்குமன்றி
மற்றுடை யாடையில் லாவென்னை யாளுடை வானவனே. 63

---

58 : 9-10. லன்றேரு ருதனியே.

59 : 3-4. வெங்கடற் றிணைவைது.

62 : 17-20. பண்காவணப் பற்றிலா வினையும் பற்றினமே.

வானும் புவியுந் தொழுமணி யேஉன்னை வாளவுணர்
கோனும் படையும் பொரவந்த நாள்அன்பு கூர்ந்துரகன்
தானும் துணைவியுஞ் செய்தநன் றிக்கவர் தம்மையல்லால்
யானுங் கிளையுந் துதியால் தொழுந்தெய்வம் எத்தெய்வமே. 64

எத்திக் கிலுநின் றிமையோர் வணங்க இணையிலின்பச்
சித்திப் பெரும்பதஞ் சென்றடை வார்திரு மேற்றிசைக்கே
முத்திற் பொலிகுடை மூன்றுடன் மாணிக்க மொய்த்ததுத்திப்
பத்திப் பணக்குடை ஐந்துடை யாரைப் பரவினரே. 65

பரவார் மறந்தும் பிறிதொரு தெய்வம் பசிபிணிகூர்ந்(து)
இரவார் புறங்கடை நின்றொரு நாளும் இழிகதிவாய்
விரவார் விரவுவ தும்பர் குழாத்திடை மேற்றிசைவாழ்
அரவார் பணிநிழ லார்க்கன்பு கூரும் அடியவரே. 66

அடிதொழு தொண்டர் பணிதலை மேற்கொண் டரவரசின்
முடிகெழு பல்பணத் தானைப் பணிந்துய்ம்மின் மூண்டசினத்(து)
இடிகெழு வெங்குரற் கூற்றெதிர்ந் தால்உமக் கெவ்விடத்தார்
வடிகெழு வேற்கண் மகளிரும் கேளிரும் மைந்தருமே. 67

மைந்தர்க் கிரங்கி மகளிர்க் கிணங்கி வழியறியா
அந்தர்க் கும்வீட்டு நெறிதருங் காண்மணி வஞ்சியென்றும்
கந்தர்ப் பன்வந்தனு காவட பாழிக் கடவுள்பணப்
பந்தற் பரப்பி நிறைத்தசெஞ் சோதிப் பருமணியே. 68

பருமணி வேயும் பணப்பந் தரில்பச்சை மாமுகில்நின்(று)
அருள்மழை நாளுந் தரவல்ல தேதன் அடியவர்க்குத்
திருமகள் பூமகள் சீர்மகள் நாமகள் சித்தியென்னும்
பெருமகள் போகமெல் லாம்இங்கு மங்கும் பெருகுவதே. 69

பெருகுந் தவங்களில் என்செய் தவோபின்பு பேணித்தொண்டர்
உருகுங் குடதிசை வீரன் உலாவர உற்றமிர்து
முருகுந் ததும்புஞ்செந் தாமரைமேல் மொய்த்து முன்னும்பின்னும்
மருகும் பிறிவறி யரவுடன் சேவிக்கு மாடல்வண்டே. 70

வண்டலர் தாமம் பெறலின்றி வல்வினை யேன்மகள்தன்
கண்துயி லாளென்னும் கைக்கிளைத் தேவரைக் கண்டிறைஞ்சித்
தொண்டு செய்வார் செய்கயான் தொண்டு சூழ்திசையே
வெண்துகி லாக வுடைபணக் காவண வீரனுக்கே. 71

---

64 : 8-9. போர்வந்த ளைன்பு.
66 : 19-20. கூறும் அடியவரே.
68 : 6. வந்தர்க்கும், வந்தார்க்கும்.
70 : 6-7. அருகுங் குடதிசை.

வீரனை மும்மதி வேந்தனை வேரியந் தாமரைப்பூந்
தேரனை மேற்றிசைச் செல்வனை மல்லலந் தீபையென்னும்
ஊரனை ஊரும் பெயருமில் லானை ஓராயிரத்தெண்
பேரனை எத்திறத் தான்என்று நாம்சில பேசுவதே. 72

பேசார் இறைவர் பணப்பெருங் காவணம் பேரறங்கொண்(டு)
ஆசார நன்மணிப் பூணணி யார்முகந் தங்கமெங்கும்
பூசார் அவர்திரு முன்றில் திருமணல் புன்னெறியை
ஏசார் பிறர்நம்மை யொப்பார் இருக்கின்ற தெப்படியே. 73

படியேன் நினைதற மல்லது பாரிலெப் பற்றுமற்றுன்
அடியேற் கருள்செய்யுநாள் எந்தநாள் அன்றவு ணன்விட்ட
இடியே றெனவந் ததிர்ந்தெழு சீற்றத் திடிதடுத்த
கொடியே எறிசிக ரத்திருப் பாழிக் குணக்குன்றமே. 74

குன்றால் வளைப்புண்ட பூகண்டமும் அண்டர் கோனுலகும்
என்றால் அவையெட் பகவும்ஒவ் வாதன தெல்லைவயஞ்
சென்றார் வினைதுறக் குந்திருத் தீபைக் குடதிசைக்கே
நின்றான் இருக்கின்ற வண்ணம்எப் போதும் நினைப்பவர்க்கே. 75

நினைக்கின்ற நெஞ்சும் மொழிகின்ற நாவும்கண் ணீரினின்று
நனைகின்ற மெய்யும் பணிகின்ற சென்னியும் நாகர்தங்கோன்
வனைகின்ற பந்தற் பணக்கா வணத்தார் அடிமலரான்
புனைகின்ற கையும் உடையவ ராம்எம் புரவலரே. 76

புரங்கொண்ட பொன்மலை வில்லியை அம்மலை வல்லிபுல்லச்
சரங்கொண்ட வில்லி திகிரிசெல் லாப்பா ழிவெற்பைச்
சிரங்கொண் டிறைஞ்சியும் வாய்கொண்டு வாழ்த்தியும்
[செம்மலர்தூஉக்
கரங்கொண்டு நீர்தொழு வீர்வெவ் வினைதன்னைக் கைவிடுமே. 77

கைவிடப் போக்கிய காதியஞ் சோதிதன் கார்வணமாம்
வெவ்விடப் பாம்பொன்று மேற்றிசைக் கேநிற்பப் போற்றி
[செய்வார்
அவ்விடத் தேவந்து நீயுநின் றாய்நெஞ்சம் ஆனதற்பின்
எவ்விடத் தேநிற்கில் என்பல கோளும் இனியுனக்கே. 78

உனதென உண்டென் றொருபொருள் நிற்க உலகமெல்லாம்
நினதென வேண்டுதி யாயின்நெஞ் சேநினை யாதிருதன்-
தனதென முத்தி தரும்பச்சை மேகந் தரும்பொருளே
எனதென தென்றிருப் பாய்வட பாழியிடை மகிழ்ந்தே. 79

---

75 : 6. என்னல்.

இடைபடு பொன்னினி யான்றுரகேந் திரனிட்டவட்டக்
குடைகெழு பல்பணத் தானைப் பணிமின் கொலையுழந்து
கடைப்படு வீர்விடு வீர்கெடு வீர்நாற் கதியிற் செல்லில்
தடைப்படு வீர்என்றும் நெஞ்சினில் நீர்படுஞ் சஞ்சலமே. 80

சஞ்சலந் தீர்த்திரு வாய்மொழிந் தத்தரு மம்வைகி
அஞ்சவெந் தீவினை சேர்வழி மாற மழையுருமே(று)
அஞ்சவந் தாலும் அழியாமை யில்அடி யேனுடைய
நெஞ்சமன் றேநெடி யாய்வட பாழியுள் நிற்பதுவே. 81

நீசெய்வ தொன்றுண்டு நின்னடி யேனுக்கு நெஞ்சநல்லார்
வாய்செய்ய கண்செய்ய வென்றேதி யேமதி மயங்கிமற்றும்
பேய்செய்வ செய்துழ லாமல் பிடித்தென்னைப் பெற்றெடுத்த
தாய்செய் வதேசெய் தல்காண் பச்சைமேனித் தவக்கொழுந்தே. 82

கொழுந்துந் தளிரும் மலருங் கெழுமிக் கோதிவண்டு
செழுந்தும் பியுந்திரு நிழற்கீழ்ச் செழுந்தென் றுந்தேன்
விழுந்துண் டெழுங்களி கண்டுகொல் தொண்டர் விழியுநெஞ்சும்
அழுந்துங் கடவுட் பணநீழல் வேண்டிற் றறிவனுக்கே. 83

அறிவான் அறிவின் அறியவொண் ணுததும் அன்புருகிச்
செறிவார் செறிந்து தெரியத் தெரிவதும் தீவிழிக்கண்
பொறிவாள் அரவின் பணப்பந் தரில்பொற் பொகுட்டுச் செங்கேழ்
வெறியார் கமலத் தியான்கண்ட வேத விழுப்பொருளே. 84

பொருநாகர் பந்தற் பிரான்திரு மேற்றிசைபோற் றித்தொண்டர்
வருநாள் வழங்குந் திருமா மணலை மனைதுறந்து
கருநாடி தந்தவக் கேவலப் பாவையைக் கைப்பிடிக்குந்
திருநாள் வரமுனைச் சாந்தும் பண்ணு மென்பர் தேர்ந்தவரே. 85

தேருஞ் சுருதித் திசைமுகத் தோன்முதல் தேவர்தம்மைச்
சாரு மவர்மெய்த் துயரந் தணிக்கிலர் தம்மடியேம்
கூறும் பிணிதணித் தற்கெங் கள்நாதர் குடதிசைக்கே
வாரும் திருமணல் வாரா நெறியும் வருவிக்குமே. 86

வருவது போவ தொழியாப் பெருவழி மாற்றவல்லார்
ஒருவரை நாடி இனியுழ லேன்உல கேழினும்தன்
திருவரு ளாழி நடாத்துங் குடதிசைச் செங்கனிவாய்க்
கருவரை கண்டு குவிந்தக லாதென் கரதலமே. 87

கரத்தின் தொழுது முடியிற் பணிமின்கம டன்விட்ட
சரத்தில் சனகையில் தாரா சிவத்தில் தமிழ்மயிலைப்
புரத்தில் கரிவலஞ் சூழ்நகர்பொன் மண்டபத் தில்அண்டர்
சிரத்தில் திருத்தீ பையில்திரு மேற்றிசைச் செல்வனையே. 88

செல்வழி தேடி வரும்வழி நாடித் திகைத்தவமே
கல்வழி யோடிக் கடைப்படு வீர்கவ ராதுசெல்லும்
நல்வழி யாவது தொல்லற மேயன்று நற்றவத்தோர்
சொல்வழி யேசென்று மேற்றிசை பாடித் தொழுமின்களே. 89

மின்னினும் வானிடு வில்லினும் வீழ்பெயல் மொக்குளினும்
புன்னுனி நீரினும் நில்லா திளமை பொருளுமற்றே
என்னினி யாஞ்செய் வதென்றுநெஞ் சேயிர வும்பகலும்
உன்னினை வாயுணர் வாய்பச்சை மேகத் தொளியினையே. 90

ஒளிக்கும் பழவினை நாளிடைப் பார்த்துயிர் கோளிழைத்து
விளிக்குங் கடுங்கூற் றினும்வெகு ளாது மிகைத்தெழுந்து
களிக்கும் பொறிப்பகை யைந்தும் பொறிப்பணக் காவணத்தார்
அளிக்கும் பதமைந்தில் ஐந்தெழுத் தேகொண் டவித்தனமே. 91

அவிக்கும் பொறிப்பன்றி வானோ ருலகிற்கும் ஆழிவட்டப்
புவிக்கும் ஒருநகை யுற்றிரங் கார்அடி போற்றிநின்று
குவிக்குங் கரத்திருத் தொண்டர் குழாமும் குடதிசையும்
கவிக்கும் பணக்குடை யும்பச்சை மேனியும் கண்டவரே. 92

கண்டேன் உரகர் பணப்பெருங் காவணம் கண்டுகளித்(து)
உண்டே னின்றவர் திருவறத் தெள்ளமிழ்(து) உண்டுசென்னி
கொண்டேன் அவர்தந் திருவடிப் போ(து)இனிக் கூற்றுவனார்
தண்டே வினும்அவர் தாமே மலைப்பினும் தாக்குவனே. 93

தாக்கும் பழவினைப் போர்கடப் போர்தவப் பாழிவெற்பை
நோக்குந் திருத்தொண்டர் நோற்றதென் னேமற்றை நூலுக்
[கெல்லாம்
மூக்குஞ் சுருதிப் பழுதில் நன்னூலின் முடிவுணர்ந்தோர்
கோக்குங் கடவுள் மரகத மாமணிக் கோலத்தையே. 94

கோலத் தரள மணிக்குடை மூன்றும் கொடியசெங்கண்
ஆலத் துரகர் பணக்குடை யோரைந்தும் ஐந்தவித்த
சீலத் தவர்தம் திருப்பா ழியுந்திரு மாலுறையும்
மேலைத் திசாமுக மும்தொழு வாரது வீட்டுலகே. 95

வீடா வதும்இமை யோருல காவதும் வேலைமுன்னீர்
நாடா வதும்செல்வ நன்னக ராவதும் நானுடைய
பீடா வதும்என் பெரும்புக லாவதும் பெற்றபெற்ற
மாடா வதும்எம் பிரான்வட பாழி வரையகமே. 96

வரையா அருட்பெரு மாதவத் தோர்வட பாழியென்றென்(று)
உரையார் உணர்வொன் றிலார்பணக் கோயில் உலகிறைஞ்சும்
திரையாழி வண்ணர்தந் தீர்த்தநன் னீரில் திருமணற்போய்த்
தரையார் பெரும்பிணி கூர்ந்தழி வார்என் அழிகின்றதே. 97

அழியோம் விரதம் திருமந் திரத்தெழுத் தைந்துமன்றி
மொழியோம் மறந்தும் பரசம யத்துறை மூர்க்கர்சொற்கேட்(டு)
இழியோம் இழித்தே மறைபழிப் பாரையும் யாமழித்துப்
பழியோம் மணியரங் கப்பணி யானைப் பணிந்தபின்னே. 98

பணியேன் நின்சரண் பாடேன் நினதிறம் பாவநெஞ்சில்
துணியேன் நினதறம் சொல்லிய வாறென்று தொண்டர்பொற்றுள்
அணியேன் நினது திருமேற் றிசைநினைந் தன்பர்சிந்தா
மணியே எனக்கு முண்டோ சொல்லுவாழி வரகதியே. 99

வரந்தரும் தீபையுள் மேற்றிசை யானை மதியுடையோர்
நிரந்தர மாக நினைக்கிற் குறையே நினைந்தொருகால்
கரந்தரு சென்னிய ரானபின் யாவரும் கைதொழுவார்
புரந்தர ராகுவர் பூவும் புனலும் பொழிந்துநின்றே. 100

---

98 :3-9. பரசம யத்துரை.

# அந்தாதிப் பாட்டு முதற் குறிப்பு அகராதி

*[எண் : செய்யுள் எண்]*


| | |
|---|---|
| அடிதொழு தொண்டர் | 67 |
| அடையொடு நாண்மலர் | 49 |
| அணியா வணிகலத் | 34 |
| அருள்தரு செங்கட் | 43 |
| அவிக்கும் பொறிப்பன்றி | 92 |
| அழியோம் விரதம் | 98 |
| அழுந்துந் துயர்பிற | 55 |
| அற்றோம் இருவினை | 28 |
| அறிவான் அறிவின் | 84 |
| இடுசுடர் போல்நின் | 11 |
| இடைபடு பொன்னினி | 80 |
| இருந்தும் கிடந்தும் | 5 |
| ஈசனை நான்முக | 50 |
| உணர்வது கண்டுமங் | 4 |
| உள்ளத்துணர்வை | 37 |
| உனதென உண்டென் | 79 |
| எத்திக் கிலுநின் | 65 |
| என்றும் கடிகமழ் | 19 |
| ஒளிக்கும் பழவினை | 91 |
| கடலொன் றொருகதிர் | 33 |
| கண்டேன் உரகர் | 93 |
| கரத்தின் தொழுது | 88 |
| கழியுந் தெரிவையர் | 22 |
| கற்கின்ற செந்தமிழ்ப் | 45 |
| குடதிசை நோக்கி | 38 |
| குடைமன் னவர்முதல் | 39 |
| குன்றால் வளைப்புண்ட | 75 |
| கைவிடப் போக்கிய | 78 |
| கொண்டலை அண்டர் | 21 |
| கொழுந்துந் தளிரும் | 83 |
| கொற்றக் குடைசுடர் | 56 |
| கோலத்தரள | 95 |
| சஞ்சலந் தீர்த்திரு | 81 |
| சாரும் கதிகள் | 13 |
| சிறக்கும் பெருஞ்சித்தி | 57 |
| செய்யோம் அருந்தவம் | 54 |
| செல்வழி தேடி | 89 |
| செற்றோம் இருவினை | 51 |
| சொல்லார் திருவறம் | 16 |
| தலைப்படு மின்குட | 26 |
| தாக்கும் பழவினைப் | 94 |
| திருமா மகளுறை | காப்பு |
| திருவளர் தீபைத் | 32 |
| துணிந்தோம் பிறவித் | 62 |
| துணையும் பெருங்கடற் | 60 |
| துலைமே லெடுத்திடை | 30 |
| தெளிக்கின்ற நல்லறஞ் | 44 |
| தேருஞ் சுருதித் | 86 |
| நாடேன் நினதற | 2 |
| நின்றும் இருந்தும் | 29 |
| நினைகின்ற நெஞ்சும் | 76 |
| நீசக் கமடன் | 17 |
| நீ செய்வ தொன்றுண்டு | 82 |
| நெஞ்சே கொடிய | 53 |
| பட்டக் களிற்றின் | 46 |
| படஅர வின்குளிர்ப் | 27 |
| படியேன் நினதற | 74 |
| பண்ணறிந் தோமல்ல | 12 |
| பணியேன் நின்சரண் | 99 |
| பதம்பார்த் தரசர் | 61 |
| பரவார் மறந்தும் | 66 |
| பருமணி வேயும் | 69 |
| பற்றுடை யாரைப் | 63 |
| பாடலம் ஐம்பதத் | 40 |
| பாடியும் எந்தை | 25 |
| பாவிப் பதுநின் | 8 |
| பிணிகளும் தீவினையும் | 35 |
| புகழும் புலவர் | 31 |
| புரங்கொண்ட பொன்மலை | 77 |
| பூவும் புனலும் | 1 |
| பெருகுந் தவங்களில் | 70 |
| பெற்றெடுத் தாரும் | 58 |
| பெறுவார் பெறுக | 42 |
| பேசார் இறைவர் | 73 |
| பொருநாகர் பந்தற் | 85 |
| பொலங்குழை மாதர் | 23 |

பொன்னும் துகிரும் 10
போதுகண் டாலெந்தை 52
மடுக்கு நறவு 48
மணப்பந்தரில் உம்மை 24
மணியால் அணிந்த 7
மதியுடை யோம்பெரு 15
மரகத மேனிவெண் 36
மருந்தே குடதிசை 41
மின்னினும் வானிடு 90
முகமதி ஓதி 14
முடிக்குங் குறையினி 47
மெல்லியல் மங்கையர் 18
மைந்தர்க் கிரங்கி 68
வடியும் பிணேயும் 20
வண்டலர் தாமம் 71
வண்ணங் கரிய(து) 6
வரந்தரும் தீபையுள் 100
வருவது போவ 87
வரையா அருட்பெரு 97
வானும் புவியுங் 64
விண்ணிற் புகுந்தும் 3
விழப்போர் கடந்தடும் 59
விணேதரும் துன்பப் 9
வீடாவதும் இமை 96
வீரணே மும்மதி 72

# திருநறுங்கொண்டைத் தோத்திர மாலை*

## 1. திருநறுங்கொண்டை மலைப் பதிகம்

1. குளிர்கொள்செம் பிண்டிமலர் மழைமுழங் குந்துவனி
 குடைசெ ழுந்துந் துமிகுலாவு
ஒளிவிளங் குங்கவரி யளியிலங் கும்பொனெயில்
 உடைய வன்தங்கு சயிலம்
அளிகுலங் கொண்டுமணி மலர்களும் சந்தனமும்
 அகிலுமுன் சிந்த வருகில்
தெளிநலங் கொண்டருவி களும்வலங் கொண்டொழுகு
 திருநறுங் கொண்டை மலையே. 1

2. உலகடங் குஞ்சமவ சரணவெண் புண்டரிக
 சரண வுன்றன் சரணமுன்
அலகில குந்திகிரி யவனும்நன் கிந்திரனும்
 அடிவ ணங்கும் பரனிடம்
மலர்கமழ்ந் தங்கணிறை மழைநிறம் கொண்டகடல்
 வலைய மென்கின் றவர்வெண்
திலகமுன் கொண்டகொடி செழுநறுங் கொண்டைபுரை
 திருநறுங் கொண்டை மலையே. 2

3. முனிவரும் கந்தியரும் உரகரும் வியந்தரரும்
 முதலிரண் டென்க ணிமையோர்
அனைவரும் பெண்க ளுயர்நரர் விலங்குஞ்
 சுழலு மணிகொணஞ் செய்பவனிடம்
வினைசெயுந் திண்குறவர் ஞிமிறருந் தும்பிரச
 விடுவதங் கொண்டு விளைசெந்
தினையுமென் பிண்டிசுனை உகுநெய்கொண் டுண்டுபுகழ்
 திருநறுங் கொண்டை மலையே. 3

4. பிறர்வருந் தும்பொய்கொலை களவுநண் பெண்கணசை
 பொருள்தினம் தின்ற பிரசம்
நறவருங் கங்கிலுண லறவநண் பின்றிடைவ
 நவையுஞ் சென்ற வனிடம்

---

* சென்னையிலுள்ள 'ஜைன கிரந்த நிலையம்' வெளியிட்டுள்ள தோத்திரத் திரட்டு நூலிலிருந்து தெரிந்துதொகுக்கப்பட்டது. பாடல்களின் அமைப்பிற்கேற்ப வேண்டும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

குறவரும் சிங்கமுதல் கொடுவிலங் கும்பல
கொலைதவிர்ந் தங்கண் மரபிற்
சிறகர்வண் டும்பிரசம் நுகர வஞ்சும்பெரிய
திருநறுங் கொண்டை மலையே. 4

5. குவிகைகொண் டிந்த்ரநர பதிகள்தம் பெண்களொடு
குறுகவெம் வெம்பந்த வினைவென்(று)
அவிகைகொண் டம்பொனெயி லதனிஞெண் பிண்டிநிழல்
அமரு நம்சம்ப வனிடம்
கவிகையந் தொங்கல்நிரை கவரிமுந் துங்கொடிகள்
கனகர்தம் பஞ்ச தரளச்
சிவிகையன் புந்திதிரு விழவொடெங் கெங்குமிகு
திருநறுங் கொண்டை மலையே. 5

6. குடைகளொன் றென்றின்மிசை கலைவருண் டெங்குமிகு
குழுகுமென் பிண்டி நிழலிற்
படைகளொன் றின்றியிரு வினையெனும் பண்டைமுது
பகைபுறங் கண்ட வனிடம்
இடரழுங் கும்பரிசு சுடர்விளங் குங்கனகம்
எனவ ருந்துந் திருவுளத்
திடதவங் கொண்டுசெறி பவர்கள்தம் சங்கம்வளர்
திருநறுங் கொண்டை மலையே. 6

7. வனசபீ டத்துறையும் மணிபதித் தப்ரபையு
மன்கு டைப்பைங் குயில்களா
புனையுமென் பிண்டிநிழ லதனினின் றன்புபுரி
புனிதனம் பொற்ச யிலமாம்
பன்கநஞ் சின்கொடுமை நிருதர்சங் கந்துழசை
படைகொடுந் துங்க விறல்வேள்
தினகரன் பைம்புரவி இரதமண் டும்பெரிய
திருநறுங் கொண்டை மலையே. 7

8. மகரமுன் கொண்டகொடி மதனன் னபைந்தனுனை
மடியவன் வந்த சயிலம்
தகரவைந் தின்கிரியை சரியவன் றன்றுலகு
சகல முங்கண் டவனிடம்
மகருவும் சந்தனமும் மணிநெடுஞ் சண்பகமும்
அவைகளும் துன்று சிமையச்
சிகரமெங் குங்குமரி யறியவன் கொண்டபுகழ்
திருநறுங் கொண்டை மலையே. 8

9. தனகனங் கொண்டுதளர் இடையிளம் பெண்டிரொடு
சபைவ டந்தின் படையிலா
அனகவெண் பந்தவினை அறவெறிந் தின்பமுற
அமுதியம் புஞ்சின னிடம்

கனகமும் துங்கநவ மணிகளும் கண்கள்
கவங்கதிர் பரந்தும் பரவரும்
தினகரன் பைம்புரவி பலநிலங் கொண்டுபெயர்
திருநறுங் கொண்டை மலையே. 9

10. கறுவொடுங் கன்றியெரி கனல்சொரிந் தஞ்சவரு
கமடன் வஞ்சத் திருவுளத்
தறிவதொன் றின்றியுல கடையவந் தெண்பொருளும்
அறியவன் றங்கு சைலம்
நறியசந் துந்துநவ மணிகள்சிந் துங்கெடில
நதியில் முன்சென்று முதுநீர்
செறிவில்வந் துந்திநிகர் சினையிளஞ் சங்கம்வளர்
திருநறுங் கொண்டை மலையே. 10

11. நசைதவிர்ந் தைம்புலனு நலியினின் பஞ்சகதி
நணுக லென்றுந் தவிர்கலீர்
அசைதருந் துன்பகதி யடைதிரென் றுந்தெரிய
அருளு நஞ்சம் பவனிடம்
இசைதருந் தந்திரியின் எதிர்முரன் றங்கனைகர்
இலையம்வந் தென்ற இமையோர்
திசைதொறும் சென்றுமலர் கொடுவலங் கொண்டொழுகு
திருநறுங் கொண்டை மலையே. 11

## 2. அப்பர் பதிகம்

12. வந்துவந்து பிறந்துழலா மனையும் இல்லை
மற்றுமினி முலையருந்தா மாந்தர் இல்லை
சந்ததமும் இப்படியே நாயேன் இந்தச்
சாகரத்தி லேமூழ்கித் தயங்க லாமோ
எந்தையே முக்குடைக்கீழ் ஆதி நாதா
இனியமையும் பிறப்பொழித் தீடேற்ற வேண்டும்
நந்துலவும் நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 1

13. கற்றறியேன் கற்றவர்தாள் கழறேன் உன்றன்
கழலிணைகள் கண்டுகளி கூர்ந்து நாளும்
சுற்றறியேன் சிறுலயத்தைப் பொல்லாப் பாவி
சொற்கிரங்கி நின்செவிக்கே தோற்றக் கண்பார்
உற்றதுணை உன்னடிக்கே அறன்ருன் வீர
ஓங்குதன்ம தேவதையும் உயரும் மூதூர்
நற்றமிழ்சேர் நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 2

14. அன்னையுத ரந்தனிலே பத்து மாதம்
அவதரித்துக் குழவியதா யாளதாகி
பின்னைமனை பணங்காசு வீடு மாடும்
பெண்டிருமக் களும்வருத்தப் பேய ளுகி
என்னையெமன் வந்துபிடித் திழுங்குங் காலை
என்செய்வேன் எண்குணவெண் சிறப்பு ளானே
நன்னெறிசேர் நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 3

15. குலங்களெவ ராகினுமே யவர்பாற் சென்று
குறைசொல்லி இச்சைசொல்லிக் கரமுங்கூப்பி
கலங்கிமனம் தள்ளாடித் திரிவேன் தன்னை
கருத்திலுனை யேநினைக்கக் கிருபை பாராய்
துலங்கியமுக் குடைச்செல்வா சோதி யென்றன்
துணையேயென் கண்மணியே துயர்தீ ரப்பா
நலங்களுறு நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 4

16. கோட்டுமுலை மடமாதர் மாயை யாலே
கொண்டமயல் மிண்டெழவே கொஞ்ச மாகிக்
கேட்டவர்கள் இகழ்ந்திடவே பொல்லோன் செய்யுங்
கிலேசமெனும் பவந்தொலையக் கிருபைகண் பாராய்
தீட்டியறங் காத்தவனும் வாழுந் தன்ம
தேவதையும் தேவர்களும் செயசெ யென்ன
நாட்டியசீர் நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 5

17. மானனைய விழிகாட்டி முகத்தைக் காட்டி
வண்கலச முலைகாட்டி மாலை பூட்டும்
தேனனைய மொழிமடவார் அல்குற் பாம்பு
தீண்டிவிட மேறிமிகத் தயங்க லாமோ
ஓநமோ நமோரகந் தாண மென்றே
உச்சரித்தே உன்னடிப்பால் உறவே வேண்டும்
நானிலமெண் நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 6

18. அயன்சலித்தான் எழுதமுடி யாதா ளுகி
அன்னையரும் வயிறிளைத்தார் அடியேன் சாலப்
பயமுறத்தான் பிறந்துபிறந் தலுத்தேன் என்றன்
பரிதாபம் பார்க்கவுன்றன் பரமே யன்றோ
செயமுறவே யாவர்க்கும் பிண்டி நீழல்
சினபதியே தேவர்கள்பா ரீச நாதா
நயமுறவே நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 7

19. இன்மையிலுந் தவம்புரியாப் பொல்லா மூடன்
ஏற்கமனம் பொருந்துமிடம் பொருந்தாய் இன்ன
கன்மன்வெகு துட்டன்அறி வில்லாக் கோழை
கன்னியர்மேல் ஆசையுறுங் கபட னேனும்
தன்மமுனக் கேபரங்காண் நாரும் பூவும்
சற்றுமண மில்லாத தயவு போல
நன்மைசெறி நறுங்கொண்ட அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 8

20. கட்டளைசேர் சமயமோ ராறுந் தானுய்க்
கலந்தறிய சமயமதில் மேல தாகும்
இட்டமுட னேயிருந்தே அறமே கூர்தந்(து)
எட்டாத தத்துவனே ஏக நாதா
வட்டமணி முக்குடையாய் மாசி லாதாய்
வானவர்கள் தொழுதேத்தும் வண்மையானே
நட்டணைசேர் நறுங்கொண்ட அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 9

21. ஏற்றரிய பதத்தானே இனிய சோதி
யாவரையும் கிருபைசெய்து ரட்சிப் பானே
மாற்றரிய என்பிறவி துரத்தக் கண்ட
மன்னவனே கருணைபொழி வடிவுள் ளானே
சாற்றரிய விருத்தமோர் பத்தும் சொன்னேன்
தயவுபுரிந் தெனையாளத் தன்மங் கண்டாய்
நாற்றியசீர் நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 10

22. சொல்லியகலை யானறியேன் முன்னாள் செய்த
தொழுதலுமோர் சொப்பனத்தே தோன்றிப் பண்பாய்
அல்லலறுத் தாட்கொண்ட தேவ னாகும்
அறங்காத்த நாயகர்தம் அருளி னாலே
வல்லியரு மலைகா வலஞ்சொற் பத்தும்
மருப்பொதியு மாலையதாய் மகிழ வேண்டும்
நல்லியல்சேர் நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்கு வாயே. 11

## 3. சம்பந்தர் பதிகம்

23. சோதி மூன்றினுள் எழுதரு துகளறு சோதி
துளங்க வெந்துயர் களைந்திடும் வளங்கெழு துணையே
காதி வெவ்வினைப் புறங்கண்ட கருணையங் கடலே
கடலின் மேல்வரும் கருங்கடல் வண்ணவொண் கதிரே

போதி நாதனே பூரண ஆரணத் தலைவா
பொங்கு சாமரை மாருதத் துடனெழும் புயலே
ஆதி யேதிரு நறுங் கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 1

24. பண்ண வாமுதற் பரமனே பரமகே வலியே
பாப நாசனே மூவர் நாயக முதற்கொழுந்தே
எண்ண வாவியென் குணங்களுக் கிறைவனே இறைவா
எங்கள் நாயகனே சிங்கவா கனத்தினி திருந்தே
கண்ணு ளேவருங் கடவுளே சுடருளே மயங்கிக்
கலங்கு நாயினேன் கடைப்பிடி பிடித்தகைப் பொருளே
அண்ண லேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 2

25. முத்தனே முதற்பொரு ளைந்தையும் அருளிய முதலே
முதலு மீறுமொன் றின்றியே முளைத்ததோர் முளையே
சித்த னேதிரு மயிலையில் நின்றதோர் தெளிவே
தீப நாயகா மேற்றிசைத் தொழுதஹோர் தேனே
பத்தனே தொழவெளி வந்த வெளிமுதற் பரப்பே
பறம்பை மாநகர்க் குடதிசைப் பச்சைமா மலையே
அத்த னேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 3

26. மெய்ய னேபரந் தகண்டமும் விரிந்தபே ரொளியே
வீத ராகனே நாதனே விமலவச் சுதனே
உய்ய னேசம் பந்தனுக் கருளிய ஒப்பே
ஒப்பி லாதஹோ ரொப்புடை ஒளிமணிச் சுடரே
கைய னேபரந் தறநெறி காட்டிய கணக்கே
கால காலனே மூலமந் திரமுதற் பொருளே
அய்ய னேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 4

27. விரைசெய் நாண்மலர் மேல்வரும் வேந்தனே வேந்தா
வேந்த பாந்தளப் பணநிழல் அமர்ந்தவே தியனே
பரசு நேரென வருவினைப் பகைவனே சுகதா
பரம கேவலி பாரிச நாதனே வீரா
பிரச நாண்மலர்ப் பிண்டியிற் கண்டபே ரமுதே
பிறங்கு பேரொளிக் கேவலத் தரசியைப் பிரியா
அரச னேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 5

28. துறைவ னேமுறை மறைபொறி கடந்ததோ ரறிவே
கருதி யாவையுங் கருதிய ஒருபொருட் சொல்லால்
உறைவ னேமனத் துள்ளுறை கின்றதோர் உணர்வே
ஒருபொ ருட்டிறத் துண்மையும் இன்மையும் உரைத்தாய்

நிறைவ னேவெண் கதிரொளி நிலவிய நிலவே
நித்த னேகரு மப்புறங் கண்டதோர் நிருபா
அறவ னேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 6

29. கமலவா கனனே வேதமெய்ப் பொருளறி கருத்தே
கருத்து மைந்துகை காட்டிய திக்குடைக் கனியே
விமல மூர்த்தியே வேந்தவெவ் வினைவிழ வெறிந்த
வொண்மணிச் சுடரே தெள்ளுமா மணியொளி விளக்கே
எம்மலம் யாவையுங் கழுவிய பொழிதரு புனலே
எழுமி யாழகத் தின்பனே யன்பருக் கெளியாய்
அமல னேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 7

30. கனக மூவெயிற் பிறந்த தோர்கரும் பேயக்
கரும்பிற் கட்டியே கட்டியுட் பிறங்குசர்க் கரையே
சினக மேல்விரிந் தோங்கிய சிகரமால் வரையே
தெரிந்த மாமுர செனத்தரு திருமொழிச் சினனே
எனக மேபுகுந் திடர்கெடுத் திடும்படிக் கினியா
இனிலு மாற்றலிற் பணிகொளு மீசனே நேசா
அனக னேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே 8

31. பொறிக டந்ததோர் போகமே புண்ணிய உருவே
புண்ணி யககதி நண்ணியிற் கண்டதோர் பொழிப்பே
எறிய மேல்வருங் கமடனுக் கருளிய வேந்தே
எந்தை தந்தையென் றிமையவர் தொழவிருந் தவனே
குறியசம் பந்த னெஞ்சினுட் கோயில்கொண் டவனே
கொண்ட லேகுணக் குன்றனே யென்றன் நாயகனே
அறிவ னேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 9

32. பருக நின்றுநின் பதந்தர நிகழ்ந்தபே ரமுதே
பச்சை மேருவே கச்சுறு பிறவியங் கடலுள்
வருக நேரென வருமொரு வங்கமே யென்றன்
மனத்து ளேபுகுந் தகங்குளிர் வெய்திய மருந்தே
பெருக நீடியான் முன்பிறந் திறந்ததற் கிரங்கிப்
பின்னையென் னகத்தி னின்னலம் பொருந்திய பிரானே
அருக னேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 10

33. சோதி யேமுதற் பரமனே பண்ணவர் துணைவா
துய்ய வந்தர மேல்வரு மெய்யனே புனிதா
வேத னேனன் னிருபதம் விளங்கிய விமலா
விரைசெய் தாண்மலர் பரித்திட மேல்நடந் தவனே

காதி யாகிய நால்வினை கடிந்தநற் றவனே
கனக மூவெயிற் கடந்ததோர் கமலவா கனனே
ஆதி யேதிரு நறுங்கொண்டை வடதிரு மலைமேல்
அப்ப னேயடி யேனையும் அஞ்சலென் றருளே. 11

## 4. அப்பாண்டைநாதர் பஞ்சகம்

34. குற்றங்க ளில்லான் குணத்தால் நிறைந்தான் குணத்தால்
மற்றிந்த வைய மளந்தான் வைய நின்றபெற்றி
முற்று முரைத்தான் உரையீ ரொன்ப தாய்த்தோன்றுன்
செற்றங்கள் தீர்ப்பான் விமலன் சரண்சென்னி வைத்தேன். 1

35. கண்டேன் திருநறுங் கொண்டையின் மேலொரு காரணத்தால்
கண்டேன் கனக திருமதில் கோபுரங் கோயில்தனைக்
கண்டேன் மனத்தினி லப்பாண்டை நாதரென் கர்த்தரடி
கண்டேன் இடரதனை விண்டேன் என்றன் கருத்துள்ளமே. 2

36. எப்போது முனைமற வாதிருக் கவென் னெஞ்சுதனில்
ஒப்பாரும் பிண்டி நீழ லுறைந்திடுஞ் சிநேசுவரனே
மெப்பாக என்றன் வினைதனைத் தீர்த்துநான் வீடுசேர
தப்பா வரமருள் அப்பாண்டை நாத தயாபரனே. 3

37. நீதான் துணையன்றி வேறுமுண் டோவிந்த நீணிலத்தில்
ஆதார மாக அரும்பொரு ளேயண்ட ரண்டமெலாம்
தாதாவே உன்றன் திருநறுங் கொண்டை தழைக்கவந்த
நாதா அறம்பொழி வேதா எனக்கின்பம் நல்குவையே. 4

38. சீரா யவிருங் கமலத்தின் மீதுதிரு முக்குடைக்கீழ்
வீரா எனது வினைதீர்த்துச் செல்வம் விளங்கிடவே
காரார் நறுங்கொண்டை காவலனே எனக்குன் கமலமலர்
தாரா யருளுடன் அப்பாண்டை நாத தயாபரனே. 5

## 5. பாரீசநாதர் சரணப் பதிகம்

39. அச்சுதா வமலா வருகா சரணம்
அருந்தவக் கடலே அறிவா சரணம்
இச்சித் தவர்மனத் திருப்பாய் சரணம்
எழிலார் மதில்மூன் றுடையாய் சரணம்
நச்சர வணைநிழ லானே சரணம்
நவைபல நீக்கிய நாதா சரணம்
பச்சை மலைமா தவனே சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 1

40. கொங்கலர் பிண்டி வாமா சரணம்
குலவிய சிங்க வணையாய் சரணம்
திங்க ளனையமுக் குடையாய் சரணம்
திருந்திய வெழில்சா மரையாய் சரணம்
பொங்கிய தோர்துந் துபியாய் சரணம்
பூமலர் மாரிமண் டலத்தாய் சரணம்
பங்கய மலர்மேல் வருவாய் சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 2

41. தண்ணமை கமல வாகா சரணம்
தருமமா தவனே தலைவா சரணம்
விண்ணுல கோர்தொழ வருவாய் சரணம்
வீரிய வமலா விமலா சரணம்
புண்ணிய வாகா புனிதா சரணம்
பூணணி புனையா தவனே சரணம்
பண்ணவ னேமுதற் பரமா சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 3

42. கன்னவிற் காமனைக் கடிந்தாய் சரணம்
கதிநான் கினையுங் கடந்தாய் சரணம்
மன்னிய நற்குண வாமா சரணம்
மாதவா வரதா மாலே சரணம்
பொன்னெயில் வட்டப் பொருளே சரணம்
போதி நாதா பூரணா சரணம்
பன்னிரு கணந்தொழ வருவாய் சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 4

43. இதமே யெவர்க்கு முரைப்பாய் சரணம்
இமையவ ரேதொழ வருவாய் சரணம்
கதமும் மதமும் கடிந்தாய் சரணம்
கமலத்தின் மீது நடந்தாய் சரணம்
ததியைம் பொறியைத் தவிர்ந்தாய் சரணம்
தரணியில் தருமம் உரைத்தாய் சரணம்
பதுமை பரனே பரமா சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 5

44. விஞ்சலர் பிண்டி விமலா சரணம்
மிகவுல கோர்தொழ வருவாய் சரணம்
கஞ்சத் தலரில் வருவாய் சரணம்
கருணா கரனே கமலா சரணம்
நெஞ்சத் தவர்கள் நினைவே சரணம்
நித்தா நிமலா அமலா சரணம்
பஞ்சக் கரத்தைப் பதித்தாய் சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 6

45. முருகார் அசோக நிழலாய் சரணம்
முனிக்கண மேத்தும் முனிவா சரணம்
பெருமா தவங்கள் புரிந்தாய் சரணம்
பேரா யிரத்தெட் டுடையாய் சரணம்
பொருமா ரணைப்போர் தவிர்த்தாய் சரணம்
பொன்னெயில் மன்னிய புங்கவ சரணம்
பரிமா கமலப் பதத்தாய் சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 7

46. அத்தனே யென்னை யாளீர் சரணம்
ஆதி பகவா அருளே சரணம்
முத்தனே மூவ்வுல களந்தாய் சரணம்
முத்தியை அளிக்கும் முதல்வா சரணம்
சித்தனே பத்தர்கள் செல்வா சரணம்
தேவா திபனே தேவா சரணம்
பத்தர்க ளேதொழ வருவாய் சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 8

47. அரமென எண்வினை யரிந்தாய் சரணம்
அரவின் நீழலில் அமர்ந்தாய் சரணம்
தரமெனும் சதுர்க்கதி தவிர்ந்தாய் சரணம்
தயவே மிகவு முடையாய் சரணம்
விரகக் காமனை வென்றாய் சரணம்
வேதமோர் நான்கும் விதித்தாய் சரணம்
பரமா கமங்கள் பகர்ந்தாய் சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 9

48. அடியார் மனத்தில் அமர்ந்தாய் சரணம்
அணியாடை யணியா அழகா சரணம்
கொடிசேர் மதிற்கோ புரத்தாய் சரணம்
கொல்லா வதமீந்த கோவே சரணம்
கடிமா மலர்மேல் கருத்தே சரணம்
காமாதி வினைவென்ற கருணா சரணம்
படியே மூலகும் பகர்ந்தாய் சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 10

49. மஞ்சாரும் பிண்டிக்கீழ் வாமா சரணம்
மாமுனி போற்றிடும் வரதா சரணம்
எஞ்சா மதிக்குடை எழிலாய் சரணம்
எனையாளு மீசா இறைவா சரணம்
நஞ்சார் பணிநிழல் நாதா சரணம்
நளின மலர்த்தேர் நான்முகா சரணம்
பஞ்சாட் சரமீந்த பரனே சரணம்
பாரீச நாதா சரணம் சரணம். 11

## 6. சரணப் பத்து

50. முத்தொளி முக்குடையாய் மூவுல காளுடையாய்
உத்தம னேயருகா உன்பத மேசரணம்
தத்துவ னேயெனையாள் சங்கர னேவினையைக்
கொத்தற வென்றவனே கொற்றவ னேசரணம். 1

51. ஆதிப னேயமலா அச்சுத னேயருகா
சோதிகொள் மூவெயிலாய் சுந்தர னேசரணம்
வேதிய னேயமலா விண்ணவ னேவிமலா
தாதணி பிண்டிநிழற் சங்கர னேசரணம். 2

52. சூரியர் கோடியுடன் சூழ்வளர் போலொளியாய்
வீரிய னேயசிதா வித்தக னேசரணம்
ஆரிய னேயசலா அங்கண னேயருகா
நாரியு டன்புணரா நல்லவ னேசரணம். 3

53. பண்ணவ னேபரமா பற்றற்ற மாதவர்தம்
கண்ணவ னேசரணம் கற்றவ னேசரணம்
விண்ணவ னேமுனைவா வித்தக னேயடியேன்
எண்ணவ னேசுமதி எம்பெரு மான்சரணம். 4

54. சாரண னேதலைவா சந்திர மண்டலனே
நாரண னேயரனே நான்முக னேசரணம்
பூரண னேபுனிதா புண்ணிய னேயருளின்
காரண னேசரணம் கற்பக னேசரணம். 5

55. தூய கணுவினலஞ் சொல்லுநர் போற்சமயப்
பேயர் கணுவிலெனைப் பித்தவ னேசரணம்
தாயர் போலிருதாள் தந்தெனை ஆளுடையாய்
நாயக தீபையில்வாழ் நான்முக னேசரணம். 6

56. நற்றவ னேவரதா நான்மறை யாய்வினையைச்
செற்றவ னேதிலதா சீதள னேசரணம்
கொற்றவ னேகுணவக் குன்றவ னேசரணம்
கற்றவ னேமுழுதுங் கண்டவ னேசரணம். 7

57. மந்தர மாமலைமேல் வானவர் வந்துதொழச்
சுந்தர மாமலையே சுவ்வித னேசரணம்
தந்தையர் தாயரெனத் தந்தரு ளின்னமுதைச்
சிந்தைசெய் தாய்சரணம் தீபையு ளாய்சரணம். 8

58. அங்கண னேயபயா அம்புய வாகனனே
புங்கவ னேபதுமா பொன்னெயி லாய்சரணம்
சங்கர னேதலைவா சம்பவ னேதருமா
கொங்கலர் பிண்டிநிழற் குணதர னேசரணம். 9

59. ஆதி முதற்பர்தற் கன்று விசும்பரசன்
சேதிய மின்றுநல்கச் சிந்தைசெய் தாய்சரணம்
கோதில் குணக்கடலே கொற்றவ னேதீபை
நாத மனத்துறையும் நாயக னேசரணம். 10

## 7. மந்திரப் பத்து

60. பெருகுநாண் மதிபோல் நிலவுமுக் குடையாய்
பிழைபடா நெறியாய் பிறவிவேர்க் குறவாய்
முருகுலா மலர்மேல் வருதிகம் பரனே
முடிவிலா முடிவே முனிவுதீர் முனியே
பருகுபா லெனவே இனியவாய் மொழியாய்
பரவுவா ருறவே பரமமென் பரனே
அருகனே யடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 1

61. முத்தனே அத்தியோ ரைந்தெனப் புகல்வாய்
மூவகைப் பகையும் போகவென் றவனே
புத்தனே புனிதா போதிவா னவனே
பொங்குசா மரையாய் புங்கவா பொருளே
சித்தனே சிவனே திசைமுகத் தவனே
தேடுவார் தனமே தீபை நாயகனே
அத்தனே யடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 2

62. புண்ணியா சினனே பொன்னெயிற் கிறைவா
பூரண பகவா புட்பவா கனனே
பண்ணவா மயிலா புரியுளாய் அயல்வாழ்
பஞ்சபா தகர்தம் பகையைவென் றவனே
விண்ணவா அறிவா குறைவிலா நிறைவா
வித்தகா சுந்தரா முத்திநா யகனே
அண்ணலே யடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 3

63. கச்சுலா முலையார் அமுதவா யுதவும்
கன்னலார் மொழியார் மின்னுலா மிடையார்
மைச்சுலா விழியார் வீடுபட் டுழையா
மைந்தனே மதவேள் அஞ்சவென் றவனே
கச்சரா நிழலாய் பச்சைமா மலையே
நாதனே பழிதீர் வேதநா யகனே
அச்சுதா அடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 4

64. துறவனே பதினெண் பாடையாய் விரியும்
துய்யதோர் மொழியாய் சுந்தரா தொழுவார்
உறவனே ஒளியே சினவரா வினைதீர்
ஒருவனே திருமார் புறையுமா லுடையாய்
இறைவனே சனகா புரிவிடா துறைவாய்
எங்கள் நாயகனே என்னையா ளுடையாய்
அறவனே அடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 5

65. செய்யதா மரைமேல் அமரர்தாள் பணியத்
தேருலா வருவாய் சிவகதிக் கரசே
வெய்யதீ வினையின் தொகையெலாம் அழிந்து
வீழவென் றவனே வீடுசேர் மொழியாய்
பையரா நிழலாய் சாரணர்க் கிறையே
பாப நாசனே பங்கயத் துறைவாய்
ஐயனே அடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 6

66. சோதியார் மலராய் பிண்டிநீ ழலின்வாழ்
தொண்டர்தம் துணையே சூழ்புறக் குடியாய்
ஓதியாய் மறையின் றுலகெலாம் உணர்வாய்
உண்டுமில் லையுமென் றுரைசெயும் பெரியாய்
வேதியா தரும சக்கரா விகிர்தா
வெங்கொலை பழுதில் சிங்கவா கனனே
ஆதியே அடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 7

67. செப்பரு முனதுநற் குணமோ ரெட்டும்
திகழ்தரும் பெயர்தான் ஆயிரத் தெட்டும்
தப்பிலா தவனே என்றுமேழ் பதிக்கும்
தலைமையா யுடையாய் தருமசா ரணனே
ஒப்பிலா மணியே பொருள்களா றிவையென்
றுரைசெய்தா ரிமையோர் விரைகொள்பூ மழையாய்
ஐயனே அடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 8

68. விரையார் கமலத் தேரின்மேல் வருவாய்
மின்னிலங் கொளிசேர் வலையமார் விமலா
வாரிவாய் வருவாய் அமுதமைந் துடையாய்
மறுவி லாவற வாழியந் தணனே !
சூரியர் மதிபோல் தண்ணளிக் கடலே
சுடருமூ வொளியாய் சுருதிமூன் றுடையாய்
ஆரியா அடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநாள் மொழியுமந் திரமே. 9

69. அற்புத மாமென் றசமடித் தழலின்
அந்தணர் கூடி மந்திர மோதித்
தர்ப்பைகள் இட்டுத் தசைகளைத் தின்னும்
தயவிலா வேத மலவென மொழிவாய்
புட்பவா கனனே பொன்னெயிற் கிறைவா
பூரணப் பொருளே போதிமா மணியே
அற்புதா அடியேன் அபயமென் பதுகாண்
அழியவந் திடுநள் மொழியுமந் திரமே. 10

## 8. பணவரங்கப் பத்து

70. திருமென் றிடுபல மருந்தினும் தீர்தலன்றி
பொய்கூர்தல் கண்டுகொண்
டியாருமென்கணின் றகல வஞ்சினேன்
என்னை யாளுமா றிங்ஙனேகொலோ
ஊரு மம்புயத் தேறு மாவினை
உடைய நாதரே யுரக னுடுமிப்
பாரு மும்பரும் பரவு தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 1

71. முன்னம் நன்னெறிப் படர்கி லாமையால்
முடையு டம்பையிக் கிடையி லிட்டநோய்
இன்ன முஞ்சினம் தணிவ தில்லையால்
என்னை யாளுமா றிங்ஙன னேகொலோ
சொன்ன பேரொளி பிறந்து வாழ்தரு
சோதி மண்டலத் தாதி நாதரே
பன்னு செந்தமிழ்க் குலவு தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 2

72. வந்து மாயவிப் பிறவி நோயெலாம்
மாற்ற வல்லதோர் வழிமொ ழிந்துநீர்
இந்த நோய்தணித் தருளு கின்றிலீர்
என்னை யாளுமா றிங்ங னேகொலோ
சந்த னுடலிப் பொதிய மாமலைத்
தண்ணென் மாருதத் தவள மல்லிகைப்
பந்த வாசமுண் டுலவு தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 3

73. உறவு மன்பருங் கிளையு மென்னுடற்
குருவு மாகயா னுடைய தும்மையே
இறவில் வந்துநின் றஞ்ச லென்கிலீர்
என்னை யாளுமா றிங்ங னேகொலோ
நறவ லர்ந்தபைம் பொழில ரங்கெலாம்
நாகி ளம்பசும் தோகை யாடமென்
பறவை வண்டின மிசைசெய் தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 4

74. கேடு பட்டிட வேக மாகவே
கெட்ட காலனுர் விட்டெ றிந்தவேல்
ஈடு பட்டுடம் படுதல் அஞ்சினேன்
என்னை யாளுமா றிங்ங னேகொலோ
கோடு நித்திலச் செம்பொ னூமும்
குஞ்ச ரங்களும் குரக தங்களும்
பாடு முத்தமிழ் பரவு தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 5

75. ஊன மின்றியே வடிவு காணலால்
உள்ளு ளுள்ளுதோ ருென்று மில்லையால்
யானை யுண்டதோர் வெள்ளி லாயினேன்
என்னை யாளுமா றிங்ங னேகொலோ
தேன லர்க்குழல் நறும டந்தைமார்
திலத பங்கயச் சேய ரிக்கணூர்
பான லந்தடங் குலவு தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 6

76. பெருகு காதலங் கிளையு மைந்தரும்
பெற்ற தாயரும் பெண்டி ருங்கசிந்
திருக ணீர்சொரிந் தினைய நோயிலிட்
டென்னை யாளுமா றிங்ங னேகொலோ* 7

77. முழுமெ யும்பனித் தறிவ ழிந்துநோய்
முதிய னுகிமிக் கவுமு டங்கினேன்
எழுமை யும்பிடித் தடிமை கொண்டுநீர்
என்னை யாளுமா றிங்ங னேகொலோ
தொழும கன்றலைப் பரவை நாவலஞ்
சோலை வாழுமித் தொண்ட ருண்கெனத்
பழும ரம்பழுத் தனைய தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 8

78. கெட்ட காலனுர் கால மின்றியே
கிளையி ருந்தழக் கிளரு நோயுழன்
றிட்ட கால்களுங் கையு மாயினேன்
என்னை யாளுமா றிங்ங னேகொலோ
வட்ட வாழியில் மன்ன ரெண்ணில்சீர்
மன்னர் மேல்கொளக் கன்னல் சாமரைப்
பட்ட யானைதேர் குலவு தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 9

---

* பின்னிரண்டடிகள் 75ஆம் பாடலில் காண்கிறபடியே இங்கும் உள்ளது. எதுகையை நோக்கின் இவை தவருக இங்குப் புகுந்துள்ளமை பெறப்படும். உரிய இரண்டடிகள் இப்பாடலில ஏடு எழுதுவாரால் விடப்பட்டுள்ளமை தெளிவாம்.

79. புரவி ஏழுடன் சுடர்வ லஞ்செயப்
புவியு றங்கவே புள்ளு மாயுமிவ்
விரவின் மாலுழன் றனிமை போத்துடன்
என்னை யாளுமா றிங்ங னேகொலோ
அரவின் மேலவன் அவிரோ தியான்வாக்
கரசன் நாவினிற் றுதிக ளானவை
பரவி நாடொறும் பண்கொள் தீபையுள்
பரும ணித்துணைப் பணவ ரங்கரே. 10

## 9. மகாசாத்தய்யா பதிகம்

80. திருவழகு முடிதனில் அருகனைத் தரித்ததோர்
சிங்கார மான முகமும்
திலதமும் நவரத்ன மாணிக்க வொளியுமுன்
செவியும் வெண்முல்லை நகையும்
கருணையுடன் மார்புதனில் முத்துமா லைகளுடன்
கத்தூரி பரிம ளிப்பும்
கனகமய மானதோர் அரையிற் பீதாம்பரம்
கச்சைபொன் குச்சி தொங்கல்
அருளுடனே யென் றனிட மனமகிழ வேதினம்
அளித்திடுங் கரத்திற் சென்று
அலங்கார மாகவே சிலம்புடன் சதங்கையிட்
டாடிவரு பாத மழகும்
திருவடியும் வெள்ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே. 1

81. ஆகாச மாகப் பறந்திடும் புரவிகள்
அனேகங்கள் முன்னே நிற்க
ஆனையும் ஒட்டையும் நூறுநூறாயிரம்
அஞ்சலாய் வந்து நிற்க
ஏராள மாகவே படைமன்னர் ஒருகோடி
விருதுகள் பிடித்து நிற்க
வெற்றிபெறு மாலைகள் யுத்தரண வீரர்கள்
வெதும்பியொரு கோடி நிற்க
ஏகாந்த மாகவே தேவதுந் துபிகளும்
இன்பசங் கீத மோங்க
ஈரமதி யிரவியும் தீவர்த்தி போலவே
இருபக் கமும்மி லங்க
தேவனென வெள்ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே. 2

82. மத்தளங் கொட்டிவரும் பத்தர்கள் ஒருகோடி
மல்யுத் தவர்கள் கோடி
வல்லயங் கத்திகள் பிடிமன்னர் ஒருகோடி
மகுடவர்த் தனர்கள் கோடி
பத்தியுடன் வேதபா ராயணம் பாடிவரும்
பரிவோர் கள்ஒரு கோடியாம்
பட்டாணி ராவுத்தர் புரவிமேல் ஒருகோடி
பணிவிடைகள் செய்வர் கோடி
எத்தனை வீணைகள் தும்புரு நாரதர்
எடுத்துவா சித்து வரவே
இரவினிற் பவனிவரும் உன்றனிட மகிமையை
என்றனுற் சொல்ல வசமோ
சித்ரமணி வெள்ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே 3

83. சிங்கார மாயுனது குன்றதிர நித்தமும்
திருப்ப ணிகளே செய்யவும்
தெய்வபரி மளமான பாரிசா தம்மலர்
சிரசினில் தரித்து வரவும்
ஐங்காத மாகிலுங் கடுகிவந் தபிடேகம்
அர்ச்சனை புரிந்து வரவும்
அன்பினுல் நைவேத்தியஞ் செய்துனது பாதத்தை
அனுதினம் புகழ வைப்பாய்
கண்காண என்றன்முன் வந்துப்ர சன்னமாய்க்
கவலை நோய்தனை விலக்கிக்
கருணையா லென்மனது வேண்டும்வர மேயருள்
கர்த்தனே யரியர குமரனே
தெம்பான வெள்ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்.
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே. 4

84. மல்லிகை மாலைகொண் டுன்னுடைய பாதமே
மறவாமல் பூசை செய்வேன்
வஞ்சனை பில்லிமுதல் சூனிய மவையெலாம்
அகன்றி டவடித் தோட்டுவாய்
சொல்லரிய பாவங்கள் செய்திடினு மேயொரு
திரண மாய்ப்பறக் கடிப்பாய்
தொலையாத் மாயையில் அலையாமல் உன்பாதம்
எனக்கு வரமே யருளுவாய்

கல்லுமன தாய்வரும் அடியவர்கள் நெஞ்சம்
கரைத்தடிமை கொள்ளு கின்ற
கர்த்தனே இப்பூமி லோகங்கள் தேசங்கள்
காவல் காத்தரு ளையனே
செல்வனெனும் வெள்ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே. 5

85. நித்தமை சுவர்யமாய் சுகமான வாழ்வதாய்
நீதியாய்த் தர்ம மீவாய்
நெஞ்சினில் யாவர்க்கும் உபகார குணமதாய்
நிசமான மொழி யுள்ளதாய்ப்
புத்தியு மீந்தென்னை இப்பூமி தன்னிலென்
பிறவி தனேவே ரறுத்துப்
பெருமையுட னேயிருந் தருளுனது பாதமே
போற்ற வேவர மருளுவாய்
பத்தியுட னடியவர்கள் வல்பிணி தொலைத்திடும்
பாத பூங்கடல் வண்ணனே
பாவங்க ளானவை அணுகாம லென்றனைப்
பட்சமாய்க் காத்த ருளுவாய்
சித்திரவெள் ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே. 6

86. தந்தைநீ தாயும்நீ சற்குரு தெய்வம்நீ
தானென்று நானிருக்கத்
தயவுவைத் தென்மனத் துயர்தீர்ப்ப தில்லையோ
சம்பத் தளிப்ப திலையோ
முந்தியசென் மத்தில்யான் பாவங்கள் செய்தேனோ
மூட னென்செய் தேனோ
மோசங்க ளானகொலை பாதகம் செய்தேனோ
மூடனுன் வதைசெய் தேனோ
எந்தவினை செய்யினும் தீர்த்துரட் சித்தென்னை
ஈடே றவர மருளுவாய்
எத்தேச காலமு மழியாத பதவியை
ஈந்தென் னையாட் கொள்ளுவாய்
சிந்தைமகிழ் வெள்ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே. 7

87. கடல்தனில் வாழ்கின்ற மச்சமதை யெண்ணினும்
கரைதனில் மணல் எண்ணினும்
கார்மேக மேபொழியும் மழைத்துளிகள் எண்ணினும்
கன்னி யர்மனங் காணினும்
நடமாடுங் காயம்விட் டுயிர்புவியில் பிறவிதனை
நானிருந் தெண்ண மாட்டேன்
நாதனே யென்பிறவி வேரறுத் துன்பாதம்
நல்கி டவர மருளுவாய்
படநாக மாமணிகள் ஆபரண மாகவே
பண்புடன் பூண் டிருக்கும்
பரமனே வரதனே சத்துருசங் காரனே
பராபர மகா தேவனே
திடமான வெள்ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வங் தந்தருள் தேவனே. 8

88. கையினு லுன்றனைத் தரிசனம் செய்யவே
கருமங் கள்விட் டோடுமே
கண்ணிலா மனிதர்கள் உன்னுடைய சன்னிதி
காண வேகண் விளங்கும்
பொய்யனுக் கால்கை யில்லாத மூடனுய்
வாழ்ந்துபின் னந்தி யத்தில்
புண்ணிய மவனுக்குவந் தெய்தியுன் பாதமலர்
புகழால் நிறைந்த வரமே
அய்யனே மெய்யனே ஆதியே நீதியே
அனுதினந் துதிசெய் வித்து
அன்பினு லுன்றனிட கிருபையால் சொர்க்கத்தில்
அன்பர்க்கு வாழ்வ ளித்தாய்
செய்யனே வெள்ளானை மீதிலென் கண்முன்வரு
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே. 9

89. என்னுடைய மனத்தினில் நீயிருந் தருள்கின்ற
இசையான பாடல் பத்தும்
இன்பமுட னேயிரு யேமசா மத்திலும்
எதிராளி வந்த போதும்
பின்னுமொரு நித்திரைகள் தன்னிலும் இப்பாடல்
போற்றித் துதித்த வர்க்குப்
பில்லிமுதல் சூனியம் அணுகாமல் விட்டோடிப்
பெரியவர்க ளாகி வாழ்வார்

பன்னுதமி ழாலுனைப் பாடிடும் அடியவர்கள்
பாவங் கள்தனை விலக்கிப்
பதவிதனில் மேலான நற்கதி யாகவே
பண்புட னளித்த ருளுவீர்
தென்னல்தனில் வெள்ளானை மீதிலென் கண்முன்வரும்
திருநறுங் கொண்டை மலைவாழ்
தேவனே அறங்காக்கும் ஐயனே மெய்யனே
செல்வந் தந்தருள் தேவனே. 10

## 10. மகாசாத்தய்யா கட்டளைக் கலித்துறை

90. அடியார்க் கெளியன் அறங்காத்த தீர னருகனிட
படிகாவ லாதிபா வுன்னைநா னிப்போதென் பயமனத்தால்
வடிவான தீரனை கோலா கலனை வழித்துணைக்குத்
தடியா யுதனை அனுப்புமை யாமகா சாத்தையனே. 1

91. அண்டாத பூத பிசாசுகள் சூன்ய மநேக மெல்லாம்
துண்டாடி ஓட்டி அடித்துத் துரத்தியனல் சுட்டெரிக்கக்
கொண்டாட மானிடர் செல்வந் தழைக்க வரங்கொடுக்குஞ்
செண்டாயுதா திருநறுங் கொண்டை மேவிய சேவகனே. 2

## 11. அருகர் சிந்து*

92. ஆலயந் தன்னிலே சேத்திரபா லகர்முதல்
ஐம்பத்து நான்கு படியும்
அழகுபர மேஸ்துஸ் தூபிபத்துப் படிகளும்
அமர்ந்த திருமுனி வாசமும்
கலைவாணி நிலைபெற்ற காவனற் கால்களும்
காட்சி பெறவே யோங்கும்
அழக மாமண் டபமும்
கணமூன் றொருபடி முதல்
சிலைகொண்ட சித்ரகூ டத்திற்கு நேராக
சினசந்த்ர நாத சுவாமி
திருமரு மாளிகை அருகசின நாதரிட
சேர்வப் பிரகாச ஒளியும்
சதுர்முக ப்ரம்மயட் சேந்திரர் நித்ய
கல்யாண யோக நிர்மல மானகுண
அப்பாண்டை நாதரிட நீதியாய்
வளர்ந்த மலையே. 1

---

* சென்னை திகம்பர சினலய அருச்சகர் திரு. ஜே. சக்கரவர்த்தி என்பார் தாம் செவிவழிக் கேட்டபடி எழுதியுதவியது.

93 கானகந் தன்னிலே வேடன்முன் ளுளிலே
கபிலேக் கிழங்கு தேடிக்
கண்டந்த மாமலேகள் மீதுதனி ஏறியே
கர்த்த னென்றறி யாமலே
கானில் கிழங்கி றுக்கத் தேங்கருகு
வேடனுந் தேவியருந் தானும்மாய்த்
தெளிவாய்க் கிழங்கு கல்ல
பானு சதகோடி ப்ரகாச வொளி போலவே
படக்கண்டு ஒளிம யங்கிப்
பரபரப் பாகவே அப்ப்னென்றவன்கூற
பரவிழி யளித்த பரனே
தானுவாய் நின்றிடும் செண்டலங் காரர்எனும்
உக்ரமாய் சாத்தய்யரே
அண்டர்புகழ் தொண்டர்மகிழ் எண்டிசையும் பேர்பெற்ற
அப்பாண்டை நாதக் கடவுளே. 2

94. ஆதி யையன் என்னும் அருகனே
உந்தனைத் தானே சிந்தையில் நானே
அனுதினந் துதித்தேன் ஐயனே
அமரர் புகழ்திருநறுங் குன்றமதில்
அமர்ந்ததொர் ஆலய மாமதனில்
அன்பர் புகழ்ந்திடும் வாசனே
அப்பாண்டை நேசன் மிகவு லாசன்
அன்பரைக் காத்திடும் சினேசன்
கபிலேக் கிழங்குக் காகமலே பார்க்க
ஆவலேத் தீர்க்கக் கிழங்கைப் பேர்க்க
வேடன் கரத்தின்வாய்க் கட்டாரியால் தாக்க
கர்த்தனென் றறியாமல் போடவே
காலின் மேற்படக் கண்கள் மூடவே
அப்பனே ஐயனே என்மேல் வாதா
அப்பாண்டை நாதா
ஆரியன் நீதானென் ஆபத்தைத் தீர்ப்பாய்
பொற் பாதா. 3

95. அப்பொழு தேவேடர்கள் ஊரிற் போய்ச் சொல்ல
அனேவருஞ் செல்லஅவ் விடத்திற் கல்ல
ஐயனேக்கண் டெல்லோரும் புல்ல
அங்கிருந்த வேடர்கள் அடிபணிந்திட
பொங்கமாய்க் கண்டு சங்கநாதம் முழங்கிடத்
தக்க நாசரவாத் தியம் பாட
தேவர்கள் ஆடத் துந்துபிநீட

திரள்திர ளாய்ச் சனங்கள் கொண்டாட
வனவே டனுக்கு விழியளித்த வாமனே
விண்ணு ளோர்போற்றும் வேண்டி னோரைக்
காக்கும் புவனே !
விதவித மாய்ப் பதங்கள் பாடியே
வேண்டிவந் தேன் உனை நாடியே
வேறுகதி யாருமே யில்லைசம் சாரமே தொல்லை
வேண்டி னோரைக் காக்கும் புவனே ! 4

96. வீணைப் பெட்டியி லர்மோனியம் பாடத்
தேவர்கள் ஆடத் துந்துபி நீடத்
திரட்திர ளாய்ச் சனங்கள் கொண் டாட
நித்தநித்தம் சங்கீதக் கூட்டமே
நெஞ்சத்தின் கவலை ஓட்டமே
பத்தர் கூடிக் கொண்டாடிப் பாடி
நிருபர் புகழ் அருகர் மேலுயர்
சிந்துபாடிய நேசமாய்ச் சின்னத்தம்பி தாசனே
தினமகிழ்ந் தளித்தேன் இதுசாற்றிடத் தானே
—ஆதி யையன் என்னும் அருகோனே. 5

## 12. சினேந்திர ஞானத் திருப்புகழ்*

இராகம் - கமாஸ்] [தாளம் - திரிஸ்ரஜாதி ரூபகம்

97. பாகுமொழி மாதர்தங்கள் மோகமதி லேமயங்கி
பாரதன மீதணைந்து மயலாகி
பாலதர மேவியுண்டு கோலமுட னேதுவண்டு
பாரழுவ ளுயுழன்று பலநாளும்
மோகமனை யாளரென்று வாகுசுதர் தாயர்தந்தை
மூலதன தான்யதொந்த மெனுமோகம்
மூடிமய லேபரிந்து ஓடியலை யேசிறந்து
மூடபல சூதுகந்து முழல்வேனை
வேகவினை யேதுறந்த சோகநிழலான வுன்றன்
வீசுமலர் தாளுகந்து மருளாக
வீறுபெற வேவழங்கி யாறுதலை யேயிணங்கு
வேதசரு வேசபஞ்ச பதநாதா
நாகரிகமான சிங்க வாகனையின் மீதிருந்து
நாடிபவ மேகடிந்த விறையோனே
நாலுமறை யேபொதிந்த சாலவொளி ஞானதந்த்ர
ஞானநிதி யானகொண்டைப் பெருமாளே. 1

---

* தேவராஜ முனிவர் பாடியது. இவர் சினாலயங்கள் பலவற்றிற்கும் திருப்புகழ் பாடியுள்ளார். இங்கே திருநறுங்கொண்டை பற்றிய பாடல்கள் மட்டும் எடுத்துத் தரப்பட்டுள்ளன.

இராகம் - கமாஸ்] [தாளம் - திரிஸ்ரஜாதி ரூபகம்

98. கலகவிழி மங்கைதன் குலவுமயல் சங்கையின்
களபமுலை ரண்டையுங் கண்டுமாலாய்
கடிதுடையு டைந்திடுந் துடியிடையி டங்கொளுங்
கலையுளம கிழ்ந்திடும் முந்தயீரஞ்
சலமுறுவி டம்புனைந் துலவுமர வின்படந்
தகுநலல் குலினதடந் தங்கியாசை
சகலருமய ங்கியுஞ் சுகமெனமு யங்கியுந்
தலமுறைதய ங்கவும் மந்தமாமோ
பலபலப வங்களும் விலகிடவ ரங்களும்
பகர்மொழியு ரங்களுந் தந்திடாயோ
பரமசுக மிஞ்சிடுந் திருகைவல வெஞ்சியின்
பரிவுடனே கொஞ்சியன் பம்புநேசா
நிலைமைய ருகந்தனங் கலைவலரு ணந்தனின்
நிபுணமதி யந்தனஞ் சுந்தரேசா
நிருமலநி ரஞ்சனம் பொருமதன பஞ்சனம்
நிமலபத கஞ்சனந் தம்பிரானே. 2

## 13. முன்னிலைப் பரவல்*

99. ஆதி வேதம் பயந்தோய்நீ அலர்பெய்ம் மாரி யமைந்தோய்நீ
நீதி நெறியை யுணர்ந்தோய்நீ நிகரில் காட்சிக் கிறையோய்நீ
நாத னென்னப் படுவோய்நீ நவைசெய் பிறவிக் கடலகத்துன்
பாத கமலந் தொழுவேங்கள் பசையாப் பவிழப் பணியாயே. 1

100. இன்னாப் பிறவி யிகந்தோய்நீ இணையி லின்ப முடையோய்நீ
மன்னா உலக மறுத்தோய்நீ வரம்பில் காட்சிக் கிறையோய்நீ
பொன்னா ரிஞ்சிப் புகழ்வேந்தே பொறியின் வேட்கைக் கடலழுந்தி
ஒன்னா வினையி னுழல்வேங்கள் உயப்போம் வண்ணம் உரையாயே.

101. உலக மூன்று முடையோய்நீ ஒண்பொ னிஞ்சி யெயிலோய்நீ
திலக மாய திறலோய்நீ தேவ ரேத்தப் படுவோய்நீ
அலகை யில்லாக் குணக்கடலே யாருமறியப் படாயாதி
கொலையி லாழி வலனுயர்த்த குளிர்முக் குடையி னிழலோய்நீ. 3

* சீவகசிந்தாமணிக் காவியத்திலிருந்து எடுக்கப்பட்டது.

## தோத்திர மாலை முதற் குறிப்பு அகராதி

[எண் : செய்யுள் எண்]


| | |
|---|---|
| அங்கண னேயபயா | 58 |
| அச்சுதா வமலா | 39 |
| அடியார்க் கெளியன் | 90 |
| அடியார் மனத்தில் | 48 |
| அண்டாத பூத | 91 |
| அத்தனே யென்னை | 46 |
| அப்பொழு தேவேடர்கள் | 95 |
| அயன் சலித்தான் | 18 |
| அரமென எண்வினை | 47 |
| அற்புத மாமென் | 69 |
| அன்னையுத ரந்தனிலே | 14 |
| ஆகாச மாகப் | 81 |
| ஆதிப னேயமலா | 51 |
| ஆதி முதற்பரதற் | 59 |
| ஆதி யையன் என்னும் | 94 |
| ஆதி வேதம் | 99 |
| ஆலயந் தன்னிலே | 92 |
| இதமே யெவர்க்கு | 43 |
| இன்மையிலுந் | 19 |
| இன்னாப் பிறவி | 100 |
| உலகடங்குஞ்சமவ | 2 |
| உலக மூன்று | 101 |
| உறவு மன்பருந் | 73 |
| ஊன மின்றியே | 75 |
| எப்போது முனைமற | 36 |
| என்னுடைய மனத்தினில் | 89 |
| ஏற்றரிய பதத்தானே | 21 |
| கச்சுலா முலையார் | 63 |
| கட்டளைசேர் | 20 |
| கடல்தனில் வாழ்கின்ற | 87 |
| கண்டேன் திருநறுங் | 35 |
| கமலவா கனனே | 29 |
| கலகவிழி | 98 |
| கற்றறியேன் | 13 |
| கறுவொடுங் கன்றியெரி | 10 |
| கன்னவிற் காமனைக் | 42 |
| கனகமுவெயிற் | 30 |
| கானகந் தன்னிலே | 93 |
| குடைகளொன் | 6 |
| குலங்களெவ ராகினுமே | 15 |
| குவிகைகொண் டிந்திரநர | 5 |
| குளிர்கொள் செம் | 1 |
| குற்றங்க ளில்லான் | 34 |
| கெட்ட காலனார் | 78 |
| கேடு பட்டிட | 74 |
| கையினா லுன்றனைத் | 88 |
| கொங்கலர் பிண்டி | 40 |
| கோட்டுமுலை மடமாதர் | 16 |
| சாரண னேதலைவா | 54 |
| சிங்கார மாயுனது | 83 |
| சிரா யெவருங் | 38 |
| சூரியர் கோடியுடன் | 52 |
| செப்பரு முனதுநற் | 67 |
| செய்யதா மரைமேல் | 65 |
| சொல்லியலை யானறியேன் | 22 |
| சோதி மூன்றினுள் | 23 |
| சோதியார் மலராய் | 66 |
| சோதி யேமுதற் | 33 |
| தண்ணமை கமல | 41 |
| தந்தைநீ தாயுநீ | 86 |
| தனகனங் கொண்டுதளர் | 9 |
| திருவழகு முடிதனில் | 80 |
| திருமென் றிடுபல | 70 |
| துறவனே பதினெண் | 64 |
| துறைவ னேமுறை | 28 |
| தூய கனவினலஞ் | 55 |
| நசைதவிர்ந் தைம்புலனு | 11 |
| நற்றவ னேவரதா | 56 |
| நித்தமை சுவர்யமாய் | 85 |
| நீதான் துணையன்றி | 37 |
| பண்ணவ னேபரமா | 53 |
| பண்ண வாமுதற் | 24 |
| பருக நின்றுநின் | 32 |
| பாகுமொழி | 97 |
| பிறர்வருந் தும்பொய்கொலை | 4 |
| புண்ணியா சினனே | 62 |

புரவி ஏழுடன் 79
பெருகு காதலங் 76
பெருகு நாண் 60
பொறிக டந்ததோர் 31
மகரமுன் கொண்டகொடி 8
மஞ்சாரும் பிண்டிக்கீழ் 49
மல்லிகை மாலைகொண் 84
மத்தளங் கொட்டிவரும் 82
மந்தர மாமலைமேல் 57
மானனைய விழிகாட்டி 17
முத்தனே அத்தியோ 61
முத்தனே முதற்பொரு 25
முத்தொளி முக்குடையாய் 50
முருகார் அசோக 45
முழுமை யும்பனித் 77
முன்னம் நன்னெறி 71
முனைவரும் கந்தியரும் 3
மெய்ய னைபரங் 26
வந்து மாயவிப் 72
வந்துவந்து பிறந்துழலா 12
வனசபீ டத்துறையும் 7
விஞ்சலர் பிண்டி 44
விரைசெய் நாண்மலர் 27
விரையார் கமலத் 68
வீணைப் பெட்டியி 96

பகவான்

# பார்சுவநாதர் வரலாறு

## கமடன் மருபூதி தோற்றம்

நாவலந் தீவில் உள்ள பல கண்டங்களுள் நாம் வாழும் பரத கண்டம் பண்டுதொட்டே சீரும் சிறப்பும் பெற்றது. அக்கண்டத்தில் சுரம்ய நாடு மிக்க செழிப்புடன் விளங்கியது. அந்நாட்டிற்கு பௌதனபுரம் என்பது தலைநகரமாகும். அந்நாட்டை இட்சுவாகு குலத் தோன்றல், அரவிந்தன் என்னும் பேரரசன் செங்கோல் ஓச்சிவந்தான்.[1] அரசர்களுக்குப் பணிபுரிவோருள் புரோகிதர்களும் அந்நாளில் உண்டு. அரவிந்த மன்னனுக்கும் புரோகிதன் ஒருவன் உளனானன். அவனே விசுவபூதி என்பவன். கற்புக்கடம் பூண்ட அவன் மனைவி பெயர் அநுந்தரி இவர்கள் செம்மையுடன் இல்லறம் நிகழ்த்தி இன்பமாய் வாழலாயினர். இவர்களுக்கு இரண்டு மைந்தர் உளராயினர். மூத்தவன் கமடன்; இளையவன் மருபூதி. கமடனின் மனைவி வருணை; மருபூதியின் மனைவி வசுந்தரி.[2]

---

குறிப்பு: தமிழில் மணிப் பிரவாள நடையிலே அமைந்த 'ஸ்ரீபுராணம்' என்னும் தீர்த்தங்கரர் வரலாறு கூறும் நூலிற் காண்கிறபடி இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது. அடிக்குறிப்பில், பாவதேவசூரி என்பார் வடமொழியில் ஆக்கிய 'பார்சுவநாத சரிதம்' என்பதில் காணும் மாறுபாடுகள் தரப்பட்டுள்ளன. இம்மாறுபாடுகளைக் காண்பதற்கு உதவிய நூல் மவுரிஸ்புளும்பீல்டு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய 'பார்சுவநாதர் வாழ்க்கையும் கதைகளும்' என்பதாகும். (The Life and Stories of The Jaina Savior Parcvanatha' by Maurice Bloomfield, Professor of Sanskrit and Comperative Philology in the Johns Hopkins University, Baltimore, The Johns Hopkins Press, 1919.)

1. பௌதனபுரம் என்பது பாடனு எனப்படுகிறது. அரவிந்த மன்னனின் மனைவி பெயர் தாரணி என்பதாம்.
2. இங்கே கதை முற்றிலும் மாறுபடுகிறது. கலைமகள் பூசனையைப் பற்றிய குறிப்புகள் இல்லை. மாறாக, விசுவபூதி குடும்பப் பொறுப்பைத் தன் மைந்தர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தான் பல விரதங்களை மேற்கொள்கிறான். பஞ்சபரமேட்டியை இடைவிடாது மனத்தில் இருத்தி வாழ்ந்தவன், அவ்வுடலைவிட்டு சௌதர்ம கல்பத்தில் தேவனாகப் பிறக்கின்றான். கணவனின் பிரிவைத் தாளாத அநுந்தரி தனக்கு வாழ்வில்லை எனத் துறவுக் கோலம் பூண்டாள். பின்னர், அவளும் இறந்தாள். கமடனும், மருபூதியும் பெற்றோர்களின் ஈமக்கிரியை (இறுதிச் சடங்கு)களை மிக்க வருத்தத்துடன் நிறைவு செய்தனர். அப்பொழுது அரிச்சந்திரன் என்னும் மாதவர் ஒருவர் அந்நகருக்கு வெளியேயிருந்த பூங்காவிற்கு வந்தருளினர். மக்கள் மிக்க பணிவுடனும்

### மருபூதி கலைபயிலல்

அரவிந்த மன்னன், ஒருநாள் சரஸ்வதி எனப்பெறும் கலைமகள் பூசனையை நாடெங்கும் சிறப்பாய்க் கொண்டாடினான். புலவர் பொருள் பெற்றனர்; கற்றவர் சிறப்பு எய்தினர். வித்துவான்கள் விருது பெற்றனர். இவ்வாறு கற்ற மாந்தர்களைக் கண்ணெனை ஓம்பினான் மன்னன். அரசனால் சிறப்பிக்கப் பெற்ற கலைமகள் விழாவையும், கற்றோர் சிறப்பையுங் கண்ட மருபூதி, கல்வியின் பெருமையை உணர்ந்தான்; மேன்மேலும் பல கலைகளில் தேர்ச்சிபெற விரும்பினான்.

அக்கினிசர்மன் என்பார் பல கலைகளில் வல்லவர்; விசுவபூதியின் நண்பர்; அவர் அயோத்தியில் வசித்து வந்தார். தம் தந்தையின் அனுமதியுடன் மருபூதி தான்மட்டும் அயோத்தியை அடைந்து, அக்கினிசர்மனிடம் பாடம் கேட்டு வரலானான்.[3]

### கமடனின் தீயொழுக்கம்

இஃது இங்ஙனம் நிகழ, பௌதனபுரத்தில் வாழ்ந்த கமடன் தம் தம்பி மனைவி வசுந்தரியின் அழகில் மயங்கிக் காமுறுகிறான். 'அவளை

---

பத்தியுடனும் அவரைப் பாடிப் போற்றினர். மனக்கவலையைப் போக்குவதற்காகக் கமடனும், மருபூதியும் அவரை அடைந்து திருவடிகளை வணங்கினர். முனிவரரும் அவர்கட்கு அறவுரை பகர்ந்தார். அறத்தைப் போற்றுபவன் நன்மையடைவான் மறந்து பாவத்தைச் செய்கின்றவன் கேடடைவான் என விளக்கக் கதைகளுடன் விரிவாக அவர் எடுத்துரைத்தார். இவ் வறவுரையால் மருபூதி மனமாற்றம் அடைந்து அறநெறியில் தவறாமல் வாழலாயினான். கமடன், முன்போலவே வாழ்ந்து வரலானான்.

3. மருபூதியின் ஆராக் காதலையுடைய வசுந்தரி காமப் பரவச முற்றாள். காமப்பித்து அதிகமாகவே, கமடனின் தகாத முறைக்கு முதலில் இசையாதவள், இறுதியில் அவனுடன் சேர்ந்து வாழலானாள். காமத்தினால் குருடர்களாகி அவர்கள் இருவரும் காலங்கழிக்கலாயினர். கமடனின் மனைவி, வருணை, இதனை நேரில் பார்த்து, மருபூதியிடங் கூறினாள். மருபூதி தொலைவில் இருந்த ஓர் ஊருக்குச் சென்றான். அங்கே சில நாள்கள் தங்கியபின், ஒரு சந்நியாசியைப்போல மாறுவேடம் பூண்டு பாடனவை அடைந்தான். கமனிடம் தங்குவதற்காகக் இடங் கேட்க, அவனும் வீட்டின் மூலையில் தங்கும்படி அனுமதித் தான். தூங்குவதுபோல நடித்து, அவன் அவர்களுடைய தீயொழுக்கத்தை நேரில் கண்டான்; உடனே அரசனிடம் முறை யிட்டான். முறைசெய்துகாப்பாற்றும் அம் மன்னவன் கமடனைக் கழுதை மேலேற்றிப் பலர் அவனைத்தூற்றி அவமதிக்கும்படி நாட்டைவிட்டுத் துரத்தினான். அவனும் காட்டில் ஒரு துறவியாய் வாழலாயினன்; மருபூதியிடம் ஆத்திரங்கொண்டு காலங்கடத் தினான். அரசன் பன்முறை தடுத்தும் நில்லாது, மருபூதி தன் சகோதரனுக்கு ஆறுதல் கூறும் பொருட்டுக் கானகம் சென்றான். கமடனின் கால்களில் மருபூதி விழுந்து வணங்கி நடந்ததை மறந்துவிட வேண்டுகிறான். ஆனால், கமடனோ சினம் மிக்கானாய்க் கல்லொன்றை எடுத்து மருபூதியின் தலைமேல் எறிந்து அவனை மாய்த்துவிடுகிறான்.

யடையின் அல்லது உயிர் தரிக்கமாட்டேன்' என ஒருதலையாய் நிற்க் லானுன். அவன் நிலையைக் கண்ட வருணை அவனைப் பலவாறு திருத்த முயன்றும் முடியவில்லை. 'கணவனை இழந்தால் விதவையாய் விடுவோமே' எனப் பயந்து வசுந்தரியினை அவனுடன் ஒருவாறாக, இசையவைத்தாள். வசுந்தரியும் கமடனும் தகாத முறையில் காலம் கழிக்கலாயினர்.

### குடும்பத்தார் நிலை

இவனுடைய தீயொழுக்கத்தைக் கேட்ட பொழுதே, கமடனின் பெற்றோர்களும், குருக்களும் 'இத்தகைய பழிச்செயல் கேட்டு வாழ்தலில் சாதல் மேலாம்' எனத் துணிந்து தற்கொலை செய்துகொண்டனர். அரவிந்தப் புரவலன் இந்நிகழ்ச்சியினை யறிந்து, இப் பழிச் செயல் நாட்டில் பரவாவண்ணம் மூடிமறைத்தனன்.

### மருபூதி புரோகிதனுதல்

கமடன்மேல் வெறுப்புற்ற அரசன், கல்விக் கடலாம் மருபூதியைத் தலைமைப் புரோகிதனுக நியமிக்க எண்ணினுன். மருபூதிக்கு இச்செய்தியைத் தெரிவித்து, அவனைப் பௌதனபுரத்திற்கு அழைத்துவரச் செய்தான். மிகவும் தூரத்தில் இருந்த கிராமமொன்றிலேயே அவனை எதிர் கொண்டழைத்து அன்புடன் நலம் உசாவி அளவளாவியிருந்தனன்.

### அரசனின் தண்டனை

கமடன் செயல் என்றறியாதபடி பொதுவாகக் கேட்பதுபோல, 'உடன்பிறந்தவன் மனைவியைப் புணர்ந்தனுக்குத் தண்டனை என்ன?' என்று மருபூதியினை அரசன் வினவினுன். 'தீயில் காய்ச்சப் பெற்ற செப்புப் பாவையைக் கட்டிப்பிடிக்கச் செய்தல், சவுக்கடியுடன் கழுதை யேற்றி நாட்டைவிட்டுத் துரத்துவித்தல்....' முதலியவற்றைத் தண்டனைகளாய் மருபூதி கூறினன். அரசனும், 'அவ்வாறே கமடனைத் தண்டியுங்கள்' என, மருபூதிக்குத் தெரியாமல் இரசியமாய் ஆணையிட்டனன். கமடனும் பாமர மக்களால் அடித்துத் துரத்தப்பட்டுக் காட்டை யடைந்தனன். பெரும் புரோகிதப் பதவியைப் பெற்ற மருபூதி, அரவிந்த மன்னனுடன் பௌதனபுரத்தையடைந்தனன்.

### மருபூதியின் மறைவும் மறுபிறப்பும்

ஆங்கு, நிகழ்ந்தவைகளைக் கேட்டு, பெரியோர்களின் மறைவிற்காக அவன் மனம் வருந்தினுன். சகோதரபாசத்தினுல் அண்ணனுக்கு நேர்ந்த கொடுமைகளை எண்ணி மிக்க வருத்தமுற்றுன்; அண்ணனைத் தேடி அழைத்துவரத் தீர்மானித்தான். பலவிடங்களிலும் அல்லும் பகலும் அவன் தேடினுன். காட்டையடைந்து, ஐந்தீ நடுவில் பெரிய பாறையைத் தாங்கிக்கொண்டு தவம்புரிகின்ற கமடனைக் கண்டான். உடனே, 'திருவடியீர்! உமக்கு நேர்ந்த பழிகள் என்னுல் செய்யப்பட்டன அல்ல, யான் யாதொரு குற்றத்தையும் அறியேன். அதனுல், தாங்கள்

தயைகூர்ந்து என்னுடன் நம் நகரத்திற்கு வந்தருளவேண்டும்' எனப் பணிவுடன் வேண்டியபடியே அவன் பாதங்களில் வீழ்ந்தனன். கமடனும், அனந்தானுபக்திக் கோபத்தினல்[4] தாங்கிய பாறையை ஓங்கி அவன் மண்டையில் போட்டனன். மருபூதியும் ஆர்த்தச் சிந்தையுடன்[5] உடலைவிட்டு குப்சகம் என்னும் மலைப்பாங்கில் சல்லகீ வனத்தில் வச்சிரகோடம்[6] என்னும் ஆண்யானையாயினன். கமடன் மனைவி வருணையும் தன்னெஞ்சே தன்னைச் சுட மனசஞ்சலத்தினல் இறந்து அவ்வனத்தில் பெண்யானையாய்ப் பிறந்து வச்சிரகோடத்திற்குப் பிடியாயினள்.

### அரவிந்த மன்னனின் துறவு

இப்பால், அரவிந்தப் பேரரசன் மருபூதியின் மறைவை அறிந்தான். 'கற்றவர்களையும் மயக்குகின்ற மாயம் நிறைந்தது இவ்வுலக வாழ்க்கை' எனக் குடும்ப வாழ்க்கையை வெறுத்துத் துறவறம் மேற்கொண்டான். அவன் பல காடுகளிலும் சென்று[7] கடுந்தவம் புரிபவன், ஒருநாள், முனிவர் கூட்டத்தோடு சல்லகீ வனத்தைக் குறுகினன்.

முனிவர்களின் நடமாட்ட ஒலியைக் கேட்டு வச்கிரகோடம் மதத்தோடு முனிவர்களை நோக்கி ஓடிவந்தது.[8] படிமை யோகந் தாங்கிய மாதவனின் திருவுருவைக் கண்டவுடனே, முன்பவத்தை யறிகின்ற உணர்வைப்பெற்றது. தான் முன்பவத்தில் மருபூதியாய் வாழ்ந்ததை நினைத்து அரவிந்த முனிவரனைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டது. மனவமைதியுடனும், அன்புடனுங் காணுகின்ற அதனைக் கண்டு ஓதியறிவால் அதன் வரலாற்றை உணர்ந்து அதனைக் குறுகி, 'மருபூதியே! வச்சிரகோடமே!! முன் செய்த வினைவிளைவால் இன்று

---

4. இக்கோபம் பிறவி தோறும் தொடர்ந்து வருவது. ஒருபிறவியில் ஏற்பட்ட ஒருயிர்மேல் கோபம் ஏனைய பிறவிகள் எல்லாவற்றிலும் அவ்வுயிரோடு பகையுணர்வுடையதாகும். தன் பகையுயிர் வாலறிவைப் பெறுகின்றபோதுதான், இக்கோபம் அழியும். இஃது கல் பிளவைப் போல ஒன்று கூடாதாம். இஃது மோகனீய வினையுள் ஒன்ருகும்.
5. ஆர்த்தச் சிந்தை: அப்பச்சக்கோபம், மாயை, லோபம் முதலியவற்றை எப்பொழுதும் நினைத்தலாம்.
6. விந்தியமலையில் காட்டு யானையாய்ப் பிறந்தது.
7. சாகரதத்தன் என்ற வணிகன் துறவி அரவிந்தனைச் சந்திக்கிருன். அவனுக்கு அரவிந்தன் தீர்த்தங்காரர்களைப் பற்றியும், அவர்களைப் போற்றுவதால் ஏற்படும் பலன்களையும் எடுத்துக் கூறுகின்ருர். சாகரதத்தன் திருவறத்தில் பற்றுக்கொண்டு துறவு கொள்கின்ருன். சாகரதத்தன் முதலாகிய முனிவர்களைக் கண்ட வச்சிரகோடம் அவர்களை அடிக்க வருகின்றது. ஆங்கு அரவிந்த முனிவரனைக் கண்டு வதம் (விரதம்) மேற்கொள்கின்றது.
8. ஒப்புநோக்குக: மேருமந்தர புராணம்: பூர்ண சந்திரநயினர் பதிப்பு; அறவுரைச் சருக்கம்.

விலங்கு கதியில் பிறந்துள்ளாய். வாழ்க்கைத் துன்பங்கள் (சம்சாரத் துக்கங்கள்) எல்லாவற்றையுங் கெடுக்கும் நல்லறத்தினைப் போற்றுவாயாக' என்று எடுத்துக் கூறினர். கொல்லாமை. பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனைநயவாமை, மிகுபொருள் விரும்பாமை என்னும் அணுவிரதங்கள் ஐந்தையும், சீலம் ஏழையும் ஆகப் பன்னிரண்டு வதங்களையும், நற்காட்சி நல்லறிவு, நல்லொழுக்கம் என்னும் மும்மணிகளையும் அதற்கு எடுத்து உரைத்தருளினர்.

## வச்சிரகோடம் விரதம் பூணல்

அன்று தொடங்கி, வச்சிரகோடம் எப்பொழுதும் மறத்திற்கு அஞ்சி, முனிவர் அருளிய வதங்களைத் தவறாமல் காத்து வரலாயிற்று. அஃது உண்ணாவிரதம் பூண்டு வாழ்ந்தது. ஒரு பக்கத்திற்கு (பதினைந்து நாள்களுக்கு) ஒருமுறை, ஒரு திங்கட்கு ஒருமுறை ஆகிய உண்ணா விரதங்களை (உபவாசங்களைத) தாங்கியது. அவ்வாறு தான் உண்ணும் உணவாக உலர்ந்த சருகையும், முறிந்த தழையையும், விழுந்த பழம் முதலானவற்றையும் உட்கொண்டது. ஓடும் நீரையே பருகலாயிற்று. இவ்வாறு வதம் பொருந்தி வர்த்திக்கின்ற வச்சிரகோடம் வேகவதி யாற்றுள் நீர் பருக இறங்கியது. சேற்றில் கால்கள் சிக்கிக்கொண்டன.[9] பெயரமாட்டாமல் அங்ஙனமே நிற்கலாயிற்று.

## கமடன் கோழிப் பாம்பாய் யானையை மாய்த்தல்

கமடதாபசனும் இறந்து அவ்வனத்தில் கோழிப் பாம்பாய்ப் (குக்குட சர்ப்பமாய்) பிறந்து, விலங்குகளைத் துன்புறுத்தலானான். அக் கோழிப்பாம்பு, கால்கள் அழுந்தித் தவிக்கும் களிற்றைக் கண்டது; கனன்று எழுந்து கடுங்கோபத்தால் அதனைக் கடித்தது.

## களிறு தேவனாதல்

களிறும் சற்றும் இவ்வுடலில் பற்றின்றியும், பகையின்றியும் சமாதியுடன் உடலைவிட்டது. அக்கணமே அது சாசார கல்பத்து அமரனாயிற்று. அங்கே நான்கரை முழஉயரத்தோடும். பதினெட்டு கடற்காலம் ஆயுளோடுங்கூடிய அமர சுகத்தைத் துய்க்கலாயிற்று. தேவமகளிர்களின் இன்மொழிகளைக் கேட்டளவிலேயே, மகளிர் இன்பம் முழுமையும் பெற்றதனால் ஏற்படும் இன்பத்தைப் பெறுவர். இத் தேவன், பதினெண்ணாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மனத்தினால் 'உணவு உண்ணல் வேண்டும்' என நினைப்பான். அவ்விளவிலேயே உண்டதற்கொப்ப திருப்தியையும் பெறுவான். ஒன்பது மாதத்திற்கு ஒரு தடவை மூச்சையிழுத்தலும், விடுத்தலுமாகிய உயிர்ப்புத் தொழிலை யுடையவன்.

## தேவன் இரச்மிவேகனாய்ப் பிறத்தல்

நாவலந்தீவில் கீழ்விதேகம், மேல்விதேகம் என இரு கண்டங்கள் உள்ளன. கீழ்விதேகத்தில் உள்ள நாடுகளுள் ஒன்று புட்கலாவதீ

9. இக்குறிப்பு பாவதேவசூரியின் நூலுள் இல்லை.

என்பது. அதன் தலைநகரம் **திரிலோகோத்தமம்** என்பதாகும்.[10] அவ்விஞ்சைய நாட்டிற்கு மன்னன் **வித்யுத்கதி** என்ற பெயரினை யுடைவன். **வித்யுந்மாலை** என்பவன் அவன் பெருந்தேவியாவள். சாசார கல்பத்துத்தேவன் இவர்களுக்கு **இரச்மிவேகன்** என்னும் மைந்தனாயினன்.[11] இவன் வடிவழகுபெற்ற வாலிபனாயினான். கன்னியர் காமுறும் காளையானான். ஆங்கு எழுந்தருளிய **சமாதிகுப்த முனிவர்**[12] வாயிலாய்த் திருவறப் பெருமையினை யுணர்ந்தான். சம்சார வாழ்க்கையில் நீங்காத வெறுப்புற்றான்; துறவுக் கோலம் பூண்டான். நோன்புகளில் மிகவும் சிறந்ததும், நோற்கக் கடினமானதுமான நோன்பு **சர்வோதபத்ரம்** என்னும் மாநோன்பு. அந் நோன்பு முதலாகப் பல நோன்புகளைக் கைக்கொண்டு தவம் புரியலானான்.

### கோழிப்பாம்பு மலைப்பாம்பாதல்

முன் சொன்ன கோழிப்பாம்பு இறந்து **புகைநரகம்** என்னும் ஐந்தாம் நரகத்திற்குச் சென்றது. ஆங்கு பதினேழு கடற்காலம் நரகத் துன்பத்தை அடைந்தது. பின் ஒரு கடற்கால அளவும் பல தாவரங்களாகவும் இயங்குயிர்களாகவும் பிறந்து உழன்றது. பின்னர், **இமகிரியில்** பெரு மலைப் பாம்பாய்ப் பிறந்து பல விலங்குகளை விழுங்கி வரலாயிற்று.

### இரச்மிவேகன் அச்யுதேந்திரன் ஆதல்

தவம்புரிந்த இரச்மி வேக முனிவர் இமகிரியில் 'மலையசைந்தாலும் அசையும்; தாம் அசையார்' என்னும் விளக்கத்ினைக்கொண்ட **படிமைமாயோகம்** தாங்கியிருந்தார்.[13] முன்பவப் பகையால் நிலையிற் றிரியாது அடங்கியவனின் தோற்றத்தைக் கண்டவுடனே அப்பெரும் பாம்பு சீறிவந்து மீறிய கோபத்துடன் அவரை வாரி விழுங்கிற்று. முனிவரும் சற்றும் முனிந்திலர். 'விடமுடியாமல் இருந்த உடலும் இன்றுடன் விடலாயிற்று' என்று சமாதியுடன் அவ்வுடலை விட்டார். அக்கணமே அச்யுத கல்பத்தில் **அச்யுதேந்திரன்** ஆயினர்.[14]

---

10. திரிலோகோத்தமம், **திலகம்** எனக் கூறப்படுகிறது. வித்யுந்மாலை **திலகாவதி** எனக்குறிக்கப் பெறுகிறாள். பன்னிரண்டாவதாகிய சாசாரகல்பம் எட்டாவது எனத்தவறாகக்குறிக்கப் பெற்றுள்ளது. இரச்மிவேகன் **கிரணவேகன்** என அழைக்கப் பெறுகிறான்.
11. இவன் **பத்மாவதி** என்ற அரசிளங்குமரியை மணம் புரிகிறான். **சாகர குருக்கள்** என்பாரிடம், வித்யுத்கதி துறவு மேற்கொள்கிறான். கிரணவேகன் **கிரணதேசஸ்** என்ற மைந்தனைப் பெறுகிறான்.
12. **சுரகுருக்களிடம்** கிரணவேகன் அறங்கேட்டுத் துறவு ஏற்கிறான்.
13. கிரணவேகன், குருவினிடம் அனுமதி பெற்றுக் கொண்டு **புட்கரத்வீபத்தை** யடைந்தான். அங்கே **வைதாத்யமலையில்** தங்கித் தவம்புரியலானான். கோழியரவம், பெரும் பாம்பாய்ப் பிறந்து அங்கே அவனை விழுங்கிற்று.
14. கிரணவேக முனிவரும் தவப்பயனால் **சம்பூத்ருமாவர்த்தம்** என்னும் தேவவுலகத்தில் அமரனாய்த் தோன்றினர். **சுபங்கரம்**

### அச்யுதேந்திரன் வச்சிரநாபியாய் வரல்

நாவலந் தீவில் உள்ள கண்டங்களுள் ஒன்ருகிய மேல்விதேகத்தில் பத்ம நாடு செல்வச் செழிப்புடன் விளங்கியது. அதற்குத் தலைநகரம் அசுவபுரம் என்பதாகும். அதனை வச்சிரவீர்யன், தன் மனைவி விசயை என்பவளுடன் இனிது ஆண்டுவந்தார். அச்சுதேந்திரன். தன் ஆயுளாம் 22 கடற்காலங்களும் அமர இன்பத்தை அனுபவித்தார். பின் இவர்கட்கு வச்சிரநாபி என்னும் மகனைத் தோன்றினர். அவர் முறையாலே சக்கரவர்த்தியுமாகி ஆறு கண்டங்களுக்கும் பேரரசராய் அரசோச்சலானர். ஒருநாள் சேமங்கர கேவலிகள் பக்கலிலே அவர் அறவமிர்தைப் பருகினர்; அரசர்கள் பலருடன் துறந்து உறுதவங்களை நோற்கலானர்.

### மலைப்பாம்பு குரங்க வேடனுதல்

மகா நாகம் இறந்து களறு நரகம் என்னும் நாலாம் நரகத்துட் தோன்றிப் பத்துக் கடற்காலமளவும் பெருந்துன்பங்களை அடைந்தது; பின்னர், திரசத் தாவரங்களுள் பிறந்திறந்து பலகாலும் உழன்றது. இறுதியில் குரங்கன் என்னும் வேடனுய்ப் பிறந்தது.

### வச்சிர நாபி அகமிந்திரன் ஆதல்

வேடனுய்த் திரிகின்ற காலத்தில், படிமை யோகந் தாங்கி நிற்கும் முனிவரரைக் கண்டு ஈறிலாப் பகையுணர்வால் பல கொடுமைகளைச்

---

நாட்டையாண்ட வச்சிரவீர்யன் என்பானுக்கும் இலக்குமிவதிக்கும் கிரணவேகனும் அமரன் வச்சிரநாபன் என்னும் மகனைத் தோன்றினர். இவர் கல்வி கேள்விகளில சிறந்த காளையான பின், பத்கதேசவரசன் சந்திரகாந்தன் என்பவனின் மகள் விசயாவை மணம் புரிந்தார். இவருடைய உறவினர் (cousin) குபேரன் என்னும் பெயரினர். இவர் அறத்தில் நம்பிக்கையற்றவர். இவர் வச்சிரநாபனைக் கண்டு 'வாழ்க்கை என்பது நம் ஆசைகளை துய்ப்பதற்கே உளது' என அறிவுரை கூறினர். வச்சிரநாபன் அவரைத் திருத்த முயன்று வரலானர். அவ்வளவில் உலகசந்திர மாதவர் ஆங்கு நகர்க்கு அருகாமையில் எழுந்தருளினர். அவரிடம் அறங்கேட்ட பின்னும குபேரன் தன் கொள்கையினின்றும் மாறுபடவில்லை. வாழ்க்கையின் குறிக்கோளாய் ஒருவன் அடைய வேண்டியவை விநயமும், விவேகமும், நல்லோர துணையும், அஞ்சாமையுமேயாம் என எடுத்து உரைத்தார். குபேரன் இவ்வறிவுரையால் மனமாறினன். குபேரன், உலகசந்திரன் என்பாரையே குருவாக ஏற்றுக் கொண்டான். அவர் மூலமாய்த் திருவறப் பெருமைகளை நன்குணர்ந்தான். வச்சிரநாபன், குபேரனுடன் நாடுதிரும்பினர். வச்சிரவீர்யர் வச்சிரநாபனிடன் அரசை யளித்துத துறவு பூண்டார். வச்சிரநாபன் சில நாள்களில் வாழ்க்கையில் சலிப்புற்று, சக்ராயுதன் என்னும் தன் மைந்தனிடம் அரசச் செல்வத்தை யளித்துத் துறவு பூண்டார். சுகச்சவிசயா என்ற இடத்தை யடைநதார். அங்கே குரங்கவேடன் என்பவனுல் துன்புறுத்தப் பெற்ருர்.

செய்தனன். அவரும் சமாதியில் சற்றுந் தளர்வின்றியே உடலைவிட்டு மத்யம மத்யமத்தில் சுபத்திர விமானத்தில் **அகமிந்திரன்** ஆயினர்.[15]

**அகமிந்திரன் ஆனந்தனுய்த் தோன்றல்**

இருபத்து ஏழு கடற்காலமும் அமரசுகத்தை இடைவிடாது துய்க்கலானர். நாவலந் தீவில் பரத கண்டத்தில் உள்ள நாடுகளுள் **கோசல தேசம்** சிறப்புடன் திகழ்ந்தது. அதற்குத் தலைநகரம் **அயோத்தி.** அந்நாட்டை இட்சுவாகு குலத்தில், காச்யப கோத்திரத்தில் பிறந்தவர்கள் ஆண்டுவந்தனர். அவ்வழி **வச்சிரபாகு** என்பவன் **பிரபங்கரி** என்னுந் தன் மனைவியுடன் ஆண்டு வரலானன். இவர்கட்கு அகமிந்திரன் **ஆனந்தன்** என்னும் அருமைந்தனுயினன்.[16]

---

15. வச்சிரநாபன்-**இலளிதாங்கன்** என்னும் தேவனுய்ப் பிறந்தார்.

16. **சுரபுரத்திற்கு** அரசன் **வச்சிரபாகு** எனப்படுவான். அவன் மனைவி **சுதர்சனை** என்பவள் பதினன்கு நல்ல கனவுகளைக் கண்டாள். அவைகளின் பலனுவது. சக்கரவர்த்தியாகும் மைந்தன் பிறப்பான் என்பதாம். வச்சிரநாபனுயிருந்த தேவனும் அவள் கருவில் தங்கினன். அவனும் பிறந்து **சுவர்ணபாகு** எனப் பெயரிடப் பெற்றுன். வாலிபனுன சுவர்ணபாகு ஒருநாள், தவருகப் பழக்கப்பட்ட குதிரையொன்றின்மேல் சவாரி செய்தான். அது அவனை ஓர் ஏரியில் தள்ளியது. அவ் ஏரியில் குளிக்கும்போது, மன்னன் ஒரு முனிவர் ஆசிரமத்தைக் கண்டான். அவனுடைய வலக்கண் அப்பொழுது துடித்தது. இது நன்மைக்கு அறிகுறியெனத் தீர்மானித்து அவ்விடத்தையடைந்தான். அங்கே பல பணிப்பெண்கள் சூழவிருந்த நங்கையொருத்தியைக் கண்டான். அவள் அழகில் அவன் ஈடுபட்டான். அவள் நாகர், விஞ்சையப் பெண்களது அழகின் மறுவுருவம் என எண்ணினன். இவள் வடிவு, அழகு, நடை முதலியவைகளைக் கண்டு இவள் ஓர் அரச மகளிராதல் வேண்டும் எனத் துணிந்தான். பூங்காவிற்கு வந்த அந்நங்கையின்மேல் வண்டு ஒன்று வட்டமிட்டது. 'என்னைக் காப்பாற்றுங்கள்' என அவள் அலறினள். அருகிலிருந்த சேடியர்களில் ஒருத்தி, 'அரசன் **சுவர்ணபாகு** தான் காப்பாற்றவேண்டும்' என்றுள். இதனைக் கேட்ட அரசன் அவர்களை அணுகி, 'சுவர்ணபாகு உலகைப் புரப்பவனுய் வாழ உங்கட்கு நேர்ந்த துன்பம் என்ன?' என்றுன். அவர்கள் அமைதியாய் இருந்தார்கள். மறுபடியும் கேட்கவே, ஒருத்தி, 'சுவர்ணபாகுவின் ஆட்சியில் யாரும் துன்புறுத்த முடியாது. ஒரு வண்டுதான் அவளைத் தொந்தரவு செய்தது' என்றுள். அவர்கள் அவனை, 'தாங்கள் யார்?' என வினவினர். அவன் தன்னை வெளிப்படுத்த விரும்பாமல் அரசனிடம் பணி புரிபவன் என்றும், அரசன் சுவர்ணபாகு ஆணையின்படி இவ் வாசிரமத்திற்குக் காவல்புரிய வந்தவன் என்றும் கூறினன். ஆனல், அந்நங்கை இவனே அரசன் எனத் தெரிந்துகொண்டாள். அரசன் 'அவள் யார்' என்று ஏனையவர்களை வினவினன். அப்பொழுது அவளே தன் பெயர் **பத்மா** என்றும், **இரத்தின புர அரசன்** தன் தந்தையென்றும், தன் தாயின் பெயர் **இரத்தினுவளி** என்றும் நாணத்துடன் கூறினள். அப்பொழுது ஒருத்தி, தந்தை இறக்கவே, அவள்உடன்பிறந்தவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர். அவர்கள் அரசும் சிதறி விட்டது. எனவே, **இரத்தினுவளி** தன் இளைய மகளாகிய

**ஆனந்தன் அறங்கேட்டல்**

இவன் அரச நீதியால் பல நாடுகளை வென்று பேரரசனுன். ஒரு நாள் பங்குனி மாதத்தில் நந்தீசுவரத் திவசப்பெரும் பூசனையைச் செய்து சிநாலயத்திருந்தான். அப்பொழுது அருகனைத் தொழுவான் வேண்டி, விபுலமதி என்னும் முனிவரர் ஆங்கே எழுந்தருளினுர். அவர் அருகர் கோயிலை மும்முறை வலம் வந்து முறைப்படி வணங்கினுர். பின்னர், அங்கே எழுந்தருளியிருந்தார். ஆனந்தப் பேரரசன் அவரைப் பணிவுடன் வணங்கித் திருவறங் கேட்டனன். பின்னர், 'அடிகளே! நாம் வணங்கும் சிநபிம்பங்களோ அழியுந்தன்மை யுடையன. நன்மை தீமையை உணரா. அவ்வாருக அதைக் காரண மாய்க் கொண்டு செய்யப்படுகின்ற பூசனை எங்ஙனம் நல்வினை (புண்ணியம்) தோன்றுவதற்குக் காரணமாகின்றது?' என்று வினவினுன்.

'பகவன் அருக பரம தேவனின் திருமூர்த்தி (பிம்பங்)களும், விமானம் முதலியவைகளும் அழிகின்ற தன்மையுடையன. எனினும், நல்லெண்ணங்களால் நல்வினை தோன்றுகின்றன. எனவே, பாவனையால் சிநப்ரதிபிம்பங்கள் முதலாயினவற்றைக் கண்டு பணிவுடன் வணங்குதலால் நல்லெண்ணங்கள் தோன்றக் காரணமாகின்றன. புண்ணிய வினை சேருவதற்குத் காரணமாகின்றன. சிநேச்வரன் ஆலயங்களையும், அவனுடைய பிரதிமைகளையும் நன்கு நோக்குவார்க்குத் தலையாய நல்லெண்ணங்கள் உண்டாகின்றன. அவை மற்றையவற்ருல் உண்டாகா. அகக்காரணம், புறக்காரணம் என இருவகைக் காரணங்களினுலேதான் காரியங்கள் எல்லாம் உணடாகின்றன.

---

பத்மாவை இவ்வாசிரமத்திற்குக் கொண்டு வந்துள்ளாள். இவ்வாசிரம முனிவர் இரத்திஞவெளியின் உடன்பிறந்தவர் ஆவர். அவர் பெயர் காளவன் என்பதாகும். நிமித்தகன் ஒருவன், 'சக்கரவர்த்தியாகிய சுவர்ணபாகு முரட்டுக்குதிரையால் இங்கு வருவார். அவரே பத்மாவின் கணவனுவர்' என்றனர் என்னும் செய்தியைக் கூறினர். விதியின் விளையாட்டை யுணர்ந்த சுவர்ணபாகு முனிவரைப் பார்க்க விரும்பினுன். நந்தை என்ற பணிப்பெண், 'இம் முனிவர் மற்றொரு முனிவரைப் பார்க்கச் சென்றுள்ளார்' என்ருள். முதிர்ந்த துறவியொருத்தி, நந்தையையும் பத்மாவையும் அனுப்பி முனிவரை அழைத்துவரச் செய்தாள். முனிவரும், பிறரும் பின்னர், அரசனைச் சிறப்புடன் வரவேற்று, காந்தருவத் திருமணச் சடங்கைச் செய்தனர். வித்யாதர அரசன் பத்மோத்தரா என்பவன் பத்மாவின் ஒன்று விட்ட சகோதரன் ஆவார். அவன் தம்பதியர்களை வாழ்த்திஞன். பின்னர், விஞ்சையர்களை அடக்குவதற்காக வைதாத்திய மலைக்குத் தம்பதியர்களை அழைத்துச் சென்ருன். நல்ல விமானம் ஒன்று வரவழைக்கப்பட்டது. பத்மா பிரியா விடை பெற்று உடன் சென்ருள். அங்கே சுவர்ணபாகு மற்ற அரசர்களால் சிறப்பிக்கப் பெற்ருர். பிறகு தம் நாட்டை யடைந்தார். பதினுன்கு இரத்தினங்களைப் பெற்ருர். பதினெட்டு நாள்கள் பெருவிழா கொண்டாடினுர். திக்விசயத்திஞல் ஆறு கண்டங்களையும் அடிப்படுத்திச் சக்ரவர்த்தியானுர். அவர் அடைந்த சுற்றமும், செல்வமும் கணக்கிலடங்கா.

(காரணமில்லையேல் காரியம் இல்லை). அதனால் கோயில், உருவ வழிபாடு முதலியன நல்வினை வருகைக்குக் காரணமான நல்லெண்ணத் தோற்றத்திற்குக் காரணமாகின்றன என உணர்வாயாக' என்று முனிவரர் விளக்கினர். விளக்கியதோடு நில்லாமல் மூவுலகத்திலும் உள்ள எல்லாக் கோயில்களையும் அவை அவை உள்ளபடியே வருணித்தார். அதிலும் சிறப்பாகச் சூரியனில் உள்ள அருகன் கோயிலை மிகவும் விவரமாக வருணித்தார். ஆனந்தப் பேரரசன் மிக்க ஆனந்தமும் பணிவும் உடையவனானன்.

## சூரிய வணக்கம்

அன்றிலிருந்து காலையிலும், மாலையிலும் (அதாவது) சூரியனின் உதயகாலத்தின்போதும், மறைவு காலத்தின்போதும் அவ்வத் திசை நோக்கி நின்று, சூரியனில் உள்ள சிநபிம்பங்களை அர்ச்சனையினோடும் வணங்கலானன். பொன்மணிகளால் அருகன் ஆலயத்தோடுங்கூடிய சூரிய மண்டலத்தை சிற்பிகளால் சமைப்பித்தான். ஆட்டாணிகம், சதுர்முகம், இரதாவர்த்தனம், சர்வதோபத்ரம், கற்பக விருட்சகம் முதலாகிய பெரும்பூசனைகளை ஆகமவிதிப்படி அவ்வாலயத்தில் செய்தனன். அன்று தொடங்கி உலகில் சூரிய வணக்கம் பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் வதம், சீலம், தானம் அறிவனற் சிறப்பு (பூசை) ஆகியவற்றை முடிந்தவரையில் செய்தல்வேண்டும். இவ்வண்ணமே, நால்வகைச் செயல்களிலும் இடைவிடா ஈடுபாடுடையவனானன்.[17]

## ஆனந்தனின் துறவு

தன்னை அலங்கரித்துக்கொள்ள அலங்கார மாளிகைக்குச் சென்றான். முகவழகு செய்யும்போது தன் தலைமுடியில் நரை மயிர் ஒன்றைக் கண்டான். முதுமை தன்னை நெருங்கி வருவதையுணர்ந்தான். முதுமைக்கு அடுத்தது இறப்பு; இறப்புக்கு அடுத்து வருவது பிறப்பு.... என்ற வாழ்க்கைச் சுழற்சியை ஊகித்துணர்ந்தான். எனவே, நரைமயிர் ஒன்றையே காரணமாக வாழ்க்கையில் சலிப்பும் வெறுப்புங் கொண்டான். மூத்த மகனிடம் அரசப்பதவியை அளித்தான். சமுத்திர குப்த முனிவர் என்பவரிடம் அறங்கேட்டுப் பல மன்னர்களோடு துறவு மேற்கொண்டான். உலகத்தில் நல்வினைகளிலேயே (புண்ணியங்களிலே) மிகச் சிறந்தது தீர்த்தங்கரனகப் பிறப்பது ஆகும். அப் புண்ணியம் தர்சனவிசுத்தி முதலாகிய பதினறு பாவனைகளை (எண்ணம் முதலியவைகளை) ஆராதிப்பதால் உண்டாகும். ஆனந்த மாதவரும் அப் பெரும்புண்ணியத்தினையினர். அரும்பெருந்தவ யோகங்களைக் கைக்கொண்டார். இறுதிக் காலத்தில் பால்வனம் (க்ஷீர வனம்) என்னும் வனத்தில் படிமை மாயோகம் தாங்கியருளினர்.

---

17. அரண்மனையில் ஒருநாள் திருவோலக்கக் காட்சியளித்திருந்தான் சுவர்ணபாகு. அப்பொழுது ஜெகந்நாதராம் தீர்த்தங்கரரின் சமவசரண வருகையைக் கேட்டனன். ஆங்குப் பணிவன்புடன் அடைந்து அறங்கேட்டுத் துறந்தனன்.

### குரங்கனின் சிங்கப் பிறப்பு

குரங்கன் என்னும் அவ்வேடனும் தான் விதைத்த பெருந்தீவினை யின் விளைவாய் ஆரிருள் நரகு என்னும் ஏழாம் நரகம் அடைந்து சொல்ல முடியாத துன்பங்களையுற்ருன். அங்கிருந்து ஆயுள் முடிவில் அவ் வனத்தில் சிங்கமாய்ப் பிறந்தான்.

### ஆனந்தன் ஆனந்தேந்திரன் ஆதல்

அச் சிங்கம் பலவிடங்களிலும் அக்காட்டில் பசியுடன் திரியலா யிற்று. அப்பொழுது முனிவனின் திருவுருவைக் கண்டது. அடங்காத சினமும், ஆத்திரமும் கொண்டது. தன் வலிமைக்கேற்ற இன்னல்களை-கொடுமைகளைச் செய்தது. முனிவரும் முற்பகல் செய்தவினையெனச் சற்றும் முனிவின்றி உடலைவிட்டார். அக்கணமே ஆனத கல்பத்தில் பிராணத விமானத்தில் தோன்றி ஆனந்தேந்திரன் ஆயினர்.[18]

### ஆனதேந்திரனின் அடுத்த பிறப்பு

நாவலந்தீவில் பரத கண்டத்தில் உள்ள நாடுகளுள் ஒன்று காசி நாடு. அதன் தலைநகரம் **பனாரஸ்** என இன்று வழங்கப்பெறும் வாரணசியாகும். அதனை உக்ர வமிசத்தில் காச்யபதோத்திரத்தில் தோன்றிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். அவர்களுள் ஒருவன் **விசுவசேனன்** என்பான். கற்பின் திலகம் எனப்படும் அவன் மனைவி பெயர் பிராம்மி[19]. இவர்கள் இருவரும் முறை தவருது ஆண்டு வந்தார்கள். ஆனதேந்திரன் தனக்குரிய இருபது கடற்கால அளவும் இன்பந்துய்க்க லானுர்.[20] பகவான் சிநமாதாவின் திருக்கருவில் உதிக்க ஆறுமாதம் உள்ளபோதே, தேவேந்திரன், ‘இற்றையிலிருந்து ஆறுமாத முடிவில் பகவான் பிராம்மியின் திருக்கருவில் தோற்றம் செய்குவன்’ என ஆணையிட்டான்.

### தேவர்களின் பணிவிடை

அன்று முதல் குபேரன் அம்மாநகரத்தில் நாடோறும் மூன்றரைக்கோடி பொன்மழை அந்நகரமெங்கும் பொழியலானுன். தேவர்களும் தேவமாதர்களும் சிநமாதா பிதாக்களை நீர், பால், கந்தம்

---

18. மகாபிரப விமான தேவனுகத் தோன்றினுன்.

19. பிராம்மியின் பெயர் வாமதேவி எனக் குறிக்கப்படுகின்றது.

20. பகவானின் பிறப்பு முதலியன மிகச் சிறப்பாக எடுத்தியம்பப் பெற்றுள்ளது. இஃது ஸ்ரீபுராண ‘ஆதி நாத புராண’த்தில் உள்ளவாறே ஓரளவு கூறப்பட்டுள்ளது. விசுவசேனன் பெயர் அசுவசேனன் என்றுள்ளது. சுவர்ண பாகுவாகிய தேவன் சித்திரைத் திங்கள் தேய்பிறை நாலாம் நாள் விசாக நட்சத் திரத்தில் திருக்கருவில் தோன்றினுர். அதன் பலனைப் பதி னுன்கு கனுக்களை வாமாதேவி கண்டாள். உண்மையில், பதினறு கனுக்களே எல்லாத் தீர்த்தங்கரர் புராணத்திலும் கூறப்படுகின்றன.

முதலியவற்ருல் தினமும் திருமுழுக்காட்டலானுர்கள். விலைமதிக்க முடியாத ஆடை அணிகலன்களை யணிவித்தனர். அமிர்தத்தை உணவாக அளித்தனர்.

### பிராம்மி அரசி கண்ட கனவு

வைசாகத் திங்கள் தேய்பிறை இரண்டாம் நாளில் **விசாக விண்மீனில்** கடையாமத்தில் பிராம்மி, யானை, சிங்கம் முதலாகிய பதினறு கனுக்களைக் கண்டனள். விடியற்காலையில் பணிவன்புடன் **விசுவ சேனப் பேரரசனிடம்** கனுக்களையறிவித்தனள். ஓதியறிவையுடைய விசுவசேனன் அவைகளின் பலன்களைச் சொல்லி, ‘இத்தகு பெருமைகட்குரிய பகவன் நின் திருக்கருவில் அடைந்தருளினன்’ என்றனன். கணவன் கூறக் கனுப்பலன் கேட்ட பிராம்மி மகவு ஈன்றதைப் போன்ற மகிழ்வு எய்திஞள். ஸ்ரீஹரி முதலாகிய திருவழகிகள் இடைவிடாது பணிபுரிந்தனர்.

### பகவான் பார்சுவநாதர் அவதாரம்

இங்ஙனம் நாளும் போற்றிவர ஒன்பது மாதங்களும் சென்றன. தைத் திங்கள் தேய்பிறை பதினென்ரும் நாள்[21] விசாக விண்மீனில் அனிலயோகத்தில் மூவறிவு மேவிய பகவான், திருக்கருவினின்றும் போந்து உலகில் அவரித்தருளினன்.[22]

### பகவானுக்குச் செய்த சிறப்புகள்

அக்கணமே பவணம், வியந்திரம், சோதியம், கல்பவாசியம் முதலிய உலகங்களில் முறையே சங்கு, பேரி, சிங்கம், தம்பட்டம் முழங்கின. இந்த அறிகுறியினுல் பகவனின் தோற்றத்தை யறிந்தனர். நால்வகைத் தேவ தேவேந்திரர்கள் வந்தனர். பல சேவைகளைச் செய்

21. பத்தாம் நாள் எனக் குறிக்கப்படுகின்றது.

22. இயற்கையே பிறந்த நாளைக் கொண்டாடிற்று. திக்குமாரிகள் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடின. மலர்களைப் பொழிந்தனர். பல சேவைகளைச் செய்தனர். மற்றும் சில தேவியர் பகவனின் நாபியை (தொப்புளை யறுத்து) ஒரு குழியில் இட்டனர். பின்னர், அக்குழியை மணி கனகங்களால் நிரப்பினர். அதன் மேல் அறுகம்புல்லை நட்டனர். தேவலோகங்களில் நாதங்கள் முழங்கின. தேவர்களின் ஆசனங்கள் ஆடின. இந்திரன் பொன்னுலகத்திலிருந்து வந்தான். பக்தியினுல் பல இன்னிசைகளை எழுப்பினுன். சிநத்தாயை வணங்கினுன். பல வெகுமதிகளை உவந்து அளித்தான். நால்வகைத் தேவர்களும் குழந்தைக்கு மாலையிட்டு திருமுழுக்காட்டினர். சுரர்கள் ஆடினர்; பாடினர். **சக்ரா**, மூவுலக நாதன் என மொழிந்தான். இந்திரன் அமிழ்தைக் குழந்தையின் கட்டை விரலில் தடவினுன். ஐந்து **அப்சராப் பெண்கள்** செவிலியர்கள் ஆயினா. மேருவிலிருந்து வந்த **வாசவர்கள்** எண்நாள் யாகங்களை அருகனுக்கு ஆற்றினர். வாமாதேவி ஈன்றதால் பெருமகிழ்வு எய்திஞள். அரசன் கைதிகட்கு விடுதலையளித்தார். மக்கள் ஆனந்தக் கடலில் மூழ்கிக் குளித்தனர்.

தனர். ஐராவதம் என்கின்ற யானை, உண்மையில் யானையல்ல. ஒரு தேவன் அவ்யானையின் உருவை எடுக்கிறான். ஐராவதம் முப்பத்தி ரண்டு முகங்களையுடையது. முகம் ஒன்றுக்கு எட்டுக் கொம்பென இரு நூற்று ஐம்பத்தாறு கொம்புகளையுடையது. கொம்பு ஒன்றுக்கு ஒரு பொய்கையாகி இருநூற்றைம்பத்தாறு பொய்கைகளையுடையது. பொய்கை யொன்றிற்கு முப்பத்திரண்டு கமல மலர்களென எண்ணா யிரத்து நூற்றுத் தொண்ணூற்றிரண்டு கமல மலர்களையுடையது. மலர் ஒன்றில் முப்பத்திரண்டு இதழ்களென இரண்டு இலக்கத்து அறுபத்திரண்டாயிரத்து நூற்று நாற்பத்து நான்கு (2,62,144) இதழ் களை யுடையது. இதழொன்றுக்கு முப்பத்திரண்டு நர்த்தக மகளிர் என எண்பத்துமூன்று இலக்கத்து எண்பத்தெட்டாயிரத்து அறுநூற்று எட்டு நர்த்தக மகளிர்களையும் உடையது. இவ்யானையின் மத்தகத்தில் பகவானை எழுந்தருளுவித்துக்கொண்டு, இருபுறமும் கவரிவீச மந்தர மலையில் உள்ள பாண்டுக சிலையில் சிங்க வணையில் எழுந்தருளிவித் தனர். நீர், பால், கந்தம் முதலியவற்றால் மந்திரம், துதி முதலியவை களோடு அபிடேகம் செய்தனர். அம்பொழுது பார்சுவ பகவான் எனத் திருப்பெயர் சூட்டினர்.[23] மீண்டும் வாரணாசி நகரத்திற்குத் திரும்பி வந்தனர். பெரிய ஆத்தான மண்டபத்தில் சிங்கவணையில் வீற்றருளச் செய்தனர்.

ஆனந்த நடனம், இன்னிசை முதலியவைகளை நடாத்தி பகவானின் பிறப்பாம் கலியாணப் பெரு விழாக்களைச் செய்தனர். சௌதர் மேந்திரன் முதலாகிய தேவர்கள் சிநனின் பெற்றோர்களை மகிழ்வித்து, பகவனிடம் விடை கொண்டு போயினர்.

அரிட்டநேமி பகவனின் தீர்த்த சந்தான காலம் எண்பத்து மூன்று யிரத்து எழுநூற்று ஐம்பது ஆண்டுகளாகும். இதனுள்ளடங்கிய ஆயுளையுடையவனாகித் தோன்றியுள்ளார் பகவான். அவர் தம் திரு வுடல் பச்சை வண்ணத்தது. ஒன்பது முழ அளவைவுடையது. பகவனின் ஆயுளளவு நூறு ஆண்டுகளாகும். பகவனும் அமரரால் இயற்றப் பெற்ற போககோபபோகப் பொருள்களைத் துய்த்தார். தேவகுமாரர் கள் தோழர்களாய் வர வளர்ந்து பதினாறு ஆண்டுகள் நிறை வுற்றனர்.[24]

---

23. திருப்பெயர் சௌதர்மேந்திரனால் சூட்டப்பெறுவதாகும். இதற்கு மாறாக, இங்ஙனம் கூறப்படுகிறது கருவுற்றிருந்த தாய் ஒரு நாள் இரவு பாம்பொன்றைக்கண்டாள். இதை அரசனிடம் முன்னமேயே கூறியிருந்தாள். அவர் குழந்தையின் பலமே பாம்பாகத் தோன்றியது என யூகித்து குழந்தைக்கு பார்ஸ்வா எனத் திருப்பெயர் சூடடினர். தேவர்கள் பலவுருவங்களில் காட்சியளித்துக் குழவிக்கு மகிழ்ச்சியூட்டினர். நாளொரு மேனி யும், பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்தார். அங்கங்கள் அழகுடையவரானார்.

24. பகவனின் அழகில் பல பெண்கள் மயங்கினர். ஒரு நாள் அரச வையில் ஒரு தூதன் வந்து 'அரசே நரவர்மன் என்ற மன்னர் குசஸ்தலம் என்ற நாட்டை ஆண்டார். அவர் தம் மகன்

**சிங்கத்தின் மறுபிறப்பு**

முன்னர் கூறப்பட்ட சிங்கம் இறந்து நரகத் துன்பங்களை யடைந்தது. பன்முறை நரகத்தையடைந்தது. பின்னர் மகீபாலபுரத்தில்

---

பிரசேனஜித்துக்கு அரசை ஒப்படைத்து துறவு பூண்டார். பிரசேனஜித்திற்கு பிரபாவதி என்ற நல்ல மகள் ஒருத்தியிருந்தாள். ஒரு நாள் பூங்காவில் பார்ச்வ பகவானின் பெருமைகளை எடுத்துக் கூறும் பாடல்களைக் கேட்டாள். அன்றிலிருந்து பகவான் மேல் ஆராக் காதல் கொண்டாள். பிரபாவதியின் பெற்றோரும் அவள் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்தனர் பிரசேனஜித், பர்ச்வ பகவனின் கருத்தையுணர்ந்து ஒரு சுயம்வரத்தை வைக்கலாம் எனத் தீர்மானித்தார். கலிங்க நாட்டரசன், யவனன், பிரபாவதி தனக்கே மனைவியாதல் வேண்டும் என்ற எண்ணத்தோடு குசஸ்தலத்தை முற்றுகையிட்டுள்ளான். நான் புருடோத்தமன் ஆவேன். நான் அமைச்சர் சாகரதத்தனின் மைந்தன். பிரசேனஜித் உங்களிடம் முறையிட அனுப்பினார். ஏனெனில் தாங்கள் முறை பிறழாதவர் என்றனன். அச்வசேனன் கோபமுற்று, குசஸ்தலாவில் பிரசேனஜித்தைக் காப்பாற்ற ஆயத்தமானார். பார்சுவா இதனைக் கேட்டு விளையாட்டுக் கூடத்தைவிட்டு வெளியே வந்தார். தந்தையின் குணத்தை மெச்சினார். போரில்லாமல் சமாதானமாக யவனனைத் திருத்தலாம் என்றார். அவர் தந்தையும் ஒப்புக்கொண்டார். எல்லா வித ஏற்பாடுகளுடன் பார்சுவா புருடோத்தமன் உடன்வர பயணந் தொடங்கினார். இந்திரனின் சாரதி, மாரதி என்பவன், இந்திரன் ஆணையால் பார்ச்வருக்கு இந்திரனின் ஊர்தியையளித்தான்; தானும் சேவை புரிய உடனிருந்தான். குசஸ்தலாவை அடைந்து ஏழடுக்கின்மேல் உப்பரிகையில் தங்கினார். இம் மாளிகை தேவதைகளால் நிர்மாணிக்கப்பெற்றது யவனனுக்கு ஒரு தூதனை அனுப்பினார். முற்றுகையைத் தவிர்க்கும்படி அறிவுரை கூறச் சொன்னார். முதலில் யவனன் கோபத்தோடு மறுத்தான். அவனுடைய முதிய அமைச்சன் அவனை இடித்துக் கூறினான். தூதனைக் கொல்லத்துணிந்த யவனனை மிகவும் எச்சரித்தான். இவ்வச்சுறுத்தல்களால் பயந்து தூதனை மகிழ்வித்தான். தெரியாமல் துன்புறுத்தியமைக்காக மனம் வருந்தினான். அமைச்சன் யவனனைச் சமாதானப்படுத்தினார். அவரை யவனன் எதிர்ப்பது, தீப்பொறி, சூரியனை எதிர்ப்பதுபோலாம். சுண்டெலி சிங்கத்தை எதிர்ப்பது போலவாகும். ஒருகாகம் கருடனை எதிர்ப்பது போலவாம். குந்துவை யானை எதிர்ப்பது போல வாகும். மேலும் இந்திரனின் ஆட்கள் பகவனுக்கு பணிவிடை செய்கின்றனர். இவைகளை அமைச்சன் எடுத்துக்கூற யவனன் பயபக்தியுடன் பகவனைக் கண்டு வணங்கினான். பார்ச்வ பகவன் அவனை மன்னித்தருளினார். பிரசேனஜித், பிரபாவதியை அழைத்துவந்து பார்ச்வபகவனை மணந்துகொள்ளும்படி வேண்டினார். பார்ச்வபகவன், 'யான் காப்பாற்றவே வந்தேன்' என மறுத்தார். பிரசேனஜித், 'வாரணாசியில் தந்தையைக் கண்டு பேசலாம்' என வேண்டினார். பகவன் ஒப்புக்கொண்டார். பார்ச்வபகவன் துறவெண்ணம் உடையவர். அவர் அறிவில் மூத்தவர். இவ்வண்ணம் அச்வசேனர் எண்ணி பார்ச்வ பகவனை பிரசேனஜித்துடன் நேரில் கண்டார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது நலம் எனக் கூறவே பார்ச்வபகவனும் உடன்பட்டார். பிரபாவதிக்கும் பார்ச்வபகவனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. பின்னர் இன்பமாக வாழலாயினர். ஸ்ரீபுராணத்தில் பார்ச்வபகவனின் திருமணக் குறிப்பு இல்லை.

மகீபாலன் என்னும் மன்னனுயிற்று[25]. இவன் பகவனின் தாய் வழித் தாத்தாவாவன். இவன் தன் மனைவியின் மறைவினுல் மனவேதனை யுற்று தாபசனுயினர். ஐந்தீநடுவுள் நின்று தவம் செய்யலானுன். ஒரு நாள் வனவிளையாட்டிற்காகச் சென்ற பகவான் அவனைக் கண்டருளினுர்.[26]

### மகீபாலன் — பார்சுவர் சந்திப்பு

அவன் செய்கின்ற தவத்தில் சற்றும் மதிப்பின்றிப் பகவன் நின்ருர். தாபசன், தவம் தரித்தவனும், மூத்தவனும், குருவும், தாத்தாவு மாகிய என்னை செல்வச் செருக்கால் நெருக்கப்பட்டுள்ள நீ வணங்கா தொழிவதோ?' என்று மனங்கலங்கிக் கூறினுன். அக்கவலையினுல், மாயையினுல் மதிமயங்கிக் கோடரியினுல் விறகுகளைத் துணித்துத் தீயில் இடலாயினன்.

### நாக மிதுனங்கள்

அவனை நோக்கி, 'தாபசனே! இவ்விறகில் நாக மிதுனங்கள் வசிக்கின்றன. ஆதலில் அதனுல் பிளக்காதொழிமின்' என்று பகவன் அருளிச்செய்தனர். அதனை மனத்தில் ஏற்காது அவ்வாறே பிளத்த லில் நாகமிதுனங்கள் துண்டிக்கப்பட்ட உடல்களோடு வெளிவந்தன. பகவனும் திருவருளினுலே அறத்தையும் பஞ்ச நமஸ்கார பதங்களையும் உபதேசித்தருளினுர். அவைகளை மனம் வைத்துச் செவிமடுத்து உடலை விட்டன. அக்கணமே தரணேந்திரனும், அவன் தேவி பத்மாவதியு மாய்ப் பிறந்தன.

---

25. மகீபாலன வரலாறு இல்லை. மாருக, சிங்கம் இறந்து பல விலங்குகளாகத் தோன்றித் துன்பமுற்றது. பின் ரோரா என்ற அந்தணனுக்கு கதன் என்னும் மைந்தனுயிற்று. கதன் (கதா) பிறந்தவுடனே பெற்ரோர் இறந்தனர். அவன் உண்ண உண வின்றியும், உடுக்க உடையின்றியும், உறைய உறையுள் இன்றி யும் உழன்ருன். செல்வந்தர்களின் செழிப்பைக் கண்டு தவத் தில் நாட்டங்கொண்டான். அன்றிலிருந்து தாபசனுக வாழ லானுர்.

26. இல்லற வாழ்க்கை நடாத்தி வந்த பகவான், ஒருநாள் சாளரம் வழியாய் வெளியே நோக்கலானுர். ஒரு பெருங்கூட்டத்தைக் கண்டார். வினவியதில், அவர்கள் கதத்தாபசனுக்கு மரியாதை செலுத்த வந்துள்ளார்கள் என்பது உணர்ந்தார். 'என்ன நிகழ் கிறது' என்பதைக் காண அங்கே சென்றவர். பஞ்சாக்னி நடுவில் தவம்புரிகின்ற கதனைக் கண்டார். அத்தாபசன், ஒரு பாம்பை எடுத்து நெருப்பில் இட்டான். நெருப்பில் அது துடிக்க லாயிற்று. 'இவ்வருளற்றசெயல் ஏன்? இது எங்ஙனம் துறவி கட்குப் பொருந்தும்?' என அவர் வினவினுர். 'அரசர்களுக்கு யானை, குதிரைகளைப் பற்றித்தான் தெரியும்' ஆனுல், முனிவர் களுக்குத்தான் தவத்தைப்பற்றித் தெரியும். எனப் பெருமிதத் துடன் தாபசன் கூறினுன். பார்ச்வர் உடனே நெருப்பை யணைக்கும்படி கட்டளையிட்டார். மிக்க ஆவலுடன் வெளிவந்த பாம்புக்கு பஞ்ச நமஸ்காரபதங்களை யோதினுர். — தரணனுகப் பிறந்தது அப்பாம்பு.

### மகீபாலன் மறுபிறப்பு

பின்னர் தாபசனை நோக்கி, 'தாபச! கேள், யான் தவவலிமை யுடையன் என்னும் மலைபோன்ற செருக்கினையுடையை. ஐந்தீநடுவுள் நின்று தவம் நோற்றல் முதலாகிய கூடாவொழுக்கங்கள் இயங்குயிர் வதைக்குக் காரணமாகும். மறம் (பாபம்)தோன்றுதற்குக் காரணமாய இவைகளினால் நற்கதியை யடையலாம் என நினைப்பது அரிசி வேண்டி உலக்கையினால் உமியினை இடித்தல் போலவும், தங்கம் வேண்டி உலோகக் கலப்பற்றகல்லை ஊதுதல் போலவும், வெண்ணெய் வேண்டி நீரைக்கடைதல் போலவும் ஆகும். தீய எண்ணங்கள் தோன்றுவதற்குக் காரணமான இச்செயல்களைத் தவிர்ப்பாயாக' என்றருளிச் செய்தனர். தாபசனோ, முன்பு கமடனாக இருந்த போதே பகைவனிடம் பகையெண்ண விதையை யூன்றியவன். தான் பேசுவதையே சரி யென்னும் செருக்கினை யுடையவன். எனவே அவர் அருளிய அறவுரைகளை அவன் சற்றும் மனத்தில் கொள்ளாது, நேயாளிக்கு எங்ஙனம் அமிழ்தே நஞ்சாக கைக்குமோ அதுபோல அத்திருமொழிகளை எண்ணி மனக்கவலை மிக்குற்றான். அதே மனக்கவலையோடு இறந்து சோதிய வுலகத்துச் சம்பரன் என்னும் உம்பன் ஆயினன்.[27]

### பகவான் பார்சுவநாதர் துறவு பூணல்

பகவான் தனது பாலப் பருவமாம் முப்பது ஆண்டுகளைக் கடந்தருளினார். ஒரு நாள் அரசவையில் எழுந்தருளியிருந்து சாகேத புரத்தரசன் சயசேனனால் விடுதரப்பட்ட கரி, துரகம் முதலாகிய காட்சிகளைக் கண்டருளினார். தூதன் வழி ஆதிபகவனின் தோற்றம் முதலாகிய சாகேதபுரப் பெருஞ் சிறப்புக்களைக் கேட்டருளினார்.[28] அதுவே உலக வாழ்க்கை வெறுப்புக்குக் காரணமாகி, துறவெண்ணத்தை யடைந்தருளினர். அக்கணமே உலௌகாந்திக தேவர்கள் வந்து, 'பகவன்! இஃது துறவு ஏற்கும் காலம் போலும்' என்று பணிந்து கூறினர். தேவேந்திரன் முதல் எல்லாத் தேவர்களும் துதித்து வரலாயினர். துறவு (பரினிட்க்ரமணம்) என்னும் மங்கலத் தொழிலை (கலியாண மகோற்சவத்தை) மிக்கச் சிறப்புடன் கொண்டாடினர்.

விமலை என்னும் பல்லக்கின் மிசை எழுந்தருளி, முந்நூறு மன்னர்கள் தம்முடன்வர காட்டையடைந்தார். அசுவ வனத்தில் படிகப்பாறைத் தலத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளித் துறவு பூண்டார். ஆடை, அணிகலன்களைக் களைந்தார்; மும்முறை தலைமயிரைக் கையினால் பிடுங்கி

---

27. கதன் தன் கூடாவொழுக்கங்களினால் மேகமாலின் என்ற அசுரனாய்ப் பிறந்தனன்.

28. பகவான், பூங்காவிலிருந்த நேமி பகவானின் திருவுருவப் படத்தைக் கண்டு அவர் வாழ்க்கையை (மணம் புரியா வாழ்க்கையை) எண்ணித் துறவெண்ணங் கொண்டார். உடனே பலருக்குத் தானம் முதலியன செய்தார். பெற்றோர்களின் அனுமதி பெற்றார். தேவர்கள் உலகைப்புரக்க இதுவே சமயம் என்றனர். பகவனும் அசோக மரத்தடியில் துறந்தருளினார்.

யெறிந்தார். இவைகளைத் தேவர்கள் பாற்கடலில் இட்டனர். முந்நூறு மன்னர்களும் இவ்வாறே துறவு பூண்டனர். பகவான் எண்ணுள் உண்ணுமை (உபவாசம்) நோற்றூர். தைத்திங்கள் தேய்பிறை பதினொன்றும் நாள் விசாக விண்மீனின் உதயகாலத்தில் சித்தபர மேட்டிகளை வணங்கித் துறந்தருளினர். அப்பொழுதே மனப்பர்யய அறிவையும் அடைந்தருளினர்.

### பார்சுவர் உணவு கொண்டமை

முனிவர்கட்கு ஆகாரதானம் அளித்தல் ஒரு தெய்விகமான கலையாகும். அதனை முறைப்படி நிறைவேற்றுதல் வேண்டும். இதனை இல்லற மக்கள் அனைவரும் நடைமுறையில் பயிலவேண்டும். இங்ஙனம் செயல் முறையில் மக்கட்கு விளக்கத் திருவுளங்கொண்டருளினர் பகவான். தமக்குப் பசியென்பது இல்லை. என்றாலும் அருளினால் செல்விருந்தாகி (சரியை மேற்கொண்டருளி) நாட்டிற்கு வந்தார். குல்மகேடபுரத்தரசன்[29] தன்யன் என்பார் முனிவரை எதிர்கொண்டழைத்தார். திருவடிகளில் மனம் மெய்ம்மொழி தூயராய்ப் பணிந்தெழுந்தார். திருவடிகட்குப் பூசனை செய்தார்; பின்னர் அருச்சனை செய்தார். பின் உயரிய, தூய ஆசனத்தில் அமர்ந்தருளும்படி வேண்டினர். பின்னர்த் தூய்மையான, குற்றங்களற்ற ஆகாரத்தைத் தன்யன் அவர் கைகளில் தந்தார். பகவானும் விருப்பு வெறுப்பு அற்றவராகி, கைகளில் வாங்கி உண்டருளினர். அப்பொழுதே தன்ய மன்னன் அரண்மனையில், பொன்மழை, பூமழை, மந்தமாருதம், தேவதுந்துபி, வெற்றி முழக்கம் முதலிய ஐந்து அதிசயங்கள் தேவர்களால் நிகழ்த்தப்பட்டன.

### காட்டில் கடுந்தவம்

பகவனும் பின்னர் அறவுரையாற்றியருளினர். அதன் பின்னர் மௌனத்தோடு காட்டை யடைந்தருளினர். அப்பொழுது உண்டாகிய சாதுர் மாதத்தில் கடுந்தவங்களைப் புரிந்தருளினர்.[30]

---

29. கோபகேடபுரம் என்றும் பாடம்.

30. பகவான் சென்று தவம் செய்த இடங்களையும், பெற்ற பெருஞ் சிறப்புக்களையும் விரிவாக எடுத்துக் கூறுகிறது. காதம்பரி என்ற காடு காலிகிரி என்னும் மலையடியில் உள்ளது. அங்கே வந்தருளிய பகவான் குந்தம் என்ற ஏரியில் தவம்புரியலானர். அவ்வேரியில் நீர்பருகவந்த மகீதரன் என்னும் யானை பகவனின் திருவுருவைக் கண்டவுடனே தன் முற்பிறப்பை நன்கு நினைவு கூரலாயிற்று. அவ் யானை முற்பிறப்பில் ஹேமலன் என்ற இல்லறத்தானுக வாழ்ந்தது. அவன் நண்பன் சுப்ரதிட்டன் என்பான். இவர்களிருவரும் சிராவக விரதத்தை ஏற்றுக்கொண்டனர். இவன் குட்டையுருவத்தைக் கண்டு ஏளனம் செய்தனர் மக்கள். ஆத்திரம் தாளாமல் தான் பெரிய உருவத்தை பெறவேண்டும் என நிதானம் செய்தான். அதன் பயனுக மலையைப் போன்ற யானையாக இப்பொழுது பிறந்துள்ளதை நினைத்தது. விலங்காயிருந்தபோதிலும் பகவனுக்கு மரியாதை (அஞ்சலி) செய்ய

பின்னர், துறவு மேற்கொண்டருளிய தலமாகிய அசுவவனத்தில் தேவதாரு மரத்தடியில் எழுந்தருளினர். தமக்குள், 'ஏழுநாள் வரையிலும் இடைவிடாமல் மலையினும் சலியாது தவம் புரிவேன்' என உறுதி பூண்டு நிற்கலானார்.

### சம்பரனின் போர்ச் செயல்

முற்சொல்லப்பட்ட சம்பரன், வானவீதியில் தன் விமானங் கொண்டு சென்றான். தனக்குப் பகைவனோ, கேவல அறிவு பெற்ற வாலறிவனோ, வாலறிவன் ஆலயமோ அவ்வழியில் நேருமாயின் தேவ விமானம் செல்லாது நிற்கும். அதுபோலவே இவன் விமானம் மேலே செல்லாமல் நிற்பதைக் கண்டான். விபங்க மதியால் (தீயறிவினால்)

---

விரும்பி, ஏரியில் உள்ள தாமரை மலர்களைப் பறித்து அவர் திருவடிகளில் வைத்து வணங்கியது. பல தேவர்கள் வந்து வணங்கினர். சம்பாவின் அரசன் கரகண்டு என்பவனிடம் இச் சிறப்புகளை முனிவர்கள் எடுத்துரைத்தனர். அவனும் பகவனுக் குச் சிறப்புகளைச் செய்தான். தேவர்குழாம் பகவனின் பிம்ப மொன்றை உருவாக்கியது. அவ்வரசன் அதைப் போற்றி வணங்கினான். அதைச் சுற்றிலும் ஒருகோயிலை உருவாக்கினான். அப்பிம்பம் ஆசைகளை (பிரார்த்தனைகளை) நிறைவேற்றவும், வருந்தீமைகளைத் தடுக்கவும் சத்தி பெற்றிருந்தது. குந்தநீர் மிகவும் புனித நீராயிற்று. காலிகிரி என்னும் மலையடிவாரத்தில் உள்ளமையினால் அதற்குக் காளிகுந்தம் என்னும் பெயர் உண்டாயிற்று. யானை அடக்கத்துடன் இறந்து விந்தைகள் பல புரியும் வியந்தர தேவன் ஆயிற்று. பார்சுவநாதர் பிறகு சிவபுரியை அடைந்தார். கௌசாம்பா என்ற காட்டில் படிமை யோகந்தாங்கியருளினார். தரணேந்திரன் (நாகர் தலைவன்) ஆங்குவந்து பகவனுக்குப் பெருஞ் சிறப்புகளைச் செய்தான். மூன்றுநாள்கள் இடைவிடாமல் அவர்மேல் குடை பிடித்தான். எனவே அவ்விடம் அஹிசத்ரா (பாம்புக்குடை) என அழைக்கப் படுகிறது. பகவான் பின்னர் இராஜபுரம் என்னும் ஊரை அடைந்தார். ஆங்கே, ஈசுவரன் என்ற மன்னன் பகவனைக் காணவந்தான். பகவனைப் பார்க்கையிலேயேதன் முற்பிறப்பை யுணர்ந்தான். அதனைத் தன் அமைச்சர்களுக்கு எடுத்துரைத்தான். பார்சுவநாதருக்குப் பலவிதச் சிறப்புகளைச் செய்தான். பகவான் மாயோகம் தாங்கிய இடத்தில் ஒரு பெரிய கோயிலை ஈசுவரன் கட்டுவித்தான். அதனுள் முனிவரின் (பகவனின்) பிம்பத்தை நிலைப்படுத்தினர். அக்கோயிலின் பெயர் குக்குடே சுவரா என்பதாகும். அன்றிலிருந்து அந்நகரமும் அவ்வாறே அழைக்கப்படுகிறது. பகவன் பல இடங்களிலும் விகசித்து வரலானார். இவரது விஹாரம் அறியாமை என்னும் பகைவன் எங் குள்ளான் என்பதைக் கண்டுபிடித்து ஒழிப்பதற்காகவேயாம்.

அசுரனாகிய மேகமாலின் இங்கேதான் அவரைக் கொடுமைப் படுத்தியதாகவும், பின்னர் தரணேந்திரனும் அவன் மனைவியும் ஆங்கு வந்து குடைபிடித்தும், இசை பாடியும் பகவனை மகிழ் வித்தனர் என்றும், பின்னர் மேகமாலின், தரணன் என்பவன் பகவனைப் பற்றிக்கூற மனந்திருந்தினான் எனவுங் கூறப்படுகிறது. பிறகு பகவான் காசியை யடைந்ததாகவும், ஆங்கே கேவல நிலையை யடைந்தருளியதாகவும் கூறப்படுகிறது.

பகவனைத் தன் பகைவனாகக் கருதினான். முன்பவப் பகையுணர்ச்சி மேலிட்டது. கதுமென நிமிர்ந்து சினங்கனன்று அவன் எரி விழித்தான். இடியுருமென அதிரவார்த்தான்; பயங்கரமாய்ப் பார்த்தான்; சூலம், கைவாள், சக்தி, வில், வேல், அம்பு, ஈட்டி, கதை, தோமரம் முதலிய படைகளால் துன்புறுத்தினான்; நெருப்பை மழையெனக் கொட்டினான்; கற்களை மாரியென வாரியடித்தான்; புதுவெள்ளம் போல நீரில் திக்கு முக்காடச் செய்தான். பூதம், பிசாசம், அரக்கர் முதலிய கொடியவர்களால் அவன் தொந்தரவுகளைச் செய்தான்: காட்டுயானை, சிங்கம், கரடி, புலி போன்ற காட்டுவிலங்குகளைப் பகவன் மேல் ஏவிவிட்டான். கோழியரவம், மகாநாகம், வேடன், சிம்மம் முதலிய தன் பழைய பிறப்புருவங்களைக் கொண்டு பல இன்னல்களைச் செய்தான். இவ்வாறு இடைவிடாமல் கோபங்கொண்டு ஏழுநாளும் அத்தேவன் உபசர்க்கங்களைச்(பீடைகளைச்) செய்தனன். பகவனும் சற்றும் சலிப்பின்றித் தவத்தில் முற்றும் மூழ்கினர்.

### தரணேந்திர பத்மாவதியரின் காவல்

தரணேந்திர பத்மாவதியரின் ஆசனம் அசைந்தது. ஓதியறிவினால் தமக்குத் தக்க காலத்தில் (பாம்புகளாய் இருந்தபோது) அறவுரை கொளுத்திய ஆசானுக்கு ஏற்படும் துன்பங்களைக் கண்டனர். தரணேந்திரன் பெரிய ஆயிரம் படங்களால் பகவனுடைய திருவுருவைக் கவித்தனன்.

பத்மாவதியாகிய தேவியும் தன் கணவன் போர்த்துள்ள படங்கள் மேல் வச்சிராதபதத்தினைக் கவித்தனள்.

### பார்சுவர் அருக பதவி அடைதல்

கமடனால் விடப்பட்ட படைகளெல்லாம் பகவனின் பெருமையினால் தன்வன்மையை இழந்து அவர் திருவடிகளில் மலர்களாய் விழுந்தன. கமடன் செய்த பெருந்துன்பங்களைப் பொறுத்து அருளினார். வாள் போன்ற வெண்சிந்தையினால் (சுக்லத்யானத்தினால்) காதி வினைகளை, சித்திரைத் திங்கள் தேய்பிறை பதினான்காம் நாள் விசாக விண்மீனில் விடியற் காலையில் வென்று, கடையில் நான்மையின் உருவமாகிய அருகபதவியை அடைந்தருளினர் (கேவலஞானம் அடைந்தார்).

### தேவர்களின் திருப்பணி

நால்வகைத் தேவர்களும் அக்கணமே தத்தம் சின்னங்களால் பகவனின் கேவலத்தன்மையை அறிந்தனர். உடனேவந்து அதற்குரிய மங்கலத் தொழிலை (பெருங்கல்யாண விபவத்தினை)ச் செய்து பகவனை அருகனை — கடையிலா நான்மை யடைந்தோனை — மனம் மெய்ம் மொழியார வாழ்த்தினர்; வணங்கினர்; போற்றினர்; புகழ்ந்தனர். பின்னர், சமவசரணம், ஸ்ரீவிஹாரம் முதலியவைகளைத் தேவர்கள் மிக விமரிசையாக அமைத்தனர். 1008 இதழ்களையுடைய பொற்றாமரை மலர்கள் நான்கினை கடல்மட்டத்திலிருந்து 5000 வில் உயரத்தில்

நிறுவினர். பகவான் மலர்மிசை ஏகினன். தர்மசக்ரமாம் அறவாழி யுடையவனானன்.[31] இவ்வாறு பல சிறப்புகளைச்செய்து அனைவரும் தத்தம் பணிகளைச் செய்யலாயினர்.

### சம்பரதேவன் அறவழி நிற்றல்

சம்பரதேவனும் பகவனது ஆற்றலைக் கண்டான்; தேவர்கள் இயற்றும் தெய்வச் சிறப்புகளைத் தரிசித்தான். முற்பிறப்பில் தன்னை அடிமைப் படுத்திய பகையினின்றும் விடுதலைப் பெற்றான். மனவமைதி யுடன் பகவன் பக்கலில் நல்லறவமிழ்தைப் பருகினான். நற்காட்சியினை யும், வதங்களையும் தலைமேற் கொண்டான்.

### மாதவர் திருவறம் கேட்டல்

எழுநூறு தாபதர்கள் அக்காட்டில் உளராயினர். அவர்கள் இந் நிகழ்ச்சிகளை நேரில்கண்டு, தாம் கொண்டிருந்த மூட நம்பிக்கைகளையும் கூடாவொழுக்கங்களையும் அறவே துறந்தனர். பகவனிடம் திருவறங் கேட்டு மாதவராயினர்.[32]

### பகவான் பார்சுவநாதரின் சிறப்புகள்

தரணேந்திரனும், அவன் தேவி பத்மாவதியும் இயக்க, இயக்கிக ளாயினர். பகவனுக்கு சுயம்பு முதலாகிய கணதரர் பதின்மர். பூர்வதரர் முநநூற்றைம்பதின்மர். சிட்சகர் (நூலறிவு நிரம்பியவர்) பத்தாயிரத்துத் தொள்ளாயிரவர். ஒதியறிவையுடைய முனிவரர் ஆயிரத்து நானூற்றுவர். கேவலிகள் ஆயிரவர். வைக்ரியிகரும் அத்துணையர். மனப்பர்யய அறிவினர் எழுநூற்றைம்பதின்மர். சொற்போரில் வல்ல மகாவாதிகள் அறுநூற்றுவர். ஆக முனிவரர் பதினாருயிரவர். சுலோசனை முதலாகிய ஆர்யாங்கனைகள் முப்பத் தாருயிரவர். சாவகர் நூருயிரவர். சாவகிகள் முந்நூறு ஆயிரவர். அமரர் தொகை கணக்கிலடங்காது. விலங்குகள் மிகவும் அதிகமான எண்ணிக்கையையுடையன.

### பார்சுவரர் பரிநிர்வாண மடைதல்

இங்ஙனம் பன்னிருகணங்கட்கும் அதிபதியாகிய பகவன்அறுபத்து ஒன்பது ஆண்டுகளும் எட்டு மாதங்களுமாகிய கேவலி காலமெல்லாம்

---

31. சமவசரணத்தின் விவரங்களை ஸ்ரீபுராணம் ஆதி புராணத் தில் (பக். 103-111) காண்க. மேருமந்தரபுராணம் சமவசரணச் சருக்கத்திலும் காணலாம்.

32. அச்வசேனன், வாமதேவியாகிய பகவனின் பெற்றோர், பிரபாவதி ஆகியோர் பகவனிடம் அறங்கேட்டனர். பார்சுவர், கங்கை, யமுனை நதிக்கரையில் தங்கி அறமழை பொழிந்தார். அசுவசேனர் முதலியவர் அவ்வறவுரைகளைக் கேட்டுத் துறந்தனர். ஆர்யதத்தன் முதலாகிய பதின்மர் துறந்து, தவம்புரிந்து கணதரர்களாயினர். ஆரியதத்தர் முதலாயினர் பிறகு பகவன் சமவசரணத்தில் அறமழை பொழியலாயினர்.

எல்லா அறமலி புரங்களிலும் (தர்ம நாடுகளிலும்) சமவசரணம், திருவிஹாரம் முதலாகிய சிறப்புக்களுடன் சென்று நல்லறமழை பொழிந்தருளினர். அமரரால் இயற்றப்பட்ட அனைத்துச் சிறப்பு களினின்றும் நீங்கியருளி, சம்மேதசிகரத்தில் எழுந்தருளினர். ஆங்கே ஒரு மாதம் படிமையோகந் தாங்கியருளினர். பிறகு யோகத்தையும் தவிர்த்து அயோகி பகவன் நிலைபெற்று அகாதிவினைகளை அழித்தருளி, முப்பத்தாறு முனிவரரொடுங்கூட, ஆவணித்திங்கள் வளர்பிறை ஏழாம் நாள் விசாக விண்மீனில் விடியற்காலையிலே என்றும் நின்று நிலவும் இன்பவுலகமாம் பெயர்ந்துவாரா வீடுபேற்றினை யடைந் தருளினர்.

'நச்சர வணிநிழல் பச்சைமா மலைதனை
நிச்சலு நினைப்பவர்க் கச்ச மில்லையே.'

—அருங்கலச்செப்பு, 181.

## பார்சுவநாதரின் முற்பிறப்பு விவரம்

| பிறப்பு | பெயர் | பிறந்த இடம் | தந்தை பெயர் | தாய் பெயர் | கமடன் நிலே | கமடன் பகையினுல் நிகழ்ந்தவை |
|---|---|---|---|---|---|---|
| 1 | மருபூதி என்ற புரோகிதன் | சுரம்ய நாடு பௌதன புரம் (பாடனு) | விசுவபூதி என்ற புரோகிதன் | அநுந்தரி | கமடன் தமையன் | கமடன் தன் தம்பி மருபூதியின் மனேவி வசுந்தரியுடன் தவருன ஒழுக்கங் கொள்ளுதல், அரசனுல் நாடு கடத்தப்படுதல், பாசத்தால் தமையனேக் காணச் சென்ற தம்பி மருபூதியைக் கல்லே வீசி எறிந்து கொல்லுதல், மருபூதி மயங்கிய சிந்தையுடன் இறத்தல். |
| 2 | வச்சிர கோடம் என்னும் யானே | குப்சகமலே (விந்தியமலே) சல்லகீவனம் | — | — | கோழிப் பாம்பு (குக்குட சர்ப்பம்) | மதங்கொண்டு திரிகின்ற யானே அரவிந்த முனிவரைக் கண்டு முன்பவ உணர்வைப் பெறுதல், அவரிடம் விரதங்களே ஏற்று நோற்றல், ஒருநாள் வேகவதியாற்றில் கால்கள் அழுந்த யானே நிற்றல், குக்குட சர்ப்பம் கடித்துக் கொல்லுதல், யானே முனிவின்றி உடலேவிடல். |
| 3 | சாசார கல்பத் தேவன் | பன்னிரண்டாவது கல்பம் | — | — | — | புகை நரகம் என்னும் ஐந்தாம் நரகில் உழலல், தாவர வர்க்கத்துள் பல பிறவிகளே எடுத்து உழலுதல். |
| 4 | இரச்மி வேகன் (கிரண வேகன்) | கீழ் விதேகத்தில் புட்கலாவதி | வித்யுத்கதி என்ற அரசன் | வித்யுந்மாலே (திலகாவதி) | மகா நாகம் | இமகிரி (வைதாத்தியமலே)யில் தவயோகந் தாங்கியிருந்த இரச்மிவேக முனிவரை மகா நாகம் விழுங்குதல். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | அச்யுதேந்திரன் (தேவன்) | அச்யுத கல்பம் (சம்பூத்ரு மாவர்த்தம்) | — | — | களறு நரகம் என்னும் நாலாம் நரகில் நாரகன், தாவரங்களாய்ப் பல காலம் உழலல் | — |
| 6 | வச்சிரநாபி என்னும் சக்கரவர்த்தி | மேல் விதேகத்தில் பத்மநாடு (சூபங்கரம்) அசுவபுரம் | வச்ரவீர்யன் | விசயை (இலக்குமி மதி) | குரங்கன் என்னும் வேடன் | சுகச்சவிசயாவில் தவயோகம் தாங்க வேடனால் துன்புறுத்தப்பட்டார். சமாதியில் தளர்வின்றி உடலைவிடல். |
| 7 | அகமிந்திரன் (இலளிதாங்கன்) | மத்யம மத்ய மத்து சுபத்ர விமானம் | — | — | ஆரிருள் நரகம் என்னும் ஏழாம் நரக நாரகன் | — |
| 8 | ஆனந்தன் (சுவர்ண பாகு சக்கரவர்த்தி) | கௌசல நாடு : அயோத்தி (சுரபுரம்) | வச்சிரபாகு | பிரபங்கரி (சுதர்சனை) | சிங்கம் | க்ஷீரவனத்தில் ஆதபயோகம் தாங்கும் முனிவருக்குத் தொல்லைகளைச் செய்ய முனிவரும் தீர்த்தங்க நாமப் பெரும் புண்ணியத்தோடு உடலைவிடுதல். |
| 9 | ஆனதேந்திரன் (தேவன்) | ஆனதகல்பம் (மகா பிரப விமானம்) | — | — | நரக விலங்கு கதிகளுள் உழலல் | — |

## பார்சுவநாத பகவான்
## (பத்தாம் பிறப்பு)

| 1 நாடு | 2 தந்தை | 3 தாய் | 4 கர்ப்பாவ தரணம் | 5 உயரம் | 6 ஆயுள் | 7 வர்ணம் | 8 பிறப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| காசி நாடு (வாரணசி) | விசுவசேன அரசன் (அஸ்வ சேனன்) | பிராம்மி (வாமதேவி) | வைகாசி தேய்பிறை 2ஆம் நாள் விசாக நட்சத்திரம் | ஒன்பது முழம் | நூறு வருடம் | பச்சை | தை-தேய் பிறை 11ஆம் நாள் விசாக நட்சத்திரம் |

| 9 பரிநிஷ்கிர மணம் | 10 கமடன் நிலை | 11 உணவு கொண்டது | 12 கேவலஞானம் | 13 யட்சர் (இயக்கர்) | 14 யட்சி (இயக்கி) | 15 கணதரர் முதலியோர் | 16 பரிநிர்வாணம் |
|---|---|---|---|---|---|---|---|
| தை-தேய் பிறை 11ஆம் நாள் விசாக நட்சத்திரம் | மகிபாலன் (கதன்) பகவானின் தாத்தா பின் சம்பர தேவன் (மேகமாலின் என்ற அசுரன்) | குல்மகேடபுர அரசன் தன்ய மன்னன் அரண்மனையில் | ஏழு நாளும் இடைவிடாது சம்பரதேவன் உபசர்க்கம் புரியலானன். சித்திரை தேய்பிறை 14ஆம் நாள் விசாக விண்மீனில் விடியற்காலை | தரணேந்திரன் | பத்மாவதி | சுயம்பு முதலிய பதின்மர் | சம்மேதசிகரத்தில் ஆவணித் திங்கள் வளர்பிறை ஏழாம் நாள் விசாக விண்மீனில் முத்தியடைந்தார் |

# அப்பாண்டை நாதர் பற்றிய ஒரு குறிப்பு*

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

குணபத்திரதேவர் : திண்டிவனம் தாலுகாவிலுள்ள செஞ்சியைச் சார்ந்த சித்தாமூர் மடத்துத் தலைவர்களாக முன்னமிருந்தவர்களுள் ஒருவர். இம் மடத்தைச் சார்ந்த முன்னோர்கள் வசித்துக் கொண்டிருந்த இடம் திருநறுங்குன்றமலை. இம் மலையில் அப்பாண்டை நாதர் என்று வழங்குகிற பார்சுவ தீர்த்தங்கராலயமொன் றுண்டு. கிழங்கு கல்லிய வேடனொருவன் அறியாமல் தனது கருவியால் கிழங்கு கல்லுகையில் இந்த ஸ்வாமியின் முழந்தாள் சிதைதலினால் அவனுடைய கண்கெட்டு, அறிவுற்று, 'அப்பனே, ஆண்டவனே' என்று பாடின மையால் இவர் இப்பெயர் பெற்றார் என்பர் அவ்வேடன் இத்தெய்வத் தின்மீது செய்யப்பட்டதாகிய 'திருநறுங்குன்றப் பதிகம்' என்ற ஒரு நூல் இப்பொழுதும் வழங்கி வருகின்றது.

இந்தக்குணபத்திர தேவர் ஆசிரியர் முனிபத்திர தேவர் என்பவர். இவர்தான் செஞ்சியரசனை அடுத்து அவனைத் தன்வயமாக்கிச் சித்தாமூரில் மடம் ஏற்படுத்திக் கொண்டனர். சூடாமணி 9 - வது தொகுதியில் கொடைமடச் செய்யுளில் கூறப்பட்ட கிருஷ்ணராயன் என்பவன் பெருமண்டூரைச் சார்ந்த செஞ்சியை ஒருகாலத்திலாண்ட கிருஷ்ணப்ப நாயக்கன் என்று சொல்லுகிறார்கள்.

---

*மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் 'பல்பொருள் அகராதி' என்னும் தலைப்பில் பல்வேறு வகைப்பட்ட நூற்குறிப்பகராதிகள், குறிப்புகள் முதலிய பல செய்திகள் குறித்து எழுதிவைத்துள்ளனர். அவற்றுள் சித்தாமூர்க் குணபத்திர தேவர், கிருஷ்ணராயர் என்பவர்களைப் பற்றிய குறிப்பே இங்குத் தரப்பட்டுள்ளது. இக் குறிப்பினால் பார்சுவ நாதருக்கு அப்பாண்டை நாதர் என்னும்பெயர்வந்தகாரணம் புலப்படுகிறது. மேலும், சூடாமணி நிகண்டினை யாத்த மண்டல புருடரை ஆதரித்த அரசர் பெயரும் புலனாகிறது. வரலாற்றுச் சிறப்புடைய இக்குறிப்புகளைக் கண்டு எழுதியுதவியவர் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்தின் கௌரவ அமைச்சர் புலவர் மு. கோ. இராமன் அவர்களாவர். ஏற்ற சமயத்தில இக் குறிப்புகளை எடுத்து அனுப்பிவைத்த அவர்களுக்கு மிக்க நன்றி.

—பதிப்பாசிரியர்

# பொருளகராதி

[எண் : பக்க எண்]


அக்கினிசர்மன் 162
அகமிந்திரன் ஆனந்தனைத் தோன்றல் 168
அங்கங்களுக்கு அழகு அவனைப் போற்றுதலே 32-33
அங்கபூர்வாங்க முதனூல் 76
அச்யுதகல்பம் 166
அச்யுதேந்திரன் வச்ரநாபியாய் வரல் 167
அச்வசேனன் 180
அசுரர் கின்னரர் முதலிய பல்கணத்தார் பணிதல் 14
அசுவசேனன் 171
அசுவபுரம் 167
அசுவ்வனம் 177
அடியார்க்குநல்லார் vi, 77
அணுவிரதங்கள் ஐந்து 165
அத்தத் திருநாள் 108
அதியப் பூங்கா 7-8
அந்தகர்க்கு வீட்டு நெறி அருளல் 119
அந்தியபகவான் 73
அநுந்தரி 161
அப்பர் சம்பந்தர்க்கு விழி கொடுத்த அப்பன் 77
அப்பர் பதிகம் 138
அப்பாண்டை நாதர் 66
அப்பாண்டை நாதர் அடி போற்றுதல் 3
அப்பாண்டை நாதர் உலா xxiv-xxxi, 1-38, 39
அப்பாண்டை நாதர் உலா நூல் குறிப்பிடும் துதிப்பிரபந்தங்கள் 118
அப்பாண்டை நாதர் உலாவின் ஏட்டுப் பிரதி 71
அப்பாண்டை நாதர் உலாவின் தனிச் சிறப்பு xxvii
அப்பாண்டை நாதர் திருமுன் 96
அப்பாண்டை நாதர் திருவுருவம் 96
அப்பாண்டை நாதர் தேரில் எழுந்தருளல் 8-9
அப்பாண்டை நாதர் பஞ்சகம் 143
அப்பாண்டை நாதர் பற்றிய ஒரு குறிப்பு 185
அப்பாண்டை நாதர் பாலம் 91
அப்பாண்டை நாதரின் தெய்வப் புகழ் 35-36
அம்புயத்தின்மேல் நடந்தோன் 73
அம்மையப்பர் 39
அய்யனார் வாழ்த்து 4-5
அயோத்தி 162, 168
அரசர் முதலியோரின் அறக்கட்டளை 105-106
அரவிந்த மன்னன் 162
அரவிந்த மன்னனின் துறவு 164
அரவிந்தன் 161
அரிட்டநேமி பகவன் 173
அரிவைப் பருவத்து அணங்கு 26-29
அரிவை வீணை மீட்டிப் பாடுதல் 28
அருகந்தன் உலாப் போந்தான் 37-38
அருகர் சிந்து 155
அருகர் புகழ் மாலை 118
அருகர் எண்குணங்கள் 73-74
அருகன் கழலின் வீறுபுகழ் 20
அருகன் காப்பு 1
அருகன் பக்கலிலே அரிவை சென்று தெளிந்து போற்றுதல் 29
அருகன் புகழைப் பேசுதல் 34-35
அருகனடியைப் புகழ்ந்து போற்றுதல் 35

அருகனை வணங்கி வாழ்த்துதல் 36-37
அருங்கலச் செப்பு 181
அருட்கடலை இறைஞ்சுதல் 21
அருணகிரி நாதர் ix
அருணாசலக் கவிராயர் 39
அவ்வினையம் 74
அவ்வை அறமொழி உணர்தல் 35
அவ்வை யொருத்தியின் வரவு 33
அவிநாசி உலா 39
அவிரோதிப் பிரபந்தத்தி 77
அவுணன் விடுசரந்தடுத்தது 120
அவையடக்கம் 3
அழகிய கூத்த தேசிகர் 39
அழகிய நம்பி உரை 40
அறுபத்து நாற்கலை 76
அனந்தகுணம் நான்கு 85
அனந்தவிசயர் xxvi, 1, 39, 72,
அனந்த விசயர் செய்த புதுமை xxv
அனந்தானுபக்திக்கோபம் 164
ஆசிரியர் அனந்த விசயர் வரலாறு xxiv-xxv
ஆசிரியர் பெயர் காணு உலா நூல்கள் 40
ஆட்டாணிகம் 170
ஆடவர் எழுபருவம் xx
ஆண்டாள் xxiii
ஆத்தான மண்டபம் 173
ஆதித்தர், அ. கு. 39
ஆதிபகவன் 73
ஆதிபுராணம் 171
ஆதிமுதல் 87
ஆதீனங்கள் i
ஆயத்தாரோடு அரிவை பாடுதல் 28
ஆயன் சிதைத்த மரம் 83
ஆயிரத்தெட்டு சுபலக்கணம் 78
ஆர்த்தச் சிந்தை 164
ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை x, 39
ஆறுமுகவன் 74
ஆனதேந்திரனின் அடுத்த பிறப்பு 171
ஆனந்தன் அறங்கேட்டல் 169
ஆனந்தன் ஆனதேந்திரன் ஆதல் 171
ஆனந்தனின் துறவு 170
இசக்கியம்மை 78
இசக்கியம்மை பதம் போற்றுதல் 5-6
இசைக்கருவிகளின் முழக்கம் 14-15
இசைமுழக்கம் 12
இடப்பெயரால் வழங்கும் உலாக்கள் xvi
இணைப்புகள் xxx-xxxi
இந்தியங்கள் ஐந்து 85
இந்திரவிமானத்து எழுந்தருளல் 12
இந்திரன் முதலாம் தேவர் பணிதல் 13-14
இமயம் சேர்ந்த காக்கை 75
இயற்பெயரொடு இயைந்த உலாக்கள் xvi
இரச்மிவேகன் 166
இரச்மிவேகன் அச்யுதேந்திரன் ஆதல் 166
இரட்டையர் ix, 39
இரத்தினபுர அரசன் 168
இரத்திஞவளி 168
இராசராச சோழன் உலா 39
இராசராசன் x
இராசிபன்னிரண்டு 9-10
இராஜபுரம் 178
இருபத்துநால்வர் xxix
இருபத்தேழு நட்சத்திரம் 8-9
இலக்கண விளக்கப் பாட்டியல் xv, xxiii
இலளிதாங்கன் 168
இளங்கோவடிகள் xi, 85
இறைவன் உலாக் காட்சி 12-17
ஈச்வரன் 178
ஈசானன் 88
ஈரைந்து அவதாரம் 83
ஈனமத்தோர் 82
உண்மை உலா 40
உத்தம மகளிர் xxii
உதயகுமரன் xi
உதயணன் xi-xii
உருத்திர கணிகையர் xxi-xxii

உலகசந்திர மாதவர் 167
உலகத் தமிழ் மாநாடு i
உலகெலாம் சார உரைப் போன் 86
உலா xvi
உலா இலக்கணம் xiv
உலா இலக்கியங்கள் 39
உலா இலக்கியத்திற்குரிய பாட்டு xv
உலா இலக்கியம்-பட்டியல் 39-40
உலா ஒரு புறத்திணை இலக்கியம் xv
உலாக் காணும் எழுபருவ மங்கையர் யாவர்? xxi-xxiv
உலாக்கூறு அமைந்த வேறு பிரபந்தங்கள் xv
உலாத் தலைமகன் xvii
உலாத் தலைவனுக்கு வயது வரம்பு xx-xxi
உலா நூல்கள் x
உலா நூல்களின் பெயர் வழக்கு xvi
உலாவியற் படலம் xiv
உலாவின் சிறப்புக் கூறுகள் xvii-xxiv
உலௌகாந்திக தேவர்கள் 176
ஊர்ப் பெயரொடு இயற்பெயரும் இணைந்த உலாக்கள் xvii
எண்குண இறைவன் கோயில் 74
எண்திசைத் தேவர்கள் 13-14
எதிர்கோள் படலம் xvi
எல்லப்ப பூபதி 39
எல்லாரும் போற்ற அருகந்தன் உலாப் போந்தான் 37-38
எழுபருவ மங்கையர் வயது xix
எழுபருவ மங்கையரின் அறிமுகம் xxvi
ஏகாம்பர நாதர் உலா 39
ஏழு கிழமை 11
ஏழு நாள் விழா v-vi
ஐந்தாங்கதி 82
ஐந்தாங் கல்யாணம் 82
ஐந்து அதிசயங்கள் 177
ஐந்நூற்றுக்கு மேற்பட்ட கண்ணி கொண்ட உலாக்கள் xxvii
ஐராவதம் 173
ஒட்டக்கூத்தர் x, 39
ஔவையார் xx
கடம்பர் கோயில் உலா 40
கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் xvi
கடவுளடி போற்றுதல் 15-16
கந்தசாமிப் புலவர் 39
கத்தப்பையர் 39
கபால மூர்த்திப் பிள்ளை 39
கம்பர் xiii-xiv
கம்பர் வாக்கு 76
கம்பராமாயணம் xiii-xiv
கமடன் 161-163
கமடன் எறிந்த கற்குன்று 119
கமடன் கோழிப்பாம்பாய் யானையை மாய்த்தல் 165
கமடன் மருபூதி தோற்றம் 161
கமடனின் தீயொழுக்கம் 162
கயத்தாற்றரசன் உலா 40
கரகண்டு 178
கரிகாற் பெருவளத்தான் 77
கருதலளவை ஆறு 77
கருவூர்த்தேவர் vii-viii
கல்வெட்டுகள் 98
கலம்பகம் xvi
கலைமகள் வாழ்த்து 3-4
கழங்காடுதல் 19-20
கழற்பாட்டு 20
களிறு தேவனுதல் 165
கற்பாந்தநாதன் 86
கனகசபை நாதன் உலா 39
காட்சியளவை மூன்று 77
காட்டில் கடுந்தவம் 177
காதம்பரி 177
காதல் xv
காந்தருவ திருமணம் 169
காமராசர் உலா 39
காமாதி வென்ற கடவுள் 80
காரைக்கால் அம்மையார் xxiii
காலவேகம் xi
காலிகிரி 177
காவியங்களில் உலாவியல் x
காளமேகப் புலவர் 39
காளமேகப் புலவர் பாட்டு 76

காளவன் 169
காளி உலா 40
காளி குந்தம் 178
கிரணவேகன் 166
கிருஷ்ணப்ப நாயக்கன் 185
கிருஷ்ணராயன் 185
கிழமை ஏழு 11
கிளியொடும் பூவையொடும்
கிளத்தல் 25
கீழ் விதேகம் 165
கீழ் வேளூர் உலா 40
கீழைப்பள்ளி 66
குக்குடசர்ப்பம் 165
குக்குடேசுவரா 178
குசஸ்தலம் 173
குடை கொடி ஆலவட்டம்
கொண்டு செல்லுதல் 15
குணபத்திர தேவர் 185
குணபத்திர முனிவர் 69, 102
குந்தம் 177
குந்தவைப் பேரேரி 67, 100
குப்சகம் 164
குபேரன் 167, 171
குரங்கவேடன் 167
குரங்கன் 171
குரங்கனின் சிங்கப் பிறப்பு 171
குராமரத்து நிழல் 75
குருபூசை i
குல்மகேடபுரம் 177
குலசை உலா 40
குலோத்துங்க சோழன் உலா 39
குலோத்துங்கன் x
குற்றம் பதினெட்டு 85
குன்றக்குடி சண்முகநாதர்
உலா 40
கூடற்கோமான் உலா ii
கெற்பதாரணம் 81
கேசாதிபாதம் 11
கேசாதிபாத வருணனே 26-27
கொடியேற்றல் v
கொண்டைநகர் வளம் 7
கோசலதேசம் 168
கோடீச்சுர உலா 39
கோபகேடபுரம் 177
கோபுர வாயில் 13
கோயிற்பணி புரிவார் 109
கோவலன்-கண்ணகி
திருமணம் iv
கோழிப் பாம்பு மலைப்பாம்
பாதல் 166
கௌசாம்பா 178
சக்கரவர்த்தி. ஜே. 155
சங்கர சோழன் உலா 40
சங்கர நயினார் கோயில்
சங்கரலிங்க உலா 40
சங்கராச்சாரியார் 39
சஞ்சீவி, ந. டாக்டர் xxxii
சண்பக லட்சுமி அம்மையார்,
டாக்டர் 66
சத்தியோசாதன் 81
சந்திரகாந்தன் 167
சந்திரநாதர் 66
சந்திரநாதர் திருக்கோயில் 95
சம்பந்த மாமுனிவர் 77
சம்பந்தர் பதிகம் 140
சம்பரதேவன் அறவழி நிற்றல் 180
சம்பரன் 178
சம்பரனின் போர்ச்செயல் 178
சம்பா 178
சம்பூத்ரு மாவர்த்தம் 166
சம்மேதசிகரம் 181
சமணர் பாழி 101
சமவசரணம் 180
சமாதி குப்த முனிவர் 166
சமுத்ர குப்த முனிவர் 170
சயநிதகர் xi
சர்வோதபத்ரம் 166
சரணப் பத்து 146
சரவணமுத்துப் புலவர் 39
சல்லகீவனம் 164
சன்னதி முகப்பு மண்டபம் 95
சாகர குருக்கள் 166
சாகரதத்தன் 164, 174
சாசனங்களில் திருநறுங்
கொண்டை 671
சாசனப் பாடல்கள் 70
சாத்தனூர் xi
சாமிநாதையர், உ. வே. டாக்டர்
xx-xxii, 185
சிங்கத்தின் மறுபிறப்பு 174

சித்தபரமேட்டிகள் 177
சித்தரசம் 75
சித்தாமூர் மடம் 71, 185
சிதம்பரப் பாட்டியல் xiv
சிலப்பதிகாரம் x
சிலேடை உலா xvii, 39
சிவக்கொழுந்து தேசிகர் 39
சிவந்தெழுந்தபல்லவராயன் உலா 39
சிவப்பிரகாச சுவாமிகள் 39
சிறப்பு ஊர்வலங்கள் i
சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி 41-65
சிறப்புப் பெயரும் விளக்கக் குறிப்புகளும் xxx
சிறுத்தொண்டன் உலா 40
சின்னசாமி நயினர், தச்சாம் பாடி xxxi
சின்னங்கள் எடுத்தல் 14
சினலயங்கள் xxv
சினேந்திரஞானத் திருப்புகழ் 157-158
சினேந்திரனின் சீர்ப்பவனி 25-26
சீவகசிந்தாமணி xiii
சீவகன் xiii, xxii
சுந்தரமூர்த்தி சுவாமிகள் viii
சுந்தரவடிவேலு, நெ. து. xxxii
சுப்பிரதிட்டன் 177
சுப்பிரமணியக் கவிராயர் 39
சுப்பிரமணியன் செட்டியார் 39
சுரகுரு 166
சுரம்ய நாடு 161
சுவர்ணபாகு 168, 169, 171
சுனைக்காட்சி 93
சூடாமணி நிகண்டு xviii, xxiv, 69
சூபங்கரம் 166
சூரிய வணக்கம் 170
சூளாமணி xiii
செஞ்சி 185
செண்டலங்காரன் 77
செண்டு 77
செப்பறை உலா 39
செயகோடணை 79
செயராமன், ந. வீ. 39
சேக்கிழார் ix
சேடியர் வினவும் பேரிளம் பெண்ணின் மறுமொழியும் 32
சேமங்கரகேவலிகள் 167
சேயூர் முருகன் உலா 39
சேரமான் பெருமாள் நாயனர் viii, xvii, 39
சேரன் செங்குட்டுவன் x
சேறைக் கவிராச பிள்ளை 39
சேனைத் தலைவர் உலா 40
சோதிடர் ஐவர் 79-80
சோழன் உலா iii
சௌதர்ம கல்பம் 173
சௌதர்மேந்திரன் 173
ஞான உலா 39, 40
ஞானவிநோதன் உலா 39
தசரதமன்னர் திருக்குமாரர் xiv
தசாங்கப்பகுதி xvii
தசாங்கப் பத்து xv
தசாங்கம் xviii, xxvi,
தஞ்சைப் பெருவுடையார் உலா 39
தத்துவராயர் 39
தத்தைக் கரத்தி 77
தமிழ் இலக்கிய வரலாறு viii
தமிழாய்வு xxxvii
தர்மசக்கரம் 73
தரணேந்திர பத்மாவதியரின் காவல் 179
தரணேந்திரன் 175, 178
தருமை ஞானசம்பந்த சாமி உலா 40
தலைப்புகள் xxviii
தளிப்பெண்டுகள் xxi-xxii
தற்புருடன் 82
தன்யன் 177
தாரணி 161
திங்கள் பன்னிரண்டு 10-11
திசைத்தேவர்கள் 13-14
திண்டிவனம் தாலுகா 185
திரிகூடராசப்பக் கவிராயர் 39
திரிசிரகிர உலா 40
திரிலோகோத்தமம் 166
திருக்கடவூர் உலா 39
திருக்கயிலாய ஞானஉலா ix, 39
திருக்கழுக்குன்றத்து உலா 40
திருக்காளத்திநாதர் உலா 39

திருக்குவளை தியாகராசசாமி உலா 40
திருக்குற்றாலநாதர் உலா 39
திருக்குற்றாலநாதர் உலா முகவுரை xx
திருக்கோயில் திருப்பணி 68,105
திருக்கோயிலின் பழமை 98
திருச்சிறப் புலியூர் உலா 40
திருச்செந்தூர் உலா 40
திருஞான சம்பந்தர் vii,x
திருத்தசாங்கம் xviii
திருத்தணிகை உலா 39
திருத்தாண்டகம் vii
திருத்திபை iii
திருநறுங்குன்றமலை 185
திருநறுங்கொண்டை 66, 99
திருநறுங்கொண்டை அப்பாண்டைநாதர் உலா 1-38
திருநறுங்கொண்டை-அடுத்துள்ள ஊர்கள் 109-110
திருறுநங்கொண்டை ஊர்சூழ் ஏரிகள் 90
திருநறுங்கொண்டை ஊரின் இருப்பிடம் 89
திருநறுங்கொண்டை ஊரின் நிலைமை 89
திருநறுங்கொண்டைக் கல்வெட்டுகள் 66-69
திருநறுங்கொண்டைச் சாலைகளின் தன்மை 89
திருநறுங்கொண்டை சைனர் திருத்தலம் 91
திருநறுங்கொண்டைத் திருத்தலவரலாறு xxx, 89-120
திருநறுங்கொண்டைத் தோத்திரமாலை xxxi 136-160
திருநறுங்கொண்டைமலை 92
திருநறுங்கொண்டைமலைப் பதிகம் 136
திருநறுங்கொண்டையைச் சூழ்ந்த சிலையங்கள் 6
திருநறுங்கொண்டையைத் தொழுது பேறு பெற்றூர் 118-119
திருநறுங்கொண்டையைப்பற்றிய தமிழ் நூல்கள் 117
திருநறுங்கொண்டை வரலாற்றுச் சின்னம் 91
திருநறுங்கொண்டை வழிக் காட்சிகள் 90
திருநறுங்கொண்டை வேறுபெயர்கள் 100
திருநாவுக்கரசர் vii
திருப்பருத்திக் குன்றில் குரா 75
திருப்பனந்தாள் உலா 39
திருப்பிடவூர் viii
திருப்புத்தூர் உலா 40
திருப்பூவண நாதர் உலா 39
திருமண ஊர்வலம் i
திருமலையின் அடிவாரம் 93
திருமுழுக்கு 172
திருமுறைப் பாடல்களில் திருவீதி உலா vii-viii
திருமேற்றிசை 111-112
திருமேற்றிசை அந்தாதி xxxi, 115, 121-135
திருமேற்றிசை யந்தாதி-பாட்டு முதற் குறிப்பு அகராதி 134-135
திருமேற்றிசையார் திருப்புகழ் 115-116
திருமேனி வருணனை 11
திருவடிப் போற்று 2-3
திருவாசகம் xviii
திருவாரூர் உலா 40
திருவாரூர்ப் பதிகம் vii
திருவிசைப்பா vii
திருவிடைமருநூர் உலா 40
திருவிலஞ்சி முருகன் உலா 40
திருவிழா ஊர்வலம் i
திருவுலாப்புறம் ix
திருவுலாமாலை x
திருவெங்கை உலா 39
திருவேங்கட உலா 40
திருவெம்பாவை 81
திரைலோக்கி சுந்தரம் viii
தில்லை உலா 40
திலகம் 166
திலகாவதி 166
திவ்விய வாக்கீசன் 86
திவாகரம் xviii

தீபங்குடிப் பத்து 111
'தீபை' என்பது எது? 114
தீபையுள் மேற்றிசை 113
தீர்த்தங்கரர் xxviii-xxix
தீர்த்தமாடுதல் vi
தூது xv
தெல்வமகளிரை ஒத்த பேரழகி 27
தெய்வ வுலாக் கண்டு மகிழ்தல் 20-21
தெரிவைப் பருவத்தாள் 29-32
தெரிவைப் பருவத்தாளின் பண்பு நலம் 29-30
தெரிவைப் பெண்ணின் உருவ நலம் 30
தெரிவை வணங்கிப் போற்றுதல் 31-32
தென் தில்லை உலா 39
தேர்த் திருவிழா vii
தேர்மேல் திசை விளங்கத் தோன்றுதல் 13
தேரெதிரே சென்று தெரிவை வணங்கிப் போற்றுதல் 31-32
தேவகுமார், ச. xxxii
தேவர்களின் திருப்பணி 179
தேவர்களின் பணிவிடை 171
தேவராஜ முனிவர் 157
தேவன் இரச்மிவேகனுய்ப் பிறத்தல் 165
தேவாதிதேவன் திருப்புகழ் 1
தேவை உலா 40
தொண்டை வளநாடு xxv
தொல்காப்பிய வுரை xxi
தோத்திரமாலை முதற் குறிப்பு அகராதி 159-160
நகர்வலங் கண்டது xii-xiii
நச்சினார்க்கினியர் vi, ix, xxi-xxii
நச்சுவினை வென்ற நாயகன் 78
நட்சத்திரப்பெயர் முதலியன xxv
நட்சத்திரம் இருபத்தேழு 8-9
நடுத்தீர்வை உலா 40
நந்தீசுவர திவசப் பெரும் பூசனை 169
நந்தை 169
நம்பியாண்டார் நம்பி x, 39
நயம் ஏழு 81
நரவர்மன் 173
நல்லறம் இதழ் 72
நவநிதி 87
நவநீதப் பாட்டியல் xviii-xix
நற்காட்சி 87
நறுங்கொண்டை அருகன் பாதம் பணிதல் 1
நாககுமார காவியம் xiii
நாகமிதுனங்கள் 175
நாதரின் திருமேனி வருணனை 11
நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் 39
நாரீசன் 85
நாவலந் தீவு 161, 165, 167, 168
நீர்மடவார் முதலியோர் 87
நீர்வளமும் நிலவளமும் 8
நூல் வரலாறு பற்றிய ஒரு குறிப்பு 72
நூலின் அமைப்பு xxvii
நூலின் நடைநலம் xxix-xxx
நூலின் பொருட் சுருக்கம் xxv-xxvi
நூலுள் எழு பருவப் பிரிவு xxvii
நூற்பயன் 38
நெல்லை வேலவர் உலா 39
பகவான் பார்சுவநாதர் அவதாரம் 172
பகவான் பார்சுவநாதர் துறவு பூணல் 176
பகவான் பார்சுவநாதர் வரலாறு 161-184
பகவான் பார்சுவநாதரின் சிறப்புகள் 179
பகவானுக்குச் செய்த சிறப்புகள் 172
பச்சைமாமலை 181
பஞ்சகல்யாணம் xxix
பஞ்சகல்யாண வைபவம் 74
பஞ்சமித்தர் 87
பட்டணப் பிரவேசம் i
படிக்காசுப் புலவர் 39
படிமைமாயோகம் 166
பண்டாரக் கவிராயர் 40
பண்டை நூல்களில் அருகன் புகழ்மாலை 118

பணவரங்கப் பத்து 149
பத்கதேசம் 167
பத்திநோக்கு xxviii
பத்மநாடு 167
பத்மா 169
பத்மாவதி 166, 175
பத்மோத்தரா 169
பதிப்பு வளர்ச்சி xxxii
பதினெட்டு பாஷை 81
பதினொராந் திருமுறை x
பமாணம் 82
பரத்தையர் வீதி xxiii
பரதகண்டம் 161, 168
பரமன் உலாக் காண்டல் 30-31
பரமனருளால் பவனி வரும் காட்சி காண்டல் 22-23
பரராசசேகரன் உலா 40
பராபரன் 83
பல்கணத்தார் 14
பல்லக்கு சேவை 13
பல்பொருள் அகராதி 185
பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் 40
பவ்வியசெனம் 82
பவனிக் காதல் xv
பவனி வரும் காட்சி காண்டல் 22-23
பழமொழி 82-83
பளிங்குமாடத்தை அணுகிய பாவை பரமன் உலாக் காண்டல் 30-31
பன்னிரண்டு இராசி 9-10
பன்னிரு திங்கள் 10-11
பன்னிரு பாட்டியல் xiv, xviii-xx
பாகம் பெண்ணுடையார் பரம ராவரோ? 35
பாடண 161
பாடாண் பகுதி xvi
பார்ச்வா 174
பார்சுவ தீர்த்தங்கர ராலயம் 185
பார்சுவநாத சரிதம் 161
பார்சுவநாத பகவான் பத்தாம் பிறப்பு 184
பார்சுவநாதர் 93
பார்சுவநாதர் சன்னிதி வழி 95
பார்சுவநாதர் பரிநிர்வாண மடைதல் 180-181
பார்சுவநாதர் வரலாறு xxxi
பார்சுவநாதர் வாழ்க்கையும் கதைகளும் 161
பார்சுவநாதரின் முற்பிறப்பு விவரம் 182-182
பார்சுவ பகவான் 173
பார்சுவர் அருகபதவி அடைதல் 179
பார்சுவர் உணவு கொண்டமை 177
பாரீசநாதர் சரணப் பதிகம் 143
பாவதேவசூரி 161, 165
பாழியிலாழ்வார் 67
பிங்கலம் xviii
பிச்சுவையர், சிலேடைப் புலி 40
பிரசேனஜித்து 174
பிரபந்தத் திரட்டு xv
பிரபந்த தீபிகை xv
பிரபாவதி 174, 180
பிரபாவதி—பார்சுவர் திருமணம் 174
பிராம்மி 171
பிராம்மி அரசி கண்ட கனவு 172
பிள்ளைத்தமிழ் xvi
பின்னெழு நிலை xviii-xix
புட்கரத்வீபம் 166
புட்கலாவதீ 165
புதுவை உலா 40
புராணத் திருமலைநாதர் 40
புறத்திணைப் பாடாண் பகுதி xvi
பூமிதனிற் சென்னியுறப் போற்றுதல் 75
பூர்ணசந்திர நயினர் 164
பெதும்பைப் பருவ அருமை xx
பெதும்பைப் பருவப் பாவை 19-21
பெதும்பைப் புலி xx
பெதும்பையர் கழங்காடல் மறத்தல் 21
பெருக்கிய ஆருறு 83
பெருங்கதை xi, xxii, xxiii

பெருந்தொகை 111
பெரும்பள்ளி 101
பெரும்பூசனைகள் 170
பெருமாள், ஆறையூர் 67
பெருமானின் திருவுருவ வண்ணம் xxix
பேதைப் பருவப் பெண் 17-19
பேதை முதலியோரின் விளையாட்டுகள் xxvii
பேராசிரியர் xvi
பேரிளம் பெண் 32-38
பேரிளம்பெண் ஐயம் வினவித் தெளிதல் 33
பேரிளம் பெண்ணின் மறுமொழி 32-37
பேரிளம்பெண் வந்து பெருமானைப் பணிதல் 32
பேரூர் உலா 39
பொருளகராதி xxxi, 186
போற்றிமாலை 15, 97
பௌதனபுரம் 161
மகளிர் உலாக் காண்டல் 17
மகளிர் நீராடல் 30
மகாசாத்தய்யா கட்டளைக் கலித்துறை 155
மகாசாத்தய்யா பதிகம் 151
மகாபிரப விமானதேவன் 171
மகீதரன் 177
மகீபாலபுரம் 174
மகீபாலன் 175
மகீபாலன் - பார்சுவர் சந்திப்பு 175
மகீபாலன் மறுபிறப்பு 176
மங்கல ஊர்வலம் iv
மங்கல வாழ்த்து 37
மங்கல வாழ்த்துப் பாடல் iv
மங்கைப் பருவ நல்லாள் 21-23
மங்கையர் எழு பருவநிலை xx
மங்கையர் பந்தடித்தல் 22
மங்கையர் விளையாடல்கள் xix
மங்கையரின் மங்கல வாழ்த்து 37
மடந்தை 23-26
மடல் xv
மடவார் அருகன் தேரெதிரே வந்து வணங்கி வாழ்த்துதல் 36-37
மடவார் வந்து திரளுதல் 16-17
மண்டல புருடர், வீரை xxiv, 69
மணிமேகலை xi
மணிவாசகர் xviii
மணிவாசகர் நூலகம், சிதம்பரம் 39
மதுரைச் சொக்கநாதர் உலா 40
மதுரைத் திருவிழா iv-v
மந்திரப் பத்து 147
மயிலத்து உலா 40
மயூரகிரி உலா 39
மருங்காபுரி உலா 40
மருந்து 81
மருபூதி 83, 161-163
மருபூதி கலைபயிலல் 162
மருபூதி புரோகிதனாதல் 163
மருபூதியின் மறைவும் மறுபிறப்பும் 163
மல்லிநாதன், ஸி. எஸ். 111
மலைக்கோயிலின் அமைப்பு 92
மலைப்பாம்பு குரங்க வேடனாதல் 167
மலையும் சுனையும் நதியும் 7
மவுரிஸ் புளூம்பீல்டு 161
மன்னர் பவனி ii
மன்னரும் மாமுனிவரும் இறைஞ்சுதல் 14
மாசத்தனார் viii
மாடத்தின் மேலிருந்து மகளிர் உலாக் காண்டல் 17
மாதவர் திருவறம் கேட்டல் 180
மாமுனிவர் பாதம் இறைஞ்சுதல் 6
மாரதி 174
மீனாட்சிசுந்தரம் பிள்ளை 40
முக்குடை 71, 73
முக்குடைத் தாபனம் 69
முகவுரை i-xxxii
முத்தமிழ் xxv
முத்தொள்ளாயிரத்தில் உலாக் காட்சிகள் ii-iv
முதல் உலா இலக்கியம் viii
முப்பன் தொட்டி உலா 40

முப்பொருள் 84-85
முப்பொருளில் முதற்பொருள் 33-34
மும்மணிகள் 165
மும்முனிவர் 75
முற்றறிவு 85-86
முன்னிலை xviii
முன்னிலைப் பகுதி xvii, xxvi
முன்னிலைப் பரவல் 158
முனிபத்திரதேவர் 185
முனிவர் தங்கள் கோன் 86
மூலப்படியும் பிறவும் xxxi
மூவருலா x
மூவா முதலான பிண்டிப் பொருள் 80
மூவொளி 80
மூன்றுலகும் பெற்றளித்தோன் 74
மேகமாலின் 178
மேருமந்தர புராணம் 164
மேல்சித்தாமூர் ஜைனமடம் 71, 72
மேல்விதேகம் 165, 167
மேலிற்பள்ளி 66
வச்சிரகோடம் 164
வச்சிரகோடம் விரதம்பூணல் 165
வச்சிரகோடன் 83
வச்சிரநாபன் 167, 168
வச்சிர நாபி 83, 167
வச்சிர நாபி அகமிந்திரன் ஆதல் 167
வச்சிரவீர்யன் 167
வசுந்தரி 161
வடபாழியான் 96
வரதராசனர், மு. டாக்டர் viii
வரதன் இரதத்தில் வந்து அரிவையின் எதிர்ப்படுதல் 28
வருகைக் கட்டியம் 12
வருணை 161
வரையறுத்த பாட்டியல் 77
வழிபடுமுறை 97
வள்ளுவ முதுமகன் பறை அறைதல் vi
வாக்தேவி xxvi
வாசவதத்தை xi-xii
வாட்போக்கிநாதர்உலா 39
வாமதேவி 171, 180
வாமன் 81
வாரணசி 171, 173
வானவர்கோன் வணங்குதல் 15
விக்கிரமசோழ மலையமான் 69
விக்கிரமசோழன் உலா 39
விக்கிரமன் x
விக்கினவிநாயகன் 75
விசயா 167
விசாகவிண்மீன் 172
விசுவசேனன் 171-172
விசுவபூதி 161
வித்யுத்கதி 166
வித்யுந்மாலை 166
விந்தியமலை 164
விபுலமதி 169
விமலை 176
வியந்தரதேவன் 178
விருத்தாசல உலா 40
விருந்து இலக்கியம் xvi
விழாவெடுத்தல் vi
விளக்கக் குறிப்பு மேற்கோள் நூல்கள் 88
விளக்கக் குறிப்புகள் 73-88
விளக்கிற் புகையொழுங்கு 75
வினவுரையாக அருகன் புகழைப் பேசுதல் 34-35
வினைசெற்ற அருகனே மேலாம் முதல்வன் 34
வீணை மீட்டிப் பாடுதல் 28
வீதராகன் 75
வீதியுலாவரும் வழக்கம் vi
வீரசங்க அறிஞர் தொண்டு 104
வீரசங்கப் பிரதிஷ்டாசாரியார் 69
வீரசங்கப் புலவர் பெருமை 103
வீரசங்கம் 69, 101
வீரராகவ முதலியார், அந்தகக்கவி 40
வீரை மண்டல புருடர் xxiv, 69
வெண்பாப் பாட்டியல் xiv-xviii
வெளிச்சுற்றுலை 94
வெறிமங்கைபாகக் கவிராயர் 40

வேகவதியாறு 165
வேங்கடசாமி, சீனி, மயிலை 72
வேதசந்தம் 73
வேதநாயக சாஸ்திரி,
 சுவிசேடக் கவிராயர் 40
வேலையதேசிகர் 40
வைகாசித் திருவிழா 68
வைகாசிப் பெருவிழா 107
வைகைத் திருமலை 74
வைதாத்யமலை 166
ஜிநன் 78
ஜெகந்நாதராம் 170
ஸ்ரீபால், டி. எஸ். xxxi, 71, 72
ஸ்ரீபுராணம் 161
ஸ்ரீஹரி 127
ஹேமலன் 177

## பார்சுவநாதர் வரலாற்றுப் பாடல்கள்

1. நிலவுல கெழுந்த நீதியின் அளித்த
அலகில் பெருங்குணத் தாதி இடபன்
விசய வீரன் அசிதபட் டாரகன்
அம்பவழ மேனிச் சம்பவ நாதன்
அரத்தகு சேவடி அபினந் தனனும்
உரைத்தகு மேனி யுத்தம சரீரன்
தொலையா வாய்மைச் சுமதிபட் டாரகன்
பரம மூர்த்தி பத்மப் பிரபனும்
ஏர்பெறு காட்சி சுபாரிச நாதன்
சந்திர வீறொளி சந்திரப் பிரபன்
புரையறு தவத்துப் புட்ப தந்தன்
சிங்க மேந்தணைச் சீதள நாதன்
திருமறு மார்பின் திகழ்சிரே யாம்சன்
மலர்மிசை நடந்த வாசுபூச் சியனும்
மேவல் மேனி விமலபட் டாரகன்
அருள்நெறி அளித்த அனந்த சித்தன்
தருமலை யுடைய தன்மபட் டாரகன்
தவநெறி அளித்த சாந்திபட் டாரகன்
கொந்தார் மலர்மழை குந்துபட் டாரகன்
அந்தர வினையின் அரபட் டாரகன்
தொல்லைவினை கெடுத்த மல்லிபட் டாரகன்
முகடுபெற உயர்ந்த முனிசுவ் விரதன்
அரிட்ட நெறியின் நமிபட் டாரகன்
அட்டவினை கெடுத்த அரிட்ட நேமி
பட்ட வினைப்பகல் பாரிச நாதன்
சிட்டர்கள் ஏத்தும் சிரீவர்த்த மானன்
என்றிவ ரோரிரு பத்துநால் வரையும்
நாளும் நாளும் நலம்புகழ்ந் தேத்துதும்
மீளா உலகம் வேண்டுதற் பொருட்டே.

—திருப்பாமாலை

2. பச்சை மணிவடிவாய்ப் பாரில்விசுவ சேனனகம்
மெச்சு மகவாய் வெளிவந்த—உச்சிதரும்
பாரிச நாதன் பதநினைந் தோர் வாழ்வரே
சீரிசை நூ லின்பம் சிறந்து.

—தனிப்பாடல்

3\. அற்புத வாயு சதவருடம் முழம் ஒன்பதுயர்
வெற்புயனுக்கிர குலவிசுவசேநன் பிராம்மிசுதன்
உற்பித்ததையிரு ளேகாதசிதிதி பச்சை வண்ணன்
நற்குணன் பார்சுவ நாதன் விசாகத்து நாள்வந்ததே.

—சதுர்வம்சதி தீர்த்தங்கரர்கள் அந்தாதி, 24.

4\. வாரணங்கள் கூவ வரிவண் டிசைபாடப்
பேரிகையும் சங்கும் பிறதூரியம் முழங்கத்
தாரணியும் பிண்டிநிழல் தாமரையின் மீதிருந்த
வீரியனுர் பாடலோ வீதிதொறுங் கேட்டிலேயோ?
காரிகையாய்! நீஇன்னம் கண்கள் விழித்திலேயோ?
பாரீச பட்டர்மேற் பாசமும் இத்தனையோ?
மாரனொடு காலனைமுன் வாராம லேகாய்ந்த
ஈரேழ் புவிக்கிறையைப் பாடேலோ ரெம்பாவாய்!

—திருவெம்பாவை, 9.

5\. திருமழை பொழிந்திடும் கரியமுகில் தங்கிய
திருநாதர் குன்றில் வாழும்
செல்வமிகு காசிபுரி தன்னிலுறை விசுவ
சேனன் மகிழு மபிராமி புதல்வா!
மருவியிரு வினையின்வச முயிர்க்கரிகள் பவகடலில்
துயர்முதலை யெயிற ழுந்தி,
வானவர்க் கிறைவனே, மாமுனித் தலைவனே,
வானுற நிமிர்ந்த மாலே,
கருமகடல் சுவறகடை கடவுள்கண நாதனே,
கைவலச் செல்வி வரனே,
கராவினுற் செய்ததுயர் தீர்வருள் பாரீச
நாதனே என்று கூறத்
தருமசக் கரமசே தனஞ்செவிய லாதிருந்
ததன் தலை துணித்தி ருக்கத்
தருமமா யென்மீதில் வருமமர பரமகதி
தந்தருள் கால மிதுவே.

—திருநாதர் குன்றத்துப் பதிகம், 23.

5\. 'திருநாதர் குன்றத்துப் பதிகம்' — 'நல்லறம்' - திங்கள் இதழில் (மலர் 3, இதழ் 11, 12) வெளிவந்துள்ளது (1960).

*மதிப்புரை*

# நாக குமார காவியம்

[*பதிப்பாசிரியர்: வித்துவான் மு. சண்முகம் பிள்ளை, வெளியீடு: சென்னைப் பல்கலைக் கழகம் (தமிழ்த்துறை), சென்னை - 5. விலை ரூ.* 5.]

*பழைய தமிழ்க் காவியங்களில் பெருங்கதை, சீவக சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, மேருமந்தர புராணம், யசோதா காவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம், சாந்தி புராணம் முதலானவை சைன சமயக் கொள்கைகளை உலகிற்குப் பிரசாரம் செய்ய எழுந்தவை. இவற்றுள் நாககுமார காவியமும் ஒன்றாகும். பெருங் கதை, சிந்தாமணி, சூளாமணி ஆகியவை பெருங்காவியம் எனப் போற்றப் பெற்றவை. மற்றவை நடைச் சிறப்பும் பொருட் பொலிவும் ஒருங்கே அமைந்தவையல்ல; சமயக் கொள்கைகளைச் சாற்றும் கருத் துடன் தோன்றியவை. தமிழில் ஐம்பெருங் காவியம் என்னும் வழக்கு நன்னூலுக்கு முதன்முதலாக உரை இயற்றியவராகிய மயிலை நாதர் காலத்துக்கு முன்பிருந்தே* (14*ஆம் நூற்றாண்டு) வழங்கி வருகிறது. அதுபோலவே பிற்காலத்தில் ஐஞ்சிறு காவியம் என்னும் வழக்கும் ஏற்படலாயிற்று. இவ்வைந்துள் ஒன்றாகக் கருதப்படுவது நாககுமார காவியமாகும். இது முதன்முதலாக இப்பொழுதுதான் அச்சேறி வெளிவருகின்றது. இக்காவியத்தின் ஏட்டுப் பிரதியை உதவியவர் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தச்சாம்பாடி கிராமவாசியும், சைனசமயத்தவரும் அச்சமய நூல்களில் நல்ல தேர்ச்சியுடையவரும் ஆகிய திரு. ஜெ. சின்னசாமி நயினார் என்பவர். இது பதிப்புரையி லிருந்து தெரியவருகின்றது.*

*நாககுமார காவியம் இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. இது ஐந்து சருக்கங்களும்* 170 *பாடல்களும் கொண்டது. வடமொழியி லுள்ள நாககுமார காவியத்தைப் போலவே இதன் சருக்கங்களின் பெயர்களும் முதல், இரண்டு, மூன்று என எண்ணுப் பெயரால் வழங்கப்பெற்றுள்ளது. பெரும்பாலும விருத்தப்பாக்களே இதில் பயின்று வந்துள்ளன. இக் காவியத்திற்கு 'நாக பஞ்சமி கதை' என்றும் பெயர் உண்டு. வடமொழியில் இதனை இயற்றிய மல்லிசேனர் இப்பெயரை இக்காவியத்திற்குப் பெயராகக் குறிப்பிடுகிறார். சிரேணிக மகாராசன் தன் சுற்றத்தோடு விபுலமலையிலுள்ள சமவ சரணத்திற்குச் சென்று அங்கிருந்த கௌதம முனிவரை வணங்கித் தருமம் கேட்டபின், அவரிடமிருந்து பஞ்சமி கதையைக் கேட்டறிந்தான். அந்த முனிவர் வாக்காகவே இக்காவியக் கதை அமைந்திக்கிறது. நாக குமாரனின் வீரதீரச் செயல்கள், காதல், களியாட்டங்கள், முற்பிறப்பின் வரலாறு, பஞ்சமி விரத நோன்பு, அதன் பயன், துறவு நிலை ஆகியவை இக்கதையில் இடம் பெற்றுள்ளன. சினாலயங்களுக்குச் சென்று வழிபடுதல் முனிவர்களைத் தொழுது தர்மம் கேட்டல், அருக தேவரை உள்ளம் உருகத் துதித்தல் போன்ற சைன சமயக் கொள்கை களையும் இக்காவியம் விவரிக்கிறது. இவை யாவும் பதிப்பாசிரியரால் பதிப்புரையில் விளக்கப் பெற்றுள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண் டுக்கு முன்னரே இக்காவியம் தோன்றியிருத்தல் கூடும் என்பதற்குச் சான்றுகள் தரப்பெற்றுள்ளன.*

*இதுகாறும் அச்சியற்றப்பெற்று வெளி வராத ஒரு பழைய தமிழ்க் காவியததை வெளியிட வேண்டும் என்னும் ஆர்வத்தோடு உழைத்து வெற்றி கண்டுள்ள இதன் பதிப்பாசிரியருக்குத் தமிழகம் கடப்பாடு டையது என்பது ஒருதலை. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை செய்துவரும் இத்தகைய தமிழ்ப்பணி போற்றுதற்குரியது.*

—*பேராசிரியர் எஸ். வி. வரதராஜ ஐயங்கார்,*
(*தினமணி சுடர், அனுபந்தம்*—15. 9. 1974)

*A Review*

# NAGAKUMARA STORY

Nagakumara Kavyam, Edited by M. Shanmukham Pillai,
Lecturer in Tamil, Tirukkural Endowment Research Centre,
University of Madras.

The Tamil Research Department of the University of Madras has published Nagakumara Kavyam, an important Kavya not so far published. Its Editor, M. Shanmukham Pillai, has added a detailed preface containing significant facts and figures. Notes about important names appearing in the kavya and a note mentioning other works which deal with the story of Nagakumara. It is well known that ancient Tamil literature consisted not only of Pathupattu, Ettuthogai, pathinenkizhkannakku but also five major kavyas and five minor kavyas. Of the five kavyas which are all jain works, Chulamani, Neelakesi, Yasodhara Kavyam and Udayanakumara kavyam are already available and the fifth kavya, the work under review, has not become available thanks to the efforts of the Madras University Tamil Department.

The kavya consists of five sargas and 170 stanzas with a useful note under each stanza. Though the style and diction are not so beautiful as in other kavyas, the story in simple and quite interesting. At the request of King Siranika, Gautma Muni told the story of Nagakumar, his heroic deeds, love affairs, and eventual attainment of spiritual enlightenment and liberation. The book is doubtless a useful addition to Tamil Literature.—K.E.P.

[THE WEEKLY MAIL
18th May, 1974]

# சென்னைப் பல்கலைக் கழகம்

11988

## தமிழ்த் துறை வெளியீடுகள்

1. திருவாய்மொழி (பகுதி 1 முதல் 10 வரை)
   —ஆசிரியர்: திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு
2. ஆசார்ய ஹிருதய மூலம்
   —ஆசிரியர்: திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு
3. பத்துப்பாட்டு ஆராய்ச்சி
   —டாக்டர் மா. இராசமாணிக்கனர்
4. திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்
   —திரு. மு. சண்முகம் பிள்ளை
5. திருக்குறள் நீதி இலக்கியம்
   —திரு. க. த. திருநாவுக்கரசு
6. திருக்குறள் அணி நலம்
   —திரு. இ. சுந்தரமூர்த்தி
7. திருக்குறள் அமைப்பும் முறையும்
   —திரு. மு. சண்முகம் பிள்ளை
8. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்
   —டாக்டர் ந. சஞ்சீவி
9. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்.
   —திரு. க. த. திருநாவுக்கரசு
10. பல்கலைப் பழந்தமிழ்
11. நாக குமார காவியம்
    —(ப. ஆ.) திரு. மு. சண்முகம் பிள்ளை
12. இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்
13. திருவிசைப்பா—திருப்பல்லாண்டு
    —திரு. மு. அருணசலம்
14. தமிழாய்வு (முதல் தொகுதி—1 மறுபதிப்பு)
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
15. தமிழாய்வு (இரண்டாம் தொகுதி)
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
16. தமிழாய்வு (மூன்றும் தொகுதி)
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
17. Thiruvachagam—Sacred Utterances
    Translation—By Rev. Dr. G. U. Pope
18. Thirumathi Sornammal Endowment Lectures (9)
    on Thirukkural in one Volume
19. Religion and Philosophy of Tevaram
    —Dr. M. A. Dorai Arangaswami
20. First All-India Tirukkural Research Seminar Papers—1972
21. The Contribution of European Scholars to Tamil
    —Dr. K. Meenakshisundaram

### தமிழ்த்துறை—புதிய வெளியீடுகள்

1. தெய்வத் தமிழ்
   —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
2. பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ்
   —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
3. Dravidic Studies
   —(Ed.) Dr. Mark Collins.
4. Words and their significance & Tamil-literary and Colloquial
   —Dr. R. P. Sethu Pillai